25

Presented by

Sri Jnath Subramaniya thambiran Swamigal to

Periyapoosai

to

Dakshinamurthi

Suryanarkoil Adeenam

உ

சிவமயம்.

கணபதிதுணை.

மாயூரப்புராணம்.

திரிசிரபுரம் மஹாவித்துவான்

மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்

இயற்றியது.

இஃது

இந்நூல்செய்தவர்மாணாக்கருளொருவராகிய

சென்னைக்கவரன்மெண்டு நார்மல்பாடசாலைத்

தமிழ்ப்புலவர்

திரிசிரபுரம்

சோடசாவதானம்

சுப்பராயசெட்டியாரால்

பார்வையிடப்பட்டு,

மாயூரத்திலிருக்கும் அரங்கக்குடி

முருகப்பிள்ளையவர்கள்குமாரர்

வயித்திலிங்கம்பிள்ளையவர்களால்

சென்னை

சி. டிக்குரூஸது,

மலைச்சாலையிலிருக்கும் அத்திநீயம் அன்ட் டேலிநியூஸ் பிரான்ச்
அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

விபவஹு கார்த்திகைமீ

உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்

மாயூரப்புராணமரங்கேற்றுவித்தவர்மேல்

சென்னைக்கவரன்மெண்டுநார்மல்பாடசாலைத்தமிழ்ப்புலவர்

திரிசிரபுரம்.

சோடசாவதானம்

சுப்பராயசெட்டியார்

இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சீர்பூத்தபல்வளமுமல்குபெரும்பூங்குடியிற்செழித்துவாழ்வோ
னேர்பூத்தகனதனவானடுத்தவரைத்தானாக்குமியல்பின்மிக்கான்
பேர்பூத்தசோணாட்டுவேளாளர்குலதிலகன்பிறங்குசீர்த்தித்
தார்பூத்தசைவசிகாமணிசுகுணசிதம்பரமாறவத்தில்வந்தோன். (௧)

மாமேவுபல்கலையுநுண்ணறிவிற்கற்றுணர்ந்தவாய்மைதேர்ந்து
பூமேவுமன்னவர்தங்கண்மணியாயதிகாரப்பொலிவின்மேவித்
தேமேவுகண்ணோட்டமுதற்பலநற்குணத்தாலுஞ்சிறந்துவாழ்வோ
னோமேவுமந்திரமென்றோதுசரவணபவப்பேருற்றவள்ளல். (௨)

அகழேறுமணிப்புரிசையரணேறுசிராப்பளியினகத்துமோவா
விகழேறுமெனதிதயத்தகத்துமென்றுமிடையறாதுறைவோன்மெய்மைப்
புகழேறுநயவிபுலன்பொறையேறுமிருங்குணத்தோன்புவனிமீது
திகழேறுமீனாட்சிசுந்தரநாவலரோதுசிந்தையோர்ந்து. (௩)

துன்னியபாவலர்களிப்பவியற்றுதிருமயிலாடுதுறைப்புராண
மன்னியமான்மியமுமதன்சொற்சிறப்பும்பொருட்சிறப்பும்வயங்கத்தேர்ந்து
மின்னியபேரருள்வள்ளல்சந்நிதியிலியாவர்களும்விரும்பமேவி
நன்னியமந்தலையெடுப்பவரங்கேற்றுவித்தனனாநலம்பெற்றானே. (௪)

சிறப்புப்பாயிரம்.

இப்புராணம்செய்யுங்காலை

யுபசரித்தவர்மேல்

சென்னைப்ப்ரீசர்மிஷன்பாடசாலைத்தமிழ்ப்பண்டிதர்

தெய்வசிகாமணிமுதலியார்

இயற்றியது.

கலிவிருத்தம்.

சேதனவாழ்க்கையர்கள்செறிதிகழ்மாயூரத்தமர்வான்
கோதமையவொண்ணாதகூடலுடைக்கோத்திரத்தான்
மாதயவான்கோவிந்தவள்ளறவத்தினிலுதித்த
மேதகையமிகுகுணத்தான்வேங்கடாசலமகிபன். (௧)

நல்லகுணவிபவத்தோனல்லநெறிவழுவாதோன்
பல்லநூலொருங்குணர்ந்தோன்பல்லநூலொருங்கியற்றும்
வல்லனானெனவல்லோர்வயங்குறவோர்ந்திணையனெனச்
சொல்லவருமீனாட்சிசுந்தரநாவல்லோனே. (௨)

தூயசீர்மயிலாடுதுறைப்பெருமான்மான்மியமாம்
பாயபாயிரமாதிநைமிசத்துப்பண்ணவர்வந்
தேயபூசனைபுரிதலீறாகப்பாடளவு
நேயமுடனுபசரித்துநிரம்புபுகழ்பெற்றனனே. (௩)

உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

இப்புராணம்பதிப்பித்தவர்மேல்

கும்பகோணம் புரோவின்சியால்கல்லீஜ் தமிழ்ப்புலவர்

திரிசிரபுரம்

தியாகராசசெட்டியார்

இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

பொன்பூத்தமயிலாடுதுறையெனுமாயூரநகர்ப்பொலிந்துவாழ்வோன்
கொன்பூத்தவளவரங்கக்குடிவாழ்க்கைப்பூவனுடைக்கோத்திரத்தான்
மன்பூத்தகார்காத்தார்குலதிலகன்முருகப்பவள்ளன்மைந்தன்
றென்பூத்தகல்வியறிவொழுக்கநயகுணங்கூடித்திரண்டாற்போல்வான். (க)

ஆயபுகழ்வேளாளனெனப்புகலுங்காரணப்பேரருத்தந்தேர்ந்து
பாயபுவியிடைப்பலர்க்குமொப்புரவாதிகளினியபண்பினூற்றுந்
தூயவன்பல்கலைகளுங்கற்றுணர்ந்தவரோடளவளாந்துணிபேமேற்கொ
ணேயமுடையவன்கல்விநயந்தெரிவிற்பனவிநயநிரம்பப்பெற்றோன். (உ)

ஓங்குசிவனடியாரையவனெனக்கண்டுபசரிக்குமுண்மையாளன்
தேங்குசிவாலயங்கடொறுஞ்சென்றுசென்றுதொழும்விருப்பச்சிந்தையாளன்
பாங்குபெறவிருந்தின்றியுண்டபகல்பயன்செய்யாப்பகலென்றோர்வான்
வீங்குபுகழ்மேயவயித்தியலிங்கமாலெனும்பேர்மேயநல்லோன். (௩)

முன்னுளபல்புலவருளும்பின்னுளபல்புலவருளுமுதியீர்செஞ்சொன்
மன்னுபன்னூலொன்றொடொன்றுதோலாதுமாண்புபெறவகுப்போர்யாரோ
வென்னிலெவர்தமைக்குறிப்பேமினையனேயெனக்குறிப்பவிசைமைவாய்ந்து
துன்னுநயகுணமேலோன்மீனாட்சிசுந்தரநாவலவரோறே. (௪)

மன்னுமயிலாடுதுறைப்புராணம்பாடும்பொழுதுமருங்குமேவி
மின்னுசிறப்புறமுயன்றதன்றியுநித்தியகருமவிதிகள்யாவுந்
துன்னுமதிற்பொருந்துவிதம்பாடுவித்தொண்சிறப்பனைத்துந்துணிபினோர்ந்து
பன்னுமதுபரவவொன்றையாயிரஞ்செய்தளவாதபயன்பெற்றானே. (௫)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மாயூரப்புராணம்.

கடவுள் வாழ்த்து.

அகத்தியவிநாயகக்கடவுள்.

* பூமேவுதன்னடியார்தமைவிளக்கிமுந்திருக்கைபுணர்த்தல்வல்ல
தேமேவுபெருங்கருணையாளனெனநெறிப்பமறைத்திருநாமங்கள்
பாமேவுபலவிருக்கவகத்தியமால்களிறெனும்பேர்பரித்துநாளு
மாமேவுமயிலாடுதுறைத்தளிவாழ்பெருமானைவணக்கஞ்செய்வாம். (௧)

பெரியவிநாயகக்கடவுள்.

* மன்னியபேருருவர்ய்ந்தமதாசலமாமுடிமேக்குமருத *நாமே
துன்னியபேருருவாய்ந்தபூதத்தினடிகிழக்குந்தோய்தற்கேற்ப
மின்னியபேருருவாய்ந்துபெரியவாரணமெனும்பேர்விளங்கப்பூண்டு
பன்னியபேருருவாய்ந்தமாமயிலைத்தளியமரும்பரன்முள்போற்றி. (௨)

வதானியீசர்.

சேர்பூத்தவிமையாரும் * அமையாருந்தோட்சசிசேர்செல்வவேந்தும்
பார்பூத்ததிருவானும்பெருவானும்புகழ்புரவுபண்ணுவானுங்
கூர்பூத்தவேணேருந்தேனேருமலர் * இறைப்பக்குறித்தநல்கி
யோர்பூத்தமயிலாடுதுறையமரும்வள்ளலாரிருதாள்போற்றி. (௩)

சூதவனேசர்.

இச்சையறிவுறுதொழிலாய்ப்பரையாதியாதியாயெண்ணிலாத
விச்சைசெயாரணிமுதலாய்ச்சத்திவிந்துவாதியாய்வேருயின்னு
மச்சையினிதோம்பிடுவானளவாதகருணையிற்பல்லண்டமீனும்
பச்சைமயில்போற்றெடுக்கமாவடிவீற்றிருப்பாளைப்பரவிவாழ்வாம். (௪)

அபயப்பிரதாம்பிகை.

பரவுபிறரபயவரதம்புனைந்தும்பாவனையாம்படியாருண
வுரவுமிகுமவைமலர்க்கையமைத்தமைத்தபடியகிலவுயிர்க்குமாற்றிக்
கரவுதவிர்தரவனையவுபயமேதிருப்பெயராய்க்கதிர்ப்பப்பூணுற்
றரவுமதிபுனைவார்பாலமரஞ்சனுயகிதாளடைந்துவாழ்வாம். (௫)

---

* அடியனைவிளக்கஞ்செய்து தேவர்முதலியயாவரினுமுந்தி யிருப்பச்செய்தல்தோன்ற, விநாயகக்கடவுள் திருநாமம் பலவிருக்கவும், தமது திருப்பெயர்முன், அடியார்பெயர்கொண்டாரென்பதுகருத்து.

* முடியும், அடியும், யானையும் பூதமுமாகிய பேருருவங் கோடலால், அதற்கேற்பப் பெரிய விநாயக ரெனத்திருப்பெயர்பூண்டு, அத்திருவுருவிற் கேற்பப் பெரிய கோயிலி லெழுந்தருளினரென்பது கருத்து.

* நாம் அச்சம் "பேநாமுரு மெனவரூஉங்கிளவி, ஆமுறைமூன்று மச்சப் பொருள" தொல்காப்பியம் உரியியல், ௬௯. சூத்திரத்தானுணர்க.

* அமை, மூங்கில்.

* தேனேருமலர் வண்டாரர்யுமலர்.

இதுவமது.

பரந்தமலர்க்கருங்குழலுஞ்செவ்வாயும்வெண்ணகையும்பசுவேய்த்தோளுஞ்
சுரந்தவருள்பொழியுமிருவிழியுமெழில்வழிமுகமுந்துணைப்பொற்றோடுங்
கரந்ததிருவிடையுமொண்செம்பட்டுடையுமங்கலப்பொற்கழுத்துநாளு
மிரந்தவருக்கருளஞ்சனாயகிநூபுரப்பதமுமிறைஞ்சிவாழ்வாம். (சு)

மயிலம்மை.

வாவிபொலிபிரமவனமாயூரமெனுமொருபேர்மருவியோங்கத்
தூவியனமுணராதமுடிச்சரபமொருமயிலாத்தோன்றியாங்கு
மேவியமர்தருவிடபமரங்கமாநடம்புரியவிழைந்துநோக்கி
யோவியெலாம்* முனமகிழ்பூத்தமர்ந்துதொழும்பசுமயிலையுன்னிவாழ்வாம்.(எ)

சபாநாயகர்.

மாடுவானகைநோக்கநாடுவானவர்பலரும்வணங்கிவாழ்த்த
வூடுவான்பொழிவதெனப்பாடுவான்புலவர்துதியுமைப்பயாமு
நீடுவான்முதலியவையோடு* வான்வளிபொருவல்* நீத்தானந்தங்
கூடுவானம்பலத்துளாடுவான்குஞ்சிதத்தாள்குறித்துவாழ்வாம். (அ)

சிவகாமியம்மை.

கரமூன்றுமடியிரண்டுஞ்சிருட்டிமுதலைந்தொழிலுங்கதிப்பவாற்றச்
சிரமூன்றுநான்குமுளார்சேவிப்பவெண்முறுவல்செவ்வாய்த்தோற்றிப்
புரமூன்றுமெரித்தார்செய்நடங்காண்டல் *அதுவலிக்கப்போதல்* ஆய
திரமூன்றுமிரண்டனுக்கும்வினைமுதலாம்பராபரைதாள்சேர்ந்துவாழ்வாம். (கூ)

தட்சணாமூர்த்திக்கடவுள்.

மான்மலரவன்முன்னோர்தொன்முதலெனவழுத்தற்கேற்பச்
சூன்மலர்கருணையாலோர்தொன்முதல் * அமர்ந்தான்மாக்கள்
கான்மலரடங்குமுண்மைகைமலர்க்காட்சியாலே
தான்மலர்தரத்தெரிக்குந்தம்பிரான்சரணஞ்சார்வாம். (ய)

வயிரவக்கடவுள்.

ஓங்குசொற்படைமுன்னஞ்சுமொள்ளுகிர்ப்படையுந்தேசு
வீங்குசக்கரமுன்னனைவெம்படையஞ்சுமஞ்சுந்
தாங்குசூற்படையுங்கொண்டோர்தலைக்கலநெய்த்தோரேற்ற
பாங்குசேர்வடுகப்புத்தேள்பதமலர்க்கன்புசெய்வாம். (கக)

---

* முனமகிழ், மயிலுருவங் கொள்ளாமைக்கு முன்னமே திருநடனங்கண்டமகிழ்ச்சி.
* வான்முதலியவை, ஆகாயமுதலியதத்துவம் ௩௬.
* வான்வளிபொருவல், ஆகாயமுங்காற்றும்போலத் தத்துவங்களோடு, அபேதமாவிருக்கை.
* அது, காண்டலைக்குறித்த குறிப்பு வினைமுற்றுப்பெயர்.
* வலிக்கப்போதல், காட்டல்.
* தொன்முதல், ஆலடி.

அகத்தியவிநாயகக்கடவுள்.

உயர்திணையுமஃறிணையுமாயவொருதிருவுருவமுற்றுமேவும்
பெயர்வில்கருணைக்கிணங்கவவ்விரண்டுதிணையுயிரும்பேணித்தாங்க
லயர்வுலகந்தெரிப்பவிளமதியுமுதுவரவுமுடியலங்கத்தாங்கி
மயர்வுதபவீற்றிருக்குமகத்தியவாரணத்தடிகள்வணக்கஞ்செய்வாம். (௧௨)

குமாரக்கடவுள்.

நெடுவரைவிற்பவளவொளிபடுவரையைக்கூறுசெய்துநிலவுமண்டத் - தொடுவ
ரைவிலுயிர்க்குமுடன்முதலியதன்கூறுசெயுமொருவேல்கொண்டோர் - கொடுவ
ரையைக்கூறுசெய்துகடன்மாவுங்கூறுசெய்துகொடும்பக்கஞ்சார்ந் - தடுவரை
யிற்பொலிமயின்மேற்பொலிதருசேவகன்மலர்த்தாளடுத்துவாழ்வாம். (௧௩)

நந்திதேவர்.

வண்ணம்பொலியுமேருமால்வரையைமேவுநகையினர்சீர்
விண்ணம்பொலியுமிளாவிரதமேவலெனமான்மறியினொடு
தண்ணம்பொலியுங்கைப்பரமற்சாரும்விருப்பரறிவுடையோ
ரெண்ணம்பொலியுந்தனைச்சாரவிருக்குமொருவன்பதம்பணிவாம். (௧௪)

இடபதீர்த்தம்.

நதிநதமுநதிபதியு * நபப்புனலுமற்றுமுளநாரம்யாவுந்
துதிகெழுவப்படிந்தாடித்தாமீட்டும்பாவமெலாந்தொலைத்துப்போயுங்
கதியருணின்மலமாகியுயிரோம்புகவேரனருள்கன்னித்தீர்த்த
மதிசெய்துலாத்தீர்த்தமெனுமிடபதீர்த்தத்தினையாம்வணக்கஞ்செய்வாம். (௧௫)

தமிழாசிரியர்.

மயிலைநிகரஞ்சாயன்மங்கையொடுமருள்பரப்பிவானோர்சூழக்
கயிலையமர்பெருமானினுலோபாமுத்திரையெனும்பேர்க்கற்புவாய்ந்த
குயிலையடுமொழியொடுஞ்செந்தமிழ்பரப்பிமுனிவர்குழாங்குலவிச்சூழ
வெயிலைவிடுமணிப்பொதியத்தமருமொருமுனிவரன்றாண்மேவிவாழ்வாம். (௧௬)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

தமரொடுவெள்ளநீந்தத்தவமுயன்றெழுநாளாற்றி
யமர்கொடுங்கணையொன்றுய்த்துவருந்துமாலவன்போலாது
தமரொடுவெள்ளநீந்தநாவாய்க்கட்டவிழ்த்துத்தாவா
தமரொருபதிகஞ்செவ்வாய்மலர்ந்தவர்க்கடிமைசெய்வாம். (௧௭)

திருநாவுக்கரசுநாயனார்.

பெறுமணிநிறத்தமைத்தும்பிறங்குபொன்னுடம்பிற்போர்த்து
முறுபெருங்காவல்பூண்டோர்ந்துறங்குமாயவன்போலாது
பெறுமணிபொன்னெலாங்கைப்பேருழவாரத்தாற்சேர
வுறுபுறம்விட்டானந்தவுறக்கஞ்செய்பவர்தாளுள்வாம். (௧௮)

சுந்தரமூர்த்திநாயனார்.

எண்ணிமாலயன்முன்னோர்குற்றேவல்செய்பெரும்பேறென்று
நண்ணிநாமுய்வோமென்றுநாளுங்காத்திருக்கவுள்ள
புண்ணியமுதல்வன்றானேபோந்துகுற்றேவல்செய்ய
வண்ணியதோழமைப்பாலமைந்தவர்க்கன்புசெய்வாம். (௧௯)

---

* நபப்புனல் - ஆகாயகங்கை.

மாணிக்கவாசகசுவாமிகள்.

பரமனைப்புறந்தழீஇமுன்பாற்சுவடுறுத்தாள்போலா
துரவகந்தழீஇயன்னான்மண்சுமந்துழன்றடியொன்றேற்றுக்
கரவின்மேல்கீழ்பின்னென்னக்கறைதருமொருமுப்பாலுந்
திரமுறுசுவடுகொண்மார்திகழ்ந்தவர்க்கன்புசெய்வாம். (௨௦)

தண்டீசநாயனார்.

பாதகவரக்கற்கொன்றுபடுபழியலைக்கப்பட்டு
நோதகவடைந்துதீர்ந்தநோன்சிலையிராமனாண
மேதகவந்தணாளனாருயிர்வீயமாய்த்து
மாதகவலமயுமுத்திமருவினார்சரணஞ்சார்வாம். (௨௧)

அறுபத்துமூன்றுநாயன்மார்.

தகைபெறுமுண்மைவாய்ந்ததஞ்சரித்திரமேயாய
தொகைவகைவிரியோர்மூன்றுந்தொழுபெரியோர்க்குச்சொற்ற
பகைதவிர்குரவனாவான்படர்சடைப்பிரானேயாக
நகைகொளுமறுபான்மூவர்நறுமலர்ப்பாதம்போற்றி. (௨௨)

பஞ்சாக்கரதேசிகர்.

வினையொடுமிருளாதிமேவியசெயலைநீக்கி
யனையினுமுயிர்க்குநல்கியாவடுதுறைக்கண்மேய
தனைநிகர்நமச்சிவாயகுருபரன்சரணஞ்சார்ந்தார்
புனைமலரடியென்சென்னிக்கணியெனப்பொலியுமன்றே. (௨௩)

குருவணக்கம்.

வடுவகிர்க்கண்ணாராசைவலைப்படார்செறிகோமுத்தித்
தொடுகடலுலகமேத்துஞ்சுப்பிரமணியதேவ
னொடுகலந்தமராநிற்குமொருவனம்பலவாணப்பேர்
கொடுவருசிவனென்னெஞ்சங்கொண்டனன்குறிப்பதெங்கே. (௨௪)

மற்றையடியார்கள்.

மன்னியமாமயிலாடுதுறைத்தளியுள்வள்ளலார்வயங்குசீர்த்தி
பன்னியநாவுடையரகம்படித்தொண்டினெறிநிற்போர்பரவுநீறுந்
துன்னியகண்மணித்தொடையுமைந்தெழுத்தும்பொருளாகத்துணிந்தோராய
முன்னியவிந்நியமரெவராயினுமற்றவர்சரணமுடிக்கொள்வாமே. (௨௫)

கடவுள்வாழ்த்துமுற்றிற்று.

அவையடக்கம்.

தண்ணியநீராவடுதண்டுறைநமச்சிவாயகுருசாமிபொற்றா
ளண்ணியசிந்தையன்கௌரிமாயூரப்பெருமான்கட்டளைமேற்கொண்டு
புண்ணியமேன்மேலுயரவளர்ப்பவனற்குணசீலன்பொறையிற்கூர்ந்தோன்
மண்ணியமாமணிமுத்துக்குமாரமுனிவரனருட்கோர்வைப்பாயுள்ளான். (௧)

வடமொழியிருந்ததெய்வமாயூரமான்மியத்தைத்
திடமொழிபெயர்த்தெடுத்துச்செந்தமிழ்மொழியாலின்பம்
படமொழியென்னவன்னுன்பணித்தசொன்மறுத்தற்கஞ்சித்
தடமொழிப்புலவர்முன்புசாற்றிடத்துணிந்தேன்மன்னே. (உ)

நன்மொழியமைந்தசான்ருேர்கூடுமந்நகருள்யானென
புன்மொழிகொண்டுசேறல்புவனங்களெடுத்துப்பேசும்
வன்மொழியமைந்தசாதிமலர்பயிலிடத்துநன்மை
யன்மொழியொருவனெல்லாவருக்கங்கொண்டணைதல்போலும். (ங)

தண்ணியவிமயப்பச்சைமயில்செய்பூசனைதழீஇய
புண்ணியமுதல்வன்காகபூசையுந்தழீஇயவாற்று
லெண்ணியபெரியோர்செய்யுமினியபாவேற்றலோடு
கண்ணியஞானமில்லேன்பாடலுங்கைக்கொள்வானுல். (ச)

இலைமலர்தாங்கப்பட்டவிருவருமிறைஞ்சும்வெள்ளி
மலையவன்பெருமைக்கேற்றபாக்கொணின்வாய்ப்பாட்டென்னிற்
புலைமுடைத்தோலும்பாம்பும்புன்றலைத்தொடையுமென்பு
மலைவின்மற்றனையாற்கேற்றவாடைபூணுமோசொல்லீர். (ரு)

நன்மொழியயுணர்ந்தோர்நாயினேன்புகன்றபாடல்
* அன்மொழியாவதேனும் * அல்வழியாவதேனும்
புன்மொழிப் * போலியேனும்வேற்றுமைபொருந்திற்றேனும்
வன்மொழிபுகன்றுதள்ளலாவதோர்வழக்குமுண்டோ. (சு)

பரசிவபுராணமென்னும்பத்திசற்றேனுமில்லார்
விரவுவகுற்றமென்றுவிளம்புவரொவர்சொற்றுலு
மரவணியனையானிந்தையறையவுந்துணியுமந்தக்
கரவொன்கவிக்குக்குற்றங்கழறலோரிலும்பூதன்றே. (எ)

வாரியுட்கலந்தபுன்னீர்வாரிதிநீரேயாகுஞ்
சீரியபயங்கலந்ததீர்த்தமும்பாலேயாகும்
வேரியங்கடுக்கையண்ணன்மான்மியம்விரவாநின்ற
பூரியனுமென்சொல்லும்புனிதமாய்ப்பொலியுமன்றே. (அ)

ஒடுங்கலில்குரவனுகியுண்மைபோதிக்குமம்மா
னெடுங்கணக்குணராரொல்லாரிகழ்தருகுரவனொன்றோர்
படும்பெயர்பூண்டுமண்மேற்பயிலவும்வெறுத்திலான்கை
விடுந்திறமுணராரொன்சொன்மேலவரானுர்நாளும். (கூ)

அவையடக்கம் முற்றிற்று.

சிறப்புப்பாயிரம்.

துன்னுதிரைக்கருங்கடல்சூழ்புவிபுகழுமயிலாடுதுறைப்புராணம்
பன்னுவடமொழிநின்றுமொழிபெயர்த்துத்தென்மொழியிற்பாடித்தந்தா
னுன்னுசிவஞானகலைமுதலாயபல்கலையுமொருங்குதேர்ந்தோன்
மன்னுதிரிசிரபுரம்வாழ்மீனுட்சிசுந்தரநாவலவரோறே. (க)

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம். ௩ரு

* அன்மொழி-தீயமொழி, *அல்வழி-தீயவழி, *போலி-உட்பொருளின்மை.

திருநாட்டுப்படலம்.

அரவுவார்சடையெம்வள்ளலாருயிர்ப்பொருட்டுவாசக்
குரவுவார்கூந்தற்செவ்வாய்க்கோற்றொடியோடும்வைகும்
பரவுவார்மயிலைமுன்னுப்பஃறலந்தன்னுட்கொண்டு
விரவுவார்சோழநாட்டின்வளஞ்சிலவிளம்பலுற்றும். (௧)

பூவினுட்பதுமம்போலும்புருடருட்டிருமால்போலுங்
காவினுட்கற்பம்போலுங்கலைகளுண்ஞானம்போலு
மாவினுட்சுரரான்போலுமறத்துளில்லறமேபோலு
நாவினுண்மெய்ந்நாப்போலுநாட்டினுட்சோழநாடு. (௨)

மேக்குநீர்கிழக்குநீரொன்றுமாயிருநீருமேன்மே
லாக்குவாய்ப்புடையதாயவிலங்கலுமதனினின்று
தாக்குமாவாரநின்றதண்ணீரும்வடிவுதீர்த
னீக்குமாநகருமென்றுநிரம்பவுள்ளதுசோணாடு. (௩)

குன்றலில்விளைவுசெய்யுங்குடிகளுந்துறவுபூண்ட
நன்றறிபவருமந்தணாளர்முன்னுயினோருந்
துன்றவன்கலத்திற்பண்டிகளிற்பொருடொகுக்கும்வாழ்க்கை
யன்றலிலாருஞ்சேரவமைந்ததுவளவநாடு. (௪)

பெரும்பொருளுடைமையாலேயாவரும்பெட்பதாகி
யரும்புமோர்கேடுமின்றியாற்றவும்விளைவதாகி
வரும்பொறையனைத்துந்தாங்கிமன்னவற்கிறையுமுன்போற்
றரும்புகழுடையதம்மாதவாப்புகழ்ச்சென்னிநாடு. (௫)

மயின்முதலுருவந்தாங்கிமலைமகளாயவன்னை
பயிலவும் * மந்திரங்கள்பல்லசொண்டேமியோங்குங்
கயிலையெம்பெருமான்மேவிக்கலப்பவுந்தவஞ்செய்தன்று
லெயில்வளைநகரமெங்குமியைதருமபயநாடு. (௬)

நோக்கியவிடங்களெல்லாநுவலருந்தலங்களாகத்
தேக்கியதீர்த்தமாகச்சிவலிங்கமூர்த்தியாக
வாக்கியதவத்தானுளுமடைந்தவர்க்கறமென்றேதும்
பாக்கியமாக்கிமேலுய்ப்பதுமுதுசென்னிநாடு. (௭)

மறைநெறிதிறம்புவாரையாகமமறவியாரை
முறைதபவொழுகுவாரைமொய்ப்பழிப்பொருள்வேட்பாரைக்
குறையறவிருந்தோம்பாரைக்குறித்தனகொடாரைமுக்க
ணிறையடிபூசியாரையில்லதுகிள்ளிநாடு. (௮)

திருமிகப்பெருகலாலேதீயவெம்பசியுங்காலப்
பருவரலின்மையாலேபாறுறுநோயுமன்னற்
கொருவரும்படையினாலேயுடற்றுவெம்பகையுமில்ல
திருநிலம்புகழநாளுமினியந்தசெம்பியர்தநாடு. (௯)

* மந்திரம் - கோயில்.

தலையமைசென்னிநாடுதவாவளங்கநா டு
நிலைபெறுமபயநாடுநிரம்பியவளவநா டு
தொலைவிலாப்பெருநீர்நாடென்றின்னமுஞ்சொல்லப்பெற்று
மலைவிலாப்பயன்செய்நாடுமற்றிதுபோலொன்றுண்டோ. (௰)

வேறு.

பொங்குவெண்டிரைக்கங்கைமேற்படர்ந்ததுபோலத்
தங்குவெண்முகில்வான்வழிப்படர்ந்திறைச்சயிலம் *
* முங்குதண்கடற்புனல்கொளீஇக்கருநிறமுற்றி
யங்குநின்றுகாளிந்திபோந்தென்னவானணைந்த. (௧௧)

வாரியஃகுமாமால்குடித்தெழுதிறமதிக்கின்
வேரியந்தொடைத்தம்மிறையாகியவேந்தன்
மூரிவெம்பகைவரையமரிடங்கண்டுமுற்றிச்
சோரிசிந்திடப்பறையரிவான்செயறுணையும். (௧௨)

விதிக்குமாற்றல்செய் * கருமுகில்வானளாய்மின்ன
றுதிக்குமங்கதிர்காளிந்தியெனுமொருதோகை
மதிக்குமேனியிற்பொற்பணிபுனையமற்றவைதாங்
கதிக்குமாறவண்மெய்நின்றுமின்னுதல்கடுக்கும். (௧௩)

முற்றுசூற்பெருங்கொண்டல்கள்வானின்றுமுழங்க
லெற்றுதெண்டிரைநதிகளின்விளக்கமிக்கியைத
லுற்றுலாங்கதிர்ப்பால்வருதன்சிறப்புன்னி
மற்றுமேற்படர்காளிந்திமுழங்குதன்மானும். (௧௪)

மீதுமூடியபயோதரம்வேனில்வெப்பழிய
மோதுவாமெனமுனிதரல்கூற்றொடும்பிறந்த
மாதுமாநதியாதலிற்காளிந்திமாருத்
தீதுநோக்குபுதண்டிக்கமுயல்வதுசிவணும். (௧௫)

கருநிறங்கொள்காளிந்தியோர்பாதியிற்கலப்பப்
பொருவில்குங்குமம்பூசிடப்பொலிதருநுதல்போல்
வெருவில்வானகமெங்கணுமூடியமேக
மொருவில்வாங்கியதுறுகடுங்கோடைபோயொளிப்ப. (௧௬)

உள்ளமாநதிபல்லவுமுறுபெருவெப்பங்
கொள்ளவேனில்செய்கொடுமையுட்குறித்தகாளிந்தி
மெள்ளமெய்வெயர்த்திடவெயர்நிலத்துவீழ்ந்தென்னத்
தள்ளரும்பலவுறைசிதறினசலதரமே. (௧௭)

வெப்புநோய்செயும்வேனிலைவீட்டுவனென்று
பப்புகாளிந்திபல்வழிக்கொண்டுபாரிறங்கு
மப்பெருந்திறமெனவள்ளலாருளென்னச்
செப்பருஞ்சலதரம்பொழிந்தனசெழுமழையே. (௧௮)

---

* இறைச்சைலம் - சிறையையுடையமலை.
* முங்கு - மூழ்கற்பொருளுணர்த்துமுதனிலைத்தொழிற்பெயர்.
* விதிக்குமாற்றல்செய் - பிரமனுக்குஞ் சிருட்டிவலிகுறையும்.

மலைகளெங்கணும்பொழிந்தனமரஞ்செறிகான
நிலைகளெங்கணும்பொழிந்தனநிரம்புகாலோடைத்
தலைகளெங்கணும்பொழிந்தனதாழையங்கழிசூ
ழலைகளெங்கணும்பொழிந்தனவள்ளியரருள்போல். (கக)

செய்யகோல்வலியரசுசீர்த்தெழுதருகாலை
வெய்யகோனுடைக்குறும்புமாய்ந்தொடுங்குறுவிதம்போற்
பொய்யுருமுகில்பொழிந்தநீர்பரவுறுகாலை
யெய்யுருவிளைத்தொடுங்கினவேனில்வெப்பெங்கும். (உ0)

கொண்டலாகியகவுணியகுலத்திளங்கன்று
கண்டல்சேர்புனற்கடலெனுங்கௌரிதன்முலைப்பா
லுண்டல்செய்தரும்பாமழைபொழிதலாலொழிந்த
மண்டல்கொண்டதீவேனில்வெப்பெனும்பரமதமே. (உக)

வரைநிரம்பினவருவிகான்யாறுபன்மரஞ்சார்
தரைநிரம்பினவோடைகாலேரிகடவாச்செய்
நிரைநிரம்பினநெய்தலங்கைதைசூழ்வேலித்
திரைநிரம்பினசிறுமணற்கேணிமிக்கூறி. (உஉ)

தரையடங்கலுமழைபொழிவெள்ளநீர்தவழ
வுரைசிறந்தபைம்புற்களங்குரித்தனவொருங்கு
விரைநறுங்குழன்மண்மகள்வெப்புநோய்தீர்ந்து
புரைசெய்பைம்படாங்குளிர்தபப்போர்த்ததுபொருவும். (உங)

விண்டபல்கமர்வெள்ளநீர்புகுதரவொன்றிக்
கண்டதேமெலாமேல்வழிந்தோடுமாகாணுங்
கொண்டனீர்தைக்கேயன்றிப்பாதலங்குறித்து
மண்டனீதியன்றென்றுபோக்கறுப்பதுமான. (உச)

கொடிமரங்கண்முற்பல்லுயிர்களுநிலைகூட
முடிவிலாமுகில்பொழிதருபுவனமாழ்முந்நீர்ப்
படியடங்கலும்போர்த்தமைநோக்கியப்படிக்கோ
ரொடிவில்வான்பெயர்புவனமென்றுரைத்தனரூரவோர். (உரு)

குறிஞ்சி.

நலம்விராவியபொன்னிசூழ்சோழநன்னாட்டுப்
பலம்விராவியமழைவளம்யாவரோபகர்வார்
குலம்விராவியவைந்திணைவளத்தினுங்குறித்த
புலம்விராவியகுறிஞ்சியின்வளமுதற்புகல்வாம். (உசு)

ஈன்றதந்தைவாழிருக்கையினினமெனல்குறித்தோ
சான்றவன்னையைத்தந்ததன்குலமெனநேர்ந்தோ
வான்றகாதலியுயிர்த்தவரிடமெனலறிந்தோ
தோன்றமர்ந்திரங்கொண்டுறும்வேள்வரைதோறும். (உஎ)

கோலவள்ளியாரொடுகுகனமர்தருகுணத்தா
னீலமாமயிலாவயினமருவநீங்கா
சாலமற்றவைதழைவிரித்தாடுமாருங்கு
மேலமைந்தவிண்வேந்தனூர்கருமுகில்விரவும். (உஅ)

எங்கள்சாதியிலொன்றுமுன்வளர்த்தினிதெடுத்த
திங்கள்வாணுதற்றெய்வதப்பிடிபுணர்செல்வன்
றுங்கமாரிடத்தகன்றிடோமென்றுசூழ்ந்தாங்குப்
பொங்கமும்மதம்பொழிபுவாப்பலவவட்பொலிவ. (௨௯)

மறையினந்தமுந்தொடரொணான்மருகனாய்மருவு
முறைதெரிந்துபசரித்தல்போன்முழுவலிவேட
ரிறைகொள்சந்தகில்விரையெழும்படியெரியிடுவார்
நிறையுணாக்கொளநெடுங்குரற்செந்தினைவிளைப்பார். (௩௦)

அறவனாகியகுமரவேட்காட்டவுமினிய
நறவமேனலினிடியொடுகூட்டுபுநயந்து
குறவருட்டவுங்குறித்துநாடோறுமுய்த்தீட்டும்
புறவமுற்பலவிடமெலாம்போய்ப்புகூஉவருமீ. (௩௧)

ஒருமடங்கலுமொருமதமலையுமுன்னுடன்று
பொருதழிந்தனவழிபடிற்பொலிவுளதென்றே
யிருநிலம்புகழ்குறிஞ்சிவேலிறைவன்மந்திரத்தை
மருவுநண்பொடுசூழுவமடங்கலுங்களிறும். (௩௨)

ஊடுமாதர்பாலாங்குறைந்துன்னுவார்வினையைச்
சாடுமண்ணல்பாற்றாழ்தல்லாற்பிறதாழார்
நீடுவேங்கையோடமர்புரிதிறத்தினானிறத்திற்
கூடுபல்வடுவென்றியோர்வடுவிலார்குறவர். (௩௩)

ஊரும்வான்மதிகாந்தளைப்பாந்தளென்றுன்னிப்
பேருமாலொருசாரொளிபிறங்குசெம்மணியைச்
சாருந்தீயெனவுளியமோடுறுமொருசார்மெய்
தேருந்தன்மைவாராவிடிற்செறிவனபலவே. (௩௪)

நீலமாமணித்துறுகல்கீழ்ப்படிதரநிலவு
கோலமாமதிமேலுறநடுவிராக்குலவிச்
சாலமேலுயர்சோதியந்தருநிற்றலிருவர்
மாலவானாரீஇச்சிவபிரானின்றதுமானும். (௩௫)

சுனையிரும்பினாலிறவுளர்தொடுவதுகவலை
புனையிலாதவர்விளைத்தலும்போக்கரும் * கவலை
வனையின்மற்றவர்படுதலும் * மாதரக்கவலை
கனையிலாவவர்க்கென்றுமில்லாததுங்கவலை. (௩௬)

குன்றவாணர்தங்குறிச்சிசூழ்வேலியுஞ்சென்னி
யொன்றவைத்திடுமனையுமற்றவர்தமொள்ளிழையார்
நன்றவாவுகையுலக்கையுநகுதலைச்சிப்பு
மன்றநாடொறுமாவனயானைவெண்மருப்பே. (௩௭)

பொங்குசெம்மணிவிலங்கலுமரகதப்பொருப்புந்
தங்குகற்குடிச்சைலமுமுலகெலாந்தழைய
வெங்கும்வாள்விடுமுத்தலையிரும்பெயர்க்கிரியு
நங்குதிரொறும்போங்கலு[illegible]யந்ததுகுறிஞ்சி. (௩௮)

---

* கவலை, தினை, * மாதரக்கவலை, பெண்களது கண்ணாகியவலை.

அரவுபூண்டநம்பிரானமர்சுந்தரப்பொருப்புங்
குரவுபூண்டொருகுமரவேள்பொலிதருகுன்றும்
பரவுமற்றவுந்தன்னகம்பொலிதரப்படைத்த
வுரவுசேர்பெருங்குறிஞ்சியினருந்தவமொன்றே. (௫௯)

முல்லை.

விண்டுவாதியர்தொழப்பொலிவெற்றிவேலிறையே
மண்டுதற்கிறையாக்குபுவாழுமொண்குறிஞ்சி
யண்டுபல்வளத்தெவனுரைத்தனமினியுறைவாம்
வண்டுகிண்டுபன்முல்லைசூழ்நிலப்பெருவளமே. (௬0)

வேறு.

பாயபலபெரும்புவனப்பகுதிபொதுக்கடிந்தோம்பு
மாயன்மதித்திடுசிறப்புட்சிறப்பாகவனமோம்பிற்
றூயதிரைப்பாற்கடலோவைகுந்தத்தொல்பதமோ
வாயவனமிவைக்கதிகமாகுமெனில்வரும்பழியென். (௬௧)

விரைமலர்செற்றியதருக்கண்மிகச்செறியும்பெருவனத்தைத்
திரையெறிபாற்கடலென்றுசெப்புவதற்கையமில்லை
வரைவில்பசுக்கன்றூட்டிமடித்தலநின்றிழித்திடுபால்
புரையில்பெருக்கெடுத்தோங்கப்போற்றிமால்வசித்தலினால். (௬௨)

அண்டர்குழாம்பலசூழவாங்காங்குமலர்காயாக்
கொண்டபெருஞ்சாரூபத்தவரமர்கோலந்தெரிக்க
வண்டடையுந்தண்டுழாய்மாயனினிதமர்தலினாற்
கண்டவனம்வைகுந்தமெனக்கரைதற்கையமெவன். (௬௩)

மழைமறுத்தகாலத்துங்காயாவாய்மல்குதலாற்
றழைமலர்செய்காயாவென்பெயர்பெற்றுத்ததையவற்றை
விழைதருபைந்துழாய்சூழ்வமேயமாறம்பாற்கொள்
குழையும்விழைவுணர்ந்தவைகள்குழாங்கொடுசூழ்ந்தமைமானும். (௬௪)

கொடியிடையாய்ச்சியர்திரட்டிக்கொண்டசுவைநவநீத
மொடிவறுதாழியினழல்வைத்துருக்குமணங்கவர்வதற்கும்
படியிலவர்முறிமேனிபரப்புமணங்கவர்வதற்கு
நெடிவனம்பன்னூசிபடைநீர்மையெனக்குமிழ்மலரும். (௬௫)

திரையெறிபாற்கடனடுவெட்டிருத்துயில்கொண்மணிமார்பன்
புரையில்வனத்தாய்ச்சியரிற்றொறும்புகுந்துபால்கவர்ந்து
விரைதரமத்தடியுண்டுங்கட்டுண்டும்விழைந்தமர்வா
னுரைசெயவர்கையளையவுறுசுவையாதலையுணர்ந்தே. (௬௬)

அழன்மிசையுற்றுறுபாறனளவுசுருங்கியுங்கரிய
குழலிடைமின்னாரின்சொற்கொவ்வாமைகுறித்தன்றே
நிழலுருவந்திரிந்தனையார்நிரைவளைக்கைமத்துடைக்கச்
சுழலடைந்தும் * அலர்கலந்துந்தோற்றமுறக்கதறிடுதல். (௬௭)

தொறுவியர்தங்குவட்டுமுலைத்துணைக்கொவ்வாமையினன்றே
வுறுசுவைகொள்பாற்குடங்களுடம்புமுழுவதுங்கறுக்கு
மறுவறுகற்புடையவர்தம்மருங்குலொவ்வாமையினன்றே
துறுதளவக்கொடியனைத்துந்தொலையாதவலர்படுமே. (௬௮)

* அலர் - நீர்,

திருமகளாகிய்வுமையைச்சேர்ந்தவினமென்றுணையும்
பொருவில்லவளொடும்பிறந்தான்புடையமருமுயற்கினமென்
றொருவில்பலமுயற்குலமுமுரிமைகடைப்பிடித்தொழியா
வருமணிமார்புடைமாயோன்வீற்றிருக்குமாவயினே. (௪௯)

திங்கணுதற்றிருமகள்சேர்செல்வனினிதோம்பிடுங்கா
டங்கண்மலர்க்கடுக்கைதழைந்தமர்தலினுலறுகுறலாற்
கொங்களவின்மலர்செறியுங்கூவிளங்கள்பொருந்துதலா
லெங்கள்பிரான்செஞ்சடைக்காடென்றுரைத்தற்கையமிலை. (௫0)

வெள்ளியகோத்திரவப்போர்மேலுயர்ந்துதோன்றுதலால்
வள்ளியநீண்மணிவண்ணமால்காக்கும்புறவவள
மொள்ளியமால்வரைகாணவொருங்கடைந்துநிற்றல்பொருஉந்
தெள்ளியபல்பயற்றேருங்கல்சிறுகுன்றச்செறிவொக்கும். (௫௧)

நீலமணிகண்டனமர்நெடுங்களமுநிரம்புதவச்
சீலமருவியமேலைத்திருக்காட்டுப்பள்ளியுமெக்
காலமுநன்றுங்கங்கைகண்டசோழீச்சரமுஞ்
சாலவனத்தமைந்தவெனிற்றவஞ்சிறிதோபெரிதன்றே. (௫௨)

மன்னன்முதல்வானரொலாம்வந்துதொழவரங்கொடுத்து
முன்னவனெக்காலுமமர் * முற்கபுரமுதலாகப்
பன்னரும்பஃறலந்தன்பாற்பரம்பவுளதெனத்தெரிந்தா
லென்னருமுல்லையின்பெருமையெடுத்துரைக்கவல்லுநரோ. (௫௩)

அம்மையார்நீழலில்யாமமர்வோமென்றருள்செய்த
செம்மையார்வீற்றிருக்குந்திருத்தஞ்சைமுதலாக
வெம்மையாரருளுய்க்குமிறைவர்தலம்பலவென்னில்
வெம்மையார்பெருவனத்தைவிண்ணுலகுநிகர்க்குமோ. (௫௪)

மருதம்.

குழக்கன்றுபின்றொடரக்குடஞ்சுட்டுப்பலபயில
மழக்கன்றுகுணில்கொண்டமால்காக்கும்வனம்புகழ்வா
னெழக்கன்றுநசையாற்சற்றியம்பினுமருதவளஞ்
சழக்கன்றுசிறிதுரைப்பாம்பெரிதுரைக்கத்தகாமையினால். (௫௫)

வேறு.

பன்னரும்பெருமைவாய்ந்துபடர்தருவைந்தனீழன்
மின்னகுநிதிமுன்னெல்லாம்பணிதலைமேவிநிற்ப
நன்னலவரம்பைமாதர்நடங்கண்டுவானங்காக்கு
மன்னவன்காக்குமேன்மைவாய்ந்ததுமருதவேலி. (௫௬)

வரைதரவருதலானுமாமலர்தாங்கலானும்
புரையில்பல்பேதமாகிப்பலபெயர்பொருந்தலானுந்
தரையகமோம்பலானுந்தண்ணளிநீரினானுங்
கரையறப்பெருகும்பொன்னிகடுக்குமெம்பிராட்டியாரை. (௫௭)

மலைபடுவயிரங்கொண்டுவருதலின்வானவேந்த
னிலைமலைமலர்மேலாகவியைதலினெண்கணுளன்
றலைவளைசுமத்தலான்மால்கடுக்கைசார்ந்தணைதலாலே
கலைமறைபுகழுமெம்மான்கடுக்குநீரருதபொன்னி. (௫௮)

* முற்கபுரம் - பயறணியீசம். அது. உடையார்பாளையமென வழங்குகின்றது.

மணிமயிற்றழைமால்யானைமருப்பகினறுஞ்சந்தாதித்
துணியொளிர்சுவ்வணெய்பாறுதைமலர்கரும்புகந்தி
யணிகெழுசாலிபல்பூவலங்குளித்திலந்துப்பாதிக்
கணிதமிலுறலாற்பொன்னிகலந்தபண்டாரம்போலும். (௫௧)

இருகரைமுறியக்குத்தியெங்கணும்வெள்ளமாகிப்
பெருகிமுன்னெழுந்தகங்கைப்பெருக்குமோர்திவலையென்ன
வருகொருவருஞ்சாராமலலையெறிந்தகடுகீண்டு
கருகுபைங்கடல்கலக்குங்காமருதெய்வப்பொன்னி. (௬0)

உடைகரையடைத்துமள்ளரொருவழிச்செலுத்தலாலே
யடைமனுத்தகைக்கப்பட்டவரவெனவடங்கிச்சென்று
மிடைதருபெரூறிவாய்தோறும்விரைந்துபோய்ப்புகுமனம்போற்
புடையமர்மதகுதோறும்போய்ப்புகுந்ததுநீர்வெள்ளம். (௬௧)

கால்வழியோடியெல்லாக்கழனியும்புகுந்துமுன்னாட்
பால்படுவேனில்செய்தபற்பலகமருமொன்றச்
சால்புயர்தன்பாலாயபிளப்பெனச்சடுதிசெய்து
கோல்வலிமன்னரார்ப்பக்குறையறுத்ததுநன்னீத்தம். (௬௨)

சிவவியாபகமேயென்னச்செய்யெலாந்தகவிற்புக்க
உவமையில்வெள்ளநோக்கியுவகைமேற்கொண்டமள்ளர்
கவலரும்பழையர்பாற்போய்க்கடைவழிதரக்கண்மாந்தித்
தவலருமுழன்மேற்கொண்டுசார்ந்தனர்பழனமெங்கும். (௬௩)

பெருவலித்துணைக்கடாவின்பியலுறநுகங்கிடத்திப்
பொருவருமதற்குநாப்பட்பொருந்திடவேர்க்கால்சேர்த்தி
மருவுறவிடக்கைமேழிபிடித்துமற்றொருகைமேவ
வொருகுறுமுட்கோல்பற்றியுழுவராலுரப்பிமள்ளர். (௬௪)

குடதிசைநின்றுமள்ளர்குணதிசைச்செல்லவுய்த்தும்
வடதிசைநின்றுமற்றைத்தென்றிசைமருவவுய்த்து
மிடர்செய்புல்லாதிமாயவிரும்படைச்சானெருங்கத்
தொடர்பல்விளாக்கள்கோலியுழுதனர்தொள்ளிசெய்தார். (௬௫)

செறிபல்லுயிர்காப்பாளர்சிதைவுசற்றடைவராயி
னறிதருபயன்கொள்வார்மற்றதுதவிர்த்துயர்த்துவார்கள்
செறிபலபயிர்காத்தோம்பும்வரப்புறுசிதைவுநோக்கி
யறிதருமுழவர்தாங்கங்கரிந்துயர்த்தினர்மேன்மேலும். (௬௬)

உழுதொழில்புரிந்தகாலையழுந்தலோடேழ்த்தறந்தா
டழுவியதுணர்ந்துமாற்றித்தனியிறுமஃப்பேய்வார்போல்
வழுவறுபரம்புபூட்டிமற்றதன்மேற்கொண்டூர்ந்து
கொழுநிலமாடியென்னச்சமஞ்செய்தார்குலவுமள்ளர். (௬௭)

மருதநன்னிலத்துவேந்தைவயல்வளம்பொலிகவென்று
கருதுபுகைகள்கூப்பிக்காமருமணங்கூர்செந்நெற்
குருமுளைவாரிவித்திக்கொண்டநீர்மறுநாட்போக்கிப்
பருவலிமள்ளரோம்பமுளைத்தனபழுதொன்றின்றி. (௬௮)

உறுமழப்பசியறிந்துபாலூட்டியோம்புந்தாய்போற்
குறுமுளையளவறிந்துதகுதியிற்குளிர்நீர்பாய்த்திச்
செறுவலிமள்ளரோம்பச்சீமருமகள்வெற்பீன்ற
நறுநுதலுருவுற்றென்னவிளவொரீஇப்பசந்தனன்கு. (சூக)

பல்லுயிரடையமாயைப்பாலமைபோகமெல்லாம்
புல்லுறவளந்துநல்கும்புண்ணியப்பெருமான்போல
நல்லியற்கழனிமேவநாற்றங்காறனைத்து
மொல்வகைப்பறித்துநட்டாரொன்றொழியாமன்மள்ளர். (எ0)

ஈன்றவள்கிரகநின்றும்விருத்தியாங்கிரகமெய்துஞ்
சான்றவொண்ணுதலாராங்குத்தாழ்ந்தனரொழுதல்போல
வான்றபல்வயலுணட்டநாறெலாமமையத்தாழ்ந்து
தோன்றமேலெழுந்ததோம்புந்தொழிலினரொழுந்துதுள்ள. (எக)

புலைமிடிபிணிமுன்னுனகல்வியைப்பொருந்திற்றென்ன
வலைதருகாமமாதியருந்தவத்தினைச்சூழ்ந்தென்ன
மலைமலமாயைகன்மம்வளருணர்ச்சியைச்சார்ந்தென்னத்
தொலைவில்பல்களைகள்வந்துசூழ்ந்தனபயிரைமாதோ. (எஉ)

உயிர்மலமுழுதுமோப்பக்காலமோர்ந்துறுபெம்மானிற்
பயிரிடர்முழுதுந்தீர்ப்பான்பருவந்தேர்ந்தடைந்தவாட்க
ணயிர்படுமதுரத்தீஞ்சொலுழத்தியரடங்கக்கூடித்
தயிருடைமத்தேயென்னக்களைபலசாட்லுற்றார். (எங)

முண்டகமனைத்துங்கொய்வார்கொய்தவைமுருங்குமாறு
கொண்டபங்கயப்பேர்தேர்ந்துகுளிர்ந்தசேற்றிடுதல்செய்யார்
கண்டபல்குலையுஞ்சேர்ப்பார்கதிருங்கண்ணேட்டமின்றித்
தண்டலிலுணவாம்பைங்கூழ்க்கூறுதலுணர்ந்துசாடும். (எச)

அடிகரமுலைக்குமாறுவலரும்படங்கக்கொண்ட
முடிவருமம்புயத்தைமுருக்கெனக்கண்கள்காட்டத்
தடிதருமவர்கைகாட்டுந்தாரைவன்பகையாமென்று
கீடிதருங்குவளையெல்லாங்காமருகழனிமாட்டு. (எரு)

பரம்பரன்முடிமேலேறும்பாங்குடைக்கமலமெல்லா
நிரம்புநீரோடையாவிநீத்துநீர்சிறிதேதங்கும்
வரம்பமைசெய்யுண்மொய்த்தவண்ணத்தாலுழத்திமாதர்
கரம்பறித்துதிர்க்கவன்னார்காற்றுவைப்புண்டவெங்கும். (எசு)

இடவியவாவியோடையெனப்படும்புக்கினீத்துத்
தடநெடுஞ்சாலிமேயசெறுவெனுந்துச்சில்சார்ந்த
மடமையாலிருகோணட்டுமற்றிருகாலப்பூவும்
படரடைந்தொழிந்தயார்க்குமொதுக்கிடம்பண்பதன்றே. (எஎ)

பிடிநடையுழத்திமார்கள்பிறங்குநன்னிலத்துவேந்தற்
கொடிதலில்செல்வமெல்லாமொழியமுன்செய்ததிந்த
கடிமலரொன்றேயென்றுகமலங்களனைத்துங்கொன்றார்
படியமற்றதுசார்பூவும்பாற்றினார்விடுவார்கொல்லோ. (எஅ)

விளைநிலத்துழத்திமாதர்விரிசெழுங்கமலப்போதுங்
களைகெழுகுவளைப்போதுங்கைரவப்போதுமற்றை
வளையியல்கொடியுமஞ்சைவலங்களுநனிமுயன்று
தளைவிடப்புரிந்தார்நல்லாரெனும்பெயரவர்க்கேசாலும். (எகூ)

நிலம்வெளிவழிச்செலுத்திநெடும்புரஞ்செற்றபெம்மான்
பலவகைதடிந்துசின்னம்பண்புறுமெய்ப்பூண்டாங்குச்
சிலமலர்குழலில்வேய்ந்தார்சிலமலர்கையிற்கொண்டார்
சலமலிபண்ணைநீங்கித்தாமமரிருக்கைபுக்கார். (அ0)

களையொருங்கறுதலோடுருகருநிறங்கொடுசெஞ்சாலி
விளைபயிர்காமமாதிமேவுறுத்தவத்தினோங்கி
வளைமதிமுடியான்பாதமலரடைந்தவர்கைத்தானத்
தளைபயன்கிளைத்தல்போலொன்றனந்தமாய்க்கிளைத்தபண்ணை. (அக)

மனக்கினிதாயபூக்கண்மடிதரற்கேதுவாஞ்சொ
லினக்குமேல்ழநீர்ப்பாமென்றெண்ணிவெங்கலியைநாளுஞ்
சினக்குமற்றவைசூற்கொண்டுவெளிவிடறெரிந்துமேன்மேற்
கனக்குமாசெய்தநிந்துகதிர்கவிழ்த்ததுநீர்தெவ்வி. (அஉ)

பதடியொன்றேனுமின்றிப்பழுத்தசெஞ்சாலிநோக்கி
மதவலிமள்ளர்யாரும்வேதினமங்கைவாங்கி
முதலரிந்தவணிவீழ்த்திமுதுசுமையாகயாத்துச்
சுதமில்வண்களத்துத்தத்தந்தலைமிசைசுமந்துசேர்ப்பார். (அங)

போற்றுசெஞ்சாலிபல்லபொன்மலையெனப்போர்செய்துந்
தோற்றுவெண்சாலிவெள்ளிக்கிரியெனத்தொகுபோர்செய்து
மாற்றுபல்குறியுஞ்செய்வாரடுகடாபலபிணைத்து
வீற்றுவீற்றாகவப்போர்தள்ளுபுமிதிக்கவிட்டார். (அச)

உழுதவன்நாளிலிந்நாளுவகைசெய்நன்றாளென்று
முழுவலியொருத்தலெல்லாமுதுகளஞ்சூழும்போது
கொழுவுவைவாயிற்கவ்விக்குதட்டுபுநனிமுயன்று
தழுவியபலாலநின்றும்பிரித்தனசாலிமுற்றும். (அரு)

சொற்றவையுதறிப்போக்கித்தூற்றிநெற்குவித்தளந்து
கற்றவன்மறையோர்முன்னுக்களச்செலவொருங்குசெய்து
கொற்றவனுறிலொன்றுகொளக்கொடுத்தெச்சம்வாரி
முற்றவுமனைக்கணுய்ப்பார்முழக்கம்விண்செவிடுசெய்யும். (அசு)

அரிசனஞ்செறியுமிஞ்சிவாதியவகழ்கின்றாரும்
விரிதலைக்கரும்புவெட்டியுடைத்தலைமேற்கொள்வாரு
மெரிதரப்பாகுசெய்துகட்டிகளியைக்கின்றாரும்
பொரியளாத்தேமாவாதிப்பூங்கனிகொள்கின்றாரும். (அஎ)

கந்திகளீன்றதாற்றுப்பழம்பலகவர்கின்றாரும்
புந்திசெய்நல்லாரோடுபுதுப்புனலாடுவாரு
முந்தியகிழத்திமார்தமூடலையுணர்த்துவாரு
முந்தியநகரமெங்குமொய்த்துளாரிடையறாமே. (அஅ)

மன்னியவாரூர்நல்லம்வாஞ்சியம்மிழலையம்பர்
பன்னியபுகழ்க்கோமுத்திபகரிடைமருதுநாரூ
மின்னியகுடந்தையையாறுயர்வளமிகுமாயூரந்
துன்னியபிறவுங்கொண்டமருதம்போற்றூயதுண்டோ. (௮௯)

நெய்தல்.

வாய்ந்தவிண்ணுலகங்காக்கும்வள்ளலாயிரங்கண்கொண்ட
தேய்ந்தபல்வளமுநோக்கற்கெனப்பொலிமருதவைப்பி
னாய்ந்தசில்வளமுஞ்சொற்றாமல்லம்யாமலர்ப்பூம்புன்னை
தோய்ந்தபைங்கானநெய்தற்றொகுவளஞ்சிறிதுசொல்வாம். (௯௦)

வலிகெழுசுறவுகைக்கும்வருணனாற்புரக்கப்பட்ட
பொலிவுடையதுநீர்நெய்யிற்பொலியழற்குண்டமாகி
மெலிவில்பல்பரதவர்க்கூண்விளைநிலமாகியோவாக்
கலியமைகடல்விராயகருங்கழிநெய்தல்வைப்பு. (௯௧)

மணிகளும்பொன்னுமாயமாண்பெருஞ்செல்வமேவிக்
கணிதமில்பெருமைவாய்ந்தகடற்குவர்புலாலென்றேதுந்
தணிவரும்பழியிரண்டுந்தபுத்தலிற்புகழாமென்றே
யணிகொள்புன்னாகமாதியலர்ந்துதேனாற்றம்வீசும். (௯௨)

ஒருதினமுதல்வன்பாற்பொய்யொன்றுரைதோடநீங்க
வருதினமெல்லாங்கைதைவருதிரைமூழ்காநிற்குங்
கருதிதுகண்டுந்தீரார்கரைவர்பொய்யென்றுஞாலத்
துருவினவொன்னிற்றீர்க்குமுபாயமென்னுணர்ந்தார்கொல்லோ. (௯௩)

கூடியபவளக்காட்டிற்கூன்வளையூர்ந்துசேற
லாடியபெருமான்வேணியணிபிறைதவழ்தலேய்க்கு
நீடியவல்லியொன்றுநிற்கமீன்சுற்றுந்துள்ளல்
வாடியமருங்குற்கூத்திவாளாட்டுவினோதந்தேற்றும். (௯௪)

வடுவகிரனையவுண்கண்வலைச்சியர்மீன்பிளத்த
றொடுகடலுப்புமாட்டலுண்கல்சூழ்தருபுள்ளோப்பல்
விடுதல்செய்திடலானுண்டாமேனியிற்புலவுநாற்றங்
கெடுவகையனையளாம்பாற்கேதகைவாசம்வீசும். (௯௫)

கலத்துநின்றிழியும்வேழங்கருநிறங்கெழுபுன்னாக
நலத்தறல்குடித்தமேகநாடிவேறறியவேண்டி
னிலத்தியைநடையாலென்றுநிலைகொடுநிற்றலான்மேல்
வலத்துறவெழலாலன்றிமற்றொன்றாலறியலாகா. (௯௬)

உறுதிமில்விடுக்குமோதையுமணருப்பளக்குமோதை
பெறுவலைவீசுமோதைபெற்றமீன்கவருமோதை
மறுகுநீர்குளிக்குமோதைவளைபலபோழுமோதை
யிறுபன்மீனீர்க்குமோதையெழுகடலடைக்குமோதை. (௯௭)

இழிபொருளுயர்வுசார்ந்தாலுயர்பொருளிழிவுசார்ந்தாற்
கெழியதன்குணமாமென்றேகிளத்தன்மெய்புலவுசார்ந்த
கழிநறுநீலந்தீயபுலானாறுங்கழிபுலான்மீன்
கொழிநறுநீலஞ்சார்ந்துமலர்நாறுங்குணமீக்கொண்டே. (௯௮)

போதலிலாகூழுள்ளார்பொருண்முயன்றீட்டுங்காலை
நோதலிலாதமந்தப்பொருளுறனுவலக்கேட்டோங்
காதலினாவாயுந்திக்கணக்கின்மீன்குவிக்கும்போதே
யாதலுண்டாகத்துள்ளியாவயின்விழுவபன்மீன். (கூகூ)

இடைநின்றுமெழுந்தமாலிற்கிளர்கரும்புன்னைநிற்குந்
தடையின்றிப்பவளவல்லிதழுவன்மாத்தழுவனேரு
முடையபொன்றழுவவம்மானகையொருங்குற்றாலென்ன
மிடைதருகுழைமுகத்துவெள்ளியவரும்புதோன்றும். (க00)

வலைமடமகளிர்காயுமயிலைமுற்சாரவொட்டா
தலைபுரிகுவரானாலுமாவயினகலாபுட்டங்
கொலைபுரிமதனேவாயகொழுமலருண்டுமென்னர்
தலையணைமைபோருண்டென்னுந்தன்மையுட்டெரிந்ததொத்தே. (க0க)

முடிவலையெடுத்துவீசிமொய்த்தமீன்பலவுங்கொல்லுங்
குடிகளையிழிந்தவென்றுகூறுதற்கஞ்சுகின்றா
முடிவலையெடுத்துவீசிமொய்த்தமீன்பலவுங்கொன்றே
யடியரிலொருவராயவதிபத்தர்பெருமையெண்ணி. (க0உ)

மறையெலாமருச்சித்தேத்தவள்ளலாரமரும்வைப்பு
மறையுமோர்தவத்தினானைக்காயத்தாரோகணித்து
முறையருள்செய்துநாளுமுதல்வனாரமரும்வைப்பு
நிறைதருதவத்ததிந்தநெய்தலோமற்றுமொன்றோ. (க0ங)

மயற்பகையனைத்தும்வென்றுமாதவத்துயர்ந்தோனாய
வியற்பகையென்னும்வள்ளலெம்பெருமானைக்கண்டு
செயற்படுமொருசாய்க்காடுபல்லவனீசஞ்சேர்ந்த
தயற்படுநிலமோநெய்தலெனிலதன்றவஞ்சற்றாமோ. (க0ச)

பாலை.

வளமலிமுல்லைவாயின்மயேந்திரப்பள்ளிமுன்னா
வளவறுதலங்கடன்னுளடக்கிமற்றளவின்மேன்மை
யுளதெனவெவருங்கூறவுறுநெய்தல்வளமென்சொற்றாம்
பளகறுபுலமைவாய்ந்தீர்பாலையின்வளமுஞ்சொல்வாம். (க0ரு)

வேறு.

சொற்றநானிலவெல்லையுட்சுண்டலாயொதுங்கப்
பெற்றதெந்நிலமந்நிலம்பெருமுதுவேனி
லுற்றநண்பகற்பாலையென்றொருபெயர்பூணுங்
கொற்றமேவுறக்காத்தினிதோம்புவாள்கொற்றி. (க0சா)

நீரிலாநிலமாயினும்வேம்புகணிரம்பிச்
சாரிலார்தருநிழறருமீந்துகடைந்து
பேரிலாப்பசிபேர்தருகனிதருநெல்லி
யோரின்வாய்ப்புனலுறச்செயுமினப்புகழுறவே. (க0எ)

எந்நிலத்தருந்தோல்வியையெண்ணுநரல்லர்
நன்னிலத்தமர்ந்தென்பயனெனவதைநண்ணி
யந்நிலத்தமர்கொற்றிதனடிதொழுதந்த
வெந்நிலத்தமர்பூக்கொளினினியெவன்வேண்டும். (க0அ

மன்னுபல்பரன்முரம்பினைவளையெனவாங்குத்
துன்னுநிம்பவண்கனிசிவக்குறியெனத்துணிந்து
பன்னுபல்கழுகளாவுவவாரணப்பறம்பின் *
மின்னுசோதியைச்சூழ்கழுகடைவதுவிழைந்தே. (க0க)

ஒல்லுமிந்நிலம்பயனிலதாகுமென்றுரைப்பார்
புல்லுமற்றதனுண்மையைப்புந்தியுட்குறியார்
சொல்லுமெந்நிலத்துள்ளதாலிந்நிலந்துதைந்த
கல்லுநல்லுணவாயுயிரோம்புதல்கருதின். (கக0)

பரவுகோங்கங்களெங்கணுமுகுத்தமென்பஞ்சு
விரவுதன்மையானடப்பவரந்நிலமிதியார்
கரவுதீர்தரநோதலுமிலரொளிற்கரையு
முரவுசாலவர்சூரநிலத்தவரெனலொக்கும். (ககக)

திணைமயக்கம்.

செற்றமார்மறத்துவலை * யார்குரம்பைகள்செறியக்
கொற்றமேவியகொற்றிவாழ்கோட்டமுட்கொண்டாங்
குற்றயாவர்க்குங்கூடுமாறருள்சுரத்துறுசீர்
சொற்றனம்மினித்திணைமயக்கமுஞ்சிலசொல்வாம். (ககஉ)

வரையகம்பொலியொருதருத்தேத்தடைவழியும்
புரையிலின்மதுப்பொதுவியர்பாற்கலத்தேற்ப
விரைசெய்கானவான்பான்மதுக்கலம்விழைந்தேற்பா
ருரைசெயுங்கொடிச்சியர்பரிவருத்தனையுன்னி. (ககங)

கானவேறுபுற்றினைக் * குதர்ந்தெழக்கண்டகழனித்
தானவான்பகடடிகொடுதரையினைவெட்டு
ஞானநாயகனூர்திகண்டொருநமனூர்தி
யானதஞ்சிமண்புகமுயன்றிடுதிறனமையும். (ககச)

நல்லநீர்வயனின்றெழுவயலைமாநரலைப்
புல்லென்னீரளாமுவர்ப்புனனின்றெழுபவள
மெல்லவந்துசெய்நல்லீரளாமிருவினையா
லொல்லைமேன்மையுங்கீழ்மையுமாறுறுமுயிர்போல். (ககரு)

குன்றமேவியவிறவுளர்சிறுமகார்குழுமி
வென்றவெம்புலித்தோலுகிர்பறித்தனர்வீச
வொன்றநெய்தலங்குழமகார்ஞாழலொள்ளரும்பு
நன்றவாவுபுபறித்தெதிர்வீசினர்நகுவார். (ககசு)

கரியகுன்றமர்பசுமயிலாலுதல்கண்டு
பிரியமேயகானகத்துவான்கோழிபேருலகந்
தெரியவாடுவபற்பலகலைகளுந்தெளிந்த
வரியர்போன்றுபுன்கவிஞரும்பயிலுமத்திறம்போல். (ககஎ)

குரவுதாங்கியபாவைக்கான்பால்வநங்கொடுக்கும்
விரவுவாரிமுத்தெறிதரும்பணைகழைவீசு
முரவுமால்வரைபொன்மணிமுதலியவுதவும்
பரவுபாவையென்றுற்கொடார்பாரிடத்தெவரோ. (ககஅ)

---

* குதர்தல் சிதறுதல்.
* உவலை - ஓட்டை.
* ஆரணப்பறம்பு - வேதாசலம்.

நலமலிந்தவிவ்வளங்கெழுசோழநன்னாட்டு
வலமலிந்தபல்குடிகளுந்தமக்குரிமரபிற்
புலமலிந்தநல்லொழுக்கமன்பமைதரப்பொருந்திப்
பலமலிந்தவான்திருவொடும்பொலிவபன்னாளும். (கககூ)

பொன்னுநேர்தராப்புலவர்பல்லோர்களும்புகழ
மன்னுநீர்வளநாட்டின்வான்சிறப்புறச்சொல்வான்
முன்னுமாசைமற்றொருவிதந்தணிதரமொழிந்தாந்
துன்னுமேன்மைமாயூரத்தின்வளஞ்சிலசொல்வாம். (கஉ0)

திருநாட்டுப்படலமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம். கடுடு.

திருநகரப்படலம்.

பாங்குசேர்தவமுடையரோவசித்திடுபண்பாற்
றாங்குவார்சடைப்பிரானுமையொடுமமர்தகவால்
வீங்குபேரொளியாலழியாதமர்விறலா
லோங்குவான்சிவலோகமேகௌரிமாயூரம். (க)

சொற்றபல்வகைநூலுந்தன்பானின்றுதோன்றப்
பெற்றமேன்மையாற்பரன் * அகப்பொருளெனப்பெற்று
மற்றவானவர்புறப்பொருளெனக்கொண்டமாண்பா
லுற்றமாமறைபோல்வதுகௌரிமாயூரம். (உ)

கரியமான்மகன்கண்டபன்னகரத்துளொன்றே
லரியவாமலர்த்தூயவன்வழிபடற்காமோ
பிரியமேவவெம்பிரான்புரிநகரொனல்பெற்று
முரியநான்மறைமுழக்கருக்கௌரிமாயூரம். (ந)

மருவுமெண்டிசைப்பாலர்கண்மலரவன்மாயன்
பொருவுதீர்தருமொவ்வொருபதமுறப்போற்றத்
திருவொடுந்தருவள்ளலார்செறிதிருநகரோ
டுருவமற்றுமொன்றொப்பதோகௌரிமாயூரம். (ச)

முத்தவாணகைச்செய்யவாயரம்பையர்மொய்த்த
சுத்தமாநகராயதொல்வானகரொன்றும்
* அத்தமாநகரொன்றெடுத்தியாவருமறைதற்
கொத்தவேதுவாமுழுநகர்கௌரிமாயூரம். (ரு)

தேனவாங்குழலஞ்சனாயகியொடுதெய்வ
வானநாயகர்வள்ளலார்மருவுமாயூர
மானமோவுபேரொளிகொடுவயங்கலால்வானத்
தானமாநகர் * நிசிநகரொனச்சொல்வர்சான்றோர். (சு)

---

* அகப்பொருள் - அகநகரத்துப்பொருள்.

* அத்தமாநகரம் - பெரியபாதிநகரம் எனவும், பெரியபொன்னகரம் எனவுங்கொள்க.

* நிசிநகர் பொன்னகர் எனவும், இருணகர் எனவுங்கொள்க.

வரைமுன்னாகியநால்வகைநிலவளமதித்தே
புரையிலாநிலஞ்சுரநிலமெனப்புகல்வதுபோ
லுரைசெய்மேன்மைமாயூரநான்கெல்லையுளோர்ந்தே
கரைவர்வானகர்சுரநகரெனப்பலகற்றோர். (எ)

பரித்தபல்வளக்களரிமாயூரமிப்பாரே
யுரித்தவாயுறைவதற்கெனவுறையவும்வருநீ
விரித்தமேலென்பாலமர்வதென்னெனமதிமிளிர்வான்
சிரித்ததாகும்பொன்னகரினைத்தாரகைச்செறிவு. (அ)

விரிதரும்புகழ்க்களரிமாயூரத்துவிளங்கும்
பரிகள்குஞ்சரம்பசுநிதிதருமணிபல்ல
தெரியுமிவ்வளனமைதராச்சிறியபுன்னகராப்
பிரியமிக்கதற்கொப்பெனவெவர்சொல்லப்பெட்பார். (கூ)

அளகையென்பதுமிகுபொருளுடையதேயானும்
பளகறப்பகுத்தீதராமையினுவர்ப்பரவை
தளர்விலாநிதிபடைத்தமாயூரஞ்சார்ந்தோர்க்கு
வளமிலாவுறக்கொடுத்தலால்வயங்குபாற்புணரி. (க0)

வேறு.

அன்பினையருள்சூழ்ந்தென்னவருள்ினையமலச்சோதி
வன்புறும்படிசூழ்ந்தென்னமயிலாடுதுறையென்றோது
மின்புகழ்மாயூரத்தையெற்றைக்குஞ்சூழாநிற்கும்
பொன்புலமெனக்கொண்டார்க்குநிழல்செயும்பொங்கர்ச்சோலை. (கக)

தெருள்வளரருளைச்சூழ்ந்தசிவப்பிரகாசத்தூடே
பொருள்வளரிடையறுதவானந்தம்பொலியுமாபோ
லருள்வளர்மயிலைசூழ்ந்தவந்தளிர்ப்பொழிலினூடே
கருள்வளர்கலிதீர்செஞ்சொற்காமருகழனிமல்கும். (க உ)

வயலகம்பொலியாநின்றவான்கழைக்கருப்பங்காட்டோ
டுயலமர்தருவிற்றேமாங்கனிவநமளாவுந்தன்மை
யியல்வளர்காழிஞானசம்பந்தவிளவேற்றோடு
மயறவிர்ஞானவாய்மைவாகீசர்கலந்ததொக்கும். (கங)

கரியபுன்னாகநிற்றனிற்கின்றவடுகற்காட்டுந்
தெரியுமுக்கிளைக்கோடொன்றுதிருக்கையிற்சூலங்காட்டும்
புரிதரவருகுவெள்ளைமுழுமதிபொருந்தமேவ
லரியமற்றொருகைமேயவயன்றலைமண்டைகாட்டும். (கச)

மதுவுகக்குழிந்ததேத்துவாழைமாங்கனிகள்சேரப்
புதுமணங்கொழிக்குமற்றைக்கனிகளும்பொருந்துங்காட்சி
முதுபுகழ்ச்சிவத்தானத்துக்கவுணியமுதல்வாகீசர்
கதுமெனப்புகுதச்சூழுமடியரோகடுக்குமன்றே. (கரு)

கரையமர்கதலியீன்றகாமர்பாசிலைமேல்வீழ்ந்து
வரையறைதவிர்செஞ்சாலிக்கதிர்பலவருடுந்தோற்றம்
புரைசெய்மேற்போர்வைநீத்துப்போற்றுதண்டுலமாய்ச்சோறு
யுரைகெழப்பின்புமேவுமுரிமைமுன்னுறுதல்போலும். (கசு)

மயிலியலென்றுகூறும்வழக்கறமயிலேயாய
குயின்மொழியுமையாள்பூசைகுயிற்றியதானமென்று
வெயினிலவாகுஞ்சோலைவிரிமலர்க்கொம்பர்தோறும்
பயின்டமியற்றுநிற்கும்பசுந்தழைத்தோகைமஞ்ஞை. (கஎ)

சோலைசூழோடைதோறுந்தொடுபுனற்பட்டந்தோறு
மாலைவாய்மலர்செவ்வாம்பன்மலர்பலசெறிந்துதோன்ற
லாலைசூழ்திருவாரூரினமிநந்தியடிகணீர்மேற்
பாலையார்பற்பதீபம்பரப்பியகாட்சிமானும். (கஅ)

நால்வகைமலரும்பூத்தநந்தனவநங்கடோறு
மோல்வகையொழியாவண்டரொருங்குறவளைக்குங்காட்சி
நூல்வகைமுழங்குந்தேவர்நூனந்தீர்ந்தமர்தேமென்று
மால்வகையவுணர்பல்லோர்வந்துவந்தடைதல்போலும். (கக)

புறநகர்.

கலைபுகல்வளஞ்சான்மேன்மைக்கௌரிமாயூரச்சீர்த்தி
யலைவரும்பொதுமைதன்னிலறைந்தனஞ்சில்லவப்பா
னிலைபுறமிடையுள்ளென்றுநிகழ்த்திடுநகரமூன்று
ளுலைவறுபுறமென்றோதுநகர்வளஞ்சிலவுரைப்பாம். (உ0)

உம்பராதியர்பல்லோர்க்குமூறுதீர்வலியேரம்பத்
தம்பிரானடைந்ததெங்களூறுப்பொன்றன்சார்பாலென்னிற்
பம்புபல்லூறுப்புஞ்சேர்ந்தவெம்வலிபகர்வார்யாரொன்
றிம்பரையுணர்த்தியாங்காங்கியங்குவவெண்ணில்யானை. (உக)

தரைமுதலெட்டுமாயதம்பிரான்மேனிமுற்றும்
புரைதபமறைத்ததொன்றுபோர்த்தியதோலேயென்னிற்
கரைசெயெம்முடம்பின்பாழிகணக்கிடப்படுமோவென்று
வரையறமுழங்கியென்னமுழங்குவமதமால்யானை. (உஉ)

கறையடியென்றுந்தந்தாவளமென்றுங்கரியென்றும்பா
ரறைதருநால்வாயென்றுமவிர்புகர்முகமதென்று
மிறையிலொவ்வோருறுப்பான்மிகுதியும்பெயர்பெற்றோம்யாங்
குறையுளபிறவென்றெள்ளுங்குஞ்சரமனந்தமாங்கண். (உ௩)

எங்கடந்தலையிற்கோடொன்றில்லதையெய்தப்பெற்ற
திங்களஞ்சடையான்றுளிற்றிறனரமடங்கற்சென்னி
பங்கமுற்றொழியத்தாழும்படிகண்டுமரிதெவ்வென்பார்
தங்களைாள்ளறிவென்னென்றுதந்தத்தானகைக்கும்வேழம். (உ௪)

மருவலர்மருமம்போழுமருப்பினமகுடச்சென்னி
திருகுறுங்கரத்தயாக்கைசிதைதரத்தேய்க்குந்தாள
வெருவருகிலுமஞ்சுமுழக்கினவென்றிகோட
லொருவருமதமால்யானைவாரிகளூலப்பிலாத. (உ௫)

அரிவிறலுருவங்கொண்டவரியெனப்படுமோர்தேவும்
விரிதருமீற்றிலெங்களுருக்கொளல்வேண்டுமென்னிற்
புரியுமெம்முருவச்சீர்த்திபுகலுதற்கடங்காதென்று
தெரிதரமுழங்கல்போலச்சிலைத்தனதிரிவபாய்மா. (உ௬)

எங்களினான்குகூடியிமையவர்கூட்டத்தோடு
துங்கவெண்கயிலைமேயசோதியைப்புவிமேலேற்றிப்
பொங்கமுன்னீர்த்தவென்பார்புகழதன்றொன்றேசாலு
மங்கதுதெரிவார்யாரொன்றியம்பலினார்க்கும்வாசி. (உஎ)

மறைமொழியந்தணாளர்வழாதுமுப்பொழுதுஞ்செய்யு
நிறைபெருஞ்சகாயத்தாலேநிகழுமோராழிபூண்ட
பொறையிலாவொருதேரீர்த்துப்போமெழுபரிகளிவ்வூர்க்
குறைவிலாவொன்றேயீர்க்குஞ்சகாயமுங்குறிக்கொள்ளாதே. (உஅ)

ஆயதம்முருவங்கொள்ளுமலங்கலந்துளபமாயோன்
மேயநன்மனையாளென்னுமெய்யுளத்துணர்ந்ததேயோ
பாயபல்புரவியெல்லாம்பார்வடுப்படுமென்றஞ்சித்
தோயவுந்தோயாவாகவடியிடாத்துனைந்துசெல்லும். (உகூ)

செறுநர்தஞ்செம்பொன்மோலிச்சென்னிமேற்குரமழுத்து
மறுதியின்மயம்வந்தாலாழியோரேழுந்தாண்டும்
பெறுவதுவென்றியன்றிப்பெற்றறியாதவென்று
மறுவறுவாசியாத்தமந்திரம்பல்லவாங்கண். (௩0)

தளைகிழித்தேகுஞ்செய்யதாளும்விண்ணுலகமென்னும்
வளைகிழித்தேகுமம்பொற்சென்னியும்வாய்ந்தபொற்றே
ருளைகிழித்தேகுஞ்சீர்த் * தீயுருவன்பூண்கரியவாசி
புளைகிழித்தேகும்வெள்ளைத்துவசநாடிரண்டும்போலும். (௩க)

தழுவியதளிரியற்குக்குழைந்தவன்பாதஞ்சார
வழுவியவச்சுவாய்ந்தசயந்தனமாறுநாணுண்
முழுகியாறுறினுமச்சுமுறிதராவினையபொற்றே
ரொழுகியசமவாநிற்குந்தோற்றதற்குறுவதென்னே. (௩உ)

மறையெலாமெடுத்துக்கூறுமாதேவனேறும்பொற்றே
ரிறையிலோரவுணன்வெளவிக்கரப்பதற்கியைந்ததன்றே
நிறையொளியினையபொற்றேரதுபெருநிலைமையாலே
முறையின்மற்றதனோடொப்புமொழிதரல்குற்றமன்றோ. (௩௩)

விளைதரவீர்த்துச்செல்லும்வெம்பரிக்குழாத்தையோதும்
புளைதபுசயந்தனந்தான்றொடர்ந்ததுபோகுங்காட்சி
யுளைமறைக்காட்டினின்றுமும்பர்நாதனைவாகீசர்
திளைசெய்நீர்வளஞ்சால்வாய்மூர்சேர்தரத்தொடர்ந்ததேய்க்கும். (௩ச)

தரியலர்கூட்டமேவிற்றளைமிசைக்கிடத்தியேறி
விரிகுடர்மூளைநெய்த்தோர்பரந்திடமிகத்துவைக்கு
மரிமணிப்பொலந்தேருட்கொண்டலங்குயர்சாலைமேலாற்
றெரிதரவோராழித்தேர்முதலியதிரிவமாதோ. (௩௫)

விழித்தகண்ணிமைத்தல்செய்யார்வேலெதிர்வந்தபோதுங்
கொழித்தபொற்கழற்கால்பின்னர்வைத்திடார்கூற்றுற்றாலு
மழித்தபல்லூறுற்றாலும்பிடித்தவாளங்கைசோரா
ரிழித்தசொல்லடையுங்காலத்துயிர்ப்பொறையெய்தாவீரர். (௩௬)

---

* தீயுருவன், அக்கினி மலையாகிய சிவபெருமான்.

தரியலரம்புமார்புத்தையவாம்வடுக்களன்றி
யுரியபொற்கலங்கள்வேறென்றுவப்புறூர்தெவ்விலாமைப்
பெரியகண்டேதிதின்னப்பித்தரிற்றிரிவார்நேரிற்
சரியவென்றிடலாமென்றுதடம்புயம்வீங்கும்வீரர். (௩எ)

ஒருகையிற்பலகைமற்றையொருகையில்வடிவாடாங்கித்
திருகையுற்றமர்செய்வார்முற்செல்லுவரவர்பின்னிட்டாற்
பொருகைகொண்டமைக்குத்தம்மைப்புலந்துதாமேயிழிப்பார்
முருகையொப்பவரோளைந்துமுகமிலாக்குறையொன்றுண்டே. (௩அ)

இன்னபல்வீரர்வாழுமிருக்கையுமிவருக்கேவன்
மன்னநன்காற்றுவார்தம்வாழ்க்கையும்பரிமால்யானை
யுன்னதவிரதமற்றுமுள்ளவைதமக்குவேண்டு
மின்னகுபலவுமாற்றும்வினைஞர்தமிருப்பும்பல்ல. (௩௯)

இடைநகர்.

அறநகவொன்றுபன்னூலறிந்தவரொடுத்துப்பேசுந்
திறநகராயதிராச்செல்வஞ்சேர்மாயூரத்தின்
புறநகர்வளத்தென்சொற்றும்பொற்பொடுபொலிவுநாளு
முறநகரரசாய்மன்னுமிடைநகருரைக்கலுற்றும். (௪0)

அளிவளர்கதுப்பினல்லாராடவரொடுங்குலாவு
மொளிவளர்மணிசெய்மாடமோங்கொளிபரப்பலாலே
களிவளர்கருப்புவில்லான்களிற்றிவர்ந்தேகல்செய்யா
னளிவளவொருதேரோறிச்சாளரநுழையுநாளும். (௪க)

நன்னலங்கனிந்தமேனிநங்கையரிலக்கமாகக்
கன்னலஞ்சிலைபெய்வாளிக்கமலம்வாழ்வதனமுல்லை
பன்னலந்தியநீலம்பார்வைகண்டனுகற்கஞ்சு
மின்னலமசோகமாம்பூவிரண்டுமஞ்சாதுமேவும். (௪௨)

மலையினும்பொலியுந்திண்டோண்மைந்தர்யாவரையும்வாங்குஞ்
சிலைநுதன்மடநலார்தந்திருமுகநினைப்புண்டாக்கும்
விலையில்வெண்ணகையேநாளுமிகுகிடைகாட்டுங்கண்ணே
கொலைசெயுமென்னிற்காமன்கொடுங்கணைமிகையாமன்றே. (௪௩)

மேனுயர்ந்துகாந்தவெண்ணிலாமுற்றத்திட்ட
காலுயர்பரியங்கத்திற்கண்டியின்மாதர்மைந்தர்
பாலுயர்மதியந்தோன்றப்பொழிந்தநீர்பரத்தலாலே
சேலுயர்கடலிற்றுஞ்சுந்திருவொடுமாயனொத்தார். (௪௪)

வெள்ளியவிந்துகாந்தவெண்ணிலாமுற்றநாப்ப
ணெள்ளியுவாடலாற்றியணைமிசையுறங்குநல்லார்
வள்ளியமதிகண்டாங்குவண்புனல்பெருகலாலே
துள்ளியகடலிற்பற்பறுகிர்க்கொடிப்படர்ச்சிபோன்றார். (௪௫)

வானுயர்மாடமேலாற்றுகிற்கொடிவயங்கல்கண்ட
மீனுயர்கடல்வைப்போர்வான்றேனுரிவிதமென்னென்பார்
கானுயர்கற்பநாட்டார்கண்டுமண்முளைத்தெழுந்து
தானுயர்தருவின்பாலோர்தளிருறும்பெயர்யாதென்பார். (௪௬)

மேலுயர்செம்பொன்மாடவெண்ணிலாமுற்றஞ்சார்ந்த
பாலுயர்மொழியாரொட்டிக்கற்பகப்பழம்பறிப்பார்
மாலுயர்வானநாட்டுமாதர்சற்றேகுனிந்து
காலுயர்மனைப்பாற்றேமாங்கனிபலபறித்துவப்பார். (சஎ)

புயறவழ்மாடமேலாலரிசனமாதிபூசி
வியனெடுங்கண்ணார்மண்ணிவிடுபுனலனையதேத்துக்
கயலொழுகாற்றுவீழவதின்முழுகமரர்தாம்வே
றியன்மணமதித்துடந்நலார்க்கிடைந்திரங்கிச்சோர்வார். (சஅ)

ஓங்குபொன்மாடமேலாலொள்ளிழைமடவார்கூட்டிப்
பாங்குசெய்மஞ்சளாடல்பயின்றிடவனையமஞ்சள்
வீங்குவாசனைசுலாவமெய்மணங்கமழ்வதோரார்
தேங்குவானரம்பையர்க்குச்செயற்கைவாசனையின்றென்பார். (சகூ)

கொழிசுவைத்தமிழ்நேரஞ்சொற்கோற்றொடிமடநல்லாரும்
பழிதபுமைந்தாரும்பயிலுபரிகையின்மாட்டுக்
கெழியபன்மடவார்போக்கல்செய்யவுங்கிளர்ந்தகுப்பை
கழிதரக்காணார்பஞ்சதருக்களைக்கனன்றுவைவார். (ருo)

வெள்ளியமுறுவற்செவ்வாய்விளங்கிழைமடநலார்சேர்
வள்ளியபொற்கீழ்மாடமண்ணுவபொன்னிநன்னீ
ரொள்ளியமணிச்சாலேகமுறந்தபொன்னொளிர்மேன்மாடந்
தெள்ளியபிறவுமண்ணுந்திருந்துவான்கங்கைநன்னீர். (ருக)

துன்னியசெம்பொன்மாடச்சோபானமார்க்கஞ்செல்லின்
மன்னியசுவர்க்கலோகமருவுதற்கையமில்லை
மின்னியவவ்வாறேகாவிதமெவனெனவினவி
லுன்னியவஃதிவ்வூர்போற்சிறவாமையுணர்ந்தார்போலும். (ருஉ)

காரும்வாரறலுமஞ்சுங்கதுப்பினார்செல்வமாட
மேருவோடிகலின்றவிந்தமொத்துயர்ந்ததேனுஞ்
சாருநாள்கோளியங்கச்சாளரம்விடுத்தலாலே
யோருமோர்முனிகைசெய்வதொன்றுமின்றுயிற்றம்மா. (ருங)

வலிதருமைந்தரெல்லாமதனனேயென்னும்பொற்பார்
பொலிதருபரமன்மேலும்பூப்பலதூவுவார்க
ளொலிதருநுதற்கணுக்காதொழிந்ததென்னெனவினவின்
மலிதருபூவைப்பூவென்றெண்ணுதல்வாய்ந்துளாரோ. (ருச)

பொருவில்வெண்சுதைசெய்மாடம்பொங்குபாற்கடலாமேலா
லொருவருமடநல்லாராங்குதித்தெழுஞ்செய்யாளொப்பார்
வெருவருமைந்தர்வேட்டுமேவியமாயோனொப்பார்
பருவரலில்லாப்பாலர்பசுங்கழைக்குமரனொப்பார். (ருரு)

நறுமலர்கட்டிமைந்தர்நகுமனக்கட்டவிழ்ப்பா
ருறுவகைநோக்கியன்னாரொன்றுநோக்காதுசெய்வா
ரிறுமருங்கலசக்கொங்கையெடுத்தவரொடுப்பொழிப்பார்
மறுவறநடந்தன்னார்தநடையொழித்திடுவர்மாதர். (ருசு)

கண்டத்தினழகைவெளவுங்களவறிந்தொறுத்தன்மானக்
கண்டொத்தமொழியார்கந்திக்கழுத்துறப்பாசம்பூட்டிக்
கண்டத்துகுழைகளாடக்காமர்பொன்னூசலாடக்
கண்டுற்றபுருடர்நெஞ்சுங்கலக்கமுற்றூசலாடும். (௫௭)

வெயில்விடுமணிசெய்மாடமீமிசையர்நலாரை
மயிலெனவஞ்சியன்றேவானகத்திராகுகேதுப்
பயில்கதிர்மதியைநாளும்பற்றல்செய்யாவாம்பற்ற
லயில்விழிமடவாரங்கணமர்தராக்காலத்தம்மா. (௫௮)

மாதரார்வதனங்கண்டம்வயங்கிருநிதிகளாக
வோதமுத்தாரக்கொங்கையுவக்கும்வெள்யானையாக
நோதகமருங்குல்கற்பக்கோடாகநுவலுமைந்தர்
காதலிந்திரன்போல்வார்மெய்க்கண்ணிலாக்குறையொன்றுண்டே. (௫௯)

முரிதிரைப்பரவையல்குன்முயங்குமந்தரம்போற்கொங்கை
வரியரவொருமருங்குல்வயங்குறுதாங்களொன்னு
முரியவோடதிமடுத்திட்டுறுசுவையமுதங்கொண்டு
தெரியவந்நகர்வாழ்மாந்தர்யாவருந்தேவரொத்தார். (௬௰)

பெருகொளிமாடமேலாற்பிரசமென்கூந்தலோடு
முருகெழுமடநலார்தந்திருமுகத்துண்மைதேரார்
கருமுகிலென்பதம்மாகலைநிறைதருவீபத்தி
னருகமர்ந்ததுமறைத்தற்கஞ்சியதிறும்பூதென்பார். (௬௧)

செங்கயல்விழியாரொன்றுந்திருவளுருவப்பேயென்றுந்
தங்களுளுணரார்கன்னிதவாச்சிலைகடகங்கும்பந்
துங்கவண்மகரஞ்சிங்கமொவ்வொன்றேதுலங்குமிங்குப்
பங்கமில்பாரிற்பல்லவெனப்பகருவர்வாணுடர். (௬௨)

வணக்கநன்குடையார்செல்வம்வாய்ந்துமேலாவர்நாளும்
வணக்கமில்லவர்கீழாவர்வறியராயெனறெரித்தாங்
கிணக்கவண்மூங்கின்மேல்கீழியைந்தயானத்துமேல்கொண்
டிணக்கநன்குடையசெல்வரியங்குறுசிறப்புமல்கும். (௬௩)

வடதிசைக்கிறையுநாணுமாப்பெருஞ்செல்வமுற்று
மிடமிகுமதைமதித்தலென்றுமில்லவரொஞ்ஞான்றுந்
தடமுகிலாதிநாணுந்தவாக்கொடையடைந்தும்யார்க்கும்
விடலிலரினியகூறல்விழையுமந்நகரமாக்கள். (௬௪)

பேரதிகாரத்தோடுபெருங்கண்ணோட்டமுநன்குள்ளார்
சாரருந்திறன்மையோடுதவாதவொப்புரவுமுள்ளார்
தேருமாசாரத்தோடுஞானமுஞ்சிறப்பவுள்ளார்
தீரரும்வளத்தாலோங்கிச்சிறக்குமந்நகர்வாழ்மாந்தர். (௬௫)

காவணமெங்குமிட்டுக்கரும்பொடுகதலியாத்து
மாவணவிதானந்தூக்கிவயங்குபொற்றொடைகளோடு
பூவணத்தொடையுநாற்றிப்புதுப்புனலிறைத்துக்கைசெய்
தாவணவியமவீதிசுவர்க்கத்தைநரகஞ்செய்யும். (௬௬)

மங்கையர்பின்பான்மூட்டுமைந்தர்கள்வடிவுவாய்ந்த
வங்கவர்முன்பான்மூட்டுமவர்க்குளநாணுவார்க
டுங்கநன்மைந்தர்பின்பான்முட்டிய்தொடிக்கைநல்லார்
தங்கமற்றவர்முன்பான்முட்டவர்க்குளந்தகநாண்கொள்வார். (சுஎ)

வரையகத்துள்ளயாவும்வயலகத்துள்ளயாவுந்
திரையகத்துள்ளயாவுஞ்செருத்தலான்குலங்கண்மல்கு
தரையகத்துள்ளயாவுந்தழைதலானியமவீதி
புரையறத்திணையோர்நான்கும்புக்கினிதமர்தல்போலும். (சுஅ)

மெல்லுவவொருபான்மல்கவிழுங்குவவொருபால்வீங்க
வொல்லுவபருகற்காயவுணத்திறமொருபாலோங்கப்
புல்லுவபிறவுங்கொண்டுபொலிதருநியமவீதி
சொல்லுவபோகபூமித்தோற்றமேயனையதம்மா. (சுகூ)

உண்ணகர்.

மிடைதருமைந்தர்மாதர்வேட்டுலாம்விழவுமாறு
விடைநகர்வளத்திற்சில்லவியம்பவும்வல்லர்யாரோ
கடையுறலென்றுமில்லாக்காமருசிறப்புவாய்ப்புற்
றடையவிண்ணகருநாணுமுண்ணகரறையலுற்றும். (எ0)

ஆசையின்மேலுமெய்தவள்ளலாரருள்வதெண்ணி
யோசையினுயர்பாலாழியொத்திடநன்னீராழி
மாசையின்றுயமேன்மைவளம்பெறல்குறித்துச்சூழ்ந்தாங்
கேசையில்கிடங்குசூழுமகநகரிஞ்சிசூழ. (எக)

பாம்புரியெனவோர்நாமம்பகருவர்கிடங்கிற்கப்பேர்
நாம்புரியிதற்கேசாலுநாடுபல்பாம்புவாழ
வேம் * புரிவைப்பினுக்குமுரிமையின்மேவிச்சூழ்ந்து
தோம்புரிதெவ்வுமேவாவண்ணங்காப்பியற்றுஞ்சூளால். (எஉ)

எறிகளிறருகுமேவினுறுப்புத்தொட்டீர்த்தல்செய்யா
தறியமாலாழியோடுமங்காந்துவிழுங்கவல்ல
செறிவலிக்கராங்கள்பல்லதிரிதருகிடங்குநன்னீர்
நெறியுயிர்திலையாவாற்றுறற்கன்னியர்நிதம்பம்போலும். (எங)

தனையடைந்தவரையுள்ளேகொண்டுபின்வெளிச்சாராம
னினைதரவொளிக்குங்குண்டுநீர்க்கிடங்கெந்தஞான்றுந்
தனையடைந்தவரையுள்ளேகொண்டுபின்வெளிச்சாராம
னினைதரவொளிக்குமெங்கணின்மலப்பிரானேதேரோம். (எச)

பெரும்புறக்கடலீதென்றுபெருங்கிடங்கரையுட்கொண்டு
விரும்புறமுகில்கள்வீழ்ந்துவிரிபுனனிறையவுண்டு
சுரும்புறமலருந்தாருச்சூழ்ரேமிவரையீதென்று
தரும்புறமதின்மீதேறுந்தலையடையாதிளைக்கும். (எரு)

---

* வேம் - வெம்மை என்னும்பண்புப்பகுதியிறுதியிலுள்ள எழுத்துக்கள் கெட்டுமுதனீண்டு, வருமெழுத்திற்கு இனவெழுத்துமிகுந்து, விருப்பமென்னும் பொருளைத் தந்தது.

அஞ்சனுயகியாரோடுமமர்ந்தளவிலாவுயிர்க்குந்
தஞ்சமேயாகயாவுந்தருமொருவள்ளலார்த
மஞ்சவாம்புகழேபோலவானகங்கிழித்தப்பாலும்
விஞ்சவேசென்றதம்மாவிறலுடைநொச்சியிஞ்சி. (எசு)

பொறிபலவடக்கியோவாப்புண்ணியமுதல்விபாகப்
பறிகிகர்சடைப்பிரானைப்பரவுதன்னகத்தேகொண்டு
சிறிதசைவேனுமின்றித்திகழ்நிலையமைந்தவாறா
மறிவறநோற்றல்வன்மைமருவியயோகிபோலும். (எஎ)

கொடிபலசெறியநிற்குங்கோணைமாமதிற்கணென்பார்
படியின்மற்றுள்ளவாயபன்மதிலகத்துங்கண்டோ
நெடியவிம்மதிற்கட்காணேநிலவமேலுள்ளவேநான்
முடியபுட்பறந்தபோதுமுற்றுமோகாண்டலம்மா. (எஅ)

இம்மதில்சிறிதுகண்டவெமக்குநேமியங்குன்றென்னு
மம்மதில்காணவேண்டுமோசைசற்றேனுமில்லை
மும்மதில்புரிந்ததுன்பமுழுமையுமறக்குமாறிச்
செம்மதிலுயர்ந்துசென்றுதேவரூர்பலவுங்காக்கும். (எகூ)

கடக்கருமதிலோர்மூன்றுங்கடந்தசேவகனைத்தன்னு
ளடக்கியமதிலின்மேன்மையளப்பவொவரோவாயில்
விடற்கருமுயரஞ்சொல்லவேண்டுமோகோளுநாளும்
படற்கரும்பொன்செய்மேக்குப்படியுருகிழக்கேசெல்லும். (அ0)

தம்மனமிதுபோற்கோணல்சமைந்ததென்றறிவிப்பார்போ
லம்மநல்யாழ்கைக்கொள்வாராயினுநவிலுமாற்றஞ்
செம்மையென்றறிவிப்பார்போற்றெள்விளியிசையெழுப்புங்
கொம்மைவெம்முலையார்சேரிகோலமார்தறக்கமேய்க்கும். (அக)

மின்னனுர்கரங்குவிக்கமிளிர்சாமிகரங்குவிப்பார்
முன்னருமுத்தொன்றீயமுகந்துபற்பலமுத்தீவா
ரன்னர்நாணென்றேதோற்கவனைத்தையுந்தோற்பார்மைந்த
ரென்னின்மற்றவரிலாபமெய்துநர்மண்மேலியாரோ. (அஉ)

மெய்வாய்கண்மூக்குக்காதாமைந்தற்கும்விடயமாகி
மைவாய்கண்மற்றைநல்லாரின்புசெய்வழக்குண்டேனுங்
கைவாய்மிக்குளபொன்முற்றுங்கவருபுவெறுமைசெய்து
பொய்வாய்நெஞ்சிவர்போல்யார்க்குந்துறவின்பம்புணர்த்திடாரோ. (அங)

எத்துணையளித்தபோதுஞ்சாலுமென்றேமுருத
முத்தவெண்முறுவனல்லார்முதிரழற்பிரானேபோல்வா
ரத்தகுதிறனுலன்றேவனையருச்சிட்டநாளும்
வித்தகமறையோராதியாவரும்விருப்பிற்கோடல். (அச)

வாடுதலற்றசெற்றமணமலர்புனைதலானும்
பாடுதல்வாய்ந்தசூழும்படமழுக்குறுமையானுங்
கூடுதலிரவேயென்றும்பகலென்றுங்கொளாமையானு
மாடுதல்வல்லமாதரரமடந்தையரேயொத்தார். (அரு)

பொருவருவனப்புவாய்ந்தபுலோமசையிட்டிநூறு
வெருவறமுடித்துள்ளாவிருப்பொடுதழீஇயுயர்ந்தா
டுருபதன்மகளோராவர்த்தோய்ந்துமேல்விழைந்துயர்ந்தா
டிருவனரிவருமன்னர்செப்புதற்கிழிபொன்றுண்டோ. (அசு)

வெள்ளணிபுனைந்துளாருஞ்செவ்வணிவிழைந்துளாரு
மொள்ளணிமைந்தர்க்குற்றதுணர்த்துவான்விலைமினார்தந்
தெள்ளணிமறுகுலாவல்செழுங்கலைமகளுஞ்செல்வ
நள்ளணிமகளுமாங்குநயந்தனருலாவல்போலும். (அஎ)

ஆடவர்மகளிர்நன்னீராட்டலோர்ந்தகன்றநாளே
யேடவிழ்குழலார்பாற்பன்னிரண்டுநாளனுபவித்துக்
கூடலைவிரும்பிமைந்தர்புகுநாளாதலிற்குலாவு
நீடமைத்தோணல்லாருக்கொழிபுநாணேராதென்றும். (அஅ)

கயில்செறிகடகச்செங்கைக்கருங்குழலுமையைநீங்கி
யெயிலொருமூன்றுஞ்செற்றோனின்னும்யோகிருப்பானென்னின்
மயிலியல்பொழில்சுலாவுமயிலாடுதுறையின்மேய
வயில்விழிப்பொதுமின்னருக்கொழிபுநாளமையுமன்றே. (அகூ)

அவையவக்குறைவிலாமையாரழகுடைமைவாய்ந்த
குவைமலர்க்குழலார்போகங்கூட்டுணல்வெறுத்துமைந்தர்
செவையுறவூருந்தேருஞ்சிவிகையுமாவுஞ்செற்ற
கவைமனத்தஞ்சொலார்தமறுகியல்கழறப்போமோ. (கூ0)

அறைதருமேனைநீர்போலாதகம்புறமுஞ்சுத்தி
நிறைதருவிதஞ்செய்தெய்வநீர்க்கங்காகுலத்தரொன்னு
முறைதருபுகழுக்கேற்பமுயங்கிருசுத்தியும்பெற்
றுறைதருபுகழ்வேளாளர்தெருவளமுரைக்கலுற்றாம். (கூக)

புதியராயடைந்துள்ளாராப்பொன்னியந்துறையிற்கோணன்
மதிநிலாமுடியார்கோயில்வாயிலிற்காணல்போலப்
பொதிபசியொழித்துவேண்டும்பொருள்கொளப்புகுதலாலே
நிதிபெறுபுகழ்வேளாளர்தெருத்தொறுங்காணலாமே. (கூ௨)

வருவிருந்தெதிர்கொண்டேற்றுமனமகிழ்முகத்திற்றேற்றி
யொருவருமவிருப்பமிக்கூறுணப்பலவமைத்துக்கொண்டு
பெருகியமுகமனோடுபேணினரூட்டிப்பின்னு
மருகமர்ந்தவாவலுந்தேர்ந்தளித்துமிக்குவக்குநீரார். (கூ௩)

விண்ணவர்பிறர்பாலன்புசெய்யாதுவிடையோன்பாலே
யண்ணலம்புகழ்வேளாளரன்புசெய்திடுவதோர்ந்தா
நண்ணல்செய்கடல்கடைந்தநாளடைந்தாரைவஞ்சித்
துண்ணல்செய்ததுமஃதாற்றாதுண்டதுங்கண்டேயன்றே. (கூச)

இறைபடுசெந்நெலானும்யாவருஞ்செறிதலானு
முறைசெறிந்தவர்க்கப்போதேயிலம்பாடுமுடிதலானுங்
குறையில்பன்மரக்காலோடுகாவணங்குலவலானுங்
கறைதபுவேளாண்மாக்கடெருவவர்களமேபோலும். (கூரு)

அட்டிலினுலைநீர்ப்பெய்யவரிமதர்மழைக்கணல்லார்
மட்டிறண்டலெங்களைந்துவடிக்குநீர்வயல்விளைக்கு
முட்டில்குய்ப்புகையெழுந்துவானமூழ்மெென்னிற்
கட்டின்மற்றனையார்செல்வப்பெருமையார்கணிக்கற்பாலார். (கூசு)

ஆன்றதம்பொருளேபோலவயலவர்பொருளுங்காண்பா
ரோன்றகாரியமின்றென்னிலிம்மியுஞ்செல்லவொண்ணார்
சான்றசீர்தூக்குங்கோலிற்றம்மைமுன்னிறுத்தல்வல்லார்
மான்றவுள்ளிலராய்வாழும்வணிகர்தந்தெருவும்பல்ல. (கூஎ)

கொள்ளுநாட்கொளலவ்வாறுகொண்டபல்பண்டமுற்றுந்
தள்ளுநாள்விடுத்தலின்னதன்மையிற்சற்றுங்குன்று
ரள்ளுநாளுவத்தல்போலேயாவையுமயலார்கொள்ள
விள்ளுநாளுறுவாரன்னார்மேதகவெவருக்குண்டே. (கூஅ)

அலர்கதிர்மணியுஞ்சந்துமகிலுமால்யானைக்கோடுங்
குலவுசெம்பொன்னுமுத்துங்கொழுஞ்சுவைத்தேனுமற்று
நிலவுபல்பொருளுஞ்சேர்ந்துநிரம்பலால்வணிகர்மாடம்
பலர்புகழ்வரையேயென்றுபாடுதற்கையமின்றே. (கூகூ)

நகப்படுவணிகர்வீதிநாடொறுமரிப்பார்கையி
லகப்படுமணியுமுத்துமளகையர்வேந்தன்காதன்
முகப்படுமிளநலார்தமுலைமுகட்டில்லையென்னிற்
றகப்படுமகவான்வைப்பிலுண்டெனச்சாற்றுவார்யார். (க00)

கறுத்துவந்தெதிர்த்தமாற்றுர்கற்பகமாலைசூடப்
* பொறுத்துவண்டும்பைமாலைவண்டுகள்பலபொருந்த
வொறுத்தலான் * மீடராவண்டொன்றுய்க்கும்வலிசால்வேந்த
ரிறுத்துவமானமோங்குமில்லம்வானத்துமோங்கும். (க0க)

பாதகம்புரிந்தாரோனும்பறந்தலையெதிர்ந்தாராகின்
மாதகவவர்க்காக்கிப்பொன் * வாளுடல்வழிமேற்போக்கி
நோதகவொழிந்துவாழறுவன்றுசெய்வலிசால்வேந்தர்
மாதகவுடையராகிமனுமுறைதழுவிவாழ்வார். (க0உ)

அரிநடத்திடவல்லாளையாளிநேர்புயத்தினேந்திக்
கரிநடத்திடவல்லாருங்கணிப்பருஞ்செண்டுபோகும்
பரிநடத்திடவல்லாரும்பார்கிழித்தேகுமாழிக்
கிரிநடத்திடவல்லாருங்கெழுவியதரசவீதி. (க0ங)

மைவழிகருங்கட்செவ்வாய்வாணுதன்மடநதைநல்லார்
கைவழிக்கண்ணுமந்தக்கண்வழிமன்முஞ்செல்ல
நைவழியில்லாத்தாளந்தண்ணுமையாதிநல்கோ
தைவழிநடிப்பநோக்கிச்சதமகனினுமின்பார்வார். (க0ச)

---

* பொறுத்துவண்டும்பைமாலைவண்டுகள்பலபொருந்த, பலவண்டுகள் பொருந்தவளவியதும் பைமாலையைப் பொறுத்து, எனக் கொண்டுகூட்டாகப் பொருள் கொள்க * மீடராவண்டு - திரும்பாதபாணம்.

* பொன் - சூரியன்.

அழலுருவுடையதேவையருமறையுணர்த்தவாறே
யழலுருநாப்பணோக்கியம்புயத்தவனுமேத்த
வழலொருகரத்திற்றாங்கியரியநூலனைத்துந்தெள்ளி
யழல்சினமாதிநீத்தவந்தணர்மறுகுபல்ல. (௧0௫)

அறுதொழிலாளரென்றேயாவருஞ்சொலப்பட்டாரன்
பறுதொழிலாற்றொன்றுமாக்கமுமழிவுந்தம்வா
யுறுமொருமொழியாலாற்றுமுரவினர்பலருங்காண
வுறுபசுக்கொலையேசெய்துமொருபழியேனும்பூணார். (௧0௬)

தாவருமெழுநாச்செல்வன்சடசடமுழங்குமோதை
மேவரும்வானோர்தம்மையவியுணவிளிக்குமோதை
பாவரும்பணைமுழங்கப்பைம்புனலாடுமோதை
யேவரும்வியப்புக்கொள்ளவெழுகடலவிக்குமோதை. (௧0௭)

பொன்னிநீராடியீரப்புடைவைதம்மனையிற்சூழ்ந்து
* துன்னியோர்வரியசெந்தீயட்டிலைச்சுவையுணக்க
ளுன்னுமாதரவினுக்கியதிதியருண்ணவூட்டி
மன்னுபார்ப்பனமின்னாரால்விளங்குவமாடமெல்லாம். (௧0௮)

கரம்பொலிபலாசத்தண்டுங்கரையணைமுஞ்சிநாணு
முரம்பொலிமான்றோல்சேர்த்தவொள்ளியபஞ்சிநூலுந்
திரம்பொலிசிகையும்பொற்பச்செறிதுகிற்செருக்குத்தூங்க
வரம்பொலிமறைநூல்கற்குமகார்கிடைவயங்குமெங்கும். (௧0௯)

காதேறுகலைநூல்வல்லகவுரிமாயூரப்பார்ப்பார்
மாதேவனுருவமன்றிமற்றையோருருவம்பாரார்
போதேயுமயன்மாலாதிப்புலவரையழைத்தவாவின்
மீதேயுமூட்டவல்லார்மறுகணிவிளம்பப்போமோ. (௧௧0)

அண்ணலார்திருமுகங்களைந்தினுந்தோற்றமுற்றார்
கண்ணலார்பொதுச்சிறப்பாமறைகளாகமங்கள்கற்றார்
நண்ணலார்பரார்த்தத்தோடான்மார்த்தமுநயந்தர்ச்சிக்கு
மெண்ணலாராதிசைவரிருக்கையும்பல்லவாங்கண். (௧௧௧)

எழுமதநிறுவியோரைந்திரண்டுகுற்றமுங்கடிந்து
தழுவியையிருவனப்புமுத்திசாற்றியவெண்ணான்கு
மொழுகுகாண்டிகைவிருத்தியுறுமுறைமாணக்கர்க்குச்
செழுமையினியல்கேட்பிப்போர்கழகமுஞ்சிறக்குமாங்கு. (௧௧௨)

கவியொருகவியினோடுங்கமகனோர்கமகனோடு
மவிதலில்சிறப்பின்வாதியமைந்தவோர்வாதியோடும்
புவிபுகழ்வாக்கிமேன்மேற்பொலியுமோர்வாக்கியோடுஞ்
செவியுறவமர்ந்தளாவுங்கழகமுஞ்சிறக்குமாங்கண். (௧௧௩)

அடைந்தவர்தரந்தெரிந்தாகமம்புகல்சமயமாதி
மிடைந்தமுத்தீக்கையாற்றி * நான்கினும்விராவவுய்த்துத்
தடைந்தவைம்பாசராக்கித்தனிமுதற்கலப்பாயின்பங்
குடைந்தவராகச்செய்யுங்குரவர்வாழிடமும்பல்ல. (௧௧௪)

---

* துன்னியோவரியசெந்தீயட்டிலை - செந்தீயோவரிய அட்டிலைத்துன்னி எனக்கொண்டுகூட்டாகப்பொருள்கொள்க.

* நான்கு சரியைமுதலிய நான்கு.

போதமுற்பலவுந்தேர்ந்துபொருந்துகாமாதிநீத்து
வாதமற்ருென்றுபத்தர்மாண்பினிற்சிறந்தோராகி
நாதமிற்றிதுவென்ருேராநலத்தசோதியிற்கலப்புற்
றேதமற்றிருக்குஞ்சைவமுனிவர்வாழிடமும்பல்ல. (௧௧௫)

தளவரும்பனையபொம்மறழல்வெதுப்புற்றபொன்னிற்
பிளவரும்பருப்புநெய்பால்பெருகுகுய்க்கருனையாதி
கொளவருங்கருப்புக்கட்டிகொழுஞ்சுவைக்கனிகண்மற்று
முளவரும்விரும்பச்செய்யுமூலப்பில்சத்திரங்களெங்கும். (௧௧௬)

இனனெழுமுனநீர்தெவ்வியினநிறைநிறையவாக்கி
மனனமர்வேரும்பூவுமணமலிதுடியுமிட்டுக்
கனவிலிக்குசத்தின்சாறுங்கலந்துமோரளாவிவாக்குஞ்
சினமகல்சுவைநீர்ப்பந்தர்தெருத்தொறுந்திகழ்வபல்ல. (௧௧௭)

மருவலர்துளபத்தண்டார்மணிமறுமார்பத்தண்ண
றிருமகளொடுவாழ்கின்றசெய்யமந்திரமுமன்னு
ஞெருவருங்கூற்றிற்ருென்றியுலகுபகாரமாய
வெருவருமும்பர்பல்லோர்மேவுமந்திரமும்பல்ல. (௧௧௮)

சிறுவிதிமகஞ்சிதைத்தசேவகன்வடுகப்புத்தே
டெறுதொழின்மகிடற்காய்ந்தாடிரிதலைச்சூலிசாத்த
னறுமுகப்பெருமானைங்கையமலன்மற்றிவர்முன்ஞோர்வாழ்
மறுவறுசெம்பொற்கோயில்வயங்குவவளவிலாத. (௧௧௯)

மண்மகண்மார்பினுக்குமாயூரமொருமதாணி
கண்ணுமற்றதிற்பதித்தகதிர்மணியுளைத்தயாவுந்
தண்ணுறுசிறப்பார்நாப்பணுயகமணியேபோலும்
விண்ணவர்புகழநாளும்வள்ளலார்விளங்குங்கோயில். (௧௨௦)

முனிதரப்பட்டமுன்னைமூவகைமதிலும்பின்ஞட்
கனிதரத்தவமியற்றிக்கரிசிலாவுருவம்பெற்றுத்
தனிதரவமர்பிரானைத்தம்முட்கொண்டிருப்பபோலும்
பனிதரவெழுகொண்மூவும்பகிர்மிர்ந்துயர்ந்தசோக்கள். (௧௨௧)

மதில்வலியடக்கநாளும்வல்லவனுனவையன்
மதிபகவெழுந்துவானவருநடுக்குறப்போமிந்த
மதிலடக்கெனச்சேவேவமற்றதுபலவாயேறி
மதியுறப்படுத்தழுத்தன்மானுமேவிடபக்கூட்டம். (௨௨௨)

பாலனென்றெண்ணுமெண்ணம்பரிகரித்திடச்சூர்முன்வேண்
மேலுயர்ந்தனனென்றியாரும்வியப்பர்யாம்வியக்கமாட்டேஞ்
சால்புயர்மாயூரப்பொற்றளியெதிர்க்கோபுரத்துக்
கோலமாருயர்ச்சிமேலாலுயர்ந்ததுமுண்டுகொல்லோ. (௧௨௩)

படிமுழுவதும்விற்ருலும்பற்ருதமணியிழைத்த
படிபலவுடையதாகிப்பல்லவாவிகளுமிந்தப்
படியுறவேண்டுமென்னப்பங்கயமாதிபூத்துப்
படிபவர்க்கின்பஞ்செய்துபொலிதரும்பரவுதீர்த்தம். (௧௨௪)

பேறுவந்தருளுமுக்கட்பிரான்றிருமுன்னர்நின்று
நீறுவந்தவர்சார்தோறுநிறைபலமளிப்பதன்றி
வேறுபூவிலைகொடாருமிசையேற்றினோடுவானத்
தேறுவந்தளவளாவுமினத்தொடுமினஞ்சாராதோ. (௧௨௫)

பொன்மலைதவஞ்செய்தீன்றபுதல்விசெய்பூசைகாணப்
பன்மலையோடும்வந்துபார்த்தினிதமர்தன்மான
நன்மலைவில்லியஞ்சனாயகிசோமாக்கந்த
றொன்மலைமற்றைவானோர்விமானங்களிலகாநிற்கும். (௧௨௬)

தம்மகனுழைந்தார்தண்டதரன்வாயினுழைதன்மாற்றி
விம்மனோயனைத்துந்தீர்த்துமிளிர்சிவலோகவாயில்
செம்மையினுழையச்செய்யுந்திகழ்திருவாயில்பல்ல
வம்மணியொளியானத்தமண்டத்தின்புறத்ததாக்கும். (௧௨௭)

மயிலுருக்கொண்டவம்மைபூசனைமரபிற்கொண்ட
கயில்வளைக்குழையினார்க்குநிழல்செயுங்கவின்றதேமா
வெயில்படுதிறமுண்டேனும்விரிஞ்சன்மாலாதியார்க்குங்
குயின்மொழியரமாதர்க்குநிழல்செயுங்குணம்பூண்டன்றே. (௧௨௮)

பழிதபுமுமையாள்பூசைபண்ணியபெருமானுக்கு
வழிதருமதுக்கொண்டாட்டிவண்டளிர்நறும்பூச்சூட்டிக்
கொழிசுவைக்கனிகளூட்டிப்பூசிக்குங்குணத்தானன்றே
கழிதருவுள்ளுந்தான்மாமரமெனக்கவின்றதம்மா. (௧௨௯)

நிருத்தமண்டப்ம்விழாக்கணிரம்புமண்டபநன்காய
வருத்தமண்டபந்தானோர்நூறாயிரமென்றுசொல்லப்
பெருத்தமண்டபஞ்சார்ந்தார்க்குப்பிரிவதற்கருமைசெய்யுந்
திருத்தமண்டபமற்றியாவுஞ்செப்புதற்கடங்குங்கொல்லோ. (௧௩0)

மன்னுதேவாரத்தோதைவயங்குவாசகத்தினோதை
பன்னுவன்மறையினோதைபரவுமாகமத்தினோதை
துன்னுபல்புராணத்தோதையரவெனத்தொகுவாரோதை
யின்னுமற்றுள்ளவோதைதுயின்றிடாவெந்தஞான்றும். (௧௩௧)

அடைந்தவிண்ணோர்மண்ணோர்நன்கடியுறைவைத்துத்தாழ
மிடைந்தபன்மணிகளோர்பால்விளங்குபொற்கட்டியோர்பா
லிடைந்தசெம்பொற்காசோர்பாலிலங்குபட்டாதியோர்பாற்
கடைந்தசெப்பனையகொங்கைக்காரணிகோயில்வாயில். (௧௩௨)

வளையெழுமொலியும்பீலிவயிரெழுமொலியுஞ்சுட்ட
முளையெழுமொலியும்பற்பன்முரசெழுமொலியும்வீணைக்
கிளையெழுமொலியுந்தாளங்கிளர்ந்தெழுமொலியுமற்றைத்
துளையெழுமொலியுமாழித்தொக்கெழுமொலியைமாற்றும். (௧௩௩)

காலையிற்றரிசிப்பாருங்கைகுவித்துருகியுச்சி
வேலையிற்றரிசிப்பாரும்வீழ்ந்துவீழ்ந்திறைஞ்சிச்சூழ்ந்து
மாலையிற்றரிசிப்பாருநெருங்கலால்வானநாட்டுச்
சோலையிற்பயில்வார்காப்பார்தொழும்பதங்கிடைக்குங்காறும். (௧௩௪)

இன்னபொற்கோயிலுள்ளாலேழுலகொருங்குபெற்ற
வன்னமென்னடையாரெங்களஞ்சனுயகியாரோடும்
பொன்னமர்சடிலமோலிப்பொருவிலாவள்ளற்புத்தே
டன்னமர்கருணைபொங்கத்தானமர்ந்தரசுசெய்யும். (௧௩௫)

திருநகரப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். ௨௧௦.

நைமிசப்படலம்.

வரையின்மிக்கவெள்வயிரமுஞ்சேயொளிமணியும்
விரைமிகுத்தசந்தகில்களும்வேழவெண்மருப்புந்
திரையெடுத்தெறிசாநவித்திருநதியுதீசிக்
கரையணித்துளதேர்கிளர்நைமிசக்கானம். (௧)

நாட்டவல்லதுநற்றவம்பவஞ்சவாதனையை
வீட்டவல்லதுவெள்ளியங்கிரிப்பெருமானைக்
காட்டவல்லதுகழலரிதாம்பரபோக
மூட்டவல்லதுற்றோர்க்குயர்நைமிசக்கானம். (௨)

தரையினுள்ளதேயாயினுந்தரைக்குமேலுலகர்
விரையவந்துவந்தவியுணுவிழைந்துகையேற்றுக்
கரையிலாமகிழ்பூத்திடவீகையிற்கதித்துப்
புரையிலாதுயர்ந்தோங்கிடுநைமிசப்புறவம். (௩)

எண்ணிலார்முயலினுங்கவரப்படாதிகலி
யெண்ணிலார்குழீஇயினும்வருத்தப்படாதென்று
மெண்ணிலாரும்வாழ்த்துதலன்றிவைதலெய்தாதா
லெண்ணிலார்நிறைந்தினிதமர்நைமிசாரணியம். (௪)

மற்பகப்பொலிவாகுவோரிந்திரன்மேனுட்
கற்பகத்தினைச்சீழ்கினுங்கடையெனவெறுத்துப்
பொற்பகத்துயர்பொருள்கொளத்தன்னகம்புகுமா
றற்பகத்துறவமைப்பதுநைமிசவடவி. (௫)

அரனருச்சனைசெயத்தளிராட்டலோடேட்டப்
பரவுதீங்கனிமகவிறகொண்குடம்பரிக்க
விரவுபைந்தழைமுனிவருக்குதவிவேளலர்க்கா
வரவுதீர்ந்துவப்பெய்துமத்தவத்தரின்மாக்கள் (௬)

அரியசாக்கியர்தீயவேடமூநலத்தமைவுந்
தெரியவுற்றெனக்கண்டகம்புறமெலாஞ்செறியப்
பிரியமிக்கவின்றீஞ்சுளையகமெலாம்பெற்ற
பரியவண்கனிபற்பலசுமப்பனபலவே. (௭)

பூவினுந்தழையினுமிகப்பொலிந்ததல்லாது
மாவினும்பலவினுநனிகனியும்வண்கனிகண்
மேவினுங்கருவாற்கொலையுறுதலின்வெள்கிக்
காவினுந்தலைசாய்த்துநிற்பனபலகதலி. (௮)

அளவிலந்தணர்குழாங்குழாமாகியெவ்விடத்து
மளவின்மாதவமாற்றுமிவ்வடவியினமர்த
லளவின்மேன்மைமேன்மேலுமுண்டாமெனவறைந்தாங்
களவில்கண்மணியீன்றிடுதருக்களுமடர்வ. (௯)

எடுத்தநம்பிறப்பின்பயனிதனினுமென்னென்
றடுத்தவுண்மையையறிந்தனபோன்றுகாமாதி
விடுத்தயோகியர்கொளவவருறையுண்முன்மேன்மேல்
வடுத்தவிர்ந்தகண்மணிக்கனிசிந்துவவாவல். (௧௦)

இனியவல்லனவெனுமுழுவித்துமுள்ளியைத்த
கனியபல்லவுமுழுமரஞ்சிறிதலாற்கதிர்வித்
தனியமாக்கலிற்கொண்டபேரியையுமென்றறிஞ
ருனியவெங்கணுமோங்குபுநிற்பமுந்திரிகை. (௧௧)

நனிசிதைந்திடுங்கனிசிலவுறவி * முன்னணுகப்
புனிதநீங்கிடுங்கனிசிலவுகினவ்வபோலா
தினியவூறிலபுனிதமென்றுறுவர்கையேற்பக்
கனிகள்பற்பலவுகுப்பனசெறிதருகபித்தம். (௧௨)

மாறுகொண்டவன்விடத்தைமுன்கனியென்வயக்கி
* யூறுதீர்ப்பவற்கூட்டிமுளெழுழிந்ததுபோலோ
வேறுசங்கையின்றூட்டலாமுய்யலாமென்னச்
சாறுபாய்கனிபலகொடுநிற்பனசம்பு. (௧௩)

பெயர்விலாயிரமுதற்பலகண்கள்பெற்றுரு
ளுயர்வுமூன்றுகண்ணேயுடைப்பரம்பொருளொன்றே
யயர்வின்மற்றதுபோற்பலகட்டருவுள்ளு
மயர்வின்மூன்றுகணிதேயுயர்பெனத்தெங்குவயங்கும். (௧௪)

நாடுமாயவனின்றெனநிற்பபுன்னைகங்
கூடுபொன்னெனத்தழுவுவசோதியொண்கொடியா
னீடுமூத்தசேயெனச்சொலநிற்பபூஞ்செருந்தி
மாடுசேரிளஞ்சிறுனெனப்பொலிவவண்காஞ்சி. (௧௫)

சுற்றுமுற்றும்வெண்மலர்செறிபல்பிடாத்துன்ன
லுற்றுநிற்பமற்றதனடுப்பூத்தவொண்கொன்றை
மற்றுமேலுயர்ந்தோங்குபுநின்றிடல்வானம்
பற்றுவெள்ளியங்கயிலைமேற்பரனிலைகாட்டும். (௧௬)

அன்னகொன்றைமேலச்சம் * ஈனரும்பொன்றுதங்கல்
சொன்னதம்பிரான்முடிமிசைப்பிறையெனத்துலங்கு
மன்னமற்றதன்கிளைகரும்பூவையவ்வருட
னன்னரப்பிரான்மான்மகட்டழுவுதனுட்டும். (௧௭)

மின்னுபேருயிர்குறுமையுநெடுமையுமெய்கள்
பின்னுவன்மையுமென்மையுமிடைமையும்பட்டாங்
குன்னுமிவ்வகையைந்துமாவயினுறத்தொகலாற்
றுன்னுமவ்வநெடுங்கணக்கேயெனத்தோன்றும். (௧௮)

---

* உறவி - எறும்பு - ஊறுதீர்ப்பவன் - விநாயகக்கடவுள்.
* அச்சம் - அகத்திமரம். * மான்மகள் - மோகினி.

கோடுகொண்டனபல்லகால்கொண்டனபல்ல
கூடுபுள்ளிகள்கொண்டனபல்லமேல்விலங்கும்
பாடுகொண்டனபல்லகீழ்விலங்குவபல்ல
நீடுமின்னதானெடுங்கணக்கெனற்கையமின்றே. (௧௯)

செறிதருந்தளிரிலையரும்பலர்சிறுபிஞ்சு
நறியகாய்கனியாதியநாளுநீங்காது
நெறியசெங்கதிர்வெப்பமுட்புகாதுறசிலைத்த
குறியவவ்வனப்பெருமையார்கூறுதற்கமைவார். (௨0)

வேறு.

பொருவரும்வளஞ்சாலிந்தநைமிசம்பொருந்திவாழ்வா
ரொருவருநீறுபூசியுவந்துகண்மணிகள்பூண்டு
வெருவருமெழுத்தைந்தெண்ணிவிடையவற்பூசைசெய்வார்
மருவருமுயர்மெய்ஞ்ஞானவாய்மையார்தூய்மையாரே. (௨௧)

இன்புவந்துற்றபோதுமெதிர்மறையுற்றபோது
முன்புடலுறுமூழென்றேவிருப்புறார்முனிவுஞ்செய்யா
ரன்புசிற்றுயிரகத்துமமைத்துவாழ்கின்றநீரார்
வன்புமும்மலமுநீங்கத்திருவருண்முழுகுமாண்பார். (௨௨)

விழியொருபத்துநூற்றுவிண்ணவர்வேந்தன்வாழ்வும்
பொழிமதுக்கமலவாழ்க்கைப்புண்ணியப்பிரமன்வாழ்வுங்
கழிசுடர்ப்பரிதிவட்குங்கவுத்துவமார்பன்வாழ்வும்
பழிதபுத்தறியாக்கான்றபதமெனக்கண்டகண்ணூர். (௨௩)

இன்னுமற்றவர்பிறப்புமிறப்புமெத்தனையோகண்டார்
துன்னுமைம்பூதமெல்லாந்தொலைந்தனகழிகாலத்தும்
பன்னுதமுடம்பின்கண்ணேருரோமமுங்கழிதல்பாரா
ருன்னுசெம்பொன்னுமோடுமொப்பெனமதித்தமேலோர். (௨௪)

காரணநோக்கலன்றிக்காரியநோக்குகில்லார்
பூரணப்பொருளின்கண்ணேயெற்றைக்குமுறக்கம்பூணார்
வார்ணவியபொற்கொங்கைமங்கையர்வலியவந்து
தாரணத்தழுவினுலுந்தாயெனக்கருதுநீரார். (௨௫)

பரசிவபுராணங்கேட்டல்பரசிவமணமேமோத்தல்
பரசிவநாமம்பேசல்பரசிவக்குறியேகாண்டல்
பரசிவபணியேசெய்தல்பரசிவவுருவேயெண்ணல்
பரசிவபத்திவாய்ந்தார்ப்பரவுதலிவையேயுள்ளார். (௨௬)

அத்திரிததீசிகார்த்தியாயனன்சுனப்புச்சன்ன
கத்தியன்சுகன்மாதேவன்கண்ணுவன்கருக்கன்காமச்
சத்துருவாம்பிருங்கிசதானந்தன்புகழ்மார்க்கண்ட
னுத்தமப்பிருகுபோதாயனனுயராபத்தம்பன். (௨௭)

இலகிதன்சுதீக்கணன்சாண்டில்லியன்பரத்துவாச
புலகன்சந்திரசூடன்குச்சகன்புலத்தியன்சாபாலி
வலகவுதமன்சனற்குமாரனாரதன்சீர்ச்சம்பு
நலமிகுமாணிமாண்டவியனரபத்தநல்லோன். (௨௮)

காசிபன்விச்சுவாமித்திரன்கலைச்சிருங்கன்கற்கி
கூசுமாண்டன்மாதேசன்குசுருபார்க்கவன்சனந்த
ஞசுவிலாயனன்றூலப்பியன்றிருதன்சங்கன்
பேசகமருடணன்பராசரன்பெருஞ்சநாதன். (௨௯)

இருதன்சநகன்வசிட்டன்பிரசண்டன்றுருவாசன்கேழ்
தருபருப்பதன்சிலாதன்றத்தாத்திரேயன்சத்தி
வருதவுமியன்சுமந்துபப்புருவாமதேவ
ஞெருசரபங்கன்வச்சனுபமனியன்சேர்க்கண்டு. (௩௦)

அரிதகன்சவுநகன்றேவலன்சுநனசிதன்விந்து
பெரியபாணினிவிபண்டகன்காலவன்பெருஞ்சீ
ரரியவங்கிரசுசாதாதபன்சுநச்சேபனுண்மை
தெரிசருச்சரனிவைப்பியன்வசுதிரணவிந்து. (௩௧)

முற்கலன்கபிலனட்டவக்கிரன்காணன்முத்தி
யொற்கமில்சுநகன்சேர்த்தியுரோமசன்பகவன்மேன்மை
வற்கமார்தருகவுண்டின்னியன்பயிலவன்மருத
விற்கஞலுக்கிரஞ்சேர்வீரியன்றூமபானன். (௩௨)

செந்தமிழியலுரைத்ததிரணதூமாக்கினிப்பே
ரந்தணனனையான்றந்தையாஞ்சமதக்கினிப்பேர்
முந்தனெல்லாரும்பேசுஞ்சவுபரிமொழியுமற்றைப்
பந்தமின்முனிவர்யாரும்பரவுமோரிடத்திற்கூடி. (௩௩)

திருவளருமையோர்பாகன்றிருவுளமுவக்கும்வண்ண
மொருமகமுஞற்றலுற்றூருற்றவக்காலையயன்
மருமலர்ப்பாதங்காண்டன்மறிபெருந்பிறவிமாய்க்கும்
கருவியக்கருவியாதாற்பெறலெனக்கருத்துட்சூழ்ந்தார். (௩௪)

யாகமோவிரதமோநல்லெச்சமோகொடையோமெய்யோ
யோகமோஞானமோமற்றுண்மையிற்றுறவுபூணும்
பாகமோவெதுவென்றுய்ந்துபகர்துணிபுறுரேயாகி
மோகமோவியவுட்சூதமுனிவனுற்றெளிவாமென்றார். (௩௫)

புரிமகங்காணப்போதும்புண்ணியமுனிவரோடு
முரியமாணுக்கர்சூழவொள்ளொளிநீறுசெய்ய
வரியகண்மணிவிளங்கவைந்தெழுத்துளத்துமன்னத்
துரிசறுத்துயர்ந்தோனுமச்சூதமாமுனிவன்வந்தான். (௩௬)

நினைந்தவப்பொழுதேயிந்தநேயமாமுனிவந்தானென்
றினைந்தசிந்தையினனந்தமெழுதரவுவந்தெழுந்து
துனைந்தனரொதிரோசென்றுதொழுதனராடிப்பாடிப்
புனைந்தவஞ்சலியராகிப்போற்றினரழைத்துவந்தார். (௩௭)

ஆயவிட்டரத் * திருத்தியருக்கியமாதிகொண்டு
மேயநற்பூசையாற்றிவிதியுளிப்பணிந்தெழுந்து
நேயமிக்கிருபானின்றார்நின்றவர்தமையிருக்கென்
றேயவவ்வார்த்தைகேளாவிருந்தனரியம்பலுற்றார். (௩௮)

---

* விட்டரம் - தருப்பைப்புல்லாலமைத்த வாசனம்.

திரைவிட்டுண்டபெம்மான்றிருவுளமகிழும்வண்ண
முரைமகமொன்றுசெய்யவுபக்கிரமித்தோம்யாங்கள்
விரையவப்பொழுதேசன்மம்வீட்டிடுங்கருவியந்த
நரைவிடைப்பாகன்பாதங்காண்டலென்றுளநயந்தோம். (௩௯)

அன்னதுபெறுமுபாயம்யாதெனவாராய்ந்தாராய்ந்
தின்னதென்றுளத்துத்தேறோமெக்கலைகளுந்தேர்நின்னாற்
சொன்னதுதெளிவாமெனெண்ணியிருந்தனஞ்சூதமேலோய்
பன்னதுபோதுநீயும்பண்புறுகாட்சிதந்தாய். (௪0)

பெரியவர்காட்சிவீண்போகாதுறப்பிறங்காநிற்கு
மரியநற்பயன்றந்தன்றியென்றுலகுரைக்குமாற்றாற்
றெரியநீவகுத்துச்சொற்றிசிவபெருமானேயென்ன
விரியயாவுந்தெரிந்தமேலவவென்றிறுத்தார். (௪௧)

முனிவரருளைத்தவார்த்தைமுனிவறச்செவியினேற்றுக்
கனிதருபெருமான்பாதங்காண்டலுக்கேதுவொன்றா
லினிதவனமருந்தானத்தியையமுச்சிறப்பும்வாய்ந்த
புனிதமாத்தலத்திற்குற்றமான்மியம்புகலக்கேட்டல். (௪௨)

அதுதனியாராய்ந்துள்ளத்தமைத்திடல்பிறர்க்குக்கூறல்
கதுமெனவனையதானங்கலந்துறவசித்தலந்த
முதுதலத்தமர்நீராடன்முக்கணான்சேவைசெய்தன்
மதுமலரிறைத்திறைஞ்சிவழிபடலாதியாக. (௪௩)

இவையுள்யாதானுமொன்றாலெய்தலாமென்றுகூற
நவையறுமுனிவருண்மையீதெனநயந்துகொண்டு
செவையுறுமுனிவமூன்றுஞ்சிறந்தவோர்தானமாய
தவையகமகிழுமாறென்றாய்ந்தறைந்தருடியின்னும். (௪௪)

மற்றதுசெய்மைக்கண்ணும்வதிந்துளத்தெண்ணினாலும்
பற்றமைதரச்சொற்றாலுந்திசைநோக்கிப்பரவினாலு
மற்றமிலிம்மையம்மைமுத்தியுமளித்தல்வேண்டுங்
கற்றவர்பலருமுண்மையேயெனக்கனாதல்வேண்டும். (௪௫)

கொடியபாதகங்கள்கோடாகோடியுள்ளனவேயேனு
நெடியமற்றதன்பேர்சொல்லநினைக்குமுனீங்கல்வேண்டு
முடியநாமுரைப்பதென்னேயெண்ணியவனைத்துமுற்றும்
படியதாமொருநற்றானமாராய்ந்துபகர்கவென்றார். (௪௬)

என்றலுமுவகைபொங்கநெடும்பொழுதுள்ளத்தெண்ணிக்
கன்றலிலருளாற்றெய்வக்கவுரிமாயூரங்கண்டு
பொன்றலில்புகழ்சாலீதற்புதத்தலமெனவியந்தீ
தொன்றலதுயர்ந்ததானமுலகில்யாதெனத்துணிந்து.- (௪௭)

மருளடியவர்க்குமாற்றுமகத்தியவாரணத்தை
யருள்பொழிவள்ளலாளையஞ்சனாயகியையுள்ளத்
தெருடருகுமரவேளைச்சிந்தையிற்றியானஞ்செய்து
பொருள்பெறுவியாதன்றாளும்போற்றுபுநவில்வான்சூதன். (௪௮)

அந்தணீர்கேண்மினீவிர்கேட்டவாறாயுங்காலைச்
சிந்தனைக்கரியதொன்றுசிவபிரானருளாற்றேர்ந்தே
னிந்தநற்றலச்சீர்முன்னமொருவற்குமிசைத்ததின்று
கந்தவத்தலநன்னாமங்கவுரிமாயூரமாமால். (௪௯)

நினையுமுனெனக்கானந்தநிகழுவதென்னசொல்வேன்
புனையுநுங்களுக்குண்டாதல்புகன்றிடற்பாலதேயோ
வனையமெய்த்தலத்தையொப்பதகிலலோகத்துமில்லை
வினையின்மெய்த்தவமிலாதார்மேவரிதெந்தஞான்றும். (௫௦)

மன்னியவத்தலச்சீர்யானேயோசொல்லவல்லேன்
முன்னியபுகழ்சால்வாதராயணமுனிவன்வைத்த
பன்னியவருணோக்கத்தாற்றொகுத்தியான்பகர்தனாற்றே
னந்நியமத்தீர்கேண்மினெனநவின்றருள்வான்சூதன். (௫௧)

நைமிசப்படலம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௩௪௧.

திலீபன்முத்தியடைந்தபடலம்.

சூரியன்மரபிற்றோன்றித்தொன்னகரயோத்தியாளுஞ்
சீரியன்கவிகையொன்றாற்றிருந்துலகெலாநிழற்று
மாரியன்மருவாரொன்னும்யானைகட்கரியேறாய
வீரியன்றிலீபனென்னுமெய்ப்புகழ்நாமவேந்தன். (௧)

பாரின்மன்னியவெல்லாரும்பல்லாண்டுபல்லாண்டென்னச்
சீரின்மன்னியகுணத்தான்செறிந்தெழுகீர்த்தியாய
தாரின்மன்னியபுயத்தான்றாண்டவப்பெருமான்றாட்கு
நாரின்மன்னியமனத்தானானிலங்காக்குநாளில். (௨)

வரியளிக்குலம்பண்பாடமதுமடையுடைத்துப்பாயப்
புரிமுறுக்குடையுஞ்செந்தாமரைமலர்ப்பொகுட்டுமேலான்
றெரிதரவுயிர்த்தமைந்தன்செழுந்தவவசிட்டனென்பான்
விரிபலமுனிவரோடும்வேத்தவைமேயினானால். (௩)

வரமுனிவரவுகண்டுமன்னவனெதிர்சென்றேத்திப்
பரவினனழைத்துவந்துபைம்பொனாதனத்தின்வைத்து
விரவுமுள்ளன்பிற்பூசைவிதியுளிமுடித்துப்போற்றிக்
கரதலங்குவித்திருந்துகாதலினிதுவினாவும். (௪)

தரைகிழிதரவிரைந்துசையநின்றிழிந்துபோந்து
திரையுவர்க்கடல்கலக்குங்காவிரியிருதீரத்து
முரைசிறந்துள்ளதாயதலமெலாமொருங்குகேட்கப்
புரையறுமொரோவொன்றாகப்புகன்றனையாலவற்றுள். (௫)

மேதகுதிருவானைக்காமிளிர்சிராமலைவானோரு
மோதருமன்பிலாலந்துறைதவத்துறையுற்றார்தங்
கோதறுமொருநெய்த்தானங்குலவுமையாறுவாசப்
போதவனிறைஞ்சுங்கண்டியூர்பொலிபூந்துருத்தி. (௬)

வலஞ்சுழிகும்பகோணமேரகம்வளர்பட்டீச
நலந்தரவொளிர்சித்தீசநாளுமோங்குறுநாகீச
மிலங்கியபலரும்போற்றுமிடைமருதுயர்கோமுத்தி
விலங்கலிறுருத்திமற்றும்விசேடமென்றுரைத்தாயைய. (எ)

இவையுளுமதிவிசேடமெனமறையுரைப்பதாகி
நவையறுமுத்தியெண்ணநல்கிடுந்திறத்ததாகிச்
செவையுறுதலமுன்மூன்றுந்திகழ்தரச்சிறந்ததாகி
யவைமதித்திடுவதாயதறைதியென்றடியேன்கேட்டேன். (அ)

அனையமாதலமாயூரமதற்கிணையில்லையென்று
நினையவேயிம்மையம்மைமுத்தியுநிரப்புமென்றும்
புனையவாமத்தலத்துப்பொலியுமான்மியமனைத்துந்
துனையநீதொகுத்துச்சொற்றுய்தோன்றியதிலைதிருத்தி. (கூ)

திருத்தியுண்டாகுமாறத்தெய்வமாயூரமேன்மை
விருத்தியிற்புகலவேண்டுங்கேட்டிடவேண்டுமென்னு
மருத்தியென்னுளத்தையீருமாதலாலதன்சீர்முற்றும்
பொருத்தியல்லாதுநீயும்போவதுகூடாதென்ன. (க0)

முனிவனுமுவகைபூத்துமுழுமுதலவன்புராணங்
கனிவொடும்யாவன்கேட்குங்காதலனவனேயெல்லாப்
புனிதவானவர்க்குமேலானறமெலாம்பொலியச்செய்தோன்
றனியமர்சீவன்முத்தனெனமறைசாற்றுமன்றே. (கக)

சிறந்தமாயூரமென்னுந்திருத்தலமுவமையில்ல
துறந்தமற்றதன்சீர்கேட்குநீயுமோருவமையில்லா
யறந்தவாதுரைக்கும்யானுமனையனேயென்றுகூறி
வறந்தகாமாதிமேலோன்வகுத்திடலுற்றுன்பின்னர். (கஉ)

பரவியசிவபுராணம்பத்தனுட்பிரமாண்டத்து
முரமிகுமாக்கினேயப்புராணத்துமுறையாநிற்கும்
வரமிகுமாயூரத்தின்மான்மியமதனைச்சொல்கேன்
றிரமிகுமன்பிற்கேட்டிதிலீபவென்றெடுத்துப்பேசி. (கங)

அணிமலர்மிசையோன்பூசித்தாரருள்பெற்றவாறுந்
திணிமனத்தக்கனென்பான்றீமகஞ்செய்தவாறுந்
துணிவலிமிக்கவீரனம்மகந்தொலைத்தவாறுந்
தணிவருமருட்பிராட்டிமயிலுருச்சமைந்தவாறும். (கச)

திருமயிலாயவம்மைசிவார்ச்சனைசெய்தவாறு
மொருவருங்கருணையன்னுள்பண்டுருவுற்றவாறு
மருவுகாதலினன்மீட்டுமாகமவிதிவழாமற்
பொருவருஞ்சிவபிரானைப்பூசனைபுரிந்தவாறும். (கரு)

விழியொருமூன்றுடையவிண்ணவர்பெருமானுள்ளங்
கழிமகிழ்பூத்துவெள்ளைவிடையின்மேற்காட்சிநல்கிப்
பழிதபுமுமையாண்மாயோன்முதலியபலரும்வேட்ட
வொழிவறநல்கிவள்ளலெனும்பெயருற்றவாறும். (கசு)

மன்னியதலத்தின்சீரும்வளமலிதீர்த்தச்சீரு
முன்னியவாக்கினேயமுரைத்தருள்பலவுமற்று
முன்னியவிரித்துச்சொற்ருன்மொழிந்தனயாவுங்கேட்டு
மின்னியவேற்றிலீபவேந்தனும்மகிழ்ச்சிபூத்து. (கள)

குரவனும்வசிட்டமேலோன்குருமலரடியிற்ருழ்ந்து
வரநிலாம்விடையும்பெற்றுவயங்குநாற்படையினேடு
முரவுகூரமைச்சரோனப்புரோகிதரொருங்குசூழப்
பரவுநாளெழுந்தானென்பபகைத்தவர்க்கேறுபோல்வான். (கஅ)

வான்றவழ்குன்றுங்கானுமருதநீர்நதியுமற்றுந்
தேன்றவழலங்கன்மார்பன்பிற்படச்செவ்வேவந்து
மீன்றவழ்கங்கையாடிமிளிர்காசிபுகுந்துவிண்மீன்
கோன்றவழ்சடிலமோலிவிச்சுவநாதற்கூடி. (கக)

பனிமலரிறைத்துப்போற்றிப்பரவியாங்காங்குமேய
முனிவறுதலங்களெல்லாமுறைமுறைசென்றுபோற்றிக்
குனிசிலைநுதற்பிராட்டிகுளிர்மலர்ப்பதமும்போற்றிக்
கனிபடுசோலைசூழ்ந்தபருப்பதங்கண்டுபோற்றி. (உ0)

மாதாரநிறத்தாளுதிவானவர்வணங்கிப்போற்றுங்
கேதாரமேயபெம்மான்கிளர்மலர்ச்சரணந்தாழ்ந்து
தீதாரவுடன்படாதுசெறிந்தவர்க்கருளியென்று
மாதாரமாயினுனைக்காளத்தியணைந்துபோற்றி. (உக)

வேதமாநீழல்வைகுமேகம்பவிமலனூர்தம்
பாதமாமலர்கள்போற்றிப்பராய்த்தொழுதாலங்காடு
நாதமாமுரசந்துஞ்சாநகுபுகழ்க்கழுக்குன்றம்பே
ரோதமாவொற்றிமற்றுமுள்ளனவனைத்துந்தாழ்ந்து. (உஉ)

அடிமுடியிருவர்தேடவழலுருவாகிநின்ற
நெடியவண்சிலம்புமேன்மைநிறைமுதுகுன்றுமிந்தப்
படிபுகழ்ந்தெடுத்துப்பேசும்பாதிரிப்புலியூரும்பொன்
முடிபுனைவேந்தர்வேந்தன்முந்துசென்றிறைஞ்சிப்போற்றி. (உங)

வளவர்நன்னாடுபுக்குமன்றிடைநின்றுநாளு
மளவிலானந்தமேவவாடுமெம்மானைத்தாழ்ந்து
துளவினுன்போற்றுங்காழிதூயபுள்ளிருக்குவேளூர்
களவிலாப்பிறவும்போற்றிக்காவிரிநதிவந்துற்ருன். (உச)

இரவிவண்டலாத்துவைகுமேற்றநாளந்நாளாகப்
பரவுமாமுனிவராதிப்பலரொடுமந்நீராடி
விரவிவெண்ணீறுமெய்யின்விளங்குறப்புனைந்துபாயும்
புரவிமாத்தானைவேந்தன்போற்றுபஃறுனநல்கி. (உரு)

பலரொடுங்கோயிலெய்திப்பைந்தமிழ்மணக்குஞ்செவ்வா
யலர்புகழ்முனிபூசித்தவண்ணலங்களிற்றையேத்தி
நலர்தொழுவள்ளலார்முனண்ணியுள்ளுருகித்தாழா
வலர்பலகொண்டுபூசித்தானந்தத்தழுந்தினனே. (உசு)

நலம்பொலிகருணையஞ்சனுயகிகோயில்வாயிற்
புலம்பொலிதரவவ்வாறேபுகுந்துநேர்கண்டுபோற்றி
வலம்பொலிமற்றுமுள்ளவானவர்களையுந்தாழ்ந்து
நிலம்பொலிதானேவேந்தனெடிதுறவசித்தானுங்கு. (உஎ)

சினகரப்பணிகள்செய்துந்திருவிழாநடாத்தல்செய்து
மனகருள்வள்ளலார்க்குமஞ்சனுயகியாருக்கும்
கனமணிப்பொற்பூணுடைகணிப்பிலகொடுத்துமெண்ணில்
பனவருக்கமுதமீத்துமடியரைப்பரவித்தாழ்ந்தும். (உஅ)

பன்னெடுங்காலமிந்தப்படிவசித்திருந்துபின்னு
ணன்னெடும்புகழ்த்திலீபனுயகன்விடைபெற்றேகித்
தொன்னெடுநகரஞ்சார்ந்துசுதமின்றிப்பன்னுள்வாழ்ந்து
பின்னெடுஞ்சிவலோகத்துப்பிறங்கிவாழ்ந்திருந்தானன்றே. (உகூ)

அனையவன்வசிட்டன்பாங்கரன்புறக்கேட்டவாறே
வினைதபுமாயூரத்தின்மேன்மைகண்முறையிற்சொல்வே
னினைதருமிதுவேயிம்மைமுதன்மூன்றுமிரப்புமென்று
புனைபுகழ்முனிவர்கேட்பப்புகலுவான்சூதமேலோன். (௩0)

திலீபன் முத்தியடைந்தபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௩௭௧.

பிரமன் சிருட்டிபெறுபடலம்.

களைதருமுந்தொருகற்பத்தாதியில்
விளைதருதண்டுழாய்விண்டுவுந்தியில்
வளைதருசிலைப்பிரானருளின்மாட்சியா
லுளைதருமறையவனெருவன்ரேன்றினன். (க)

தோன்றியமறையவன்றுளபத்தானடி
யூன்றியவன்புளமுருகித்தாழ்ந்தெழூஉ
யான்றியங்காவகையியற்றிடும்பணி
மூன்றியல்சிரத்தினுய்மொழிதியென்றலும். (உ)

தனையகேணினக்குமென்றனக்குநாயகன்
முனையசூற்படைக்கரமுக்கண்மூர்த்தியா
லனையனைநோக்கிநீயருந்தவம்புரிந்
தினையலாகாப்படைப்பியற்றுகென்றனன். (௩)

என்றலும்விளைந்தெழுந்திண்டைமேலவன்
பொன்றலும்பிறத்தலுமிலாதபுண்ணிய
னென்றல்செயருள்விளைந்துறுதிரல்கிடுங்
கன்றலிலாத்தலங்கருத்தினுய்ந்தனன். (௪)

அதுபொழுதுடலில்வாக்கந்தணுகுண
முதுகடற்பச்சிமமொழிதருந்திசைக்
கதுமெனயோசனைகடந்துமேலுமிற்
புதுமலர்தருபுனற்பொன்னித்தென்கரை. (௫)

அமைவொடும்விளங்குமோரடவியாயிடைச்
சமைதர்விருந்துநீதவஞ்செய்வாயெனி
லுமையுடையான்விரைந்துதவுமென்றது
கமையுடையானதுகாதினேற்றனன். (௬)

எண்ணியகாரியமெய்தப்பெற்றெனக்
கண்ணியமறையவன்கடுப்பினிற்செலா
வண்ணியவாவயினணைந்துகண்டனன்
புண்ணியந்தழைத்தெனப்பொலிவனத்தினை. (௭)

காண்டலுங்கைகுவித்திறைஞ்சிக்காவிரி
மாண்டகுபுனல்விதிவழியினாடியே
யேண்டருநீறுமெய்யிலகப்பூசுபு
தாண்டவப்பிரானடியுளந்தரித்தரோ. (௮)

காமமாதியகரிசொழியக்கட்டறுத்
தேமநாயகனருளியைதரும்படி
மாமனாலுதவியவந்ததாமரைத்
தாமமார்பினன்பெருந்தவம்புரிந்தனன். (௯)

அறைகொடுவேனிலினழலுள்வைகியு
நிறைபெருங்கூதிருணீருண்மூழ்கியு
மிறைசிறிதாயினுமேவுறுவகை
மறையவன்பெருந்தவம்வயங்கவாற்றினான். (௧0)

ஒருபதினாயிரவருடமுண்மையி
னருமறையோன்றவமிங்கனாற்றலும்
பெருவிடைமேற்சிறுபிறைக்கொழுந்தணி
திருமுடியோனெழுந்தருளல்சிந்தித்தான். (௧௧)

வளைதுகிர்க்கொடிவநநடுவயங்குகூன்
வளையெனச்சடைநடுப்பிறைவயங்குற
வளைபிறையமுதுகுத்தன்னதென்னவவ்
வளைவரநதித்துளியலங்கிமேவுற. (௧௨)

ஆயவவ்வநம்புகவவாவித்தாவலின்
மேயகைத்தலத்தொருமான்விளங்குற
வேயமற்றதன்செலவிரிக்கமேவல்போற்
றூயவெங்கனன்மழுவொருகைத்தோன்றுற. (௧௩)

உழைகுறும்பியற்றினுன்னுடம்பிற்போர்த்ததோல்
தழையுமென்போலலைசாருமாலென
விழைதரவுணர்த்தல்போன்மிளிர்தரக்கதள்
பழையதாய்த்திருவரைசூழ்ந்துபம்புற. (௧௪)

திருமுடிமதிகுறைதீர்ந்ததோவெனப்
பொருவிறோளராப்படம்பைத்துப்பொள்ளென
வருகுநோக்குபுபரைமயிலென்றஞ்சுபு
திருகுதீர்ந்தொடுங்குபுமுன்னைச்சீர்பெற. (௧௫)

மன்னியபவளமால்வரையினோர்புறந்
துன்னியபச்சிளங்கொடியின்றோற்றம்போன்
மின்னியவிதிபடையாதமேனிப்பாற்
பன்னியபனிவரைப்பாவைமேவுற. (கஅ)

நந்திமுற்கணங்களுநளினப்பூவெனு
முந்தியங்கடவுளுமுறுமற்றோர்களு
முந்தியும்பிந்தியுமொய்த்துச்சூழ்வரத்
துந்துமிபல்கடற்றொழிப்பு *மாற்றிட. (கஎ)

அரியநற்காட்சிதந்தருளினன்பரன்
பிரியமிக்கீதியான்பெற்றுளேனெனாக்
கரியவன்மகன்விரைந்தெழுந்துகைதொழா
வுரியபொன்மலரடியொல்லைத்தாழ்ந்தனன். (கஅ)

சூழ்ந்தனன்பன்முறைசூழ்ந்துசூழ்ந்துமண்
டாழ்ந்தனன்பன்முறைதாழ்ந்துளத்துயர்
போழ்ந்தனனினியொருபுகருமின்றியான்
வாழ்ந்தனன்வாழ்ந்தனனெனவழுத்தினன். (கக)

சுத்தமெய்ஞ்ஞானநன்னெறிதொடர்ந்துபோ
முத்தர்களகக்கணுமுயன்றுங்காணரு
மித்தகுகாட்சியிவ்வேழைக்காவதோ
சத்தறிவின்புருத்தலைவனேயென்றான். (உ0)

வே று.

என்றகாலையிலிறையவன்திருவுளமிரங்கி
யொன்றமாதவமயுதமாண்டுவந்துநீயியற்றிக்
கன்றமெய்யிளைத்தாயெனத்தன்றிருக்கையா
லன்றவன்புறந்தைவராவறைவிழைவென்றான். (உக)

அருமையாயநீகாட்சிதந்தளித்ததன்மேலும்
பெருமையாயதொன்றுண்டுகொல்பிறைமுடிப்பெரும
வொருமையாளர்தம்முள்ளொளியாய்விளங்கொருவ
விருமையாவையும்படைக்குமாறருள்புரியென்றான் (உஉ)

என்றுநைந்துநைந்திறைஞ்சினன்வேண்டலுமிறைவ
னன்றுநின்விழைவிதுவெனிலுடுமிவ்வநத்து
ளொன்றுநங்குறியுள்ளதுமற்றஃதெவைக்குந்
தொன்றுதோன்றமுன்றோன்றியதோற்றத்ததம்மா. (உங)

இனையகோசமொப்பாகியகோசம்வேறில்லை
நினையநோக்கமெய்யானந்தநிரப்புவதிதுவே
துனையவெத்துணைக்கோடிபாதகங்களுந்தொலைக்கும்
புனையவல்லமாமறைபுகழ்வதுமிதன்புகழே. (உச)

அன்னதாகியவிலிங்கத்துக்கெதிர்வலத்தமைய
நன்னர்வான்றடமொன்றுகண்டப்புனையந்து
சொன்னமூர்த்தியையாட்டுபூசித்துத்துதித்து
மன்னநீவிழைந்ததுபெறுகுதியெனவகுத்து. (உரு)

* தொழிப்பு - ஓசை.

அனகவிவ்வநமின்றுதொட்டந்தணபிரம
வனமெனப்படும்பின்னருநீபெருமாண்பாற்
கனகமாமணிமாளிகைநகர்படக்காண்பாய்
முனகர்தீரந்தநகரமுநின்பெயர்முயங்கி. (உசு)

வரமிகத்தருவள்ளனும்பொலிதரப்பிரம
புரமெனப்படுமிலிங்கமும்வாவியும்பூணும்
பரவுநின்பெயரொன்றுறைத்தருளியெம்பரம
னுரவுமிக்கபல்கணத்தொடுமொய்யெனமறைந்தான். (உஎ)

ஐயனங்ஙனமறைதலுமம்புயமலர்மேற்
செய்யனவ்வநந்தேண்டினனொருசிறைக்கண்டான்
வையமாதியெப்புவனமும்வாழ்தரமுளைத்துப்
பொய்யவாவுளங்கடந்தொளிர்பூரணப்பொருளை. (உஅ)

கண்டுகண்கணீர்துளித்திடக்கசிந்துளமுருகி
மண்டுகாதலிற்சூழ்ந்துபன்முறைதுதிவழுத்தி
விண்டுநாத்தழுதழுத்திடமெய்ம்மயிர்பொடிப்பத்
தண்டுபோலெதிர்வீழ்ந்தனன்றரைமிசைக்கிடந்தான். (உகூ)

எழுந்துதம்பிரானருளியபடியெதிர்வலப்பாற்
கொழுந்துகொண்டெழுதீவினைமுழுவதுங்குலைந்து
விழுந்துபோம்படிபுரிதடம்விரைவினுண்டாக்கி
யழுந்துமன்பினனதிற்படிந்தெழுந்தனனம்மா. (ஙo)

அந்தநீர்முகந்தமலலிங்கத்தினையாட்டிச்
சந்தநாண்மலர்சூட்டியொண்சாலுணவூட்டிப்
பந்தமோவுமட்டாங்கபஞ்சாங்கமாப்பணிந்து
முந்தநின்றுளமுருகுபுதோத்திரமொழிவான் (ஙக)

சுருதியந்தமுந்தொடரொணுச்சுயம்பிரகாச
பரிதியாயிரங்கோடியிற்பொலிதிருப்படிவ
கருதியர்வரும்பவத்துயர்கடக்குமுக்கண்ண
வெருதியாவருந்தொழவுகைப்பவநினையிரந்தேன் (ஙஉ)

உருவமொன்ப * தாறெட்டமைந்துருவொன்றுமில்லாய்
பருவமங்கைபான்மருவவுமயல்சற்றும்பற்றாய்
பொருவவைந்தொழிலியற்றியுந்தொழிலொன்றும்பூணாய்
திருவவானவதேவதேவேசநிற்சேர்ந்தேன். (ஙங)

பூதமுங்கரணங்களுங்கலைகளும்பொருந்தாய்
நாதமுங்கடந்தியோகியருள்ளமேநயந்தாய்
வாதமும்பலபேதமாஞ்சமயர்தம்வயத்த
போதமுந்தபுபூரணாநந்தநிற்புணர்ந்தேன். (ஙச)

போற்றிசங்கரபொங்கரவணிந்தருள்புராண
போற்றிமாயவன்காணொணாத்திருவடிப்புனித
போற்றியெங்கணுமொழிவறநிறைந்துறப்பொலிவோய்
போற்றியான்றொழுபிரமலிங்கத்தமர்புலவ. (ஙரு)

---

* ஆறு - சடத்துவா.

என்றுதோத்திரம்புரிபவற்கெதிரெழுந்தருளிக்
கன்றுமான்மழுக்கையினார்நனிகடைக்கணித்துத்
துன்றுபல்வகைச்சிருட்டியும்புரிகெனச்சொல்லி
யன்றுதூயவவ்விலிங்கத்துண்மறைந்தனரம்மா. (௩௬)

பெற்றநான்முகனவ்வநம்பிழையறத்திருத்திக்
கற்றவிச்சுவகன்மனாலாலயங்கண்டு
பொற்றமாநகராக்கினான்பொருந்துபல்குடியு
மற்றமில்வகைச்சிருட்டிமுன்கற்பம்போலமைத்தான். (௩௭)

வேறு.

பிரமனருந்தவம்புரிந்தபிரமவநமொருநகராய்ப்
பிரமபுரமெனுமொருபேர்பெற்றதெதிர்வலப்பானீர்
பிரமதடமெனும்பெயராற்பிறங்கியதுசுயம்புலிங்கம்
பிரமலிங்கமென்றெவரும்பேசவிளங்கியதம்மா. (௩௮)

அப்பிரமதடநறுநீரான்றவிதிப்படிமூழ்கி
யப்பிரமலிங்கத்தையன்புமிகத்தரிசித்தே
யப்பிரமபுரத்துறைவாராரோனுமப்பொழுதே
யப்பிரமன்மான்முதலோரங்கைகுவித்திடப்பொலிவார். (௩௯)

ஒன்றாகிப்பலவாகியுருவாகியருவாகித்
தொன்றாகிப்புதிதாயசுயம்புலிங்கப்பிரான்விடைபெற்
றன்றாதரவிற்பிரமனமர்தருதன்னுலகடைந்து
குன்றாதசிருட்டியெலாங்குறித்தியற்றிவாழ்ந்தனனே. (௪0)

பிரமன்சிருட்டிபெறுபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௪௧௧.

தக்கன்மகம்புரிபடலம்.

வரத்தமர்முனிவர்பண்ணவர்மற்றோர்வாழ்த்திடப்பொலிதருபிரம
புரத்தமர்சுயம்புலிங்கநாயகன்றன்பொலியருள்பெற்றகாரணத்தாற்
றிரத்தமர்தெய்வத்தாமரைக்கிழவன்செறிதரவியங்குவநாளு
முரத்தமர்நிலையினிற்பனபலவுமொய்யெனப்படைத்தனன்மாதோ. (௧)

உரைசெயிச்சிருட்டிக்கேதுவாயனையானுளத்துவந்தவர்களொன்பதின்மர்
புரைதவிர்பிருகுபுலத்தியன்புலகன்புண்ணியக்கிருதுபல்கலையுங்
கரைதருவலியாங்கிரசுமாதவத்தக்கன்புகழ்மரீசிமெய்நலத்தாற்
றரைபுகழ்தருமத்திரிநலவசிட்டன்றனையுமற்றவர்பெயரம்மா. (௨)

அனையவர்தம்முடக்கனென்றுரைக்குமளவின்மாதவத்தினான்பல்ல
தனயரைப்படைத்துப்படைமினென்றேவத்தாழ்ந்தெழுந்தனயரஃதேற்று
வனைதருபடைப்புச்செயமுயல்காலைமகதியாழ்முனிவரன்றோன்றி
வினையம்வல்லவர்நீர்முயல்வதென்னென்றான்மற்றவருள்ளதுவிரித்தார். (௩)

அவனதுகேட்டுப்பந்தமேற்பந்தமாக்குவான்முயன்றுளீரழகே
புவனமேத்தெடுக்கப்பொலிதருபிரமபுரத்தினைநீவிரின்றடைந்து
கவனமால்விடையானருட்குறிபோற்றிக்காமருபெருந்தவமாற்றித்
தவலருமுத்தியடைமினென்றுரைத்தான்சார்ந்தனரனையரத்தலமே. (௪)

அத்தலப்பிரமதீர்த்தத்துமூழ்கியவிர்தருபிரமலிங்கேச
வுத்தமற்போற்றித்திருவருடரப்பெற்றொன்றியொன்றாக்கலப்புற்றார்
வித்தகத்தக்கனன்னதுதெரிந்துமிகமனம்புழுங்குபுபின்னும்
புத்திரர்பலரைப்படைத்துமுன்போலப்பொருத்தினனேவினனம்மா. (௫)

அந்தமைந்தரையுமுந்தைமைந்தரைப்போலாக்கினானாரதமுனிவன்
வெந்தசிந்தையனாய்த்தக்கனென்பவனும்வீணைமாமுனிவனைநோக்கி
நந்தவண்சிருட்டிசெய்திடாவகையென்னலமகார்தமைக்கெடுத்தமையா
லுந்தநீமனைவிமகவிழந்தெங்குமுழிதருவாயெனச்சபித்தான். (௬)

தீயவெம்பாசத்தளைந்துமாழாந்துதிரிதராவண்ணமுன்மகாரை
நாயனொண்கமலச்சேவடிகலந்துநலம்பெறவிடுத்ததெண்ணாது
தீயநீயென்னைச்சபித்தனையதனாற்றேவர்கோனாயவெம்பெருமான்
பாயவெஞ்சினக்கோட்பட்டுநின்றலையும்பறிபடுவாயெனச்சபித்தான். (௭)

முனிவரன்சாபங்கொடுத்துநீங்குதலுமொய்பெருந்திறலுடைத்தக்கன்
பனிமதிநுதலார்பலர்வரப்படைத்துப்பலர்கொளக்கொடுத்தனன்பின்னுங்
கனிதரவண்டபகிரண்டமனைத்துங்கலந்தபல்லுயிர்களுமீன்று
தனியொளிர்தாயைமகளெனப்பெற்றான்றவத்தின்மேற்சிறந்ததொன்றுண்டோ.

சதியெனுமகளையுலகெலாங்களிப்பத்தன்றிருமனையகம்போந்து
பொதிதருகருணைப்பெரும்பிழம்பாயபூரணன்மணந்தருளியபின்
விதிவலிதானோவாணவமலத்தின்வீக்கமோமூவகையுயிர்க்கும்
பதியினையந்தமதியிலிமருகர்பலருளுமொருவனாமதித்தான். (௯)

அனையவன்மதிப்போர்ந்தையனும்வாளாவணுகினன்சதியொடுங்கயிலை
துணையமற்றொருநாண்மதியெனுமருகன்றுடியிடையொருமகள்பாலே
நினைதருநசைவைத்ததுதெரிந்ததனைநீக்கெனக்கொளாமைதேர்ந்தவனை
யினைதரவொருநாட்கொருகலையாத்தீர்ந்திறுதியென்றுரைத்தனன்கொடியோன்.

கொடியவன்மொழியானாட்குநாளொன்றுகுறைவதுகண்டவவ்வாலோ
னெடியவன்முதலாமமரருமஞ்சிநீத்ததுங்கண்டுவான்கயிலை
யடிகளையடைந்துகாத்தியென்பதன்முனங்கைதொட்டெடுத்தனன்சடில
முடிமிசைவைத்தோர்நாமமும்பூண்டான்முருக்கினானாமம்மதியே. (௧௧)

அதுதெரிதக்கனாகியமூர்க்கனமூக்கறுத்திருந்தனன்பின்னர்க்
கதுமெனவெழுந்துமதுமலர்ப்பொகுட்டுக்கடவுளையடைந்தடிபணிந்து
சதுமுகமகமொன்றியற்றுதல்குறித்தேன்றகுமிடம்புகலெனவனையான்
விதுமுடிப்பெருமான்விரைந்தருள்புரியுமேதகுதலமுளத்தாய்ந்து. (௧௨)

குணகடன்மேல்பால்யோசனைக்கப்பாற்குலவுகாவிரிக்கரைத்தென்பா
லணவுமோர்வநமுண்டதைநகர்கண்டேனப்பெருந்தானத்தினெல்லை
புணர்தருஞ்சுற்றும்யோசனையளவுபோற்றுமவ்வெல்லையுளழலோற்
குணர்தருதிசையினழல்வளர்த்திடுதலுத்தமமாகுமென்றுரைத்தான். (௧௩)

மலரவனுரைத்தமொழிசெவியேற்றுமண்ணிடைப்பலரொடுமிழிந்து
கலரணுகரியவத்தலநோக்கிக்கரிசிலதென்றுவப்புற்று
வலர்புகழ்தெய்வத்தச்சனைக்கூவிமகம்புரிசாலையொன்றீங்கே
யுலர்தலில்வண்ணம்புரியெனப்பணித்தானொய்யெனப்புரிந்தனனவனும். (௧௪)

திசையொருநான்குமுயர்மதிலெடுத்துத்திகழநால்வாயிலும்போக்கி
யசைவில்கோபுரமுமமைத்ததனுள்ளாலலங்குபொற்சாலையொன்ருக்கி
வசைதவிர்குண்டமண்டலம்வேதிவயங்குமேகலையொடுமமைத்திட்
டிசைபெறுமறையோரிருப்பதற்கதவத்தியன்றவாதனங்களுமாக்கி. (கரு)

திசைபுரப்பவருமாயவனுதித்தேவருமிருப்பதற்கிடமு
நசைகெழுமடவார்நயந்துநீராடுநன்மலரோடையுங்குளனு
மிசைபதமமைக்குமிடங்களுமறையோர்விலாப்புடைவீங்கவுண்டிடற்காம்
பசைதருமிடமுஞ்சுவணமுற்பலவாம்பண்டங்களமைத்திடுமிடமும், (கசா)

செறிதருமற்றையிடங்களுமமைத்துச்சிருக்குமுன்யாவையும்புரிந்தா
னறிதருதக்கனுளமிகமகிழ்பூத்தண்டராதியர்விரைந்தணுகக்
குறிதருதூதுசெலுத்துபுதானேகுலவயன்மால்புரத்தெய்தி
நெறிதருமகத்திற்கணுகுமாறுரைத்துநீள்பெருங்கயிலையையடைந்தான், (கஎ)

வெள்ளியங்கயிலையடைந்தவனந்தியனுஞ்ஞைவேண்டாதொருதனேயே
யுள்ளியுட்புகுந்தான்கருணையங்கடலாங்கொள்ளரியாதனத்திருப்ப
வெள்ளியதரத்தான்வணங்கிலான்வணங்காவிரும்பெருங்குற்றமுமெண்ணன்
வள்ளியவெணைக்கண்டெழுந்திலான்சாம்பர்வயங்குமேனியனெனவெகுண்டான்

தீயவூழடைந்ததக்கனேர்குணமில்சிவன்மகத்தவிகொளறகாது
மேயநானழையேனெனவகன்றெருதன்வேள்வியஞ்சாலையையடைந்தான்
றூயநான்மறையுமுணர்தராப்பரமசுயம்பிரகாசனெம்பெருமா
னுயவத்தனையுமறிந்துமற்றறியான்போலுமையொடுநகைத்தமர்ந்தான். (ககூ)

படுமகச்சாலையடைந்தவக்கொடியோன்பைந்துழாய்முகில்வரக்கண்டு
நெடுமரமெனமற்றவனடிவீழ்ந்துநிலவவெண்மகம்புரந்தளித்தி
கடுவமர்களத்தனிவனுருவண்ணங்கழித்தனனெனவொன்றுமுரையான்
றடுவரியவன்போலிருந்தனன்கேடுசாருமேற்றடுப்பவரெவரோ, (உ0)

ஆயவக்காலைமலரவன்மகவானழலவன்கூற்றுவனிருதி
பாயநீர்க்கிறைவன்சதாகதியளகைப்பதிபுரப்பவனலீசானன்
மேயகிம்புருடர்கின்னரரியக்கர்வித்தியாதரர்வலிக்கருடர்
தூயமெய்ச்சித்தர்சாரணரெவருந்தொக்கனரம்மகச்சாலை, (உக)

கதிரவன்மதியமுதற்பலகோளுங்ககனவாசிகளெனப்பட்ட
வதிர்தலின்மற்றையாவருமடைந்தாரடுதகரூனுகர்நசையும்
பிதிர்விறக்கணையும்பெறுவதுகருதிப்பிறங்குவேதியரொலாம்புகுந்தா
ரெதிரில்பொன்மானத்தேறுபுதக்கனில்லுறையாவருஞ்செறிந்தார் (உஉ)

வந்தவர்பலரும்வெள்ளியங்கயிலைவளர்பெருமானுலகீன்ற
சுந்தரவுமையோடணைதராவிதமென்சொன்மினென்றெருவருக்கொருவர்
தந்தமுள்வினவிக்கொடுப்பவன்வெறுப்பிற்சாற்றுவதெவனெனவிறுத்து
நந்தநங்கருமம்பார்க்கலாமென்றுநவின்றனர்பின்வரலுணரார். (உங)

யாவருநமதாணையிற்குழீஇயினரென்றெக்கழுத்தங்கொடுதக்கன்
மேவருமிருத்துவிக்குகண்முதலோர்விதியுளியவரவரிருக்கும்
பூவருமிருக்கையிருந்திடப்புரிந்துபொலிமகப்பெருந்தழல்வளர்த்தான்
ருவருமயன்மாலாதியர்பலர்க்குந்தவாவினைப்பெருந்தழல்வளர்த்தான், (உச)

பலமுனிவரர்நற்றதீசிமுன்னோர்பங்கயன்மாயன்முற்பலர்க்குங்
குலமறைமுடிக்குமெட்டவொண்ணுதருழகனையிகந்திதுசெய்த
னலமலவென்றுமறைமுதலெடுத்துநவிலவுமறுத்தனனவரு
மலமருமுளத்தார்வைதனரகன்றூரகல்பவரகல்கவென்றிருந்தான். (௨௫)

கெடுந்தொழிற்றக்கன்செயலிதுவாகக்கேழ்கிளர்பெருங்கயிலாயத்
தடுந்தொழிற்றரக்கினதளரைக்கசைத்தவண்ணறனிணையடியிறைஞ்சி
விடுந்தொழில்கருதாக்கருணையெம்பிராட்டிவெவ்வினைத்தந்தையாந்தக்கன்
படுந்தொழிறவிர்ப்பானவன்மகங்காணப்படர்குவனிறைவயானென்றாள். (௨௬)

என்றலுநம்மையிழித்துரைதக்கனெனும்பொறியிலியுனைமதியான்
பொன்றலுந்தவிரானுங்குநீபோதல்புல்லியதாகுமென்றருள
வன்றலுமவிரோதித்தலுமில்லாயாயினுமடியனேனுங்குச்
சென்றலும்பகலுந்தெருட்டிநிற்கடிமைசெய்குவனவனையென்றெழுந்தாள். ௨௭

எழுதலுந்தீங்குவருவதுதிண்ணமெனப்புகன்றெம்பிரான்விடுத்தான்
முழுதுலகீன்றபிராட்டியும்வேறுமுன்னலடுணையும்வேண்டாளாய்
வழுவறுபெரியோர்தொழுநனிபள்ளிமருவினளாங்குநின்றெழுந்து
பழுதறவடுத்தோர்க்கருடிருச்செம்பொன்பள்ளிவந்தடைந்தனண்மாதோ. ௨௮

ஆங்குநின்றெழுந்துபற்பலவிரிச்சியடுத்தடுத்துறத்தடைசெயவும்
பாங்குகொளுள்ளத்தெண்ணலளாகிப்பாதசாலம்புலம்படையத்
தேங்குதன்காதற்றிறத்தினற்கொடியோன்றீமகச்சாலையையடைந்தா
ளோங்குபேருலகத்துயிரொலாமொருங்கேயுயிர்த்தினிதோம்புமெம்பிராட்டி· ()

பிறைநுதற்கருங்கட்செய்யவாய்வெண்பற்பிராட்டிநேர்வந்துநின்றிடவுங்
கறைமனத்தீயகொடியவன்கண்டுங்கண்டிலாதவனெனவிருந்தான்
மறைமுதற்கலைகள்பற்பலவுணர்ந்துமாசறத்தெளியினும்பெருமா
னிறையருள்சாலாக்கயவரைவிடுமோநிகழ்பெருங்கருமலச்செருக்கு. (௩௦)

விழித்தகண்குருடாவிருக்குஞானியர்போல்வெய்யவனிருத்தலுமழுதைப்
பழித்தமென்மொழியெம்பிராட்டியுநெஞ்சம்பதைதைத்தவணின்றுசாதல்
தொழித்ததன்றாய்பாலடைந்தனளவளுங்கொழுநனைத்திருந்தனள்பாச
மொழித்தவண்மீட்டுந்தக்கன்முன்னடைந்தாளுறச்சினந்தனளிதுசொல்வாள்.()

தீமதியமைந்ததியற்கையோவன்றிச்செயற்கையோமறைகளாயிரமுந்
தாமதியாதவொருபரம்பொருளைத்தத்துவங்கடந்தபேரொளியை
நீமதியாமலிகழ்ந்ததென்னிகழ்ந்துநீரொழுமொக்குளிற்சிதைவாய்
தூமதியார்க்குமில்லையோவிங்குச்சூழ்ந்துளாரறிவுமிப்படியோ. (௩௨)

என்றுவான்கருணையிறைவிசொன்மாற்றமிருசெவியேறலுங்கனன்று
நின்றுநீயுரைக்குமிதிற்பயனில்லைநிரம்பியதாமதகுணத்தன்
றன்றுமாமகத்துவரத்தகாணீயுந்தொடர்புடைமகளலையென்றா
னன்றுமாமனத்தன்மகளலையென்றதறிதரினுண்மையேயன்றோ. (௩௩)

கொடியமாபாவியிம்மொழிசொலவுங்குடங்கையாலஞ்செவிபுதைத்து
நெடியவேற்கருங்கணம்பிகையந்தோநின்மலன்வார்த்தையுமிகந்து
கடியபல்விரிச்சிநிகழ்ச்சியுமெணுதுகழிமடன்பாலடைந்ததற்கு
முடியவாங்கழுவாயிவன்மகளென்னுமுறையொழிப்பாமெனக்கருத. (௩௪)

ஆயவக்காலைநடுங்கியதவனியசலங்கள்வெடித்தனககுபம் *
மேயவெண்களிறுநிலைகுலைந்தழிந்தவிண்ணின்றும்வீழ்ந்தனவுற்கை
பாயபல்லுயிருமலரவன்முடியப்படுதினமிதுகொலென்றயிர்த்த
காயநின்றதிர்ந்துவீழ்ந்தனவுருமுக்சணமுடுக்கணமெலாமுதிர்ந்த. (ருரு)

இதுநிகழ்காலையொருபெருவிருக்கத்திணர்மலர்க்கோட்டின்மேனின்றுங்
கதுமெனநொச்சியிலைபுரைபைந்தாட்கலாபமாமயிலொன்றுவீழ்ந்து
முதுபுகழுமையாள்கேசபாரந்தனினமெனமுந்திவந்தடைய
மதுமலர்க்கூந்தன்முதல்வியுமுள்ளமகிழ்தரவதையனைநோக்கி. (ருசு)

அஞ்சலைதோகாயஞ்சலையென்னுவாரருளபயநன்களித்தாள்
விஞ்சலையுடுத்தபுடவிவாழுயிர்க்கும்விண்ணுலகத்துவாழுயிர்க்கு
நஞ்சலையெயிற்றுப்பாந்தள்வாழுலகநண்ணியவுயிர்க்குமெஞ்ஞான்று
நெஞ்சலைதுயரநீங்கிடவபயமிரப்புவாட்கீதுமோர்புகழோ. (ருஎ)

பிணிமுகமுவகைபெறவருள்செய்தபின்னர்வெந்தக்கனைநோக்கிக்
கணிதமில்பாவக்குழிசியாங்கயவகளைகணெவ்வுலகிற்குமாய
துணிபரம்பொருளையிகந்தனையதனாற்றொலைந்துநீகெடுகவின்னேயிவ்
வணியுறவுடம்புமொழிப்பலென்றியோகத்தருந்தழலைமூப்பினளம்மா. (ருஅ)

அன்னசெந்தழலிற்புகுந்தனண்மறைந்தாளமரர்கள்கண்டுளம்பதைத்தார்
மின்னகுகுலிசத்தவன்முதலெண்மர்மெய்நடுநடுங்கினரிருந்தார்
பன்னகப்பாயற்பகவனுமலர்மேற்பனவனுங்கண்டுநெட்டுயிர்த்தா
ருன்னருமற்றையுயிரொலாம்பட்டதுரைத்திடவல்லவர்யாரே. (ருகூ)

அறிவிலரானார்பெருந்திருவடையினப்பெருந்திருவொடுஞ்சிறைவர்
செறிதருமுலகத்தென்பதுதேற்றந்தீவினைத்தக்கனம்பிகையை
நெறிமகளாகப்பெற்றனன்மகளுநீத்திடத்தானும்வாழ்வொழிந்தான்
பிறிதெவனுரைப்பாமேலினிநடக்கும்பெற்றியுமெடுத்துரைசெய்வாம். (சு0)

தக்கன் மகம்புரிபடலம்முற்றிற்று.

ஆ திருவிருத்தம் சருக.

யாகசங்காரப்படலம்.

நயங்குலவாததக்கனருமகம்புரியுமாறு
மியங்குபல்லமரரோடியாவருந்தொக்கவாறுஞ்
சயங்குலவிறையைநிந்தைசொலுமாறுஞ்சார்ந்ததேவி
வயங்குருமறைத்தவாறுமசதியாழ்முனிவனோர்ந்தான். (க)

கருவியாழ்நழுவவேணிகட்டவிழ்ந்துலையச்சீற்ற
மருவியோடுபுவேதண்டமருவினன்றனியேவைகும்
பருவியாளப்பூட்செல்வப்பரனையஞ்சலித்துநின்று
வெருவியான்போந்தேன்றேவிவெந்தழன்மறைந்தாளென்றான். (உ)

ஆவயினடந்ததென்னென்றறிந்தறியான்போற்கேட்குந்
தூவயிற்கழுமுளார்க்குச்சிறுவளிதடவுந்தோறும்
பாவயினிரம்பப்பாடும்பத்தர்யாழ்க்கருவிமேலோ
னாவயினடுக்கந்தோன்றநடந்தனவனைத்துஞ்சொற்றான். (ந)

ககுபம் - திசை.

முனிவரனுரைத்தலோடுமுடிவிலாமுனிவுபொங்கப்
பனிமதிமுடித்தபெம்மான்படர்சடையொன்றுபற்றித்
தனிநிலத்தறைந்தானாகத்தரைமுதலுலகம்யாவு
நனிநடுநடுங்கவீரநம்பன்வந்துதயஞ்செய்தான். (௪)

திருமுடிவிசும்புபோழத்திசைபுயந்தடவாநிற்க
மருமலர்ச்செய்யபாதமண்பரப்பனைத்துமாகக்
கருகிருளனைத்துமேய்ந்துகண்ணெழுசுவாலைபொங்க
வொருபரனடிக்கீழ்த்தாழ்ந்தீதுரைக்கலுற்றனனவ்வீரன். (௫)

எழுகடற்புனலுமுண்கோவிரவியுமதியுஞ்சூழு
முழுவரைபெயர்க்கோமற்றைவரையெலாமுறித்தல்செய்கோ
கெழுபுவியடங்கவாங்கிக்கேழ்கிளர்வாயிற்பெய்கோ
செழுவியவண்டமெல்லாஞ்சிதர்படச்சிதைத்தல்செய்கோ. (௬)

அதிர்கழனெடியமாலையயனையிந்திரனையின்னே
பிதிர்தரவங்கைவைத்துப்பிசைந்துபொட்டிடுகோவான்மீ
னுதிர்தரவதிர்க்கோயாவுமொடுங்கிநீறாகநோக்கோ
வெதிரடிமுளைத்தாய்செய்யவேண்டுவதென்னையென்றான். (௭)

தீயவன்றக்கனென்னுஞ்சிதடனோர்வேள்விசெய்வான்
மேயநந்தமக்குப்பாகமிலையெனவிளம்புகின்றா
னாயவன்றனைச்சார்ந்துண்டென்றால்விடுவிலையென்பானேற்
சாயவங்குள்ளாரோடுஞ்சாடுதிபோதியென்றான். (௮)

இத்தனைதானோவையனிடும்பணியெனக்கென்றெள்ளி
யத்தனையுருவுவேண்டாதமைதருமுருவுதாங்கி
முத்தனையுலகுக்கெல்லாமுதல்வனைப்பணிந்துபோற்றி
நத்தனையயனைவாட்டுநம்பிரானெழுந்தானன்றே. (௯)

வரைபொடிபடுக்கவேண்டின்வானத்தைமாய்க்கவேண்டிற்
றரைமுழுதெடுக்கவேண்டிற்சலதியைக்குடிக்கவேண்டி
னுரைகெழுமொன்றேசாலும்பூதங்களுலப்பிலாத
வீரர்தரத்தொடர்ந்துமேவவேள்வியஞ்சாலைபுக்கான். (௧௦)

மகவினைச்சாலைபுக்கவாள்வலிவீரர்வீரன்
றகவொருநால்வாயிற்குந்தவாப்பெருங்காவல்வைத்துட்
புகவவன்வரவுநோக்கிப்புலிப்போத்தின்வரவுகண்ட
ககனமான்குழாங்களென்னக்கலங்கினரமரரியாரும். (௧௧)

கொடுமகமிழைக்கும்பாவக்குழிசியர்ந்தக்கன்முன்போ
யிடுமவியெம்மாற்குண்டோவில்லையோசொற்றியென்றான்
கெடுவதுகுறுகப்பட்டான்கெடாதபேரகங்காரத்தாற்
கடுவுணிதனக்குப்பாகங்கரையாதுவேதமென்றான். (௧௨)

என்னலுமிருக்குவேதம்விரைந்துருவெடுத்துவந்து
முன்னவனுலகுக்கெல்லாமுதலவனயன்மாறேறா
வன்னவனொருவனேயெவ்வழன்மகங்களுக்குநாத
னின்னமுமெமக்குநாதனென்றெடுத்தியம்பிற்றன்றே. (௧௩)

அரியயனாதிவானோரனைவருமுய்யுமாறு
கரியநஞ்சமுதாக்கொண்டகண்ணுதற்பிரானையன்றி
யுரியவன்யாவன்வேள்விக்கும்பர்தங்குழாத்துளென்றும்
பெரியவனியாவனென்றுபேசியதிரண்டாம்வேதம். (கச)

எவனருள்வலியாற்பாசமிரிதருமுத்தியெய்து
மெவனருள்வலியாலோரைந்தொழில்களுநடக்குமின்னு
மெவனுமையவண்மணாளனெவன்றிரிபுரந்தகித்தோ
னவன்மகத்திறைவனாமென்றறைந்ததுமூன்றாம்வேதம். (கரு)

எவன்விழிபுதைப்பவெங்குமிருளுறும்யோகின்மேவி
யெவனமர்ந்திருக்கவெல்லாம்புணர்ப்பறுந்தனைமுன்னெட்டு
மெவனுடைவடிவமாகுமெவன்பசுபதியாயுள்ளா
னவன்மகத்திறைவனாமென்றறைந்ததுநான்காம்வேதம். (கசு)

மறையொருநான்குமிவ்வாறுரைக்கவுமனத்துக்கொள்ளாக்
கறையுடைத்தக்கன்றன்மைகண்டுவண்குடிலைதானு
நிறையுருவொன்றுதாங்கிநேர்வந்துபுகலாநிற்கு
முறையிலாமடவற்கியாதுமொழியினுமாவதென்னே. (கஎ)

மறைபலவற்றினுக்குமூலம்யான்வகுத்தல்கேட்டி
நிறைதருமெனக்குமற்றைநெடியவன்முதலானோர்க்கு
மறையுலகினுக்கும்யாகமனைத்திற்குமிறைவனாவான்
பிறைமுடியவனேயென்றுபிரணவம்பேசிற்றன்றே. (கஅ)

மொழிதருமனைத்துங்கொள்ளான்முன்னையிற்கனன்றுமூர்க்கன்
பழிதருசுடலையாடிபடுதலையெனும்பூண்பா
னிழிதருதமோகுணத்தனெனப்படுமுருத்திரற்குப்
பொழிதருமவியூணல்கேனென்றனன்புன்மையாளன். (ககூ)

அவனஃதுரைத்தலோடுமாண்டகைவீரச்செம்மல்
சிவபரநிந்தைகாதுணுழைந்துளச்சினமெழுப்பக்
கவலருமொருகைவாளாலவன்றலைகழியவெட்டிக்
குவலயநடுங்கயாககுண்டத்துவீழ்த்தினானால். (உ0)

உழையினதுருவங்கொண்டாங்கோடும்யாகத்தின்சென்னி
பிழையுறவாளால்வெட்டிப்பிரமனுநெடியமாலுங்
குழைதரத்தண்டான்மொத்திக்குவலயக்கிடக்கைசெய்து
விழைகதிர்முகத்தறைந்துபற்களைவீட்டினானே. (உக)

மதியவனுடலந்தேயவண்கழற்காலாற்றேய்த்தான்
பொதிதருமழலினோற்குப்பொலிதருகரமறுத்தான்
வதிதருபகனென்பான்றன்மரைமலர்க்கண்கள்சூன்றான்
குதிதருமகவானாயகுயிலிருசிறகுமீர்ந்தான். (உஉ)

தலையமைவானோர்யார்க்குஞ்சாலுமித்தண்டமாற்றி
நிலையமைவடிவாளாதிநிகழ்பலபடைகளானும்
புலையறிவமைந்தமற்றைப்புத்தேளிர்களுக்குத்தண்டந்
தொலைவறச்செய்தான்பூதத்தொகைகளுஞ்செய்யலுற்ற. (உங)

கரமிழந்தாருஞ்சில்லோர்காலிழந்தாருஞ்சில்லோ
ருரமிழந்தாருஞ்சில்லோரொளிருத்தமாங்கமென்னும்
பரமிழந்தாருஞ்சில்லோர்பல்லிழந்தாருஞ்சில்லோர்
வரமிழந்தாருஞ்சில்லோர்வாயிழந்தாருஞ்சில்லோர். (௨௪)

சிவநிந்தைசெய்தபாவத்தியனைநோக்குங்கண்ணு
மவமிகுமனையான்வார்த்தையடைதருசெவியும்பொல்லாத்
தவறினாற்கெதிர்சொலாததாலுமாங்கிழந்தாரின்னும்
பவமிலாற்பிழைத்தபாவம்பாறுமோவெளிதினம்மா. (௨௫)

முலையிழந்தாருஞ்சில்லோர்மூக்கிழந்தாருஞ்சில்லோர்
தலைமயிரிழந்துளாருஞ்சிலர்தவாதரையுடுத்த
கலையிழந்தாருஞ்சில்லோர்கருத்துமுற்றுறுதத்த
நிலையிழந்தாருஞ்சில்லோர்நிரம்பியமடவார்தம்முள். (௨௬)

விலாப்புடைவீங்கவுண்டேமலம்விளங்கவியாமாட்டேன்
குலாப்பெறக்கவர்ந்தேமல்லேந்தக்கணைகொளலுந்தீர்ந்தேங்
கலாய்த்தவிக்கொடியாற்சார்ந்துகலங்கவமானத்தோடின்
பலாப்பழியடைந்தோமென்றேயழுதனர்மறையோரெல்லாம். (௨௭)

விதிவழிபுரிந்தகுண்டமண்டலம்வேதிமுற்றுந்
துதியறச்சிதைவுசெய்துந்துவன்றுநெய்க்குடமுடைத்தும்
பதிதரவிருந்தபற்பல்பண்டமுமழலிற்பெய்துங்
கொதிசினக்குறுத்தாட்பூதர்செய்தவைகுணிக்கப்போமோ. (௨௮)

பண்ணியயாகசாலைபாழ்படுத்திந்தவண்ண
நண்ணியமகத்தீமாயநகுசினத்தீயுமாய்த்த
புண்ணியநிமலவீரபத்திரப்புத்தேளாங்குத்
தண்ணியசிவபிரானைத்தன்மனத்துறநினைந்தான். (௨௯)

வெள்ளியங்கிரியின்மேலோர்பொன்மலைமேவிற்றென்ன
வள்ளியவிடைமேற்றோன்றிமலமாயைகன்மமூன்றுந்
தள்ளியமுனிவர்பல்லோர்சயசயசயவென்றேத்த
வெள்ளியமேனிக்காந்தியுறுதிசையனைத்தும்போர்ப்ப. (௩௦)

குடைகொடியாலவட்டமொலியல்கோண்கொண்டதண்ட
மிடைசெய்கோண்கொள்ளாத்தண்டஞ்சாமரைமிளிர்சாந்தாற்றி
யடைதருபிறவும்பூதரங்கைகொண்டமைந்துசூழ
மடையுடைந்தென்னச்சூதர்மாகதர்விருதுபாட. (௩௧)

செறிமலர்மணங்கவர்ந்துதென்றலங்கன்றுலாவ
மறிதிரைசுருட்டுங்கங்கைமௌலிமேற்றிவலைவீசக்
குறிகெழுநிலவுகான்றுகுளிர்பிறைதயங்காநிற்க
வறிவுருவாயபெம்மானுவயிற்காட்சிதந்தான். (௩௨)

அண்ணலைக்கண்டலோடுமடிபணிந்தெழுந்தான்வீரப்
பண்ணவன்யாகசாலைபாழ்பட்டவாறும்யாருந்
துண்ணெனத்துடிக்குமாறுநோக்கியசுயம்புமூர்த்தி
யெண்ணிலாவிரக்கமுற்றான்பூதர்களிளைத்தார்த்தாரால். (௩௩)

பரவியகருணைமூர்த்திபத்திரப்பிரானைநோக்கி
விரவியவிவரையெல்லாம்விரைந்தெழுப்பிடுகவென்றான்
வரவியலவனுந்தாழ்ந்துமாண்டவர்பலருமின்னே
யுரவுபெற்றெழுகவென்றானுறக்கமுற்றெழுந்தார்போல. (௩௪)

எழுந்தனரயனுமாலுமெழுந்தனர்திசைகாப்பாள
ரெழுந்தனரமரர்சித்தரெழுந்தனர்கருடர்நாக
ரெழுந்தனர்விஞ்சைவல்லோரெழுந்தனர்கதிர்முற்கோள்க
ளெழுந்தனர்செவ்வாய்மாதரெழுந்தனர்மறையோரெல்லாம். (௩௫)

மாயவனாதிவிண்ணோர்வள்ளலைவிடைமேற்கண்டு
பாயபேரச்சத்தோடுபரந்தெழுநாணும்பூப்பத்
தூயவன்றிருமுகம்பார்ப்பதற்குளந்துணியாராகிச்
சேயவர்நிலத்திற்சேற்றுப்பணிந்தெழல்செய்யாராக. (௩௬)

அதுதெரிந்தமலச்சோதியனைவருமெழுகவென்னக்
கதுமெனவெழுந்தெல்லோருங்கைதலைக்குவித்துநின்றார்
பதுமனைமாலைநோக்கிப்படுமகத்தெமக்குப்பாக
முதுபுகழுடையீர்தாரீரோவெனமொழிவான்மாயன். (௩௭)

அடியரோமெந்தஞான்றுமாணவமலக்கோட்பட்டுக்
குடிகெடுகின்றோநீயுங்குரங்குபோலாட்டுவிப்பாய்
செடியுடலேழையேங்கள்செய்பிழைபொறுத்தாட்கொள்ளும்
படியிரந்திரந்துவிண்ணப்பஞ்செய்வேம்பிறிதென்செய்வேம். (௩௮)

கொடுவிடமெழுந்தஞான்றுகொடியரோமிரந்துவேண்டத்
தடுவருங்கருணையாலேசமைந்தவின்னமுதாக்கொண்டு
வடுவகிர்க்கண்ணாரெங்கண்மனைவியர்கழுத்திற்பூண்ட
விடுசுடர்ச்செம்பொன்காத்தாய்மேலினியுரைப்பதென்னே. (௩௯)

இதுநிகரனேகமாகவியற்றியுமறந்துநாங்கள்
கதுமெனப்பிழையேசெய்வோங்கண்டித்தபின்புதேர்வோ
முதுபுனல்விலக்குங்காலையொழிதரும்பாசியம்மா
வதுசெயாவிடின்முன்போலாமற்றெங்கள்செய்கைநாளும், (௪0)

ஆதலினின்றுநாங்களவமதித்திருந்ததற்காக்
காதலினடிகள்கண்டித்ததுபெருங்கருணையாகு
மேதகுமிதற்குக்கைம்மாறேதுண்டுமெய்மையேயுன்
பாதபங்கயங்கள்பல்காற்பணிதரலன்றியைய. (௪௧)

என்றுரைத்தடியில்வீழ்ந்தவிணர்த்துழாய்மாலையாற்கு
நன்றுளக்கருணைபூத்துநாயகனுரைக்கலுற்றான்
குன்றுகைக்கொண்டாய்நீயுங்கூடியபிறருமின்னே
சென்றுமுன்பிரமன்போற்றச்சிருட்டிநாந்தருமோர்தேத்து. (௪௨)

வயங்குநங்குறியொன்றுண்டுமற்றதுகண்டுபோற்றி
லியங்குறுபாதகம்போமெம்மருட்பேறுமுண்டாம்
பயங்கிளர்துங்கடமைபதிசெய்தோமித்தேத்தற்றாற்
றயங்குமித்தானமென்றும்பதியலென்றொருபேர்சார்க. (௪௩)

இத்தலஞ்செம்பொன்பள்ளிநனிபள்ளியின்னம்பல்ல
முத்தலம்படைக்குமாற்றன்மூளரிமேலவற்குநல்கு
மத்தலத்தெல்லையுள்ளவாதலாலிவைகண்டோர்தாங்
கைத்தலநெல்லிபோலுமத்தலங்கண்டோராவார். (௪௪)

என்றுரைத்தரியைமற்றையிமையவர்தம்மைப்போக்கி
யொன்றுதன்பாங்கர்நிற்குமொண்படைவீரற்பாரா
நன்றுநீயணையதேத்துநலங்கொளப்பொலிகவென்று
குன்றுவிற்குழைத்தகோமானவற்கருள்கொடுத்தபின்றை, (௪௫)

குக்குமவுடம்புதாங்கியொருபுறந்துதைந்துநிற்கும்
வாக்குமனதீதச்சீர்வாய்ந்தபூரணியைநோக்கிப்
போக்குநீதவிர்தியென்றதேற்றிலாய்போதல்செய்தாய்
வீக்குமற்றதற்குத்தக்கபயனுமேதகவிற்பெற்றாய். (௪௬)

எனவுரைத்தருளநாணியிறைஞ்சினளெம்பிராட்டி
கனமருள்கண்டன்மேனிகழித்திடும்பொழுதோர்தோகை
யினமெனவடையப்பாதுகாத்திரங்கினையாலற்று
லனநடையணங்கேதோகையாயதோருருவங்கொண்டு, (௪௭)

பிரமன்முனைமைப்பூசித்தபெருந்தலத்தெய்தியாங்கே
வரமுறநமைப்பூசித்துமருவுதியாமுமாங்குப்
பரவுமோர்மஞ்ஞையாகிப்பயிலுவோந்துணையாயின்னே
கரவறச்சேறியென்றான்கடுவிடைநடாத்தினனே. (௪௮)

விடைநடத்தியநங்கோமான்விரிஞ்சனார்பூசைசெய்த
கடையுறலென்றுமில்லாக்காமருதலத்தைச்சார்ந்தாங்
குடையதன்குறியிலுற்றானும்பராதியர்பல்லோரு
மிடையறத்தொடர்ந்துசென்றாங்கியைதரவமர்ந்தாரன்றே. (௪௯)

யாகசங்காரப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம், ௫௦௦.

மாயூரப்படலம்.

இலகவானவர்யாவருந்தம்பிழையிரிந்து
விலகமாமலராளியூர்மேவிடுமுன்னர்த்
திலகமாகியமூவர்தந்தேவருள்சிந்தித்
துலகம்யாவையுமீன்றவளொருமயிலானாள். (௧)

பரவுநொச்சியின்பாசிலையன்னபைந்தாளும்
விரவுபேருலகடங்கமூடுஞ்சிறைவிரிவு
முரவுசேர்தரமேற்கவிவாலுமிக்கொளிர்க்
கரவுதீர்மனவநம்பயில்பசுமயில்கவினும். (௨)

கலவுபல்லுயிர்ப்பயிர்தழைதரக்களங்கறுத்து
நிலவுவேணியொண்டடித்துறமறையொலிநிகழ்த்தி
யுலவுபேரருண்மழைபொழியொருமுகிலுவந்து
குலவுபற்பலவண்டமீன்மயினனிகுலவும். (௩)

வரையுதித்திடுமயிலென்றுமயிலியலென்றும்
புரையில்கேள்வியருருவகஞ்செய்தலும்போற்றி
யுரைசிறப்பவன்மொழித்தொகைசெய்தலுமொருவக்
கரைசெய்சாதிப்பேரெனமயிலாயினள்கவுரி. (௪)

பாயபச்செனுமொழியினாற்பண்புறவிடபம் *
மேயகொள்கையான் *முருகுபெற்றமைதலான்விடாம
லாயவார் *பணிகோறலாலறம்வளர்த்தவளா
நேயமாமயிலெனச்சொலநிலவியதன்றே. (௫)

அண்டநாயகியொருதிருமயிலுருவமையக்
கண்டதாமரைச்செல்வியுங்கலைத்திருமானுந்
தண்டவாமலர்க்குழலயிராணியுந்தயங்கல்
கொண்டவேனையமாதருமயிலுருக்கொண்டார். (௬)

வுளவநிந்திதைகமலினிமுதலியமடவா
ருளவரியாவருமொண்சிறைமயிலுருவுற்றார்
துளவனாதிவானவரெலாஞ்சூழ்ந்தனர்காத்தார்
களமிலாமயில்சூழ்ந்தனகவுரிமாமயிலை. (௭)

ஆடுமோர்சிலவோர்சிலசிறைவிரித்தகவி
நீடுமோர்சிலநிலத்தடிதோய்தரநடக்குங்
கூடுமோர்சிலபந்தரிட்டெனக்குலாய்ப்பறக்கு
நாடுமோர்சிலநயந்தபூங்கொம்பரினண்ணும். (௮)

ஒருத்திமாமடமயிலுருவாதலுமுடனே
விருத்திசாலுமற்றவரெலாமயிலுருவிழைந்தார்
துருத்திவாயிவள்கோவுருவாதலுந்தொலையா
வருத்திகூருமற்றவரெலாங்கோவுருவானார் (௯)

பெண்ணுருக்கொடுமற்றிவள்பொலிதலும்பெண்மை
நண்ணுருக்கொடுபொலிகுவர்மற்றைநல்லாரு
மெண்ணுருக்கொளுந்தலைவியெப்படியுலகெங்கு
மண்ணுருக்கொளுமேனையரப்படியன்றோ. (௧௦)

உலககாரணியாகியபரையொடுமேனோ
ரிலகமாமயிலுருக்கொடுநிகழ்தலையெண்ணி
விலகவோரிடமின்றெனப்புவிமிசைமிடையுந்
திலகமாகியநாகநாஞ்செறிந்தொளித்தனவே. (௧௧)

திசையினாகமுமஞ்சினசெறிந்துபாதலத்தி
னிசையுநாகமுமஞ்சினவிருகதிர்விழுங்கும்
வசையினாகமுமஞ்சினகத்துருமடந்தை
மிசையுமாத்துயர்மூழ்கினளுவந்தனள்வினதை. (௧௨)

வலிசெய்நோன்பினாற்பரனணியாக்கிடமகிழ்வுற்
றொலிசெய்புள்ளரசினைச்சுக்மோவெனவினவு
நலிசெய்பாந்தளுமுள்ளுறநடுங்கினவென்னிற்
கலிசெய்மற்றுளபாந்தளுளவைகலங்காத. (௧௩)

---

* விடபம் - மரக்கொம்பு - இடபம். *முருகு - இளமை - முருகக்கடவுள்.
* பணிகோறல் - பாம்பைக்கொல்லுதல் - ஆபரணங்களைக்கோலுதல்.

எங்குநாமினிக்காண்டலிவ்வதிசயம்பிரமன்
பொங்குபூசைசெய்தலத்துமான்மியங்கொலோபுனிதை
தங்குமான்மியமாங்கொலோமுசலிகடாமே
நங்குதீரவந்தடிதொழுதின்பமேநண்ணும். (கச)

அந்தமாமயில்குமரனைவெரிந்புறத்தமைக்கு
மிந்தமாமயின்மடித்தலங்கைத்தலமிரண்டிற்
சந்தமேவுறவகத்தமைத்திடுமிதன்சால்பு
முந்தயாவர்காண்குவரெனவறிந்தவர்மொழிவார். (கரு)

பொருந்துபற்பலமாதராமயிலொடும்புவன
மருந்துகொண்டன்முன்வரவரும்பிகைமஞ்ஞை
திருந்துவேதன்முன்பூசித்ததிருத்தலம்புகுந்து
வருந்துதீர்ந்துபல்வளமெலாநோக்கிடுகாலை. (கசு)

அரியமாதவரம்மயிலுண்மையையறிந்து
தெரியவாமறையோமறையந்தமோதிகழ்ந்து
பிரீயமார்தரும்பிரணவமோசிவயோக
ருரியநெஞ்சமோவித்தலமென்றுளமுவந்தார். (கஎ)

அதிசயத்தின்மேலதிசயமாகவவ்வேலை
கதியடுத்தவர்க்கினிதருள்காரணமுதல்வன்
மதிநுதற்பிராட்டிக்குமுன்வழங்கியபடியே
துதிசிறப்புறுமொருமயிலாகிமுன்றோன்ற. (கஅ)

கண்டபுண்ணியமாமயில்கருதருமுவகை
மண்டவொள்விழிவழிச்செலீஇமனமதைமருவ
முண்டகாசனன்முகுந்தனுமறிதரமுடியா
வண்டநாயகமயிலிதென்றார்வமுற்றன்றே. (ககூ)

உரித்துநந்தமக்கிதுவெனவுணர்த்தல்போற்றோகை
விரித்துமேற்கவிதரச்செய்துவிளங்கிருசிறையு
மிரித்துமெய்யிலொன்றாவகைமுகமெழிலியையப்
பரித்துநின்றுநன்றாடியதிசயம்பயப்ப. (உ0)

வம்பலர்க்குழலுலகமீன்றருண்மயில்காணக்
கம்பலைத்தெழுமறையெலாங்களித்துநின்றாட
நம்பலுற்றபல்சராசரங்களுநயந்தாட
வம்பலத்தினிதாடுறுமயிலுவந்தாடும். (உக)

அமரமாதரோடொருபுறமயிலவாய்நோக்கச்
சமரவேல்விழியம்மயிறாளங்கைத்தாக்கப்
பமரமார்தொடையும்பர்கள்பழிச்சிநின்றேத்தக்
* குமரனாய்முனமாடியகுருமயிலாடும். (உஉ)

கிள்ளைமேவியமலர்க்கரக்கிளர்விழிக்கயறோய்
வள்ளைவார்குழையுமையெனுமாமயில்காணத்
தொள்ளையுள்ளமாலயன்முதற்பலரையுந்தொலைத்து
வெள்ளைநீறணிந்தாடுறுமயில்வியந்தாடும். (உந)

---

* குமரன் - கௌமாரபருவமுடையவன்.

அலகிலண்டமுமீன்றருளியமயில்காண
வலகிலண்டமுமதிர்தரவெழுந்தவணுண
வலகிலாற்றலினொருபதம்விண்பொதிர்த்தணைய
வலகிலற்புதநடஞ்செயுமயிலுவந்தாடும். (உச)

புனிதமங்களபூரணமாமயினோக்க
முனிவரஞ்சலித்தரகரகரவெனமொழியப்
பணிபரந்தகண்ணடியர்மற்றியாவரும்பரவத்
தனியமைந்துநன்னடம்புரிமயிறகவாடும். (உரு)

இறைவியென்றுலகேத்திடுந்திருமயில்காண
மறையினந்தழும்வான்றவயோகியருளமுங்
குறையறும்பெருந்தானமாக்கொண்டுகூத்தாடும்
பிறையிருஞ்சடைப்பெருமயிறங்கிநின்றாடும். (உசா)

அறைந்தவண்ணமொண்சரபமாகியமயிலாடக்
குறைந்தமாமதிநுதன்மயிலன்புமீக்கூர
நிறைந்தபற்பலமயில்களுநோக்கியுண்ணெகிழ
மறைந்ததொன்றுமின்றாகநோக்குபுமகிழ்ந்தன்றே. (உஎ)

ஆங்குநிற்குமாந்தருமிசைப்பயின்றிடுமதன்கீழ்த்
தேங்குபேரொளியாயதன்செழுங்குறிசூழு
மோங்குவேதியன்பூசித்தகுறியுங்கண்டுவக்கு
நீங்குறாமயிலொடும்பசுமயினெறிதொடர. (உஅ)

சத்தனெவ்வுருக்கொள்ளுமவ்வுருவிற்குத்தகவே
சத்தியும்முருக்கொளுமெனச்சாற்றலுமிருக்கச்
சத்தியெவ்வுருக்கொள்ளுமவ்வுருவிற்குததகவே
சத்தனும்முருக்கொளுமெனறறையெழுந்தன்றே. (உகூ)

மன்றைநாடியாட்டயர்தருமறைமுடிமயிலு
நன்றையாதரித்ததுதெரிஞாலமீன்மயிலு
மொன்றையொன்றுநீங்காதமைந்துவகையிற்றிளைப்பப்
பின்றைநீங்கலற்றுவப்புமேயினபிறமயிலும். (௩௦)

ஆயகாலையினங்கசரீரிவாக்கொன்று
நேயமாமலராளிவாவியினெறிபடிந்து
தூயமாவடிச்சிவலிங்கபூசனைதொடங்கன்
றேயமாபரைமயில்செவியுறவெழுந்தன்றே. (௩க)

அந்தவாசகங்கேட்டலுமுவகைமிக்கமையப்
பந்தமேதுமின்மஞ்ஞையவ்வாவியிற்படிந்து
சந்தமாவடிச்சிவக்குறிமுன்னுறச்சார்ந்து
நந்தமற்றதன்பொலிவினைநயந்துகண்டன்றே. (௩உ)

மஞ்சனஞ்செயப்பன்மலரருச்சனைவயக்கத்
தஞ்சமின்றிநன்னிவேதநந்தவாதெடுத்தூட்ட
வஞ்சலித்திடக்கையிலேமருந்துதியறையக்
கஞ்சநேர்தருவாயிலேமென்செயக்கடவேம். (௩௩)

என்றுதன்னுளத்தெண்ணுபுமானதபூசை
நன்றுசெய்திடத்தடையிலையாலெனநயந்து
வென்றுமேம்படுமயில்விழைந்தாட்டுதலாதி
யொன்றும்யாவையுந்தன்மனத்துறப்புரிந்தன்றே. (௩௪)

மாவின்மேற்செலீஇநறுந்தளிர்வாயினால்வௌவுந்
தாவினம்பிரான்மேனிமேற்றதைதரச்சாத்துஞ்
சேவின்மேலவன்செய்யபட்டணிந்தனனென்று
நோவின்மாட்சிசெய்கண்களாலினிதுறநோக்கும். (௩௫)

நாடுகொக்குமந்தாரையினறுமலர்கொணருங்
கூடுதம்பிரான்மெய்யெலாமறைதரக்குவிக்கு
நீடுவெள்ளியபட்டலங்காரத்தைநிகர்த்த
தாடுநம்பிரான்கோலமென்றதிசயமடையும். (௩௬)

முல்லைவெண்முகைகொடுவந்துமேனியைமூடி
மெல்லையில்லவற்கின்றுவெண்பதஞ்சமைத்தியைய
வொல்லைநன்கபிடேகித்ததொத்ததென்றுவக்குங்
கொல்லையேற்றனைமாவொடுகுலவுறச்சூழும். (௩௭)

தந்தியீருரிபோர்த்தவத்தம்பிரான்மேனி
நந்திவாசனைநாறுசெவ்வந்தியானயக்க
முந்தியெண்ணிலகொடுவந்துகொடுவந்துமூடு
மந்திவண்ணனென்பதுதகுமெனமனத்தமைக்கும். (௩௮)

துன்னுமல்லிகைமலர்பலகொடுவந்துதொகுக்கும்
பன்னுமெம்பிரான்றனைச்சுத்தப்படிகசங்காசன் *
என்னுமோருரைமெய்யெனவிரதயத்துவகை
மன்னுமாறுகொண்டெழுந்துமேற்செயுந்திறமதிக்கும். (௩௯)

பட்டியின்பலவன்னமாமலர்களும்பறித்துக்
கிட்டியெம்பிரான்கிளர்திருவுருவத்தைமூடி
மொட்டிநோக்கியிக்கோலம்வெம்புலியதளுடையான்
கட்டிநீத்ததுபோர்த்ததொத்திருந்தெனக்களிக்கும். (௪0)

கோலமார்கருங்குவளைமாமலர்பலகொண்டு
நீலமார்களத்தண்ணறன்றிருவுருநிறைக்குஞ்
சீலமார்முனிவரர்விடச்செறிந்தவாரணத்தோன்
ஞாலமார்தரப்போர்த்ததொத்ததுவெனநயக்கும். (௪௧)

செறிதருஞ்செழுஞ்செருந்திகொண்மலர்பலசெறித்துக்
குறிதருந்திருமேனிமேற்குளிர்தரமூடும்
பறிதரும்பலகாசுகொண்டன்புளம்பதித
லறிதரும்படியாட்டியதொத்ததென்றமையும். (௪௨)

பத்தகோடிகட்கெளியவனாகியபரம
நித்தநாயகன்மேனிமேற்கோங்கங்கணிரப்புஞ்
சித்தமின்புறநோக்குநஞ்சிவபிரான்செம்பொ
னொத்தவண்ணனென்றுரைத்தன்மெய்யேயெனவுகளும். (௪௩)

* சங்காசன் - ஒத்தவன்.

குலவுகொன்றையின் றுமலர்பற்பலகொணர்ந்து
நிலவுதம்பிரான்மேனியுட்படமிசைநிறைக்குங்
குலவுயோகியர்பிரணவத்துட்குலவுறுமா
கலவுமெய்ப்பொருளென்பதுமெய்யெனக்களிக்கும். (சச)

மேயசீறிலைவில்வங்களநேகமாக்கொணர்ந்து
நாயனுர்திருமேனியுண்மறையமேனூட்டும்
பாயமூவகைச்சத்தியுட்பொருளெனப்பண்பி
னாயமேலவர்கூறன்மெய்யேயெனவமையும். (சடு)

உறுவதாகவிவ்வண்ணமொண்பூசனைமூந்நூற்
றறுபதாண்டுநன்காற்றியாவயினமர்ந்தன்று
பெறுவதென்னிதன்மேலெனப்பெரிதுளங்களித்த
திருவதாயதுமறமுவர்ப்பரவைசூழிடத்தில். (சசு)

தலையெடுத்துநின்றூர்த்தனதருமங்களனைத்து
நிலையெடுத்தபன்முனிவருமூவகையுணிறைத்தார்
மலையெடுத்தகைக்குடையினன்முதலியவானோர்
கொலையெடுத்தசூற்படையினனருள்குறித்தமர்ந்தார். (சஎ)

உற்றவான்புகழ்க்கௌரியேமயூரமாயுவந்து
நற்றவஞ்செயப்பெற்றகாரணத்தினனலஞ்சேர்
மற்றவத்தலங்கௌரிமாயூரமென்றொருபேர்
பெற்றதிவ்வுலகத்தொடெவ்வுலகமும்பேச. (சஅ)

மன்னுமேன்மைசால்கௌரிமாயூரமென்றொருகாற்
பன்னுவாரொனினவர்பெரும்பாதகரொனினுந்
துன்னுமப்பெரும்பாதகமடியறத்தொலைய
வுன்னுமுத்தராகுவரொனிலுரைப்பதென்னினியே. (சகூ)

வேதமுஞ்சிறப்பாயவாகமங்களுமிக்க
போதமேயருள்புராணமுமற்றுளநூலு
மேதமோதுமிக்கௌரிமாயூரமாமிசைத
வாதமந்திரமெவற்றினுமுயர்பெனவழங்கும். (௫0)

இசைகுலாவியகௌரிமாயூரமென்றிசைக்குந்
திசைகுலாவியமந்திரமுரைப்பவர்சிறந்தோர்
வசைகுலாவியபாதகர்மறந்துமோதுவரோ
நசைகுலாவியமேற்சரிதமுநடத்திடுவாம். (௫க)

மாயூரப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். ௫௫க.

தேவி வரம்பெறுபடலம்.

பூசையிவ்வாறுசெய்யும்புவனமுற்றீன்றதோகை
யாசைதன்னையிற்சூழுந்தோகையாங்ககவாநிற்கு
மோசைமுற்கவர்ந்துநாளுமுவகையிற்றிளைப்பதோர்நாண்
மாசையினுருவங்காட்டாவகைதெரிந்துயங்கிற்றன்றே. (க)

எதுபிழைசெய்தேன்கொல்லோவெளிமையிற்காட்சிநல்கு
மதுமலர்க்கடுக்கைமாலைமயிலின்றுமறைந்ததற்றை
முதுபிழைதீர்த்தற்கிங்குமுற்றினேனிங்குமேய
விதுபுகுந்தெங்குத்தீர்ப்பேனெனக்கவன்றிரங்காநிற்கும். (௨)

பிரிதராக்கருணைமஞ்ஞைபிரியுமேபிரிந்ததோர்ந்து
மிரிதரர்வுடம்பினோடுமிருப்பதேயானென்றேங்கும்
பரிதராக்கொடியேன்பூசைபண்ணலிற்குற்றமென்னோ
சரிதராவதுமுன்போலத்தழைவதுதெரிவேனென்று. (௩)

வாவியின்மூழ்கிவந்துமலர்முதற்பலவுநேடி
யாவியினினியகோவையந்தரியாகபூசை
மேவிநன்கியற்றிப்பின்னர்விழித்ததுதெரியக்கண்ட
தோவியர்முயன்றுந்தீட்டாவுருவத்தானுவக்குங்கோசம். (௪)

நாட்டியவக்கோசத்துநறுமணத்தைலமாதி
யாட்டியபலவுமேன்மையாயகூவிளமுமாகச்
சூட்டியபலவுமன்னஞ்சுவைக்கறியபூபமற்று
மூட்டியபலவுமெம்மானுவத்தலின்வெளிப்பட்டன்றே. (௫)

நீட்டியசடையான்சூதநீழல்வாழ்பெருமான்பாங்க
ராட்டியவனைத்துமோடிவழியவுமனையான்மேனி
சூட்டியவனைத்தும்பற்றித்துதையவுந்திருமுன்னேர்வைத்
தூட்டியவனைத்துமாங்காங்குறையவுங்கண்டதன்றே (௬)

அதிசயமிதுவாமென்றாங்ககன்றுவேதியன்பூசித்த
நிதிநிகரிலிங்கமுன்புனொரோலெனச்சேறலோடும்
பதியுமெவ்விடத்துமந்தப்படியேகண்டிறும்பூதுற்றுப்
பொதிதருமுவகைமேவப்புளகம்பூரித்ததன்றே. (௭)

இதுகொலோநாம்பூசித்ததினியமாநீழல்வைகு
மதுகொலோவென்றோராயமடைந்ததுபசியதோகை
புதுவிதுவென்பதென்னேயுணர்தரினிரண்டுமொன்றே
கதுமெனநாஞ்செய்பூசையிரண்டினுங்கண்டவாற்றால். (௮)

என்றுதன்கருத்திற்றெள்ளியிப்படியிருந்துநம்மோ
டொன்றுபுகளிப்புச்செய்யுமொருசிகாவளமித்தேத்து
நின்றுநீங்கிடுதற்கேதுவென்னெனநினைந்துசாம்பும்
பொன்றுமேவுற்றாலன்றிப்போகாதித்துயரொன்றுள்ளும். (௯)

எனநினைந்தெம்பிராட்டியெனுமயில்கவலுங்காலை
யினமறைவாழ்த்துமல்கவிமையவர்பலருமேத்த
வனகமாமுனிவரியாருமரகரகரவென்றார்ப்பக்
கனவிடைமீதுகாட்சிநல்கினான்கருணைமூர்த்தி. (௧௰)

காட்சிதந்தருளுமையன்காமருமயிலைநோக்கி
யாட்சிநம்மெதிராந்தீர்த்தத்தடுத்தவையொடுமூழ்கென்ன
மாட்சியினதுபஃறோகையொடுமகிழ்ந்தாடிப்பண்டைப்
பூட்சியுற்றெழுந்ததம்மாபுலவர்பூமாரிதூர்ப்ப. (௧௧)

பிணிமுகவுருவநீத்துப்பண்டையவுருவம்பெற்ற
மணிமருள்கூந்தற்செவ்வாய்வாணுதலெம்பிராட்டி
யணிகிளர்விடைமேற்றோன்றுமண்ணலைவிரும்பிநோக்கித்
தணிவருமன்புபொங்கத்தலைமிசைப்பணிந்தெழுந்தாள். (௧௨)

சூழ்தருமயில்களெல்லாந்தலைவிதன்றோற்றம்போல
வாழ்தருகளிப்புமேவமயிலுருவொருங்குநீத்து
வீழ்தருபழையரூபமேவியெம்பிரானையன்னாற்
றாழ்தருபரையைச்சூழ்ந்துதாழ்ந்தளவளாவிநின்ற. (௧௩)

தாழ்ந்தெழுமுமையைநோக்கித்தம்பிரானருளிச்செய்வான்
போழ்ந்தநின்கரிசுமுற்றும்போயதித்தலம்புக்கன்றே
யாழ்ந்தவன்புடைநின்பூசைக்காற்றவுமகிழ்ந்தேமற்றால்
வீழ்ந்தபல்வரமுங்கோடியென்றலும்விமலைதாழ்ந்து. (௧௪)

ஐயனேபோற்றிபோற்றியழலவிர்மழுமானேந்து
கையனேபோற்றிபோற்றிகையர்கண்காணுமேனிச்
செய்யனேபோற்றிபோற்றிதேவரைக்காத்தகண்ட
மையனேபோற்றிபோற்றியென்றிதுவகுக்கலுற்றாள். (௧௫)

அடியனேன்புரிபுன்பூசைக்கையநீயுவந்ததுண்டேற்
கடியவிரிணையதானங்கௌரிமாயூரமென்றே
நெடியவன்முதலோரோத்திநினைதரப்பொலியவேண்டு
மொடிவிலிந்நாமஞ்சொற்றோருவப்பெலாமுறுதல்வேண்டும். (௧௬)

தாயுமாயுலகுக்கெல்லாந்தந்தையுமானவைய
நீயுமாயூரநாதனெனும்பெயர்நிலவப்பூண்டு
தோயுமாதீர்த்தமாடிவந்துனைத்தொழுவோர்க்கெல்லாங்
காயுமாபாதகங்கள்கழற்றியின்புதவவேண்டும். (௧௭)

நன்றுநான்பூசைசெய்யுநலத்தவிக்குறிகண்மாட்டு
நின்றுநீகழலாவண்ணநிகழ்பிரசன்னமாகி
யென்றும்வீற்றிருக்கவேண்டுஞ்சேய்மையினிருந்துநின்பே
றொன்றுளத்தெண்ணுவோருமுயர்கதியடையவேண்டும். (௧௮)

தினகரன்றுலாத்திற்செல்லுஞ்செழுமதிமுழுதுமோர்சா
றனகயான்புரிதல்வேட்டேனதுநிறைவேறுமாறு
முனகரும்பொன்னிநன்னீர்மூழ்கினருய்யுமாறு
மனமமர்தீர்த்தநல்கிவயங்கருள்புரிதல்வேண்டும். (௧௯)

வழிச்செலவொருநாணினைக்கண்டவர்வளர்சாலோகம்
மழிப்பறவொருநாள்வந்துகண்டவர்பகர்சாமீப
மிழித்தலற்றிடச்சின்னாளிங்கிருந்துபோற்றினர்சாரூப
மொழித்தலற்றுறைவோர்நின்றாட்கலப்புநன்குறுதல்வேண்டும். (௨௰)

கொலைகளிற்சிறந்ததாயவந்தணக்கொலையும்வீரக்
கொலையுநாரியரைக்கொன்றகொலையும்பீடபச்சிதைத்த
கொலையுமாக்கொலையுந்தந்தையாதியர்தம்மைக்கொன்ற
கொலையுமித்தலத்தைச்சாரிற்குலைகுலைந்தோடல்வேண்டும். (௨௧)

இத்தலத்துதித்தபுல்லுச்செடிகொடிமரங்களின்னுங்
கைத்தபுள்கிருமிகீடங்கழுதைநாய்மலமார்பன்றி
மொய்த்தபல்கிரிபூனைபறவைகண்மொழியாமற்றும்
பைத்தபாப்பணியாய்நின்பொற்பாதமேசேரவேண்டும். (௨௨)

என்றொடுநின்னைப்போற்றுமியல்பினரியாவரேனும்
பொன்றொடுமணியுமற்றும்புகல்பொருள்யாவுமெய்தி
மின்றொடுநிகர்மருங்குன்மனைமகாரோடுமேவி
முன்றொடுபின்னிலாய்வாழ்ந்தீற்றுனைமுயங்கல்வேண்டும். (௨௩)

பொருணனிவேண்டினாலும்புலமையிற்சிறந்தோராகுந்
தெருணனிவேண்டினாலுஞ்சித்திகள்வேண்டினாலு
மருணனிவேண்டினாலும்வழங்காமலின்பந்துய்க்கு
மருணனிவேண்டினாலுமித்தலமளித்தல்வேண்டும். (௨௪)

விழியிலார்செவியுமில்லார்மேதகுகைகாலில்லார்
மொழியிலார்குட்டமாதிமொய்த்துளாருய்யும்வேறு
வழியிலாரியாவரேனும்வந்தித்தலஞ்சார்வாரேற்
பழியிலாராகியின்பப்பயனனிநுகர்தல்வேண்டும். (௨௫)

பற்பலவுரைப்பதென்னைபரமநீவீற்றிருக்கும்
பொற்பமரினியகோயிற்பொருள்கவர்தீங்கினோடு
நிற்பழித்திழிக்குந்தீங்குநிற்கமற்றெனையதீங்கு
மற்பமுமின்றாய்நீங்கவருண்மதியென்றுதாழ்ந்தாள். (௨௬)

பராபரையிரந்தவாறேபராபரனனைத்துநல்கிப்
புராதனவிலிங்கத்துள்ளேபுக்கினிதமர்ந்தானாக
வராவணையவன்முன்வானோர்மலர்மழைபொழிந்தாரப்பாற்
றராதலமகிழுமாறுநடந்ததுசாற்றலுற்றாம். (௨௭)

தேவிவரம்பெறுபடலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௫௭௮.

மாயூரநாதர்வள்ளலாரென்னும்பெயர்பெற்றபடலம்

அறிவில்கொடியவினைத்தக்கனுற்றுமகச்சாலையிற்புகுந்து
செறியுமயன்மான்முதற்றேவர்திறல்சால்வீரபத்திரரான்
முறிவிறண்டஞ்செயப்பெற்றுமுழங்கும்வீரட்டானமெனும்
பதியினின்றுமாயூரம்படர்ந்தார்பூசைசெயல்குறித்தார். (௧)

உரியவதிகாரமுமிழந்தோமுற்றமேன்மைகளுமிழந்தோம்
பெரியபரனையவமதித்தபேயன்றனைச்சார்ந்தறக்கெட்டோ
மரியதண்டமுறப்பெற்றுமருதநமைச்சார்ந்துறுகரிசு
மிரியமாயூரேசனைநாமின்றேபணிவோமெனக்கருதி. (௨)

மன்னும்பிரமதடந்தோய்ந்துவயங்குநீற்றுத்தூளனமும்
பன்னுமதன்மேற்புண்டரமும்பகராகமஞ்சொல்வழிபுனைந்து
மின்னுமுருத்திராக்கமணிவிளங்கப்பூண்டைந்தெழுத்தெண்ணித்
துன்னுமயன்மான்முதலாயசுரர்கள்யாரும்புறப்பட்டார். (௩)

ஆட்டுந்தயிலமுதற்பலவுமான்றமனுக்களெடுத்தோதிச்
சூட்டும்வில்வமுதற்பலவுந்தொக்கமுகமன்புகன்றுகசிந்
தூட்டுமமுதமுதற்பலவுமுற்றதீபம்பலபொருத்திக்
காட்டுங்கருவிமுதற்பலவுங்கருத்துக்கியையவீட்டினார். (ச)

அருமாதவர்தமுளத்தொளியையன்றுபுவனமுழுதுமுய்யக்
கருமாவிடமுண்டமைந்தானைக்கனிந்தபிரமற்கருள்சுரந்த
திருமாமணியைத்தக்கன்மகஞ்செற்றகோவைமாதேவை
யொருமாயூரேசனைப்பூசித்துவந்துதுதிக்கத்தொடங்கினார். (ரு)

அருவாயுருவாயருவுருவாயனைத்துங்கடந்தவசஞ்சலமாய்ப்
பெருமாமறையின்முடிப்பொருளாய்ப்பெரிதாய்ச்சிறிதாய்ப்பேருணர்வா
யொருமூவுலகிற்குயிராகியுற்றகுறியாதிகள்கடந்து
கருதாவொளியாயமர்மாயூரேசநின்றாள்கைதொழுதேம். (சு)

ஒன்றாயருவாயுருவாய்மற்றுபயமாயொன்பதுங்கடந்து
நின்றாய்மூலமலவிருளானெருக்குண்டுடையுமூவுயிர்க்கு
நன்றாயுணர்வுபுணர்த்திடுவானவிலுமாயைமாமாயை
* என்றாயிரண்டிற்றனுவாதியியைப்பாய்நின்னைச்சரணடைந்தேம். (எ)

ஒருமூவகையதத்துவமுமுள்ளும்புறமுமெனப்புகலு
மிருபேரிடத்துங்கொளப்பொருத்தியலுமாறுதொழிற்படுத்த
மருவாரணுக்களைந்துபுலன்வழிச்சென்றுற்றும்வினைசுவர்க்கங்
கருளார்நரகந்துய்ப்பித்துக்கழிப்பிப்பாய்நிற்புகல்புகுந்தேம். (அ)

மேவியமையும்பருவமுறவினைகளொக்குஞ்சமநோக்கி
யாவியருளூற்றிடப்பதித்தேயமைந்தசகலந்தனினீக்கித்
தாவி * அறிவோரிரண்டுமறத்தாவாச்சுத்தந்தனில்வயக்கி
யோவியகலாவின்பளிக்குமொருவாநின்னைச்சரணடைந்தேம். (கூ)

ஏதங்கடந்துவினைகடந்துகருவியென்பவெலாங்கடந்து
வாதங்கடந்தாருயிர்கடந்துமாறாவருளின்றொடர்கடந்து
பேதங்கடந்துபரவசமாய்ப்பிரியாச்சுகவாரிதிமடுத்துப்
போதங்கடந்துநிறைந்தபரம்பொருளேநின்னைச்சரணடைந்தேம். (க0)

அல்லார்கண்டத்தற்புதனேயடியார்க்கெளியகருணையனே
சொல்லார்மறையின்முடியானேதூயபிறைசார்வேணியனே
செல்லார்கூந்தலுமையம்மைசெறியோர்பாதிமேனியனே
நல்லார்புகழுமாயூரநாதாநின்னைச்சரணடைந்தேம். (கக)

என்றுதுதிக்குமலரோற்குமெஃகத்திகிரிப்படையோற்குங்
கன்றுவயிரப்படைசுமந்தகடவுண்முதலாமெண்மருக்குந்
துன்றுமொளிசாலிலேகருக்குந்தொக்கமற்றையாவருக்கு
மன்றுகருணைசெயவெளிவந்தனனவ்விலிங்கநின்றையன். (கஉ)

அண்ணல்வெளிவந்ததுகாணூஉவயன்மான்முதலோரடிமிசைத்தாழ்ந்
தெண்ணலினியாதெனநிற்கவெம்மானனையர்முகநோக்கிக்
கண்ணலருந்தீதித்தலநங்குறிப்பூசனையாற்கழிந்துயர்ந்தீர்
நண்ணலரியவரமுமக்கின்றருள்வோமென்றுநவில்கின்றான். (கங)

* என்றாயிரண்டில் - என்றாயஇரண்டிலெனப்பிரித்து, அகரம்தொகுத்தல் விகாரமாகக்கொள்க. * அறிவு இரண்டு - பாச அறிவு. பசுவறிவு.

போற்றுமறைகண்முழுதுணர்ந்துபொலியுங்கலைமாமகட்புணர்ந்து
சாற்றுஞ்சிருக்குமணிவடமுற்பலவுந்தவாதுகைத்தாங்கி
யாற்றுஞ்சிருட்டிமுன்போலவாற்றியடுத்தார்வினையனைத்துங்
காற்றுநந்தாள்கருதிவாழென்றுகஞ்சன்றனைவிடுத்தான். (௧௪)

பொறியைப்புணர்ந்துதிகிரிமுதற்பொலியைம்படையுங்கைத்தாங்கி
நெறியைக்கருதாவவுணருயிர்நீப்பச்சவட்டிமழுவொடுமான்
மறியைப்புணர்கைத்தலத்தொருநம்மலர்த்தாள்கருதியுலகோம்புங்
குறியைக்கொடுவாழென்றருளிக்கொண்டன்மேனியனைவிடுத்தான். (௧௫)

வேறு,

மேகவாகனசசியொடுவிண்ணவர்வணங்க
நாகநாடுபல்வளத்தொடுநன்குகாத்திடுதி
வேகமாகவேழ்தாலுளாய்விண்ணவருண்ணும்
பாகமேந்திமற்றவரவர்க்குதவெனப்பகர்ந்து. (௧௬)

கூற்றுநீயறஞ்செயார்களைக்குமைபெருந்தவத்தோர்
சாற்றுமிந்தமாயூரஞ்சார்ந்தார்களைத்தாழ்தி
யேற்றுவேறென்றுசெய்யலையென்றுநின்றிசையைப்
போற்றிவாழ்கெனநிருதியைப்பார்த்திதுபுகன்று (௧௭).

வருணகேளனுசிதரொலாமுசிதராய்வயங்கப்
பொருணயந்துநீபுரிந்திடுவாயெனப்புகன்று
வெருவிலாதுவாவாயுவேமேதினிக்குயிராய்ப்
பருவமோர்ந்துநீதகுதியிற்பயிலெனப்பகர்ந்து. (௧௮)

அளகையாளியைநிதிக்கிறையாகெனவறைந்து
பளகிலாதவீசானனைப்பார்த்துறுதுட்டர்
தளர்தரும்படிதண்டித்துவருகெனச்சாற்றிக்
கிளரநாலிருவோரையுங்கேழுறவிடுத்தான். (௧௯)

பொருள்பெறத்தின்கரபுகல்கருமசான்றாகி
யிருளறுத்துநீயியங்குபுவாழ்தியென்றியம்பித்
தெருண்மிகுத்திடுமதியமேயோடதிசெழிப்ப
வருண்மிகுத்திநீநன்றுகாத்திடுகெனவறைந்து. (௨௦)

இவ்விரண்டுகோளோடுமற்றுளவெழுகோளுஞ்
செவ்விதாகநேர்கூவுபுதிருந்திராசிகளி
லெவ்வமோவநீரிருந்துயிரின்பமுந்துன்புந்
தெவ்வுமாறளித்திடுகெனச்செப்பினன்விடுத்தான். (௨௧)

வேறு.

உடுக்கணத்தைவிண்மீதிலுறுதிபெறவிருக்கென்றும்
வடுத்தவிர்பைங்கொண்டல்களைமழைபொழிமினீரொன்று
நடுக்குகுணுங்கினமுருவநண்ணுதுபயில்கவென்று
மடுத்தநதிகளைநீரோடமைந்தறமாக்குகவென்றும். (௨௨)

வரைகளைப்பூதரமெனும்பேர்வயங்கவமருகவென்றும்
விரைமலர்ப்பல்வநங்களைப்புண்மிருகமோம்பிடுகவென்றுந
திரையெறிவாரியையளவில்செந்துகளோம்புகவென்றும்
புரையிலுலகங்களைநஞ்சத்தியாற்பொலிகவென்றும் (௨௩)

பலதலையசேடனைப்பார்பரித்தினிதுவசியென்றும்
பலமறையோர்களும்யாகம்பண்ணிவாழ்குகவென்றும்
பலவமரர்களும்யாகபலியுண்டுபொலிகவென்றும்
பலமறையுநம்முடையபடிவமாகுகவென்றும் (௨௪)

மருவுமிருதுகளாறும்வயங்குதேவுருவாகிப்
பொருவறவாழ்தரவென்றும்புண்மிருகமுதலான
வொருவில்பலவுயிர்களுக்குமுணவுமலிதரவென்றுங்
கருதியபற்பலவுமுளங்களிப்பவருளுபுவிடுத்தான். (௨௫)

நந்திமுதற்கணத்தவரைநாடிவேறுறநோக்கி
யந்திமதிமிலைந்தநமக்கன்னியமில்லாநீவி
ரிந்தியம்வெல்யோகியர்சேரித்தலத்தில்விதிப்படியே
முந்தியெமதருட்குறிகண்டேத்திடுமினெனமொழிந்து. (௨௬)

அன்னதிருக்குறிதொறுநாமிடையறுதமர்கிற்போ
மென்னவரங்களுநீரேயாவருக்குமீயும்வர
முன்னமுந்தந்தனமின்னுமொழிந்தனமென்றருள்புரிந்து
சொன்னமலைகுழைத்தபிரான்றெழுமிலிங்கத்துட்புகுந்தான். (௨௭)

மலரோனுநெடுமாலும்வானுடர்கோமகனும்
புலராமற்றிமையோரும்பூரணன்பேரருணோக்கி
விலகாதபெருவரங்கண்மிகக்கொடுத்தபெருமானை
நலமாரும்வள்ளலென்றோர்நாமமுவந்திட்டழைத்தார் (௨௮)

தக்கனெனுங்கொடியனுமாங்கடைந்துவிதித்தடமூழ்கி
முக்கணுடைவள்ளல்பதமுருகலர்கள்கொடுபோற்றித்
தொக்கசிறுமைகடவிர்த்துத்தூயனுயவனருளுற்
றக்கணமேசிவலோகத்தினிதமரும்பேறுற்றான். (௨௯)

பெருங்கருணைவள்ளலார்பேரருளைமிகப்புகழா
வொருங்குபலவானவருமுனிறதத்தமிடம்புக்கார்
நெருங்குபுகழ்வள்ளலெனும்பெயர்நிகழ்தற்காரணமீ
தருங்குறைத்தென்றிடுமற்றைக்காதையினியறைகுவாம். (௩௦)

மாயூரநாதர்வள்ளலாரென்னும்பெயர்பெற்றபடலம் முற்றிற்று.

ஆகு திருவிருத்தம். ௬௦௮.

தேவியாராதனைப்படலம்.

தனையாதியுலகனைத்தும்படைப்பாதியைந்துமொருதனிநின்றுற்ற
வுனையாதிகடந்தொளிரும்பனையாதியாயமருமொருத்திவெள்ளி
வுனையாதியினுமவாய்மாயூரத்தலத்தமரும்வள்ளற்றேவைக்
கனையாதிநிகமாகமப்படிபூசனைபுரியுங்கருத்தளானாள். (௧)

பூப்பொலியுந்தோழியருமநிந்திதைமுற்றோழியரும்புரிந்துசூழ
மாப்பொலியுமலர்ப்பிரமதடங்குடைந்துவெண்ணீறுவயங்கப்பூசி
மீப்பொலியும்பெரும்புகழ்சாலுருத்திரகண்மணிமாலைவிரவப்பூண்டு
நாப்பொலியுமைந்தெழுத்துங்கணித்தெழுந்துநந்தவனநண்ணினாளால். (௨)

தோழியராகியபலரும்பிடகைகரங்கொண்டேவுந்தொழின்மேனிற்ப
வாழிபுடையுடுத்ததாமகள்பதந்தீண்டிடுபெரும்பேறடைந்துள்ளோங்க
வாழிமறப்பகையனைத்தும்வளர்ந்தோங்கவளர்த்ததிருமலர்க்கைகொண்டு
வீழிநறுங்கனிபுரையுஞ்செய்யவாய்க்கௌரிமலர்மிதப்பக்கொய்வாள். (௩)

நந்தியாவட்டமாமல்லகமாமந்தாரஞாழலொண்செவ்
வந்திபாடலங்கன்னிகாரமாதளைகுராவகுளம்வில்வஞ்
சிந்துவாரங்கடுக்கைதேங்கொன்றைநீர்முள்ளிசெவ்வகத்தி
சந்துகூதாளமராநீர்மிட்டான்வழைகாஞ்சிதண்புன்னாகம். (௪)

குருந்துபொன்னாவிரைபொன்னூமத்தைவன்னிகுசைகூத்தன்குதம்பைவேங்கை
செருந்திகொக்குமந்தாரையெண்மலரார்பலாசுபட்டிசெவ்வரத்தம்
பொருந்துபன்னீர்வெட்பாலையசோகம்வெள்ளிலோத்தம்விளாப்பூளைதான்றி
திருந்துதுரோணம்பருத்திமாவிலிங்கநாயுருவிசெழுஞ்சரோசம். (௫)

மருமருவின்கொழுந்தருக்கம்வெள்ளைக்காக்கணந்துழாய்மாயன்காந்தி
கருவிளங்குவளையாம்பல்சதகுப்பைசெங்கீரைகாந்தள்வெட்சி
யொருதளத்தாமரைகண்டங்கத்திரிமல்லிகைகிளுவையோங்குகோட்டம்
பொருவில்விலாமிச்சவேர்வெட்டிவேர்குச்சுப்புல்புலிதொடக்கி. (௬)

வழுதுணைவெற்றிலைமஞ்சணத்திசூரியகாந்திவாகைதாழை
கொழுவழிஞ்சில்கருஞ்செம்பைகடம்பறுகுகருங்காலிகுளவிநாவ
லெழுநரந்தமெலுமிச்சைபாரிசாதங்காரையிருங்கரந்தை
தழுவுபச்சைவதரிகாயாநாணன்மயிலைநறுந்தாளிசாலி. (௭)

அலரிமுதற்பற்பலவுநிரம்பவெடுத்தமைத்தொருந்தேத்தணுகிவைகி
வலரியலுமிண்டைகளுமாலைகளுந்தொங்கல்களும்வயங்குதண்டிற்
பலரியையப்புனைவனவுமினும்வெவ்வேறுப்புரியும்பணியுநோக்கிச்
சிலரினியபல்வகையநிவேதனமுமமைமினெனச்செப்பிப்பின்னர். (௮)

கதிரெழுமுன்மஞ்சனநீர்வடிந்தெடுத்துப்புதுநிறையுட்கலக்கக்கொட்டி
முதிர்மணஞ்செய்கருப்பூரம்பொடித்திட்டுமலர்வேருமுயங்கச்சேர்த்துப்
பிதிர்தலிலாவகையமைக்கச்சிற்சிலரையேவிமணம்பிறங்குசர்த
மதிர்தரத்தேய்த்துறுவிரையுங்கலந்தமைக்கச்சிற்சிலரையனுப்பினாளால். (௯)

நறைகமழுஞ்செழுந்தயிலமினியதேனயிர்கனிகணல்லாவின்பால்
குறைவிறயிர்கழைச்சாறுமுதலியவுமோரிடத்தேகுழுமச்சேர்த்து
நிறைதருவட்டகைகலசம்படலிகைகொப்பரிகும்பநிகழ்தூபக்கான்
முறையமையுந்தீபக்கான்முதலாயபற்பலவுமுன்னிவீட்டி. (௧௦)

குடைகொடிசாமரையாடிசிவிறிமுதற்பற்பலவுங்குலவச்சேர்த்து
மிடைதருபற்பலகாம்புமுதலாயபரிவட்டம்விளங்கவீட்டி
யடைமணிசெய்குண்டலங்கேயூரமரைஞாண்முதலாவனைத்துங்கொண்டே
யுடைதிரையினியமுழங்கப்பூசைசெயல்குறித்தெழுந்தாளுச்சிவேலை. (௧௧)

முன்போலநீராடிநீறுதிபுனைந்திறைவன்முன்புசென்று
மின்போலநுடங்கிடையாளவனனுஞ்ஞைபெற்றுளத்துவிருப்பமுறப்
பொன்போலப்பொலிபுண்ணியாகவாசனஞ்செய்துபொலிவுமேவத்
தன்போலவேறிலவள்கௌவியபூசனைபுரிந்தாடரணிவாழ. (௧௨)

சுவையமுதமோனாந்தும்போற்றிநவகும்பநிறீஇத்தொழுதுமேலா
னவையகலவக்கினிகாரியம்புரிந்துவேழமுகநம்பனுதி
யவைவியக்குந்துவாரவானவர்பூசையாயவெலாமன்பினுற்றிக்
குவைமலர்வானவரிறைப்பக்கருப்பகிரகம்புகுந்தாள்கொம்பர்போல்வாள். (௧௩)

தக்கவரநதிபூசைதகச்செய்துபூதசுத்திதானசுத்தி
மிக்கமனுச்சுத்திதிரவியசுத்தியிலிங்கசுத்திவிருப்பினுற்றி
நக்கபுகழ்ப்பாத்தியமாசமனமருக்கியம்பண்ணிநலம்விராய்த்தோ
முக்கவாதாரசத்திமுதற்சத்திமண்டலமீறுறப்பூசித்து. (௧௪)

உரைசெயுமாவாகனமுந்தாபனமுமுள்ளத்தன்புறைப்பவாற்றி
வரைசெயுமையாறதன்மேலெட்டங்கநியாசமுநன்மாண்பினுற்றிக்
குரைசெய்சந்நிதானமொடுசந்நிரோதனமவகுண்டனமுஞ்செய்து
புரைசெயுமாநற்றேனுமுத்திரைமுற்பற்பலவும்பொருந்தநல்கி. (௧௫)

தக்கவகைப்பாத்தியாசமனவருக்கியங்கொடுத்துத்தழைவிண்மேலு
மிக்கவியம்பலமுழங்கநறுந்தயிலமாநெல்லிவிளங்குமஞ்ச
ளொக்ககுடஞ்சுட்டுறுமைந்தைந்தமிர்தநறுநெய்பாறேயுந்தன்மை
புக்கதயிர்தேனயிர்வண்கதலிபலாச்சூதமிக்கிற்புரிந்தசாறு. (௧௬)

நல்லவிலிகுசநரந்தநயக்குமாதுளைதமரநல்குசாறு
வல்லவிளநீரன்னஞ்சந்துதபனங்கங்கைமாண்பேயென்று
சொல்லவமைதருவில்வக்குழம்புசகத்திரதாரைசுடர்சிருங்கம்
பல்லவலம்புரியுரைத்தமுறையாட்டியாட்டுதொறும்பசுங்கொம்பன்னாள். (௧௭)

இடையிடையேசுத்தநீராட்டனிவேதனமாதியினியசெய்து
கடைமுறையொற்றுடையிட்டுப்பரிவட்டம்புனைந்துநூல்கவின்ச்சேர்த்து
மிடையுமணிமகுடம்பொற்குழைவாகுவலயமொளிவிளங்கச்செய்த
கிடைவயிரகடகமிளிர்மதாணிமோதிரமரைஞாண்கெழுமச்சாத்தி. (௧௮)

வெள்ளியநீறணிந்துசாந்தணிந்துபலதொடைவகையும்விளங்கச்சூட்டி
யொள்ளியவாநறுந்தூபமொளிர்தீபமுறவயக்கியுதற்குமேலா
னள்ளியவண்டளவரும்பிற்பொலிசுத்தோதனம்பருப்புநயந்தபொம்மல்
புள்ளியவண்குளச்சொன்றிபாலடிசிறிலமூரல்புளிசாலன்னம். (௧௯)

நாடுமரிசயினிநெய்சொட்டயிர்மிதவைததிமடைநன்னறுங்குய்மொய்த்து
நீடுபலகருணைசுவைப்பாகரிலட்டுகந்தோசைநிரம்பவுள்ளாற்
கூடுசுவைமோதகமென்பிட்டுழுந்தவடைமற்றுங்குலவபூபந்
தேடுமிளநீர்குளநீர்கனிநீர்நீர்மோர்சுத்தத்தெளிசானன்னீர். (௨௦)

இன்னவைபற்பலவுமொவ்வொன்றுவிருப்பின்முகமனுடுமினிதினீந்த
பின்னரருக்கியங்கொடுத்துத்தாம்பூலமுகவாசம்பேணிநல்கிப்
பொன்னவிர்தூபங்கொடுத்துமேலடுக்குத்தீபமுதற்பொருந்தாநின்ற
பன்னரும்பற்பலவாராதன்ம்புரிந்துநறியமணப்பலபூத்தூவி. (௨௧)

பாடுநீராஞ்சனஞ்செய்தபின்பளிதவிளக்கெடுத்துப்பருத்திவித்துங்
கூடுவேப்பிலையுமுறச்சூழ்ந்தெறிந்துநீறணிந்துகுலவுமாடி
நீடுவான்குடைகவரியாலவட்டஞ்சிவிறியிவைநேர்வயக்கி
யேடுசானறுமலரக்கதைசாத்தியருக்கியமுமீந்தபின்னர். (௨௨)

ஆயமலர்பல்லவெடுத்தைந்தெழுத்துமுளத்தெண்ணியண்ணல்பாதந்
தோயநலமுறச்சாத்தித்தொழுதெழுந்துவெளிவந்துதொல்லோன்மேனி
யேயவொருதலத்தினமர்ந்திதயத்துக்குறித்திருந்தாளீறுதீன்று
தூயமலரவன்முதலாம்பல்லுயிருமினிதோம்புஞ்சுகுணவல்லி. (௨௩)

இந்தவிதமிருந்தவள்பின்னெழுந்துவள்ளல்பிரசாதமெவர்க்குநல்கி
யந்தமிலான்முன்னிற்பவவ்விறைவன்வெளித்தோன்றியம்பிகாய்முன்
வந்தமயிறனக்கபயங்கொடுத்தனைநாமமுமதுவாமருவியார்க்கும்
பந்தமறுத்தெவ்வரமுமித்தலத்தெம்மோடமர்ந்துபாலிப்பாயால். (௨௪)

என்றுதிருவருள்புரிந்துமுதல்வன்புக்கமர்ந்தானவ்விலிங்கத்துள்ளால்
வென்றுமிளிர்ந்தோங்குமபயப்பிரதாம்பிகையெனும்பேர்விளங்கப்பூண்டு
குன்றுதலற்றெவ்வுயிருமீடேறப்பெருங்கருணைக்கோலங்கொண்டு
நன்றுமகிழ்ந்தினிதமர்வாண்ஞாலமுழுதீன்றளிக்குநம்பிராட்டி. (௨௫)

தேவிதிருவாராதனைப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். ௬௩௩.

திருநடனப்படலம்.

இந்தவாறுளங்களிதரவமர்தருமிறைவியெம்பெருமாட்டி
சந்தமாமறைமுடிப்பொலிதருபெருந்தம்பிரானருள்போற்றி
யந்தமாதியிலாய்முன்மயூரமாயழகியநடஞ்செய்தாய்
பந்தமேவியதண்ணுமையாதியபலதழுவிலையன்றே. (௧)

உரைசெய்தண்ணுமையாதியபலதழீஇயொள்ளியமலர்மேலான்
றிரைசெய்பாற்கடற்பாயலான்முதலியதேவருமுனிவோரும்
வரைசெய்ம்ண்ணுலகத்தவரியாவருமற்றுளாரெல்லாரும்
புரைசெயானந்தமருவியின்பமர்தரப்பொலிநடஞ்செயல்வேண்டும். (௨)

தில்லைமாநகர்மன்றினும்விசேடமித்தேத்தெனவுரைசெய்ய
வொல்லையிவ்வுருவடைந்தயான்கண்டுகண்டுளங்களித்திடயாருந்
தொல்லைவல்வினையிரிதரநோக்குபுதொழுதுகைகுவித்தேத்த
வெல்லையில்லவவருடியென்றிரந்திரந்திறைஞ்சினளதுகாலை. (௩)

ஆதிநாயகன்றிருவுளமிரங்கிநீயவாவியபடித்தீமை
காதியோங்குமித்தலத்துநாந்தாண்டவங்கரிசறப்புரிகிற்பா
மோதிமாமுகில்புரைதருகௌரியாமுன்பொருட்டதனாலே
சோதியாகியகௌரிதாண்டவமெனச்சொலப்படுமெனக்கூறி. (௪)

நந்திவாண்முகநோக்கியித்தலத்தியாநடஞ்செய்வாமதுகாண
முந்தியாவரும்வரும்படிசெய்யெனமொழியமுற்றாவோகை
தந்தியாலெனப்பணிந்தெழுந்தியாவருஞ்சார்கவென்றுளத்துன்னக்
கந்திசூழுமாயூரத்தில்யாவருங்கடுகவந்தடைகின்றார். (௫)

தந்திவூர்திறலிந்திரன்முதலியதந்திசைகாப்பாள
ருந்திபூத்தவனுந்தியினுதித்தவனும்பர்தானவர்சித்தர்
மந்தியாதுகற்றுயர்ந்தவித்தியாதரர்வயங்குகின்னரர்நாகர்
புந்திசாலிவர்முதலளவில்லவர்பொள்ளெனப்புகுந்தாரால். (௬)

புக்கயாவரும்பாவநாசப்பெரும்புனலுறப்படிந்தாடித்
தக்கநீறுகண்மணிதரித்தெழுத்தைந்துந்தம்முள்ளத்துறவூன்றி
மிக்கவள்ளலாரஞ்சனாயகியிவர்மென்மலர்ப்பதம்போற்றி
யுக்கதீவினையாளராய்நடனமுள்ளுவந்துகாண்பானின்றார். (௭)

அம்மையாவருந்டங்கண்டுபோற்றிடவணைந்துளாரெனக்கூறச்
செம்மைநாயகன்மன்றமுண்டாகெனத்திருவுளங்கொளலோடும்
வெம்மைதீர்ந்துபல்கதிர்திரண்டமைந்தெனமேவியதொருமன்ற
மெம்மையாள்பவனத்தகுமன்றமேலெழுந்தருளுபுநின்றான். (௮)

வலமலிந்ததோட்டிருநெடுமாலொளிர்மத்தளமதுதாக்கப்
புலமலிந்தநான்முகமுளான்றாளங்கைப்பொறுத்தொலியெழமோத
நலமலிந்ததேனொழுக்கெனத்தும்புருநாரதரிசைபாட
வலமலிந்தயோகியருளத்துறைபவனானந்தநடஞ்செய்வான். (௯)

மல்லல்வான்றவமுனிவரரரவொலிவயக்கியஞ்சலிசெய்யச்
செல்லறீர்ந்தனமென்றடியவரொலாஞ்சிந்தையிற்களிப்பெய்த
வொல்லல்வாய்ந்தவேய்ங்குழன்முதற்கருவிகொண்டுரியரப்பணிசெய்ய
வல்லறீர்ந்தெமையாள்பெருங்கருணையானானந்தநடஞ்செய்வான். (௧0)

ஒருபுறத்துநின்றருள்பராபரைமுகத்தொளிர்விழிக்கடைசெல்ல
கருகிருட்பெருங்குறள்வெரிந்மிசைவிழிகழலவோர்தாளூன்றிப்
பெருவனப்பொருதாண்மலர்குஞ்சிதப்பெற்றியினெடுத்தோவா
வருள்சுரந்தெமைப்புரந்தருள்பரம்பரனானந்தநடஞ்செய்வான். (௧௧)

தோயும்வான்றமருகமொருகைத்தலத்துழனிசெய்திடவோர்கைக்
காயுமாரழலெழவிருகரத்தொன்றுகவியவொன்றமைவெய்தப்
பாயுமால்விடையரபுரகரவரபரவெனுந்துதிமல்க
வாயுமாமறைக்கதீதமாகியபிரானானந்தநடஞ்செய்வான். (௧௨)

சடைகளெண்டிசைதடவரவெண்பிறைதண்புனலொடுதுள்ள
வுடையெனும்புலியதளரைவயங்கிடவொள்ளியதலைமாலை
மிடைபுயங்களிற்றுயல்வரக்குறுநகைமிளிர்ந்தசெவ்வாய்த்தோற்ற
வடையுமெம்மனோர்க்காரருள்சுரப்பவனானந்தநடஞ்செய்வான். (௧௩)

பொற்புமேவியசெவிக்குழையசைதரப்புருவமுமுரிவெய்த
வற்புமேவியபிரணவமலர்ப்பெருமாலிகைமணம்வீசக்
கற்புமேவியமறைச்சிலம்புண்மையிற்கலகலகலவென்ன
வற்புமேவியவுளங்குடிகொள்பவனானந்தநடஞ்செய்வான். (௧௪)

மறையுமற்றதனந்தமும்பந்தமின்மற்றுளகலையாவு
நிறையும்பூதமுங்கரணமும்பொறிகளுநிகழ்வற்றொளியாகி
யுறையும்பேதமுங்காலமும்விந்துவுமோங்குநாதமுந்தேரு
தறையுமற்புதஞானரூபப்பிரானானந்தநடஞ்செய்வான். (௧௫)

உரியவஞ்செழுத்தெட்டெழுத்தாறெழுத்தோங்குநாலெழுத்தப்பாற்
பிரியமிக்கபிஞ்செழுத்தெனயாவரும்பேசுமூவெழுத்தெல்லாந்
தெரியநின்றதாமீரெழுத்தோரெழுத்தென்னுமெண்டிறனாகி
யரியமாமறையந்தத்திற்பயில்பவனானந்தநடஞ்செய்வான். (௧௬)

சிகரமாமுகநகரமொண்டாடிருவுதரமகரந்திண்டோள்
வகரஞ்சென்னியசிதுடிகவிதருகைவகரமபயக்கையு
மகரம்வெங்குறணகரந்தீபிரணவம்வாசிகையதுவாக
வகரநேர்தரநிற்குமெம்மிறையவனுனந்தநடஞ்செய்வான் (௧௭)

தோற்றமந்தமருகஞ்செயவபயஞ்சார்துதிக்கரம்புரவாற்ற
வேற்றசெந்தழன்முழுவதுமழித்திட விருங்குறள்வெரிநோர்தாண்
மாற்றருந்திரோபவஞ்செயவெடுத்ததாண்மதித்தனுக்கிரகிக்க
வாற்றன்மேயவெண்டோளுடையெம்பிரானுனந்தநடஞ்செய்வான். (௧௮)

ஒன்றதாமலமிருவினைமூவகைமாயைமற்றுடலாதி
யென்றநான்கவத்தைகளைந்துமனுமுதலாறுமற்றிவ்வாறும்
பின்றவெண்ணுவார்புரிபணியெரன்பதும்பிறங்குமொன்றெனும்பத்து
மன்றதென்றிடாவண்ணமொண்சபைப்பிரானுனந்தநடஞ்செய்வான். (௧௯)

புண்ணியம்புணராநந்தநடநெடும்பொழுதிவ்வாறுறச்செய்ய
நண்ணியங்கமர்பிராட்டியுள்ளுவந்தனனுன்முகன்முதலாேனு
ெரெண்ணிலின்பமுற்றுமெனத்தாழ்ந்தனரிறைவியுமிவ்வாறே
மண்ணிலெற்றைக்கும்வழங்குகவென்றனள்வள்ளலுமோமென்றுன். (௨0)

திருந்துதெய்வமாயூரத்திற்கௌரிதாண்டவதரிசனஞ்செய்வார்
பொருந்துபேற்றினையாவரோயறைகுவார்புண்டரீகத்தானுங்
கருந்துழாயனும்பணிந்துமைவதுவைநீகனிதரச்செயப்பெற்று
லிருந்தியாங்கள்கண்டுய்குவமென்றனரிசைந்தனன்பெருமானே. (௨௧)

திருநடனப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். ௬௫௪

திருமணப்படலம்.

கண்ணந்தாமலர்க்கற்பகவேந்தனுந்
தண்ணந்தாமரைமேயதவத்தனும்
வெண்ணந்தாளொருகைத்தலவிண்டுவு
மெண்ணந்தான்மிக்கெழுமற்றையாவரும். (௧)

நடனங்கண்டுநனிமகிழ்பூத்தநா
மிடமருங்கமரோமூலகின்றவ
ளுடனமர்ந்தொருவன்புரிமன்றனுந்
திடனமர்ந்துகண்டேத்துந்தவஞ்செய்தோம். (௨)

என்றுபேசியித்திங்களுமைப்பசி
நன்றுசெய்ததுநாடுந்தவமெனுக்
கன்றுதீர்ந்தமனத்துக்களிப்பினு
ரின்றுசெய்வனசெய்துமென்றெண்ணினுர். (௩)

கற்றவிச்சுவகன்மனைக்கூயிவட்
பொற்றமன்றல்புரிதிருமண்டப
மற்றமில்வகையாக்குதியாலெனச்
சொற்றனர்தலைமேற்கொண்டுசூழ்ந்தனன். (௪)

நீலமாமணிவேதிநெடுநிலஞ்
சாலவாக்கித்தவாதமரகதக்
கோலமார்ந்துகுலவுபடிகளு
மேலநாற்புறத்தும்மியையச்செயா. (ரு)

அந்தவேதிகைமேற்பளிங்காற்சுவர்
சந்தமார்தரநாற்புறத்துஞ்சமைத்
துந்தவாயிலொருநான்கும்போக்குபு
நந்தவெண்ணில்சாலேகமுநாட்டினன். (சு)

ஆயவுள்ளிடத்தாயிரஞ்செம்மணி
மேயகும்பவடிநிலைமேற்கொளத்
தூயவச்சிரச்சோதிபரப்பிடு
நேயவாயிரந்தூணநிறுவினன். (எ)

அந்தத்தூண்மிசையம்பொன்செய்போதிகை
சந்தத்தாயதுலாமுஞ்சமைத்தன
னந்தச்செம்பவளஞ்செய்நலுத்திரம்
பந்தத்தேய்ந்துபதியப்பொருத்தியே. (அ)

திருந்துமுத்திரமேற்றிகழ்மேதகம்
பொருந்துபல்சரம்பொற்பக்கிடத்தியல்
லருந்துமம்பொற்றகடுமிசைக்கொள
வருந்துதீர்தொழின்மாண்பிற்பரப்பினன். (கூ)

நாப்பணம்பொற்குறடுநகச்செய்து
மீப்பல்செம்மணியாதிமிளிர்தரக்
கோப்பமைத்துக்குலாவுமடிநிலை
யாப்பமைந்ததூணன்கதன்மேனிறீஇ. (க0)

போதியுத்திரமாதிபொருந்தமுன்
னோதியாங்கொளிவீசவுஞற்றியே
சோதிமேவத்துலங்குவிமானமும்
பேதியாதுபிறங்கவியற்றினன். (கக)

சுற்றுமேவத்துலங்குகொடுங்கையி
னுற்றுநாலவொளிர்தரளத்தொடை
பற்றுகுஞ்சங்கணுப்பட்பயின்றிடக்
கற்றுவல்லகருமணியற்றினன். (கஉ)

இரசதத்தினியற்றியவுண்டைகள்
பரவியெங்கும்பண்பார்ந்திடத்தூக்கியே
விரவுசெம்பொன்விதானமுதலிய
வுரவின்மிக்கவையாவுமுறுத்தினன். (கந)

சோதிமண்டபஞ்சூழ்தரக்காவண
நீதிவானமறையநிரப்பியே
தீதிலாதவிதானஞ்செழுந்தொடை
யாதியாவுமமையப்பொருத்தியே. (கச)

காவணத்தமைகால்பலவற்றினு, மாவணத்தகதலிவளக்கழை,
தூவணத்தகமுகுந்துறுத்துபு, பூவணத்ததொடையும்பொருத்தினுன். (௧௫)

அடியின்முத்தமணலெளவில்லன, நெடியதாகப்பரப்பிசிரப்பியே
யொடிவின்மண்டபத்தொண்மணிக்கம்பலம், படியவிட்டுப்பலவுமியற்றினுன். ()

வந்துமாலயனுதியவானவர், முந்துநின்றுமுடித்தனனென்றலு
நந்துமோகையினன்கெழுந்தாரிரு, ளுந்துமற்றதுநோக்கியுவந்தனர். (௧௭)

விண்ணின்மேயவர்யாவரும்பாதலக், கண்ணில்வாழ்பவர்யாருங்கடல்சுலா
மண்ணில்வாழ்க்கையர்யாரும்வரப்புரிந், தெண்ணிலாவுவப்பெய்திமுயலுவார்,

மண்ணுளாரொன்றுமாமலர்க்கற்பக, விண்ணுளாரொன்றுமேவரும்பாதலக்
கண்ணுளாரொன்றுங்காணிவரித்தனே. யெண்ணுளாரொன்றுந்தேர்தலங்கில்லையே.

மாடமாளிகைமண்டபங்கோபுரங், கூடமேடைசெய்குன்றஞ்சதுக்கங்க
ளாடரங்கமணிமறுகாதியா, நீடவாய்ந்தநெருக்கமெண்வீழ்தரா. (௨௦)

இன்னவாறுநெருக்கமியைதர, வன்னவாகனனுதியவானவர்
மூன்னவன்கலியாணமுகுர்த்தநாள், சொன்னவந்நகர்தேற்றிடச்சூழுவார். (௨௧

இன்றுநாதன்றிருமணமெய்துமென், றென்றுகேள்விமாயூரத்துளார்க்கெலா
நன்றுசொற்றிநகுமுறையாலெனுத், தொன்றுவள்ளுவற்பார்த்திதுசொற்றனர். ()

நாடுவள்ளுவனக்குநீராடுபு, கூடுநீறணிந்துண்டுகுலாய்ப்புனைந்
நீடுசாலிபமேன்முரசேற்றியே, பாடுமோகையினீதுபகருவான். (௨௩)

அஞ்சனுயகியார்வள்ளலாரிவர், தஞ்சமாகமணம்புரிதன்மையா
லெஞ்சலின்றிப்புனைமினிம்மாநகர்த், துஞ்சலின்றித்தொழவருவீரொன்முன். (௨௪)

என்றவார்த்தைசெவியகத்தேறலு, மொன்றயாவருமுள்ளங்களித்தனர்
வென்றமாதவமிக்குளேம்யாமெனு, வன்றம்மாநகரம்மணிவாரரோ. (௨௫)

வேறு.

காவணமிடுவாருங்கணநிரைகோப்புண்ண
மாவணமாளிகைமேல்வண்கொடிநடுவாருந்
தூவணமணிபொன்னுற்றேரணம்புனைவாரும்
பூவணநறுமாலைபொலிதரத்தொடுப்பாரும். (௨௬)

கன்னலுங்கதலிகளுங்காரெருறுமசைப்பாரு
மினனல்செய்பசும்பொன்சார்விதானங்களிசைப்பாரு
முன்னலதரிதென்னமுகந்துபொன்னிறைப்பாரு
மின்னலென்பதுதீர்ந்ததெங்குமென்றுரைப்பாரும். (௨௭)

கரிமிசைவருவாருங்கடுநடைவிறல்வாய்ந்த
பரிமிசைவருவாரும்பார்கிழியுருள்பூண்ட
கிரிமிசைவருவாருங்கிளர்மணிச்சிவிகையெனு
மரிமிசைவருவாருமணிதல்கண்டுவப்பாரும். (௨௮)

அடிசில்கள்சமைப்பாருமந்தணர்க்கிடுவாரு
முடிவருந்தாம்பூல்முகந்தனர்கொடுப்பாருங்
கடிதலில்கருப்பூரக்கலவைகளளைவாரு
நொடிதலின்மலர்மாலைநோன்மையிற்றரிப்பாரும். (௨௯)

புதுக்கலன்புனைவாரும்புத்துடையுடுப்பாரு
மதுக்கமழ்மலர்க்கூந்தன்மகளிரைப்புனைவாரும்
விதுக்குறைநுதலார்தமிளிர்நடங்காண்பாருஞ்
சதுக்கமுன்மறுகெங்குந்தகைதரப்பயில்வாரும். (௩௦)

வேறு.

ஆயினர்மைந்தர்மாதரத்தருகாலத்தாங்கு
வேயினவயன்மாலாதிவிண்ணவரொருங்குகூடிப்
பாயினசீர்த்திவள்ளற்பரம்பரன்மணத்தின்மூன்றாண்
மேயினமண்கவர்ந்துவித்துகள்வித்தினாரால். (௩௧)

பணைபலமுழங்காநிற்கப்பன்மறையெழுந்துதுள்ள
வினையிலாப்பெருமான்றன்னையிலங்குபொற்பீடத்தேற்றி
யணைதருசெம்பொனன்னாணலங்கமுன்கையிற்சேர்த்திப்
பிணைதருவாழ்த்தெடுத்தார்பிரமன்முற்றேவர்யாரும். (௩௨)

புரிதருசடங்குமற்றும்பொலிதரச்செய்தபின்பு
வரிதருபணைமுழங்கமஞ்சனச்சாலைபுக்குத்
தெரிதருகங்கையாதித்தீர்த்தங்கள்பலவுங்கொண்டு
விரிதருமன்பினாட்டல்வேண்டினாரீதுசெய்வார். (௩௩)

அடிகள்செஞ்சடையும்புற்றோலாடையுமரவப்பூணுஞ்
செடிதருகபாலமாலைசெறியும்வெள்ளெற்புமாலை
முடியவுமொழித்துவேறார்முழுக்கவினுருவங்கொள்ளி
ஞொடிவறயாங்குற்றேவலுஞற்றுதற்கழகாமென்றார். (௩௪)

என்றுவிண்ணப்பஞ்செய்யவடியவரொண்ணியாங்கே
நன்றுவந்தளித்தல்வல்லநம்பிரான்வள்ளற்புத்தே
ளொன்றுமப்படியேயாதுமென்றொருவடிவங்கொண்டான்
கன்றுதறவிர்ந்தியாருங்கைகுவித்திறைஞ்சிநின்றார். (௩௫)

மறைமுடியிருக்குந்தேவைமணிசெய்பொற்பீடத்தேற்றிக்
குறையறப்பூரித்துள்ளகும்பத்துநன்னீராட்டிக்
கறையிலொற்றாடையிட்டார்கனிந்துசுந்தரப்பேர்நம்பி
யிறையில்வட்டகையேந்தத்தொட்டியையநெற்றியினீறிட்டு. (௩௬)

புலியதள்பிணங்கிச்சோரப்பொருந்துதிக்கெட்டுமெண்ண
நலிவறுசெம்பொன்னாடைநலத்தகமருங்கிற்சேர்த்தி
யொலிசெய்முற்செருக்கின்சீருமுற்றபிற்போக்கின்சீரு
மெலிவருமுகுந்தற்கம்மாமிகுமயல்செய்யாநிற்க. (௩௭)

முன்னிகழ்கரித்தோனீங்கிமுனிந்துளம்புழுங்காநிற்கப்
பொன்வரைச்சிகரநின்றும்பொன்னரித்திழியாநிற்குந்
தன்னிகரருவிமானத்தனையொவ்வாச்செம்பொன்னாடை
மின்னியவுத்தரீயம்வெகுண்டிருளனைத்துமேய. (௩௮)

ஒழுகொளிபரப்புந்திங்களொளிர்சடைநின்றுஞ்சற்றே
வழுவிநெற்றியினுற்றென்னவயங்குபுண்டரவெண்ணீறுந்
தழுவுமம்மதியின்பாங்கர்ச்சாருரோகணியேயென்னக்
கெழுமணிகளாத்தசந்தக்கேழ்கிளர்பொட்டுமின்ன. (௩௯)

வரநதிசடைக்காட்டோடுமறைந்தவண்மன்றநாப்ப
ணுரவுறமுடியின்மேலானுறுதலுங்கூடுமென்று
பரவுறுமதைமறைத்தபண்புபோன்முடியின்மேலால்
விரவுறவிளங்குங்காந்திமிளிர்மணிமகுடஞ்சேர்த்து. (௪0)

சடையெனுமிருக்கைதீர்ந்துதனியமர்கங்கைமங்கை
* இடைசெவியடைந்தேதேனும்விளம்பினுமேருவண்ண
மடையவும்வயிரமாதியலங்குபன்மணிகால்யாத்த
புடையமர்செம்பொற்றோடுபொலியிருபாலும்சேர்த்து. (௪௧)

தன்னைமுன்குழைத்துநாளுந்தவாதெழுவீக்கமாற்ற
மின்னைவென்றொளிர்மாமேருமேயபன்மணிகளோடு
மென்னையென்றெண்ணுவண்ணமியைந்துமேற்கவிந்ததொக்கும்
பொன்னைவென்றொளிருந்தோளிற்பொருத்தியமணிக்கேயூரம். (௪௨)

பிழையறியாதுசெய்யிற்பெருஞ்சினங்கொடுபல்பல்லுந்
தழையொளிவிழியும்போக்கறவிர்த்திடப்பன்னிரண்டு
விழைகதிர்களுஞ்சேராழிக்கடகமாய்விராய்முன்கையி
னுழைவிரல்களினுற்றென்னவுறைத்தவையொளிரச்சேர்த்து. (௪௩)

பன்றிமுன்கொடுத்தகோடும்பரந்தகச்சபத்தினோடுந்
துன்றியவனப்புமார்பிற்றுலங்கமுத்தாரஞ்சாத்தி
வென்றியசெழும்பராலாழிகடுவெழுவெய்யோன்மான
வொன்றியவதற்குநாப்பணெண்மணிமதாணிசாத்தி. (௪௪)

திசையுடுத்தரையின்மாட்டுநேத்திரஞ்செறியச்சூழின்
வசையெனவிலக்கினுலும்விலக்குமற்றதுசெயாம
லசைவறப்பிடித்தல்போலவணிகெழுமுதரபந்த
மிசைதரவெடுத்துப்பூட்டியிருண்முழுதழுத்தபின்றை. (௪௫)

உலகில்யாவரும்யான்சொற்றவுரைவழிபற்றுவாரோ
விலகமேலுயர்வர்பற்றலிதுவெனத்தெரித்தல்போலக்
குலமறைஞெகிழியாகிக்கோலங்கொள்பாதம்பற்ற
வலர்தொடையெடுத்துத்தோளிலற்புதம்பொலியச்சேர்த்து. (௪௬)

இன்னுமற்றுள்ளயாவுமிமையவர்புனையப்பெற்று
மன்னுபேரழகுபொங்கமறைமுதனிற்றனோக்கி
முன்னுகண்ணெச்சில்போக்கிமுகுந்தனாதியவானோர்கள்
பன்னுமுண்மகிழ்ச்சிபொங்கப்பரவினர்வாழ்த்திநின்றார். (௪௭)

திருவுலாப்போதல்வேண்டுமென்றுவிண்ணப்பஞ்செய்து
மருவுலாங்கடுக்கைமாலைவள்ளலாருடன்பாடோர்ந்து
குருவுலாஞ்செம்பொன்மானங்கொணர்ந்தெதிர்நிறுத்தினார்க
ளுருவுலாமமராதியாவருமொருங்குமொய்த்தார். (௪௮)

முரசுதண்ணுமைதடாரிமொந்தைகல்லலகுபம்பை
விரசுபன்முருடுமற்றுமிளிர்தகுணிச்சமெல்லாம்
பரசுபல்கடலுமொன்றியார்த்தெனப்பரவியார்ப்ப
வரசுகுணத்தினோங்கிமற்றுளவனைத்துமார்ப்ப. (௪௯)

---

* இடைசெவி - என்பதில்சகரம்தொகுத்தல்விகாரம்.

கொடிகுடையாலவட்டங்கோணியதண்டங்கோணாத்
தடிகிளொலியலாதியாவையுந்ததைந்துமொய்ப்ப
நெடியவன்பிரமன்பாங்கர்நீட்டுகைமிசைக்கைவைத்துக்
கடியபாதுகைத்தாள்வைத்துநடந்தனன்கருணைமூர்த்தி. (௫0)

மறைமுடியமர்வான்வந்தான்மாயூரநாதன்வந்தா
னறைபெருங்கருணைச்செல்வியஞ்சனாயகியைவேட்கு
முறையுடன்மணாளன்வந்தான்மூவுலகாளிவந்தா
னிறையவன்வந்தான்வந்தானென்றுசின்னங்களார்ப்ப. (௫௧)

மறைபலமுழங்காநிற்கவானவர்பல்லாண்டோதக்
கறைதபுமுனிவரெல்லாங்கைதலைகுவித்துநிற்ப
நிறைபெருவிமானத்தேறிநிகழ்தரநடத்துங்காலைக்
குறைமதிநுதலார்யாருங்கூடிபுநோக்கினாரால். (௫௨)

நோக்கியமடவார்தம்மைநோக்கினன்மாரவேளு
நோக்கியலனையான்கையினான்சிலைவிடுக்கும்பூவு
நோக்கியவுடைவாளென்றுநல்விரைத்தாழம்பூவு
நோக்கியவையன்மட்டுநோக்கிலானாகிச்செல்வான். (௫௩)

கருங்குழற்பரமுநெஞ்சுங்கட்டவிழ்ந்துலைந்துசோர
நெருங்கியமுலையுங்கொண்டகாமமுநிமிர்ந்துவீங்க
மருங்குலுமுயிருந்தேம்பவரிவளையாழியாடை
யொருங்கிழப்புற்றமாதருயிரிழப்பதற்குமுள்வார். (௫௪)

ஒருமடமயிலஞ்சாயலுமையைநீர்வளைவீரென்னிற்
பருவமங்கையரோயாயயாமெலாம்பட்டின்மூழ்கி
வெருவரமையல்பூட்டல்வேண்டுமோவிதிதானீதோ
பொருவரும்வன்புவாய்ந்தீர்புகலுவீரென்பார்மாதர். (௫௫)

மயர்வுற்றமங்கைநல்லாளொருத்திமாதேவற்பாரா
வயர்வுற்றயானவாவுமதனைநீரளித்தல்செய்யீ
ருயர்புற்றீர்வறுமையீருமலீருமைம்வள்ளலென்றோர்
பெயர்வைத்துவிளித்தார்க்காணிற்பேசுதல்பலவுண்டென்றாள். (௫௬)

இளமுலைமங்கைநல்லாளொருத்தியெம்மிறைவன்முன்போய்க்
குளநடுவலர்ந்தசெங்கட்கமலத்தாற்கோலமார
னளமரவழல்செய்தீரென்றறைகுவர்நும்மையாரு
முளமமர்வில்லுமேவுமொழித்தெரித்தீரோவென்றாள். (௫௭)

எண்ணியவெண்ணியாங்கேயடுத்தவரெய்தச்செய்யும்
புண்ணியரென்றுநும்மையாவரும்புகழ்வார்பொய்யே
யெண்ணியவெண்ணியாங்கேயெனக்கருள்செய்யீரோனா
நண்ணியசிறிதுநல்கீரெனநவின்றனளோர்நங்கை. (௫௮)

உற்றின்பவாரியாயவும்பர்நாயகன்முன்சென்று
பற்றின்பநுகரவெண்ணும்பைந்தொடிக்கரத்தொருத்தி
முற்றின்பங்குறித்தீர்நம்மைமுயங்குமினென்பீரெற்குச்
சிற்றின்பஞ்செய்யாநீரோபேரின்பஞ்செய்வீரென்றாள். (௫௯)

தளரிடையொசியக்கொங்கைபொருமிடச்சார்ந்தோர்மங்கை
கிளர்புகழ்மிகுமாயூரகேத்திரத்தும்மைக்கண்டோர்
விளர்தபுத்தெண்ணம்வாய்ப்பாரெனவிளம்பிடும்புராணம்
வளர்மயலெனக்குமீட்டுமெற்றதுபொய்யோவென்றாள். (சுഠ)

நிறைகருங்கூந்தற்செவ்வாய்நேரிழையொருமடந்தை
மறைபுணரொருதேர்வேட்டீர்மறைபுணரொருதேரொன்பாின்
முறையுறவமையுமென்றுமொழியவும்வேளீர்நும்மைக்
குறைமதியுடையாரொன்றுகூறுதலொக்குமென்றாள். (சுக)

அருத்தியினொருமடந்தையண்ணறன்னெதிர்சென்றோர்தேத்
தொருத்திபூமாலைசூட்டியுமைவளைவித்தாண்முன்னம்
பொருத்தியவதுபோலாதுபூமாலைசூட்டுவேனுன்
திருத்திகொண்டனங்கவேள்செய்சிறுமைதீர்த்தாளுமென்றாள். (சுஉ)

சினவிடையாளிமுன்னஞ்சென்றொருதெரிவைநின்று
மனவிடையாமையோடுவயக்கியமார்பீரொன்னே
நனவிடைவந்துகூடீராயினுநள்ளிராவிற்
கனவிடைவருவீரப்பாற்காண்பனும்விரதமென்றாள். (சுங)

உவாமதிமுகத்துநல்லாளரிவையாங்கொருத்திநேர்ந்தென்
கவானொருதிருப்பைஞ்ஞீலிக்கதலியேதோணெல்வேலித்
தவாதெழுகழையேயென்னிற்றழுவுறத்தடையொன்றுண்டோ
வவாவியதிருக்கநீர்பின்னளித்திடுபயனென்னென்றாள். (சுச)

தக்கன்மாட்டடைதல்கூடாதென்னவுந்தடுத்துச்சார்ந்த
பக்கமாமடநலாளைப்பரிந்தின்றுவதுவைசெய்வீர்
புக்கயான்மறுத்தல்செய்யேனென்னவும்பொருந்தல்செய்யீர்
தக்கதோவிதுவென்றோதித்தாழ்ந்தனளாங்கோர்தையல். (சுரு)

கண்ணகன்புவனமெல்லாங்காப்பவர்நீரோயென்பா
ரண்ணலங்கருப்புவில்லானடர்ந்தெனைவருத்தஞ்செய்யு
நண்ணருந்துயரங்காப்பார்மற்றெவர்நவிலுமென்றாள்
பண்ணலங்கனிந்ததீஞ்சொற்பைந்தொடியொருபொற்கொம்பு. (சுசு)

கொடுவிடமுண்ணப்பார்த்துக்கொண்டிருந்தவள்பால்வேட்கை
விடுவதுசெய்யீர்மேலுமேலுநீர்விழைதல்செய்வீர்
தொடுமுனம்யானுண்பேனென்றெழுமெனைத்தொடர்புகொள்ளீர்
படுவதீதழகோவென்றுபகர்ந்தனளங்கோர்மங்கை. (சுஎ)

ஒருபுறத்தொருத்திமேவவுவந்துநீர்வைத்திர்மற்றை
யொருபுறத்தென்னைவைப்பிலுண்டாகுங்குற்றம்யாதே
பொருவருமுடம்புமுற்றும்பசந்ததும்பொருந்தக்காண்பீர்
பொருவிலீரொன்றுபோற்றிப்புகன்றனளெதிர்ந்தோர்மாது, (சுஅ)

உடைமுதலெவையுந்தோற்றேழும்பொருட்டாயகோல
மடையவுமுகத்துநோககானேக்குமினதற்கொவ்வீரோன்
மிடைபழனெற்றிநாட்டம்விழித்தேனுநோக்கல்செய்வீர்
புடைமழுப்படையீரொன்றுபுகன்றனள்சினந்தோர்பூவை. (சுகூ)

இவ்வண்ணம்பேதையாதிப்பேரிளம்பெண்ணீருய
செவ்வண்ணமடவாரெல்லாஞ்செறிபெருங்காமமூழ்க
வெவ்வண்ணமாயினேருமிறைஞ்சிநின்றேத்தல்செய்ய
வவ்வண்ணமானேன்கோயிலணிகிளர்வாயில்வந்தான். (எ0)

மானநின்றிழிந்துமன்றன்மண்டபநாப்பணெய்தி
யூனமில்செம்பொற்பீடத்தும்பர்நாயகனிருந்தா
னனவப்பொழுதுபற்பலரமடமாதர்யாருங்
கானமுற்றமுவிநின்றுகவின்பெறநடித்தாரன்றே. (எக)

திருமகண்முதலோராயதெய்வமின்னார்கள்பல்லோ
ரருமறைவாழ்த்துமல்கவான்றபல்லியமுமார்ப்பப்
பொருவருமுலகமீன்றாண்முன்கையிற்பொன்னாண்சேர்த்தி
மருவுமஞ்சனச்சாலைக்குட்போயினார்மகிழ்ச்சிதுள்ள. (எஉ)

கருங்குழற்கட்டவிழ்த்துக்கமழ்நறுந்தயிலம்பூசி
யொருங்குபல்விரையினேடுமூறுநவர்பலவுமப்பி
யருங்குறைத்தென்னநன்னீர்மஞ்சனமமையவாட்டி
மருங்குமொய்த்தகலாரெல்லாம்வயங்கவொற்றுடையிட்டார். (எங)

செறிபலபல்வாய்த்தந்தச்சீப்பெடுத்தொருங்குசீவிப்
பறிநிகர்சடையான்றேவியெனல்வெளிப்படுத்துவார்போ
னெறிதருஞ்சடையியற்றிநிகழ்தருநாகமாதிக்
குறிகொளுங்குஞ்சமீருக்கோப்பனபலவுங்கோத்து. (எச)

குழலெனுமிருளைவேறல்குறித்தசெங்கதிரும்வானத்
துழல்பிறைமதியுங்கூடியொருங்குவீற்றிருத்தலென்ன
வழல்படுகமலராகமலங்குவெண்டரளமேவி
நிழல்படுபணியிரண்டுநிலவுறமுன்னர்வைத்து. (எரு)

பிறைமிசைவானவில்லுப்பிறங்குறக்கண்டாற்போல
நிறையொளிநுதலின்மேலாவிலம்பகநிலவச்சூட்டி
மறைபுகல்கற்புவாய்ந்தமாதரார்திலகமாய
விறைவிதனெற்றிநாப்பணிலங்கவோர்திலகமிட்டு (எசு)

கருந்தடங்கண்ணியென்றுகரைவதற்கேற்பவேலைப்
பொருந்தடங்கண்ணினம்மவஞ்சனம்பொலியத்தீட்டித்
திருந்தியவாயோசெய்யபவளமோவெனத்தேர்பாக்குப்
பொருந்தியமுத்தமென்னமூக்கணிபொருந்தக்கோத்து. (எஎ)

முடிமிசையொருபெண்வைத்தானென்னெனின்முழுநீரொன்பான்
கொடிவிடையுடையானீயேகுறிக்கொளென்றுணர்த்தும்பாக்கு
வடியிளங்கதிரிரண்டோரிருபாலுமருவியாங்குப்
படியில்செம்மணிகுயின்றகாதணிபலவுஞ்சேர்த்து. (எஅ)

கொடியெனத்துவளாநிற்குங்கோலமார்மருங்குல்சூழப்
படிபெறலரியசெய்யபட்டுடைகொய்துடுத்திக்
கடிதலில்கச்சுப்பூண்டுகவின்றதோண்மிசைமுன்றுனை
வடிவமைந்திடச்சூழ்வித்துமருங்குற்பாற்செருகல்செய்து. (எகூ)

கொங்கையங்குவட்டுமேலாற்குலவிவீழருவியென்ன
வங்கதிர்முத்தமாலையமைதரவெடுத்துப்பூண்டு
பங்கமில்கழுத்துச்சூழப்பற்பலபணியுஞ்சேர்த்துப்
பொங்குபொன்மணிசெய்கோவையாவையும்பொருந்தப்பூண்டு. (அ0)

இரவினுங்குவிதல்செய்யாக்கமலங்களிவையாமென்று
பரவிவந்ததிசயித்துப்பார்க்குஞ்செங்கதிரோபோல
வரமணிக்கடகமாதிவளைபலமுன்கைசேர்த்து
விரனிறைதரப்பொன்னாழிபற்பலவிளங்கக்கோத்து. (அக)

திருவரையொட்டியாணமேகலைசெழுங்கலாப
மொருவரும்பிறவுஞ்சேர்த்திட்டொளிகிளர்பாதசால
மருவியவனைத்தும்பூண்டுமணியாழிவிரலிற்கோத்துப்
பொருவரும்வனப்புநோக்கிப்போற்றிநின்றனரெல்லாரும். (அஉ)

கணிதநூல்வல்லமாந்தர்காலமீதென்னவல்லே
பிணிவிசியியமுழங்கப்பெருமறையார்ப்புமல்கத்
தணிவருமுலகமீன்றுதயங்குகற்பகப்பூங்கொம்பை
யணிபெறக்கொண்டுவந்தாங்கையன்மாட்டிருத்தினாரால். (அ௩)

இரவியுங்கதிரும்வேறுவேறிருந்தென்னமேய
பரமனையுமையைநோக்கிப்பங்கயத்தவன்மாலாதி
வரமிகுபுலவரெல்லாம்வாழ்ந்தனமென்றுதாழ்ந்தார்
திரமிகுமுவகைபொங்கவெழுந்தனன்செங்கண்மாயோன். (அச)

சுவைமதுப்பருக்கநல்கித்தொடங்குபாவனையில்பூசை
நவையறப்புரிந்துமுந்தைநாமமாதிகளுணாத்துச்
செவையுறுவள்ளல்கையிற்றிருத்தகநன்னீர்வார்த்தா
னவையகத்துள்ளார்யாருமரகரகரவென்றார்த்தார். (அரு)

செம்மலராளுமையன்குண்டத்துச்செந்தீயிட்டுக்
கைம்மலர்நிறையவோமகாட்டமுமுறித்துச்சேர்த்துப்
பொம்மலுற்றமைசிருக்குச்சிரவத்தானெய்பூரிப்ப
விம்மலுற்றெழுந்ததம்மாவேள்வித்தீவலஞ்சுழித்தே. (அசு)

ஆயபல்லியங்களார்ப்பவந்தணர்வாழ்த்துமல்க
மேயபன்மறைமுழங்கவிரும்புமூவுலகும்வாழத்
தூயமங்கலநாண்கையிற்சுந்தரவள்ளல்கொண்டு
நாயகிதிருக்கழுத்தினலமுறப்பூட்டினானே. (அஎ)

ஆர்த்தனதடாரிபேரியார்த்தனமுருடுமொந்தை
யார்த்தனபடகந்தக்கையார்த்தனசின்னம்பீலி
யார்த்தனபம்பைசங்கமார்த்தனதாளம்வீணை
யார்த்தனமுனிவர்செவ்வாயார்த்தனமறைகளெல்லாம். (அஅ)

வள்ளலும்பிராட்டியங்கைமலரொருகையிற்பற்றி
யொள்ளழற்கடவுளுந்தானென்பதானுவந்துசூழ்ந்து
தெள்ளரிச்சிலம்பலம்பச்சேயிழையொடுநேர்நின்று
விள்ளலைக்குறித்திடாதவெண்பொரியட்டினானால். (அகூ)

மங்கலமணுட்டிபாதமலரொருகையாற்பற்றி
மங்கலவம்மிமேலான்மலர்ப்பரப்பியையவைத்து
மங்கலவடமீனேரேவந்தடிபணியக்காட்டி
மங்கலத்தவிசின்மேலான்மருவினனுலகம்வாழ்த்த. (கூ0)

நத்தமென்றுரைக்குங்கூந்தனுயகியோடும்வைகுஞ்
சுத்தமெய்ஞ்ஞானனந்தச்சுந்தரச்சோதிமுன்ன
ருத்தமவயன்மாலாதியும்பர்கடேர்வையோடு
முத்தவாலரிசிவாரிமுனிவறத்தூவிவாழ்ந்தார். (கூக)

இருவரும்யானமேலாலியைந்துலாப்போதல்வேண்டும்
பருவருந்தன்மைநீங்கிப்பாரொலாமுய்யவென்ன
மருவருங்கடுக்கைமோலிவள்ளறுன்குறித்தவாறே
யொருவருமஞ்சலம்மையொடுமுலாப்போந்தானன்றே. (கூஉ)

ஆரணமுடிக்குமெட்டானஞ்சனுயகியைவேட்டு
வாரணமாதிசெற்றமறுகுலாப்போதல்கண்ட
தாரணவியதோண்மைந்தர்தடங்கணுருவகைபூத்து
நீரணக்கும்பிட்டேத்தியிவையிவைநிகழ்த்தலுற்றுர். (கூங)

சீலமார்வள்ளலார்தந்திருக்கோலஞ்சிறந்ததென்பார்
கோல்மாரஞ்சலம்மைகோலமேசிறந்ததென்பார்
மூலமாரிருவர்கோலமுழுமையுஞ்சிறப்பேயென்பார்
ஞாலமாரீதுகாணநாஞ்செய்ததவமென்னென்பார். (கூச)

விழிபடைத்ததற்குப்பேறுமேதகப்பெற்றேமென்பார்
பழியிலிச்சன்மமேநற்பண்புகூர்சன்மமென்பார்
தழியமற்றிதுநோக்கார்தஞ்சன்மமேசன்மமென்பார்
கழிசுவையுடைத்தாலிந்தக்கல்யாணக்காட்சியென்பார். (கூரு)

சிலர்நறுமலரிறைப்பார்சிலர்செழும்பொரியிறைப்பார்
சிலர்நறும்புனலளாயசந்தனச்சேறிறைப்பார்
சிலர்பசும்பொன்னிறைப்பார்சிலரணிவிளக்கெடுப்பார்
சிலரரக்கமைந்தநீர்சுழற்றுபுகவிழ்த்தல்செய்வார். (கூசா)

இன்னணநகரம்வாழ்வோர்யாவருமின்பமெய்தக்
கன்னலங்குதலைச்செவ்வாய்க்காமருதோகையோடு
முன்னவன்வள்ளற்பெம்மான்முனிவருமுலாப்போந்துற்றுன்
சொன்னமுமணியுமேயசுடர்ப்பெருங்கோயிலம்மா. (கூஎ)

ஆங்குச்செய்சடங்குமுற்றுமழகுறச்செய்தபின்றை
யோங்குபேரிடபதீர்த்தத்துற்றுநீராடல்செய்து
வீங்குதன்மணத்துவந்தவேதன்மாலாதியோர்க்கும்
பாங்குசேர்விருந்துமுன்னுப்பலமுகமனுநன்காற்றி. (கூஅ)

அவரவரிருக்கைசேரவிடைகொடுத்தனுப்பிப்பின்பு
கவர்மனத்தடையாவையன்கருதிலிங்கத்தைமேவி
யிவர்பெருங்கருணையோடுமிருந்தனனிலகுவஞ்சிப்
பவர்புரைமருங்குற்செவ்வாய்ப்பைந்தொடித்தோகையன்னுள். (கூகூ)

ஒருகரமபயஞ்செய்யவூருவிலொருகைவைத்தே
மருவுபல்லுயிர்க்குமின்பவாழ்வளித்தமர்ந்தாளிந்தப்
பொருவருமன்றல்காண்போர்பொலிதரநடாத்துவோர்மெய்த்
திருவொடும்பொலிந்துபின்னர்ச்சிவகதியடைந்துவாழ்வார். (௧00)

திருமணப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். எருச.

யானையுரித்தபடலம்,

இயங்குபல்லுயிருமேனையுயிர்களுமிரியாவின்ப
முயங்குமான்மியத்ததாகிமுழுமறைமுடியினானுந்
தயங்குமுண்மையதேயாயதவாப்புகழ்மாயூரத்தின்
வயங்குதென்மேல்பாற்றாருவனமெனும்வனமொன்றுண்டால். (௧)

அத்தருவனத்தில்வாழுமருந்தவமுனிவர்பல்லோர்
சுத்தவில்லொழுக்கம்பூண்டுகருமமேதுணிபாமன்றிச்
சத்தறிவின்பரூபத்தனிமுதல்வேறின்றென்னும்
வித்தகமருவினின்றார்மேல்வரும்விளைவுதேறார். (௨)

அனையபன்முனிவர்தங்களில்லறக்கிழமையாளு
நனையமென்கூந்தற்செவ்வாய்ப்பார்ப்பனநல்லார்பல்லார்
புனையவாங்கற்புப்போலப்பொற்புமேம்பட்டோமென்று
வினையயாவரையுமெள்ளித்தருக்குவாய்ந்திருப்பாரம்மா. (௩)

இருதிறத்தவருங்கொண்டவிருஞ்செருக்கொருங்குதேர்ந்து
பொருவருமகதிநல்யாழ்ப்புங்கவன்மாயூரஞ்சார்ந்
தருவுருமுபயமாயவண்ணலையடியிற்றாழ்ந்து
பெருகுமற்றவர்செருக்கின்பெருக்கம்விண்ணப்பஞ்செய்தான். (௪)

அன்னவன்செருக்குக்காண்டுமென்றவற்கருளிப்போக்கி
முன்னிவின்மாயூரேசன்முகுந்தனைநினைத்தானம்மா
மன்னவன்வந்துதாழமாயமாதாகியாழோன்
சொன்னவன்முனிவர்பாற்போய்ச்சோதனைபுரிதியென்றான். (௫)

என்றலும்வணங்கிமாயனெழுந்தனனஞ்சலம்மை
கன்றலில்கருணையேற்றுக்காமருமடந்தையாகி
மன்றல்செய்மலர்சூழ்தாருவனத்திடைச்சென்றானுக
வொன்றல்செய்முனிவர்யாருமொருங்குகண்விடுத்துக்கண்டார். (௬)

காண்டலுங்கருப்புவில்லான்கணைக்கெலாமிலக்கமாகி
மூண்டவெங்காமம்பொங்கப்பருகுவார்போலமொய்த்துப்
பூண்டமால்யானையுண்டவெள்ளிலங்கனியேபோன்று
மாண்டதந்தவமுமுள்ளச்செருக்குமாண்டவரோயானார். (௭)

முலையொன்றேகண்டுசில்லோர்முரிதருபுருவமாய
சிலையொன்றேகண்டுசில்லோர்சிற்றிடையுடுக்கப்பட்ட
கலையொன்றேகண்டுசில்லோர்கலையுளுமணிகால்யாத்த
தலையொன்றேகண்டுசில்லோர்தவமொரீஇமயங்கிவீழ்ந்தார். (௮)

விழியினாலுடைந்தார்சில்லோர்கிளியினுமிழற்றுமின்றே
மொழியினாலுடைந்தார்சில்லோர்மோகஞ்செய்மேனிச்சாயற்
கழியினாலுடைந்தார்சில்லோர்கண்டனகவருமுந்திச்
சுழியினாலுடைந்தார்சில்லோர்தோற்றத்தாலுடைந்தார்சில்லோர். (கூ)

முந்தியகடுப்பிற்சென்றுமோகினிவடிவங்கண்டு
பிந்தியநடையராகிப்பேதுற்றுநெஞ்சமாழாந்
திந்தியமனைத்தும்வீழ்த்திச்செயலின்றியேங்கிவீழ்ந்தா
ருந்தியகருமமொன்றேயுறுபொருளெனக்கொண்டுள்ளார். (க௦)

இவர்செயலின்னதாகவினியமாயூரமேய
பவர்படுசடிலமோலிப்பரம்பரன்வள்ளற்பெம்மான்
றவர்மனைக்கிழமைபூண்டுதருக்குமேன்மேலுங்கொள்ளு
மவர்திறமளக்குமாறோரழகியவுருவங்கொள்வான். (கக)

மன்னியகுறுக்கையின்கண்மதனனையெரித்தபின்ன
ருன்னியவனையான்செய்கையொருதானேசெயக்கொண்டாங்குத்
துன்னியவனந்தகோடிசூரியர்திரண்டாலொத்து
மின்னியவனப்புவாய்ந்துவிளங்குமோருருவங்கொள்வான். (கஉ)

எண்ணிலாவண்டத்துள்ளுமியைதரவியாபித்துள்ள
வெண்ணிலாவனப்புமுற்றுமெழுந்தொருங்குற்றாலென்ன
வெண்ணிலாவுயிர்களுக்குமெஞ்ஞான்றுங்களைகணாய
வெண்ணிலாமறைக்குமெட்டாணிலங்குமோருருவங்கொள்வான். (கங)

மாமருமதிகளங்கமாறிவந்திருந்தாலன்ன
காமருமுகமும்பொன்கடைந்தெடுத்தனையதோளும்
பூமருமாலைமார்பும்பொழிபெருங்கருணைக்கண்ணுந்
தூமருவியவெண்மூரறோற்றிடுஞ்செய்யவாயும். (கச)

அணிகெழுமுழந்தாடோயுமங்கையுமெழிற்கவானுங்
கணிகெழுசிறப்புவாய்ந்தகணைக்காலுங்கமலத்தோடு
பிணிகெழுதுயர்க்கணாழப்பிறங்குசெம்பதமுமற்றுங்
குணிகெழுமாமைசொட்டுங்கோசமும்பொலியநின்றான். (கரு)

பணிமுகமலர்ச்சிகாட்டப்பவளவாய்கீதம்பாடத்
தனிநுதனீறுமல்கமணிக்குழைசெவியிற்சார
முனிவரைமயக்கிவீழ்த்தமோகினிமயங்கிவீழக்
கனியொளியலங்கிமின்னிக்கட்டழகெறிப்பநின்றான். (கசா)

ஒருமேனிவீசாநின்றசேயொளியுலகமூடு
மிருண்மேயவெழுந்தகாலையிளங்கதிருதயஞ்செய்ய
வருமூரலொடுவெண்ணீறுமாமதியுதயஞ்செய்யத்
திருமேனியழகன்வேதம்பாதுகைசிவணவேறி. (கஎ)

தமருகமொருகையார்ப்பப்பலிக்கலமொருகைதாங்கப்
பமரமுண்மலரிற்பாடும்பாட்டின்வாய்கீதம்பாட
வமருவந்தியமற்கோலையனுப்புமைக்கருங்கணல்லார்
தமரொடுவாழுஞ்சேரிச்சார்ந்தனன்பலிகொள்வான்போல். (கஅ)

பயப்பயநடந்துபெம்மான்பார்ப்பனமடவார்வீதி
நயப்புறச்சேர்ந்துகையினகுதுடிமுழக்கலோடுங்
கயப்பில்யாழோசைகேட்டவசுணங்கள்கடுகவந்து
முயக்குறல்போலவங்கைப்பலியொடுமொய்த்தார்மாதர். (௧௯)

பலியிடவந்தமாதர்பரம்பரன்முகமுங்கண்ணும்
வலிகெழுபுயமுமார்பும்வயங்குசெங்கையுங்காலும்
பொலிதிருவுளையுங்கோசப்பொற்புமற்றனைத்துநோக்கி
மெலிவருமயக்கம்பூண்டார்வேளுந்தன்வலிதெரித்தான். (௨0)

நடுக்கலைநெகிழ்ந்ததோராநங்கையங்கொருத்திபிச்சை
யெடுக்கவந்தனையேலாடையின்றிவந்தனையென்னென்றாள்
கொடுக்கவந்தனையேனீயெக்கோலமாய்வந்தாயென்றா
னுடுக்கைவிண்டதனையப்போதுணர்ந்தவணாணுக்கொண்டாள். (௨௧)

நள்ளியவளையும்வீக்குகலையுமேகலையுஞாலங்
கொள்ளியநெகிழ்ந்துவீழ்ந்தகுறித்தவைசிறிதுநோக்காள்
வெள்ளியமுறுவறேற்றிப்பலிகொளமேயவைய
னுள்ளியகோசநோக்கியொருத்திகும்பிட்டுநின்றாள். (௨௨)

தண்ணியவடிகேள்யானேதனப்பிச்சைதருவேனென்னி
லண்ணியகலத்திலேற்றுக்கோடுமென்றறைந்தாளோர்பெ
ணெண்ணியமடவாய்நீயிங்கிரட்டுறமொழிதலாலே
கண்ணியவதுதேறேனென்றுரைத்தனன்கருணைமூர்த்தி. (௨௩)

கடுமிடற்றொளித்துநிற்குங்கடிஞையோன்வதனநோக்கி
நடுவெனமேனிமுற்றுநலிந்திளைத்திடுமோர்மங்கை
யிடுபலிகொளவந்தீரோவென்னுயிர்ப்பலிமற்றின்னே
கொடுவெனக்கொளவந்தீரோகூறுமின்குறித்ததென்றாள். (௨௪)

ஒருமடமங்கையெம்மானுருவெளிதோற்றக்கண்டப்
பொருவிலாவுருமுன்சென்றுபொள்ளெனக்கோடியின்னே
தருபணியின்றுசெங்கைத்தலக்கலத்திட்டாண்மண்வீழ்ந்
தருவருப்படையப்பொள்ளற்கலங்கொலோவமைந்ததென்றாள். (௨௫)

பொன்னுடைப்பூணாளங்கோர்பொன்னிறையுருவந்தோன்ற
மன்னுடைக்கலத்திற்சோறிட்டதுமண்ணில்வீழக்கண்டாங்
குன்னுடைக்கலமிக்கோட்டையுளதென்றாளிறைவனோட்டை
யென்னுடைக்கலமோபிச்சையிட்டநின்மனமோவென்றான். (௨௬)

ஒருமகள்கடிஞைவாய்ச்சோற்றொடுவளையாழியிட்டு
மருமலர்க்கைகள்கூப்பிவணங்கிப்பின்னெழுந்துசொல்வா
ளருமையாயான்மாலானேன்வளையாழியளித்தாயென்னில்
வருகுறையில்லையென்றாளிடைக்குறைமாறாதென்றான். (௨௭)

காதல்கூரொருத்திநேரேகைகுவித்திறைஞ்சிச்சொல்வா
ளோதருன்யாதுக்குள்ளக்குறிப்பறிந்துடம்பாடெய்திப்
போதராய்நீயிரக்கமனமிலாய்போலுமென்றாண்
மாதராய்நாமிரக்கமனங்கொண்டேவந்தேமென்றான். (௨௮)

புள்ளவாமலர்மென்கூந்தற்பொற்றொடியொருத்தியாங்கே
நள்ளவாதரவுதோற்றிநண்ணவுமுணர்தலில்லா
யுள்ளவாறுணர்ந்தேன்முன்மாலறியாய்கொலுரைத்தியென்றாள்
வள்ளனுயகனுமென்றுமாலறியான்யானென்றான். (௨௯)

இனங்கிளர்மயிலஞ்சாயலேந்திழையொருமடந்தை
மனங்குழைந்தனைத்துநல்கவாஞ்சித்துநிற்பதோரா
தனங்கொணுவென்பாயன்னங்கண்டறியாய்கொலென்றாள்
கனங்குழாயின்னுமன்னங்கண்டறியான்யானென்றான். (௩0)

மாசற்றவடிவீங்குவந்துளீர்பயிக்கம்வேண்டி
யேசற்றகோசமூடலறமெனவிசைக்கும்போதே
தூசற்றவளிவளென்றுசொலக்கலையிழந்தாளோர்பெண்
ணுசற்றவனிதாய்நீயுமறமல்குன்மூடலென்றான். (௩௧)

முதிர்மயலொருத்தியன்னமுகந்துகையேந்திஐய
னெதிருறவணையுங்காலையிடுக்கியுமுடுக்கைவீழ
வதிர்கழலான்பின்னிட்டானவள்பயந்தனையோவென்றாள்
கதிரிழாயல்குற்பாம்புகண்டுநான்பயந்தேனென்றான். (௩௨)

பூணுருவொழிந்தவாங்கோர்பொன்னிறையெதிரோநோக்கி
யாணுருவொன்றாலின்றியானையுடம்பானேனென்றா
ளேணுருவுடையானன்னளெதிர்நோக்கியான்முன்னேபெண்
மாணுருவொன்றான்மன்றவனையுடம்பானேனென்றான். (௩௩)

போனகங்கொள்ளவந்தீர்பொலிதருசுவர்க்கமீது
வானகம்பதிப்பீர்கொல்லோவென்றொருமடந்தைகேட்டாள்
போனகம்விடமாக்கொண்டோன்பொலிதருசுவர்க்கமீது
வானகம்பதிப்பேன்போற்றிவழிபடுவாரையென்றான். (௩௪)

மருவுலாங்கோதைக்கூந்தன்மடநலாளொருத்திவந்து
பொருவினும்மூரலென்னோர்புரஞ்சுடலென்னேயென்றாள்
வெருவினம்மூரன்முன்னம்புரமூன்றும்வேவச்சுட்ட
தருமையோபுரமொன்றின்றுசுடுதிறமென்றனையன். (௩௫)

விளைக்கருங்கூந்தற்செவ்வாய்வெண்ணகையொருத்திநேர்வந்
துளைக்கரும்வனப்புவாய்ந்தவுத்தமவடிவுள்ளீர்நும்
மளைக்கலையெங்கேயென்றாளளைக்கலைமுடிமேலென்றான்
வளைக்கரும்பித்தரோவென்றாளதுவாய்மையென்றான். (௩௬)

கொன்னளைவிடையான்முன்போய்க்கோற்றொடியொருத்திகண்டா
டன்னையுடுக்கைநீத்தாடளைவிழுமிதைநீவாங்கி
யென்னையுடுத்துகென்றாளுடுத்திடல்யான்கற்றன்றே
வுன்னையுடுத்தல்செய்வேனென்றனனுயங்கினின்றாள். (௩௭)

கயல்புரைகருங்கட்செவ்வாய்க்காரிகையொருத்தியோவா
வியல்செழுமேனியான்முன்னியம்புவாளென்னைநோககால்
வியலுறச்சுடுவாய்மேலும்மெய்நடுக்கடைவாறுற்ற
முயன்மதற்சுடுதியென்றாண்முன்னமேசுட்டோமென்றான். (௩௮)

கொம்மையொண்மதியம்போலுங்குளிர்முகத்தொருத்திநேர்வந்
தும்மையானிறுகப்புல்லியுகளவெம்முலைக்கோட்டானுஞ்
செம்மைசேர்மார்புந்தோளுங்குழைதரச்செய்வேனென்றா
ளெம்மையாளுடையான்பாகமெய்திலையேலாதென்றான். (௩௯)

தானெனச்செய்யவல்லான்சார்ந்தவர்தமையெலாநங்
கோனெனப்புகல்வர்மேலோரதுகுறித்துணரின்மெய்யே
மீனெனப்பிறழுங்கண்ணார்யாவருமேவிமேவி
யூனெனப்படுதம்மெய்யினுடையிலாதொழித்தநீரால். (௪௦)

வேறு.

வண்ணங்கிளர்குலமடவார்பலருமிவ்வண்ணந்தழைதரன்மலிகற்புத்
திண்ணங்குலைதரவவணின்றேகியொர்சிறையுற்றான்மறைமுறையுற்றான்
றண்ணம்புயமகடழுவுந்தனியொருதயலாடலின்மயன்முதிர்வுற்றே
யெண்ணந்தபவுயர்தவமுங்கெடவுடைமுனிவோர்யாவருமிதுதேர்வார். (௪௧)

நாமுந்தவநிலைகெட்டுக்குலைதரநம்மாதருமுயர்நிலையற்றுத்
தோமும்புனைதரவிதுசெய்தவனுயர்சூதப்பொழில்வளைமாயூரத்
தாமுஞ்சிறுமதியுங்கொக்கிறகுமலங்குஞ்சடைமுடியவனேயென்
றேமுந்துறமொழிமறைதேர்முனிவருடன்றாரழல்சினமுற்றார். (௪௨)

கொடுவெஞ்சினமலிதரலாலாங்கொருகுண்டஞ்செய்தனரழலிட்டார்
கடுவெம்பரிதிகணிம்பத்துறுநெய்கலந்திட்டனர்மனுமுறையோதித்
தொடுவெங்குழிநிறைதரமற்றுள்ளவுமிட்டார்துகளறமுயல்காலை
யடுவெங்களிறுசினத்தொன்றதிர்தரவார்த்திட்டதுவெளிவந்தன்றே. (௪௩)

வருவெங்கடகரிதிசையிற்கரிகளும்வானக்கரியுமயங்குற்றுத்
தெருமந்துலைதரவுவராழித்தளைசிந்திக்கவிழ்தரவடிபேராப்
பொருமந்தகனுநடுங்கிப்புகல்புகுமிடமாய்தரமுகில்களினுள்ள
வுருமுங்கடிதுகவுரறாவெதிர்மலையுறுதூள்படவுழிதருமன்றே. (௪௪)

நீலப்பெருமலைபோலப்பொலிதருமுருவிற்றிருபிறைநிகர்கோட்ட
[illegible]புவிதடவந்தூசற்றிறமெனவாடுந்துளைபடுகைய
தாலத்தினுமுலகெல்லாமுலைதரவழலுங்கொடுமையதடுமூழிக்
காலத்தெழுகனல்குளிரக்கனல்சொரிநிரியாணத்ததுகருவேழம். (௪௫)

இத்தன்மையினெழுகொடுவேழத்தினையெம்மானெதிர்செலவிட்டார்க
ளத்தன்மையினுயிரொல்லாநிறைதருமண்ணற்பரமனுமதுகாணூஉ
மைத்தன்மையின்மலையெனநேர்வருமதமாமுன்வேறொருவடிவுற்றுக்
கைத்தன்மையின்வலிசிறிதோர்தருவகைகாட்டத்திருவுளமதுகொண்டான். ()

அவ்வேலையினிஃதென்னாகுவதெனவச்சுற்றஞ்சலணங்கோவாச்
செவ்வேலுடைமழவோடுஞ்சென்றுயர்தேவன்புடையொருசிறைநின்றாண்
மைவேலையின்வருகொடுவாரணமுயர்வள்ளற்பரனைவிழுங்கிற்றா
லெவ்வேதமுநனிகதறப்பெருவலியிமையோர்களுமுளம்வெருவுற்றார். (௪௭)

கனிவாயிதழ்புடைபெயரக்கண்பிசைசேயுந்தாயையணைத்திட்ட
தினிநாம்யாதுசெயத்தக்கதுவெனவெங்கோமாட்டியுமச்சுற்றாள்
பனியாழித்தரைவாழ்மன்பதைபடுபாட்டைப்பகர்தரவல்லார்யார்
நனியாதரவுசெயெம்மானுண்மையைநாடித்தேறுநருளரோயோ. (௪௮)

மதவேழத்தினுருற்றானதனுடல்வகிராமேற்பொதியதள்கொண்டே
யிதமாமிதுவெனமெய்யிற்போர்த்திருண்மழைமூடியகதிரொனநின்றான்
சுதமேதினியுலகிற்கென்றமரர்கடோமாமலர்மழைநனிபெய்தார்
சதமாமகனயனெடுமாலிவரிவர்தாவாவுவகைதலைக்கொண்டார். (சகூ)

ஐயன்கொடுமதவேழத்துரியோடணைந்தான்வெளியெனமகிழ்வுற்றுக்
கையங்குலிகொடுகாட்டிற்றிளமுளைகண்டாளன்னையுமயர்வோப்பி
வையம்பொலியவுவந்தாள்பற்பலவுயிருநனிமனமகிழ்பூத்த
செய்யம்புயமலர்மதியங்கண்டதுசெத்தாத்தவர்முகம்வாடுற்ற. (ருo)

வேறு.

கருமமேபொருளாக்கொண்டார்கருத்தின்மிக்கிலச்சைபூண்டு
தருமமால்விடையான்முன்னர்ச்சார்ந்துபொற்றாளின்விழ்ந்தே
யருமருந்தன்னாய்நின்னையறியாதுகெட்டேமெங்கள்
பொருமலந்தவிர்த்தாட்கோடியெனப்புகன்றிரந்துநின்றார். (ருக)

மெலிதருமனையார்செய்தவிண்ணப்பஞ்செவிமடுத்துக்
கலிதருமுனிவீர்நம்மைப்பொருளெனக்கருத்துட்கொண்டு
பொலிதருமாயூரத்திற்புகுந்துநும்மடவாரோடும்
வலிதருநமைப்பூசித்துமருவுதிர்முத்தியென்றான். (ருஉ)

என்றருள்செய்யக்கேட்டமுனிவரரிறைஞ்சிப்பின்னுங்
குன்றவிற்குழைத்தாயிந்தக்கோதிலாத்தானத்தெம்மை
வென்றமெய்க்கோலங்காட்டிவிளங்கிடவேண்டுமென்றா
ரன்றதற்கிரங்கியெங்கோனங்ஙனமாகவென்றான். (ருங)

முனிவரர்மடவாரோடுமுழங்குமாயூரஞ்சார்ந்து
பனிமலர்ப்பிரமவாவிபடிந்துவெண்ணீறுபூசிக்
கனிதரவள்ளலாரையஞ்சனாயகியைக்கண்டு
துனிதவிர்தரப்பூசித்துத்தோலாதமுத்திபெற்றார். (ருச)

முழுமறையுணர்ந்தார்கொண்டகோளுமொய்குழலார்கற்பும்
வழுவுகாரணத்தாலுமவ்வழுவூரொன்றுரைப்பாரின்னுஞ்
செழுமதக்களிற்றைக்கீண்டுசெற்றலாலத்தானத்தை
யுழுவலன்புடையோர்வீரட்டானமென்றுரைசெய்வாரால். (ருரு)

பண்ணியதவத்தார்போற்றும்பறியல்வீரட்டானம்போற்
புண்ணியவழுவூர்வீரட்டானமும்பொலிந்துமன்னு
நண்ணியவங்குச்சார்ந்துநலமுறவழிபாடாற்றுந்
திண்ணியதவத்தோரெய்தும்பெருமையார்தெரிக்கற்பாலார். (ருசா)

பறியல்வாழ்மகசங்காரபத்திரப்பெருமான்போல
முறிகுலாஞ்சோலைசூழ்ந்தமுழுப்புகழ்வழுவூர்த்தேத்து
மறிவில்வெங்களிறுவென்றவலியுடைப்பிரானுமாதர்
செறிதருகற்புமாய்த்ததேவனும்பொலிந்துவாழ்வார். (ருஎ)

மதமலையுரித்துப்போர்த்தவலியனைமாதர்கற்புச்
சுதமுறப்பயிக்கம்புக்கசுந்தரவடிவினானை
யிதமுறக்கண்டுபோற்றுமியல்பினரடையும்பேற்றை
யுதவிபினியங்குமென்னாலொருங்குரையாடப்போமோ. (ருஅ)

முனிவரர்வசித்ததானமொய்யழல்வளர்த்ததானங்
கனிதரமற்றும்பல்லகருமங்கள்செய்ததான
மினியவாயவ்வப்பேராலின்னமும்வழங்குமந்தத்
தனியமர்தானமெல்லாந்தம்பிரான்றளியுமேவும். (௫௧)

இனியமாயூரத்தானத்தெல்லைசூழ்யோசனைக்குட்
பணியவாஞ்செம்பொன்பள்ளிநனிபள்ளிபறியன்மூதூர்
முனிவர்சூழ்வழுவூரின்னமொய்புகழ்ப்பெருமையிற்றே
னனிசெயுமாயூரத்தினகுபுகழ்பேசற்பாற்றோ. (௬0)

யானையுரித்தபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். ௮௧௪.

தலவிசேடப்படலம்.

கும்பிபாகமிரவுரவங்கொடியதவனம்வாலுகமே
வெம்புமசிபத்திரவனமேவீமோர்க்கடமேமகாசூலங்
கம்பித்திடுசான்மலிதத்தசூலங்காலசூத்திரமே
தம்பம்புரியுநிருச்சுவாசம்வைதரணிதத்தசிலை. (௧)

மலபூரணமூடிகாகூடமாருக்கயசோணிதகூப
மிலகாதெழுமூத்திரபானமிருகசோணிதகூபமெழ
லுலவாவன்னிசுவாலைசிலாவருடமுறுவாதாதிக்க
மலகீர்சுரதாரணம்வன்னிவருடமங்காரசயனமே. (௨)

கீலவருடம்பதனஞ்சுக்கிலபூரணமைப்பூரணமே
ஞாலம்வெருவுந்தயிலவியந்தரமேகுதிகானரம்பெடுத்தல்
சூலவாரோகணம்பாசபந்தந்தூமபானமே
சாலநெடியதருவேற்றித்தள்ளறிரிகையிடைச்சுழற்றல். (௩)

நிலையாநீரிற்றள்ளிடுதலூசிநுனையினிறுத்திடுத
லுலையாச்சிதலையீயுறவியுருத்தேளரவுபுழுவருத்த
றொலையாதுறுப்பினூசிவிடறொக்கதரக்காதிகள்வருத்தல்
குலையாநடுங்கக்காய்தயிலங்குடிக்கச்செய்தன்முதலாக. (௪)

எண்ணிலாதகொடுநரகமின்னும்பலவாலியம்புநரார்
மண்ணிலமைந்துபாதகஞ்செய்மறவரோயிந்நரகடைவார்
கண்ணிலோரொண்பத்தாறாயிரம்யோசனைகள்கழியளவும்
புண்ணில்வாளிட்டெனவியவைத்தண்டம்பொருந்திப்போயதற்பின். (௫)

மலமூத்திரமாநரகத்தில்வருடம்பதினாயிரமுறுப்பி
லுலவாவூசிசெருகப்பட்டுடற்றும்புகையேயுண்டழுந்தி
நலவாசனையில்சண்டாளகோடிசன்மநயந்துதுயர்
கலவாவுழிதந்திடுமந்தோகள்ளுண்டுழன்றகண்ணிலியே. (௬)

கொடியவிடமூடிகநரகங்கொள்ளப்பதினாயிர்வருட
நெடியதுயரத்தொடுமழுந்திநீத்தமுடித்தபுடவியிடைக்
கடியசிலைவேட்டுவனாகப்பிறந்துபிறந்துகழிதருவான்
படியவாவும்பொற்கரவுபண்ணுந்தீயபாதகனே. (௭)

குறியிலூசிபலசெருகக்கொடியகாலசூத்திரத்து
முறியநெடுநாளழுந்திப்பின்மூர்க்கவரக்கன்புலையனாய்
மறியுமரிட்டங்கோட்டானாய்க்கரமாய்நாயாய்வந்துழல்வா
னறிவிலவனாய்க்குருமனையையவாவிப்புணர்ந்தகொடியோனே. (அ)

பெற்றதாயைமூத்தாளைப்பிறங்கவுடன்வந்தவர்க்குரிமை
யுற்றதாரமடவாரையுஞற்றலரியவிட்டிசெய்க்
கற்றமறையோர்பன்னியரைக்கற்புவழாதமங்கையரைச்
சொற்றவுபாத்தியாயரிருதோடோய்நலத்துமங்கையரை. (கூ)

தந்தைகூடப்பிறந்தாரைத்தகுமாதுலர்தமனைவியரை
நிந்தையில்லாமாமியரைநிலவுஞ்சிறியதாயாரை
யந்தையகன்றகுருவீன்றவந்நலாரைப்புணர்கொடியோர்
முந்தையாசானிற்புணர்ந்தமூர்க்கர்க்குரைத்தவெலாமுறுவார். (க0)

பந்திபேதஞ்செய்தல்குடும்பத்தில்வேறுவிதஞ்செய்து
முந்தியிருந்துபுசித்தல்சந்நியாசிகளைமொய்யிழிபுரைத்த
லந்திநிறத்தானடியாரையந்தணரைநிந்தித்துரைத்த
னந்திநலமிக்குடையாரைப்பொல்லாரொன்றேநவின்றிடுதல். (கக)

மறையைவிற்றலிவைசெய்தோர்மறையோர்க்கொலைசெய்தவராவர்
முறையிலிவர்கள்கடுங்கும்பிபாகநரகமுயங்கியே
நிறையுந்துயரமனுபவித்துப்பின்புநிகழூர்ப்பன்றியாய்க்
குறைவினூறுயுகம்பிறந்துபவ்வீக்குழிவீழ்ந்துழிதருவார். (கஉ)

தத்தகுலம்யுகமொன்றுதழுவுங்கணிகையனம்புசித்தோன்
சித்தமருண்டுமீனாயுஞ்செனித்துவலையன்கொலப்படுவா
னுத்தவினமல்லார்தமுணவுண்டோன்மதுபானியைநிகர்வான்
முத்தநிகர்பற்பரமாதர்முயக்கங்குருவின்முயக்கமே. (கங)

பூத்தகாலைமனையாளைப்புணர்ந்தானிரத்தகூபத்தில்
யாத்தநூறுயுகமழுந்துமிரியும்புலைச்சிமுலைதோய்ந்தான்
மூத்தவிருத்தயோனியிடைமுயங்கும்படிசுக்கிலங்கவிழ்த்தான்
சித்தகயினிமுலைதிளைத்தான்வலிந்துபரமாதரைச்சேர்ந்தான். (கச)

இன்னகொடியபாதகத்தோர்நாயூனுகநூறெடுத்தருந்திப்
பின்னமருவிக்காலொடுகைபெயர்க்கக்கூடாவிதங்கிடப்பார்
சொன்னவிரதத்துபவாசத்தோகையரைச்சேர்ந்தவனுப்புத்
துன்னநிறைகூபத்திலுகந்துளைந்துசெந்நாயாய்ப்பிறப்பான். (கரு)

மறையாளருக்கொன்றீவேனென்றுரைத்துப்பின்னர்மறுத்துரைத்தோன்
குறையாவசிபத்திரவனத்தேகிடந்துகுரைநாயாய்ப்பிறப்பா
னிறையாம்பரமனடியார்வேதியராக்களுக்கூறிழைத்திட்டோன்
மிறையார்சூலவளற்றழுந்திவேடனாய்ப்பின்புழிதருவான். (கசு)

நானம்பானந்தவமோமஞ்செபமற்றிவைகண்லியூறு
மானவிழைத்தோனுற்பதனமருவியளவாத்துன்புற்றுப்
போனபின்னர்மூகையாய்வெதிராய்ப்புகலில்கொத்தையா
யீனமருவுமினும்பலவாய்த்தோன்றியந்தோவிழிதருவான். (கஎ)

நீதிநூல்சோதிடநூலேனைகளுங்கழுவாயுரைக்குநூல்
பேதியாததரணிநூலிவற்றைப்பேதித்திடுபாவி
யோதியுணராப்பிரமகாதகனென்றுரைப்பாருறுநரக
மோதியலைப்பத்துன்புற்றுப்பின்புகழுதையாய்முளைப்பான் (௧௮)

பொருள்பெற்றனமென்றிறுமாக்கும்புன்மையாளன்பொய்யுரைப்போ
னருளிற்பணித்தமந்தணத்தையாருமறியவெளிவிட்டோன்
மருளிற்றீர்ந்ததருமத்தைமதித்திடாதுநிந்தித்தோ
னிருளிற்பொலியும்பாடாண்டர்வேடமினிதென்றுறப்பூண்டோன். (௧௯)

இனையரிழிநாயூனருந்தியெரிவெந்நிரையத்துகமழுந்திப்
புனையலாகாவிழிபறவையாகிப்பின்னர்ப்போதருவார்
நினையமுடியாப்பயம்பொருத்துநீசர்கோளர்நிறைதருதீ
வினையர்கொடுமூத்திரபானமெய்திமிருகமாய்ப்பிறப்பார். (௨௦)

பதிதரன்னஞ்சூதகங்கோட்பட்டோரன்னம்புசித்திடுவார்
முதிருஞ்சுடுபாறையிற்கிடந்துமுற்றிமூகையாய்ப்பிறப்பார்
விதியிற்புசிக்குங்காலத்துவிழைந்துபூத்தவளைநாயைப்
பொதியப்பார்த்தோர்பேசிடுவோர்பொல்லாநரகத்தழுந்திடுவார். (௨௧)

பிரமசரியமனுட்டிப்போர்பிறங்கீருள்ளிமல்லிமுதற்
பரவுபிறவுங்கவர்ந்திடுதல்பழுதாம்புசிக்குங்காலத்தில்
விரவப்பேசல்கோபித்தனகைத்தலிவையும்விரோதமாங்
கரவினுலோகஞ்சந்தாதிகனிகாய்முதற்றெவ்வனும்பழுதே. (௨௨)

தந்தைதாய்க்குத்திதிகொடான்றக்ககாலங்கிரியைசெயான்
றந்தைதாய்வார்த்தையைக்கடப்பான்றன்னில்பிழைதீரவுந்துறந்தோன்
றந்தைதாயர்பசித்திருக்கத்தானேயுண்பானன்றிகொன்றான்
றந்தைதாயர்முதுமையிடைத்தாங்கானினையர்பாதகரே. (௨௩)

புத்தர்மனையுட்போனவனுமவர்சாத்திரமோர்புந்தியனு
மொழுக்கமறைநிந்தித்தவனுமுவக்குங்கொடையைத்தடுப்பானுஞ்
சுத்தமார்க்கம்விடுத்தானுமதிதிபூசைதொலைத்தானுஞ்
சத்தமகமைந்தாற்றானுந்தாவாக்கொடும்பாதகராவார். (௨௪)

தேவாலயத்துமகச்சாலையிடத்துஞ்செந்தீயெதிரிடத்து
மோவாப்பசுக்கொட்டிலினிடத்துமுயர்பிப்பிலத்தினடியிடத்துந்
தாவாதுழுதபூமியினும்வன்மீகத்துநந்தனத்து
மாவார்தீர்த்தக்கரையினுமீரியக்கம்விடுத்தோர்களுமனையர். (௨௫)

பருவந்திங்கட்பிறப்புவிதிபாதம்பகருமட்டமியே
மருவும்வைதிருதிசிறப்புவாய்ந்துவிளங்குஞ்சதுர்த்தசியே
பொருவில்விரதத்தினமிவற்றிற்பொருந்தமகளிர்முலைதோய்வார்
பெருகவிவைகண்டொருவரசர்பேசுமிவருமனையரே. (௨௬)

தம்மையெடுத்துப்புகழ்ந்திடுவோர்தம்போனினையாதன்னியரை
வெம்மையுறநிந்தித்திடுவோர்வேதாதிகள்சொல்லியகருமஞ்
செம்மையுறச்செய்யாதொழிப்போரொடுத்தவிரதஞ்செயாதுவிட்டோர்
மும்மைப்புவனங்களுமிழிக்கமுடிந்தவிவருமவர்கண்டீர். (௨௭)

உரைத்தவிவர்மற்றிரவுரவமாதியொழியாநரகங்கள்
புரைத்தமனத்தராய்த்திளைத்துப்புவியின்மீட்டுப்பிறந்திடுங்கால்
வரைத்தகுருடுசெவிடுமுதன்மற்றுமுறுப்புக்குறையாகிக்
குரைத்தபுலைவாய்ஞாளியினுமிழிந்துதுயரக்கோட்படுவார். (உஅ)

கொடியபாவம்புரிநரொலாங்கொடியநரகெலாந்துளைந்து
கடியவிலங்குபறவைகளாய்ப்பிறந்துபிறந்துகழிந்ததற்பின்
முடியவுறுப்புக்குறையோராய்ப்பிறந்துபிறந்துமுடிந்திடுவார்
நெடியவுறுப்புக்குறைநீத்துநிலத்துமருவப்பிறந்தாலும். (உகூ)

பிறந்தபொழுதேகழிவாரும்பிறந்துசிலநாளிருந்துவனப்
புறந்தபொழுதேகழிவாருமொத்தவாயுளடைந்தாலு
நிறந்தவறுமையடைவாருமாகிநிலத்துத்துயருறுவார்
சிறந்தபிறப்புற்றென்பெற்றாறறிவிலாவிச்சித்தையரோ. (௩0)

வேறு.

வெருகுவதைத்தவன்பொற்கண்ணினன்கிளைகவர்ந்தவனீல்விழியன்மாடு
கருகுறக்கொன்றவன்றலைநோய்காதுவலிவயிற்றுவலிகலந்துவாழ்வன்
வருகுலமாமறையோர்க்குக்கொடுப்பேனென்றுரைத்தீயான்வயிற்றுநோயன்
பெருகுபிதாவனைப்புணர்ச்சிசகியாதான்வெதிராகிப்பெருந்துன்பாழ்வான். (௩க)

கலையிழந்தமடவாரைப்பார்த்தவன்கண்ணோயாளன்மூலநோய
னுலைவில்பரமாதரிணைவிழைச்சுற்றோன்சுபகருமத்துறக்கொபித்தோ
னிலைகுலையுந்தாபசுரத்தினன்புரிந்தவுபகாரநினைதல்செய்யா
னலைசெய்கபரோகமொடுசுவாசகாசமும்பிறவுமடைந்துசோர்வான். (௩உ)

புண்ணியநற்றலத்தனையகாலத்துத்தானங்கொள்புன்மையோனு
மண்ணியவபாத்திரத்தீந்தவனுமிரத்தமும்புழுவுமளையுமெய்யன்
றண்ணியமாநதிக்கரையின்வழியினீழலினிழிந்தசலம்விட்டோன்பா
ரொண்ணியசோகையனொருவனுணவுதடுத்தவனுமதேயெய்திச்சோர்வான். (௩௩)

மறையவர்தம்பொன்கவர்ந்தோன்பாண்டுநோயினனாற்றுமகந்தொடங்கி
நிறையமுடியானந்நோயொடுதலைநோயும்பொருந்திநிலைமைதீர்வன்
முறையில்புலைச்சியைப்புணர்ந்தகயவனுமந்நோயடைவன்முடிக்கும்யாகம்
நிறைதராவிதமுறுபுரிகொடியோன்பெரும்பீசநிலவச்சோர்வான். (௩௪)

உத்தமசாதியின்மடவார்ப்புணர்ந்தவன்றன்றலைக்கொடும்புண்ணுடையன்வேத
வித்தகர்தம்மடவாரைப்புணர்ந்தவனுசியினழிபுண்மேவிச்சோர்வன்
சுத்தமிகுநற்கருமம்புரிகாற்கோழிகள்கரங்கடோன்றக்கண்டோன்
சித்தமயற்புகவிடுத்தோனிருவருமேற்சொல்லியதுசிவணுவாரே. (௩௫)

தன்னுடைச்சாதியிற்பரமாதரைப்புணர்ந்தோன்மார்பிடைப்புண்டங்கச்சோர்வன்
மன்னுடைத்தன்றந்தையுடன்பிறந்தாட்சேர்ந்தவன்வலப்பான்மருப்புண்ணுளன்
மின்னுடைப்பல்பூக்கனிகாயாதிகளையபகரித்தோன்விரற்புண்ணுளன்
றென்னுடையபிறர்புண்ணிலுபத்திரஞ்செய்தோனரப்புச்சிலந்தியாளன். (௩௬)

குளங்கவர்ந்தோன்கண்டமாலையன்புலைவீதியிற்புசித்தகொடியன்பித்த
முளங்கவலப்பெறுந்தகைவற்கியற்றியபாதகன்வாதமுறுநோயாளன்
விளங்குகுருப்பகைத்தவனுமதுமேவும்விளங்குப்க்கபாதமேயோன்
களங்குலவுமந்நோயனீயாதுபுசித்தவன்விக்கலைச்சார்வானே. (௩எ)

நித்தியகன்மம்புரியான்கபநோயன்மறையோர்கணிலவிமேவுஞ்
சுத்தியநன்மனையமைக்கவொட்டாதான்காக்கைவலிதொலையாதெய்துங்
கத்தியநாய்பூனைதொடுமனம்புசித்தோன்வாய்நாற்றங்கலந்துசோரு
மெத்தியபொய்ச்சான்றுரைத்தோனதனொடுபித்தமுங்கலப்பவெருவிச்சோர்வான்.

குறிமதுவுண்டவன்றேய்ந்தபல்லினன்குக்குடம்வதைத்தோன்கோணன்மூக்க
னெறிதபமற்றோர்புணர்ச்சிநோக்கினவனேத்திரநோய்நிரம்பிச்சோர்வ
னறிதரவாலயங்குளத்திலிருக்குமரம்வெட்டினவனந்தனுவ
னெறிதருபிரோதசிராத்தம்புசித்தோன்கிருமிகள்வாயியையத்தேம்பும். (௩௯)

கன்னிகையைப்புணர்ந்தவன்பற்பலநோயனதிசாரன்காடுசுட்டோன்
மின்னியபால்கவர்ந்தவனீரழிவுடையான்கருச்சிதைத்தவெய்யபாவி
துன்னியவெந்தொழுநோயன்குதிரைவதைத்தவன்கோணல்சூழ்ந்தகர்தன்
பன்னியபல்லோர்நடக்கும்வழியின்முள்ளிட்டோனொழியாப்பாதநோயன். (௪0)

வழியிடைத்தன்மனையாளைப்புணர்ந்தவன்றன்குறிப்புற்றுமருவிச்சோர்வன்
பொழிசுவைப்பாற்பசுக்கொன்றோன்குட்டநோயினனயலார்புதல்வற்கொன்றோ
னிழிபுதகமகவிலாதவனுவனுடுத்தகலையெணுதுதெவ்வும்
பழியுடையோனிளம்பருவத்தேதலையெலாநரைக்கப்பட்டுச்சோர்வன். (௪௧)

அரவுவதைத்தவன்விடபாண்டைகுவன்றன்மகட்புணர்ந்தோனழியாக்குட்டி
பரவுமறையாகமபுத்தகந்தாண்டினோன்முடநோய்ப்பட்டுச்சோர்வன்
விரவுசுவைவிளக்கம்வெளவினோன்கோட்டான்மணந்தடுத்தமேன்மையில்லா
னுரவுதடுபங்கமுறும்புத்தகங்கள்வெளவினவனூமையாவன். (௪௨)

இத்தனைமாபாதகமுமிரித்திடுதற்காங்கழுவாயியம்புங்காலை
முத்தனையானனையபரமசிவன்பூசையன்றிமொழிவதில்லை
யெத்தனைநாண்முயன்றாலுமதுபோலப்பயன்படுவதிலையாலந்தச்
சுத்தனையாதரித்தன்பிற்போற்றுதற்கும்விசேடதலந்துதைதல்வேண்டும். (௪௩)

காசிகுருக்கேத்திரஞ்சீபருப்பதமனேகதங்காவதமெஞ்ஞான்றும்
வாசிபடுகேதாரஞ்சோமநாதம்புகழேவளர்கோகன்னம்
பேசி[illegible]யாவொளியிந்திரநீலப்பருப்பதம்விண்பிறங்குவெய்யோன்
கூசியகன்மணிமாடவிருபாக்கங்கேதீசங்கோணவோங்கல். (௪௪)

ஓங்குதிருக்காளத்திதிருக்காஞ்சிகழுக்குன்றமொற்றியூர்நீர்
தேங்குதடமலிபாசூர்திருவாலங்காடுபுகழ்திருவேற்காடு
நீங்குதலில்வெண்பாக்கந்திருமுல்லைவாயிலெழினிலவுகச்சூர்
பாங்குபுனையிடைச்சுரமச்சிறுபாக்கமரசில்வண்பனங்காட்டூரே. (௪௫)

கோவலூர்வீரட்டந்திருவண்ணாமலையதிகைக்குலவீரட்ட
நாவலூர்திருத்துறையூரிடையாறுமுண்டீசநலக்கண்டீசங்
காவலூர்மதிற்றிருப்பாதிரிப்புலியூர்வெண்ணெய்நல்லூர்கவினார்சோலை
மேவலூர்விருத்தகிரிதூங்கானைமாடமொளிமிளிர்நெல்வெண்ணெய். (௪௬)

அவிநாசிதிருப்பாண்டிக்கொடுமுடியானிலைக்கோயிலமையநாளும்
புவிசேருங்கருவூர்வண்டிருவஞ்சைக்களம்பரமன்பொலியும்பேரூர்
கவிகூரம்பொழிலுடுத்ததிருமுருகன்பூண்டிமணங்கமழ்நணாவு
தவியாகவடைந்தார்க்குவானவர்கள்சூழ்தருவெஞ்சமாக்கூடல்லே. (௪௭)

தில்லைமயேந்திரப்பள்ளிசாய்க்காடுவெண்காடுதிருச்சங்காடு
முல்லையுயர்கழிப்பாலைகுருகாவூர்சீகாழிமுதிர்கோலக்கா
வெல்லையிலாவளப்புன்கூரிலகோமாம்புலியூர்புள்ளிருக்குவேளூர்
தொல்லைவினைமுழுதொழிக்குங்குறுக்கைவிளத்தொட்டிநலந்தோயுமாற்றூர். சஅ

மன்னியவாளொளிபுற்றூரானைக்காபராய்த்துறைவாண்மருவுமீங்கோய்
துன்னியவாட்போக்கிசிராமலைபஞ்சநதஞ்சோற்றுத்துறைகோமுத்தி
மின்னியநள்ளாறுமறைக்காடுவாஞ்சியமாரூர்வீழிமேலோ
ருன்னியவாலங்குடிகோட்டூர்நெல்லிக்காப்பனந்தாளூறுமாப்பாடி. (சகூ)

இடைமருதுகுடந்தைதிருவாலவாய்சேதுவிராமீசங்கானை
யடைகொடுங்குன்றுப்பனூர்திருப்புத்தூர்திருச்சுழியலமராடானை
கடையில்பெருந்துறைநெல்லைகுற்றாலங்காயாரோகணங்கோட்டாறு
மிடைதருபல்வளம்பொலியுமித்தலங்களெவற்றுள்ளும்விசேடமாமால். (ரு0)

இன்னதலங்களுக்கதிகங்கவுரிமாயூரமறையெடுத்துக்கூறு
மன்னதலத்தெல்லையளவோசனையொன்றுஞ்சுற்றுமதற்குமேலாச்
சொன்னதலமெத்தகையபுவனத்துமில்லையிதுதுணிபேயின்னு
மென்னதலங்களுமதற்குத்தாழ்ந்ததலமல்லாமலிணையாகாவே. (ருக)

இத்தகையகவுரிமாயூரம்விளங்குதறெரியாரிலங்குதீப
மொத்தகையிலிருப்பவுமோர்பாழ்ங்குழியில்வீழ்ந்துழலுமுணர்விலார்போற்
பித்தகையும்பிறப்புற்றுமெஞ்ஞான்றுந்தீராதபிணிக்கோட்பட்டு
மத்தகையவரினுழன்றுமிறந்துநரகத்தழுந்திவருந்துவாரால். (ருஉ)

மன்னுபுகழ்ப்பெருங்கவுரிமாயூரத்தலத்தெல்லைவணங்கிச்செய்யு
முன்னுபிரதக்கணமொன்றற்சுவர்க்கமுறுமிரண்டாலும்பர்வாழ்த்த
மன்னுமகபதியுலகமுறுமூன்றன்மலர்மேலான்வைப்புமேவு
மின்னுமொருநான்கனுற்சுதரிசனப்படைக்கடவுளிருக்கைமேவும். (ருங)

நல்லதவம்பொலியைந்தாலெவ்விடத்துஞ்சஞ்சரிக்குநலமுண்டாகும்
வல்லபுகழிருமூன்றல்வடதிசைக்கோமகனுகும்வாழ்க்கைமேவும்
வெல்லவுயர்திறலேழால்வெற்றிவேற்படையாளிவியன்வைப்பெய்து
மல்லறவிரிருநான்காலங்குசபாசத்தனுலகமையமேவும். (ருச)

ஒன்பதனுற்பராசத்தியுலகமுறுங்கயிலாயமுறுமோர்பத்தா
லின்பமிகுபன்னொன்றற்சிவலோகசாலோகமெய்தாநிற்கு
மன்புமிகுபன்னிரண்டாற்சாமீபம்பதின்மூன்றலரன்சாரூபம்
வன்புதவிர்பதினன்காலடிக்கலப்பாம்பதினைந்தான்வரன்மற்றின்றே. (ருரு)

பிரதமையின்மாயூரத்தலஞ்சூழிற்பாவமெலாம்பெயர்ந்துநீங்கும்
வரமுதவுந்துதியையில்வான்சுவர்க்கமுறுந்திரிதியையில்வானவேந்தன்
பரவுபதமுறுஞ்சதுர்த்தியிற்பிரமபதமாம்பஞ்சமியினெல்லா
வுரவுலகங்களுமாளுமரசாகுஞ்சட்டியினுமொழியாவின்பம். (ருசு)

சத்தமியினிட்டமெலாமுறுமட்டமியிற்கணத்தின்றலைமையெய்து
மொத்தநவமியிற்பிரமபதமெய்துந்தசமியின்மாலுறையுண்மேவும்
வித்தகவேகாதசியிற்கயிலையுறுந்துவாதசிமுன்விளம்புநான்கிற்
சித்துமைசிவலோகசாலோகமுதனன்குஞ்செறியுமன்றே. (ருஎ)

வேறுமொருதலத்துளுற்றுமேருநிகரறங்கொடுக்குமேன்மைதீமை
யீறுபடுமாயூரத்தணுவளவேசெய்யினஃதெளிதினீயும்
வேறுமொருதலத்திலக்கமறையவருக்கனமூட்டவிலையிலாப
பீறுபடாமாயூரத்தொருபுலையற்கொருபிடிசோறிட்டாலுண்டாம். (௫௮)

மற்றொருமாதலத்திடையாயிரவருடம்வசித்தலினால்வருமிலாபம்
பற்றொருவாமாயூரத்தலத்தினொருகணம்வசிக்கிற்பண்பினாகு
மற்றொருமாதலத்திடைக்கால்வருந்தநடந்தடைபேறுவானநாடர்
பற்றொருவாமாயூரத்திருந்தவிடத்திருந்ததனாற்பண்பினாமே. (௫௯)

ஏனையமாதலங்களிற்சென்றரியவுபவாசஞ்செய்தெய்தும்பேறு
மானயமார்தருகவுரிமாயூரப்பெருந்தலத்தின்மகிழ்ச்சிபொங்க
பானயமார்நெய்முதலாப்பல்சுவையமடையுடம்புபருக்கவுண்டு
தூநயமார்மடவார்தங்குழாத்தொடிருந்தாலுமெய்தறுணிபாமன்றே. (௬0)

வேறு.

கவுரிமாயூரத்தெல்லைகாதலிற்சூழுவோரை
யுவரிசூழ்புவியோர்சூழ்வாரொன்றுரைத்திடுதலென்னே
தவலிலாமலரின்மேயசதுமுகனாதிவானோ
ரவரையேபரமனாகவவாய்த்தினஞ்சூழ்வாரொன்னில்; (௬௧)

கண்ணுதலினிதுமேயகவுரிமாயூரத்தெல்லை
நண்ணுதல்செய்தபுல்லுநகுகொடிதருவுமற்று
மெண்ணுதலியற்றவீற்றிற்சிவலோகமெய்துமென்னி
லொண்ணுதலதனையன்றிமற்றொன்றையுன்னலாமோ. (௬௨)

உறுவழிச்செலவினேனுமுற்றவாணிகத்தினேனுந்
தெறுவிழிப்பரத்தைமாரைச்சேருமோர்விழைவினேனு
மறுவின்மற்றொருவனட்புமதித்தேனுமெவ்வாற்றேனு
குறுகுதலுறுமாயூரஞ்சார்வதுகுணமாம்யார்க்கும். (௬௩)

தவலருங்காசியாதித்தலங்களில்வசிக்குநல்லோர்
கவலருந்தாங்களீன்றகான்முளையாதியோர்க்கு
நுவலருமாயூரப்பேர்நுவன்றுபல்காலழைப்பா
ரொவலருமிப்பேரொன்றேயேற்றமந்திரமாமென்பார். (௬௪)

பலபலவுரைப்பதென்னைபகர்பெருமாயூரத்தி
னலகறுகுளங்களெல்லாமற்புதத்தீர்த்தமாகும்
மலமகல்சிலைகளெல்லாஞ்சிவலிங்கவடிவமாகும்
புலமுறவசித்தோரெல்லாங்கயிலையிற்பொருந்துவோரே. (௬௫)

புண்ணியமாயூரத்திற்பொலிதரவருவோரெல்லா
நண்ணியவிடங்கொடுத்துநயந்தவர்க்குணவுமூட்டி
யண்ணியபிணிமுன்னாயவறமருந்தாதிநல்குந்
திண்ணியரடையும்பேற்றையானேயோதெரிந்துசொல்வேன். (௬௬)

மறைமுதலடியராயமறையவராதியோர்க்குக்
குறைவிலாவிருக்கைநல்கியன்னமுங்கொடுப்பாரொன்னின்
மிறையிலாவவர்தம்பேற்றைவெண்ணிலாவணிந்தவேணி
யிறைவனேயுரைப்பானன்றியெவரறிந்துரைக்கவல்லார். (௬௭)

வளமலிசிறப்புவாய்ந்தமாயூரதலத்தைமேவி
யுளநெகிழ்தரவசித்தலுறவலஞ்சூழ்தலின்னும்
பளகறுதானமாதிபண்ணுதலிவைவல்லாற்குத்
தளர்வுபட்டொடியுமெப்பாதகங்களுஞ்சலித்துமாதோ. (சுஅ)

பாதகம்புரிந்தோர்யாரும்படுபெருந்துன்பந்தீர்ப்பான்
மேதகவுறுமாயூரமேவிமுன்சொன்னவாறே
மாதகவியற்றிவாழ்வார்மற்றிதுதனக்குமேலாப்
போதருங்கழுவாயில்லைபோற்றுமினுண்மையீதே. (சுகூ)

பழிபடுநரகம்பற்றூர்கூற்றின்வெஞ்சினமும்பாரா
ரிழிபடுபிறவியெய்தாருறுப்பில்லாதிழிதலெய்தா
ரொழிவரும்வறுமையெய்தாருவக்குமாயூரஞ்சார்ந்து
வழிபடருனமாதிவயக்குதலாற்றுவோரோ. (எ0)

பெண்மையோர்பாதியாகிப்பிறங்குமாதேவனாணை
யுண்மையேயுரைத்தேனிம்மாயூரத்திற்கொப்பொன்றில்லை
வண்மையினதனைச்சார்ந்துவலஞ்செயலாதிபோலோர்
திண்மைசெய்கழுவாயில்லைதேர்தரினுணர்வுமிக்கீர். (எக)

தலவிசேடப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் அஅரு.

கவுண்டின்னியப்படலம்.

போற்றவருங்கங்கையெனும்புண்ணியமாநதிக்கரையிற்
சாற்றவருமந்தணர்கடவாச்சேரியிடைவாழ்வான்
றேற்றவருமறையொழுக்கந்திறம்பாததிருமனத்தா
னேற்றவருநலத்தகவுண்டின்னியனென்பானொருவன். (க)

அந்தமுனியோமவிறகத்தனையுமொடிப்பதற்குக்
கந்தமிகுமலர்துவன்றிக்காய்கனிகள்பலமல்கி
முந்தவெழுகொடிமிருகமொய்சிறைப்புள்ளிவைமொய்த்துச்
சந்தமுறமருவுமொருதவாவனத்தைத்தலைப்பட்டான். (உ)

அரசுமுதற்பல்விறகுமாங்காங்குக்கவர்தருகாற்
புரசுமுதற்பலதருவும்பொருந்திமிடையவ்வனத்துள்
விரசுமொருபாழ்ங்கிணறுமேவியதாயிடைநின்றும்
வரசுகுணனவன்கேட்பமருதுகூவொலியெழுந்த. (ங)

செவிசுடுகூகூவொலியின்றிறமின்னதெனத்தெரியா
னவியமரர்க்குதவுமுனியஃதுணர்வானருகெய்தச்
சவிம்றையோயிதுகேட்டிதவாப்பெருங்குலப்பிதிர்யாங்
குவிபெரும்பாதகமியற்றிக்கொடுநரகுகொளப்பட்டேம். (ச)

ஏலாததானங்களேற்றனமிம்மித்துணையு
மாலாதபெரியோர்க்குவாஞ்சித்துக்கொடுத்தறியேங்
காலாதமறையொழுக்கங்கைவிட்டேஞ்சிவநாமங்
கோலாதநாவுடையேங்கொடுநரகுகொளப்பட்டேம். (ரு)

எங்கள்குலத்தொருவனீயருமருந்தினிருக்கின்றாய்
கங்களொருநான்குடையான்முதற்றேவர்கைகுவிக்குந்
திங்கண்முடிப்பெருமான்வாழ்திருத்தலமொன்றனையணுகி
யங்கள்பெரும்புண்ணியத்தாலடியறுத்துக்கதியுய்ப்பாய். (௬)

திரைபொருகங்கையின்முழுகுதிகழ்கயையிற்சிராத்தஞ்செய்
தரைபுகழப்படுமன்னதானம்பூதானமுல
குரைகிருகதானங்கோதானமுயர்பொற்றானம்
வரைவறச்செயாங்களெல்லாமாண்கதியிற்புகல்வேண்டில். (௭)

குணமுருவங்குலம்வாய்ந்தகுழகனொருவனுக்கீன்ற
மணமலியுங்குழன்மகளைவளவியதானங்கொடுத்தா
லணிவியவன்பிரமபதமடைவன்மகளில்லாதான்
றணவரியபொருள்கொடுப்பினப்பதமேசார்தருவான். (௮)

அகவையிருநான்குடையாள்கன்னிகையஃதொன்பதுளா
டகவமையுமுரோகணியோர்பத்துடையாடான்கவுரி
நகவதன்மேலாண்மலினையவளையுடைநயவாத
மகளையளித்தவனேற்றோனொடுநரகின்வசித்திடுவான். (௯)

ஆதலாற்றக்கபடியறிந்துதானங்கொடுத்தி
யீதலாலவகையவெச்சமுநன்காற்றிடுதி
காதலாற்சிவநிசியிற்கருதுவிரதமும்புரிதி
யோதலாற்பொலிபெருமானுமங்களுரைத்திடுதி. (௧௦)

இன்னுமறையியம்புவனவெல்லாநீயாற்றுவையேற்
றுன்னுநரகத்தழுந்தலொழிந்தியர்ங்கதியுறுவோ
மன்னுமிதுசெய்யாயேன்மற்றெமக்கோர்கதியில்லை
பொன்னுநிகராவருமைப்புதல்வவெனப்பிதிரர்சொற்றார். (௧௧)

சொற்றமொழியனைத்துமுளத்துயர்மூளச்செவியேற்றுக்
கொற்றமுறுபுகழ்வாய்ந்தகுண்டினகோத்திரத்துதித்தா
னற்றமுற்றிவர்துன்பமகற்றுவேனெனத்துணிந்து
பொற்றமனையகம்புகுந்துபுந்தியுறவிதுசூழ்வான். (௧௨)

எத்தலநம்மெண்ணமெலாங்கைகூடவெளிதருளு
மெத்தலநம்மெண்ணத்துமேலாகவினிதருளு
மெத்தலமெண்ணியதுவிரைந்தெய்திடப்பேரருள்சுரக்கு
மெத்தலநாமெய்துதலென்றெண்ணிமனமுழிதருவான். (௧௩)

காசிமுதலகலிடத்துக்கணக்கில்லாத்தலமுள்ள
வாசியுளதிதுவென்றுதுணிந்திலேமற்றிதனைப்
பேசிவரையறுத்திதுவென்றுரைப்பார்யார்பெருந்துயரம்
வீசியவரின்பமுறவிளைத்திடலென்றெனக்கவல்வான். (௧௪)

அப்போதுசிவபெருமானருள்போலவழலினுந்தீ
வெப்போதுநரகுழப்பார்முன்புரிநல்வினைபோல
முப்போதுஞ்சிவனடியேமுன்னுபுகாலங்கழிக்குந்
தப்போதுதராவீணைமுனியாங்குச்சார்ந்தனனால். (௧௫)

அந்தமுனிவனைவணங்கியான்றசவுண்டின்னியனுஞ்
சந்தமுனிபிதிரர்நரகுழப்பதுவுஞ்சாற்றியது
முந்தவவர்துயரனைத்துமுருக்குவதற்குன்னியதுஞ்
சிந்தலிலாவகையெடுத்துச்செப்பினனவனுரைப்பான். (கரு)

வேறொன்றுகருதாதுமிளிர்கவுரிமாயூரப்
பேறொன்றுதலத்தடைதிபிரானெதிரோர்தீர்த்தமுள
தாறொன்றுசடையானுமதன்பெருமைசொலமாட்டா
னீறொன்றுமதின்மூழ்கினெப்பெரியபாதகமும். (கஎ)

அன்னதிருப்புனலாடியத்தலத்தோர்நாள்வசித்தி
முன்னவனைத்தரிசித்திமுப்பொழுதுமிதுசெய்யி
னென்னபெரும்பாதகமுமிரிந்தவர்மேல்வீடுறுவார்
சொன்னபடிசெய்யென்றான்றுணிந்தனன்மற்றம்முனியும். (கஅ)

மற்றவனைவிடைகொண்டுமாயூரத்தலம்புகுந்து
சொற்றபடிவள்ளலார்திருமுன்னர்ப்புனறோய்ந்து
பற்றமையவொருபொழுதுபட்டினியுற்றங்கமர்ந்தான்
முற்றவுணரனையாளைமுப்பொழுதுங்கைதொழுது. (கக)

இந்தவிதமிவனொருநாளிருக்கநெடுநரகுழக்கும்
பந்தமிகுபிதிரரெலாமத்துன்பம்படனூறிச்
சந்தமிகுசிவலோகத்தடைகின்றார்தாமுவக்க
வந்தமகன்றனைக்கண்டார்மாயூரத்திதுசொல்வார். (உ0)

இத்தலத்துநீயியற்றுமிருந்தவத்தாலிடர்நீங்கிக்
கைத்தலத்தாமலகமெனக்கதிகண்டோம்புண்ணியங்க
ளெத்தலத்துமிதுபோலவியைப்பதுவேறில்லையினி
முத்தலத்தும்புகழ்பரம்பவாழிநீயெனமொழிந்து. (உக)

கண்காணவவர்சென்றுசிவலோகங்கைக்கொண்டார்
பண்காணவிசைமுனிவன்பகர்ந்தமொழிநனிவியந்து
மண்காணத்தவம்புரிந்தமாமுனிவனத்தலத்தே
தண்காணப்பெருமகிழ்வுதலைக்கொண்டுவீற்றிருந்தான். (உஉ)

முன்பிதிரருரைத்தபடிமொழிபலதானமுங்கொடுத்தா
னன்புசெறிசிவநிசிமுன்னுயவிரதமுமுடித்தான்
றுன்புதன்பேருரைப்பார்க்குமில்லையெனவுலகுசொல
வன்புதவத்துறக்கொண்டமுனிபன்னாளவண்வசித்தான். (உங)

ஒருதினஞ்செய்திடுதவத்தாலுறுபிதிரரளவுருவிக்
கருதியதின்மேலாயகதியுற்றாரொனிற்கோடு
பொருதிரைநீருலகிடையத்தலம்போலுமொன்றுளதோ
சுருதியுணர்முனிவனுந்தன்றொன்னகர்ப்போய்வாழ்ந்திருந்தான். (உச)

கவுண்டின்னியப்படலம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் கூ0க.

யோகவித்தமப்படலம்.

கரைபொருதிரைவிருத்தகங்கையந்தீரத்துள்ளான்
விரைகெழுபனவன்யோகவித்தமனென்னும்பேரான்
றரைபுகழனையானில்லாள்சண்டியென்றுரைக்கும்பேராள்
புரைதபுமனையார்க்குள்ளபுத்திரர்பல்லோர்மன்னோ. (௧)

சாதுவாமறையோனேனுமுன்செய்தீவினைச்சார்பாலே
தீதுசான்மிடிக்கோட்பட்டுச்செறிதருபுதல்வராலு
மோதுநற்குணமொன்றில்லாச்சண்டியென்றுரைப்பாளாலு
மோதுமாதுயரமுற்றான்மிடியுறின்முளைப்பதென்னே. (௨)

மாதவமுயன்றுசெய்துவறுமையைமுருக்குவேனென்
றாதரமுளத்துமல்கவருந்தவமுயலுங்காலை
மேதகுவானநாடர்விரிஞ்சனுக்குரைத்தாரந்தப்
போதன்வந்தெதிரேநின்றான்பொருக்கெனத்தவனுணர்ந்தான். (௩)

எழுந்தடிபணிந்துநின்றவிருபிறப்பாளற்பாராச்
செழுந்தவயாதுவேண்டுஞ்செப்புதிதருதுமென்றான்
விழுந்தெழுந்தையயானோவறுமையான்மெலிவுபூண்டே
னழுந்துமத்துயரநீங்கத்திருவநன்களித்தியென்றான். (௪)

பிரமனுமுறுவல்செய்துபெருந்திருவளித்தோமந்த
வரமிகுதிருவையார்க்கும்வழங்கிவாழென்றுபோனான்
கரவறுமறையோன்பின்னர்க்களிப்புறுமனத்தனாகிப்
பரவுதன்னிருக்கைபுக்கான்பாலராதியருமொய்த்தார். (௫)

யாவருந்திருவம்பெற்றதறிதரவெடுத்துக்கூறித்
தாவருமறையோன்வாழ்நாட்டடங்கொள்கோதாவரிப்பான்
மேவரும்விருப்பினோடுமேவினன்றீர்த்தமாட
வோவருங்கரையுட்பக்கமிடிந்தாற்றினுறவீழ்ந்தன்றே. (௬)

உள்ளுறவிழுதலோடுமோரொலியெழுந்ததாங்கு
நள்ளுறவிதுவென்னென்றுதெரிதரநடந்தானைய
னெள்ளுறவில்லாச்செம்பொன்வரையெதிர்ப்பட்டாற்போலத்
தள்ளுறமுடியாச்செம்பொன்வைப்பெதிர்தயங்கக்கண்டான். (௭)

கண்டலுமகிழ்ச்சிபூண்டாங்கிருந்தவையாவுங்கைக்கொண்
டாண்டதன்மனையினுய்த்தானதுகனவினுங்காணாத
நீண்டபல்புதல்வரோடுசண்டியுநிரம்புமோகை
பூண்டனண்மறையோன்றன்னைப்புல்லுபுதுதித்தாளன்றே. (௮)

மறிவருஞ்செல்வம்பெற்றமறையவன்வருவார்யார்க்கு
முறிவருமன்னநல்கிவேட்டனமுகந்துவீசி
யறிவருந்தருமமெல்லாமாற்றுதற்குள்ளங்கொண்டான்
பிறிவருஞ்சண்டியென்பாளஃதுளம்பேணாளானாள். (௯)

புதல்வருமனையராகமறையவன்மணம்புழுங்கி
முதலவனருளாலிந்தமுகப்பருஞ்செல்வம்பெற்றோ
மிதமுறநடவேமென்னிலென்பயனிதனாலென்று
கதமுறும்வெயர்வின்மூழ்குங்கலங்கிமூர்ச்சித்துவீழும். (௧௦)

அடியொருபதினுன்குள்ளதாமெழுமுழக்கோலாலே
நெடிதளந்திட்டவொன்பானுயிரங்குழிநிலந்தா
ஞெடிவில்கோகன்னமென்னும்பெயர்பெறுமுதுதானஞ்செய்
படியறுபலத்தினுலேபண்புறக்கொடுத்தமேலோன். (கக)

ஒத்தவந்நிலநெருக்கமுற்றுறவமைந்தபைங்கூ
ழெத்தனையுள்ளவாகுமத்தனையாண்டுமட்டும்
புத்தமுதயிலும்வாழ்க்கைப்புலவர்வாழ்சுவர்க்கமேவி
வித்தகமருவிவாழ்வன்வேறினியுரைப்பதென்னே. (கஉ)

பயன்படுகல்வியில்லான்பிணிதவிர்சரீரம்பற்று
னயந்தருகுணச்சாதுக்கணட்புறுன்சொற்றவார்த்தை
வியந்துகொண்மனைவிமைந்தர்மேவுறுனிவன்மண்மேலா
லியங்குபுதிரிவானேனும்பிரேதமென்றிசைக்கலாமால். (கங)

வருவிருந்தூட்டலின்றேன்மனையறமென்பதென்னும்
பொருவருமறையோராதிப்புண்ணியரடைந்தாலொன்னில்
வெருவருமுள்ளத்தோடுமிக்கவமானஞ்செய்வா
ளொருவருஞ்சண்டியாமித்தீயளையொழிவதென்றியாம். (கச)

தகுகுணந்தவிரில்லாளைச்சார்ந்துலகுள்ளோர்யாரு
நகுமுகத்தினரோயாகநயந்துவாழ்வதினுஞ்சீவ
னுகுதிறமெதனுலேனுமுடம்பினையொறுத்தனன்றுஞ்
செகுதிறற்றுன்பம்யாவுஞ்சேராதுன்மரணமென்றே. (கரு)

மறைமுதலன்புபூண்டமறையவராதியோரை
பொறையறவவமானஞ்செய்பொல்லாங்குவறிதுபோமோ
கறையறுமறையோர்தம்மைமதித்திடாக்கயமையாலே
நிறைதிருப்பெற்றும்பாம்பாய்நெடுநிலநகுடன்வீழ்ந்தான். (கசு)

என்றிவைபலவுமெண்ணியினிச்செயல்யாதுமில்லை
நன்றியின்மனைவிமக்களொடுநயந்திருக்குங்காறுந்
துன்றியநரகேயன்றிச்சுவர்க்கமென்பதுதானுண்டோ
வொன்றியென்னுயிருக்காயவுறுதியேசெய்வேனென்று. (கஎ)

மனைமகார்முதலியோரைத்துரும்பெனமதித்துப்போக்கிப்
புனைபொருள்வேண்டுமாறுபொருந்துதன்கையிற்கொண்டு
கனைகுரலெழுவிருத்தகங்கையந்தீரநீந்தித்
துனைதரவவாசிநோக்கிநடந்தனன்றூய்மைவாய்ந்தான். (கஅ)

சாத்திரமுறையேபற்பருனமுங்கொடுப்போமென்னிற்
பாத்திரமாவார்முக்கட்பரனடிக்கன்புபூண்டார்
மாத்திரம்பொலியவர்க்குமாத்தலத்துதவனன்றிக்
கேத்திரஞ்சிறந்ததென்றெக்கிளர்ச்சிகொண்டுணர்வேனென்னு. (ககூ)

ஆய்தருமுளத்தனுயபதிகனுக்காகாயத்தே
தோய்தருதிருவாக்கொன்றுசுந்தரமாயூரத்தி
னேய்தரவடைதியெல்லாமெண்ணியபடிசெயென்ற
தோய்தராவுவகையுற்றுன்யோகவித்தமனென்பானே. (உ0)

முன்னருஞ்சிறந்ததென்றுமொழிதரக்கேட்டதுண்டு
பின்னருமருள்வாக்கஃதேபேசிடிற்பேசலென்னே
நன்னரும்பரைமுன்னானோர்நயப்பதத்தலமொன்றேயென்
றென்னரும்புகழுந்தூயோனெய்தினானொருமாயூரம். (௨௧)

மன்னுமாயூரத்தெய்திவள்ளலார்திருமுன்னாகத்
துன்னுமாதீர்த்தத்தாடிச்சுந்தரநீறுபூசிப்
பன்னுமாமறையோர்முக்கட்பரனடிக்கமலமென்று
முன்னுமாதவத்துமற்றோர்முகந்திடத்தானமீவான். (௨௨)

பூதானஞ்சிலர்க்குச்செய்தான்புனிற்றிளங்கன்றினோடு
கோதானஞ்சிலர்க்குச்செய்தான்குளிர்மணஞ்செய்வான்செம்பொன்
மாதானஞ்சிலர்க்குச்செய்தான்வசித்திடுகிரகமென்னு
மீதானஞ்சிலர்க்குச்செய்தான்மற்றவும்விருப்பிற்செய்தான். (௨௩)

இவ்வகைத்தானமெல்லாமியல்புறச்செய்தபின்ன
ரவ்வியமவித்தசிந்தையந்தணன்மாயூரேசன்
செவ்வியமலர்த்தாள்போற்றித்தெரிசனஞ்செய்யப்புக்கான்
வெவ்வியபாவம்போக்குங்கோபுரமேயவாயில். (௨௪)

மன்னியவங்குத்தாழ்ந்துவளம்பொலிகோயில்புக்குத்
துன்னியவனப்புவாய்ப்பச்சூழ்ந்துபின்றிருமுன்புக்குப்
பன்னியவள்ளலாரைத்தரிசித்தான்பரிவுதீர்ந்தா
னன்னியமில்லாத்தேவியஞ்சனாயகிமுன்சென்றான். (௨௫)

உருகிநெஞ்சுடையமேனியுரோமங்கள்சிலிர்ப்பவின்பம்
பெருகிநாக்குழறவெல்லாம்பெற்றவட்காணப்பெற்றான்
றிருகியலாதசிந்தைத்திருமறைமுனிவன்பின்ன
ரருகியலாதவாங்குவசித்திடுமாசைபூண்டான். (௨௬)

இன்னணம்பன்னாண்மேவியெம்பிரான்மாயூரேசன்
றன்னருள்விரவியின்பமுத்தியிற்றலைப்பட்டுய்ந்தா
னன்னவன்மாயூரத்தினறஞ்செய்துவசித்தவாற்றாற்
சொன்னபன்மகாருமில்லுஞ்சுவர்க்கத்துவாழ்க்கைபெற்றார். (௨௭)

யோகவித்தமப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௩௬.

சுசன்மப்படலம்.

பாயநான்மறைப்பரப்புணர்ந்தவ, னாயமாமகமனைத்துமாற்றினான்
காயவானவர்களிக்கவாழ்தரு, தூயவேதியன்சுசன்மனென்பவன். (௧)

சத்தவேதமுற்சகலநூல்களு, மொத்ததாமெனவுணர்விற்றெள்ளியு
நித்தமாதிப்பல்வினைநிரப்பியுஞ், சித்தசுத்தியோர்சிறிதுமுற்றிலான். (௨)

இனியியற்றுவதென்னேயென்றுபூங், கனிவிராவியகற்பநீழல்வாழ்
புனிதவேந்தனைப்புந்திசெய்தனன், றனியனாயவன்முன்புச்சார்ந்தனன். (௩)

எனையவாவியதென்னையென்றலு, மனையனாய்பலகருமமாற்றியுந்
தினையோர்பாதியுஞ்சித்தசுத்தியைப், புனையவெய்திலேன்புலந்துமாழ்கினேன். ()

செம்மைமேவியசித்தசுத்தியை, யிம்மையேயினிதெய்தியுய்ந்திட
மும்மைமாமதமுழக்கருதவெண், கொம்மையானையாய்கூறுகென்றனன். (௫)

என்றபோதவனிதயத்துள்ளுற, வென்றமால்விடைவிமலனைச்கொளா
வொன்றயாமெவனுனைசெய்வாமெனத், துன்றவோதியாற்சூழ்ந்துகூறுவான். ()

பாரவாவமேம்பட்டகவுரிமா, யூரமென்பதோருத்தமத்தல
மாரமான்மியமளவிலாதது, நேரயாவருநினைத்ததீவது. (எ)

கஞ்சமேவியகடவுணன்முகன், றஞ்சமேயெனச்சார்ந்துபோற்றிட
நெஞ்சம்வேட்டதோர்சிருட்டிநேர்தர, வஞ்சமொன்றிலாவண்ணமீந்தது. (அ)

பதியலூரிடைப்பரவித்தக்கன்வா, னறியவாற்றியவம்மகத்தில்யாஞ்
செறியமேவியதீங்குநீங்குபு, முறியவொல்லையின்முறையிற்செய்தது. (கூ)

மாயவன்முதல்வானவாழ்க்கையர், நேயமாரவாங்கெய்திநீர்மையிற்
றூயபூசனைதொடங்கியேத்திடப், பாயயாவையும்பண்பினீந்தது. (க0)

அம்மையேமயிலாகியாங்கடைந், தெம்மையாடருமிறைவற்போற்றுபு
செம்மைசேரவாஞ்சிறப்பினெய்திட, வெம்மைதீரருள்விளைத்தமாண்பது. (கக)

தாருமாவனத்தையலாரோடு, சேருமாதவர்செருக்குமுற்றெழிந்
தோருமேன்மைமாயூரமாத்தலஞ், சாருமேன்மையாற்றலைப்பட்டார்கதி. (க௨)

தக்கனென்பவன்றனையர்யாருமே, தக்கவீணையோன்சாற்றுமாற்றத்தாற்
றக்கவத்தலஞ்சார்ந்துபோற்றிநந், தக்கசிந்தனர்சார்ந்துளார்கதி. (க௩)

யோகவித்தமனென்னுமுத்தமன், பாகமெத்துமத்தலத்தின்பாலடைந்
தேகனைப்பணிந்தெண்ணிருனத்தான், மோகம்விட்டுயர்முத்திசார்ந்துளன். (க௪)

இனியசீர்க்கவுண்டின்னியப்பெயர், முனிவனத்தலமுன்னிப்போற்றுபு
தனியளற்றிலாழ்பிதிரர்சாந்தராம், புனிதராய்க்கதிபொருந்தவுய்த்தனன். (க௫)

தீயவாகியகனவுசெய்பல, னேயமாதரார்நிகழுந்தீமையே
மேயநாண்முதுக்குறைதலால்விளைந், தாயதீப்பலமனைத்துமாயுமே. (கசு)

தூமகேதுமுற்றோற்றத்தால்வரு, நாமமாரஞரனைத்துநாசமா
மேமமாருமாயூரமெய்திடுங், காமமேவிடிற்கணத்திலுள்ளரோ. (கஎ)

சாந்திராயணந்தகுகிரிச்சிர, மாய்ந்தமற்றுளவிரதமாற்றலி
னேய்ந்தநற்பலமிசைத்தவத்தலந், தோய்ந்தவெல்லையேசுரக்குமென்பரால். கஅ

அத்தலத்தின்மேலாயவோர்தல, முத்தலத்தினுமொழியினில்லையா
லெத்தலங்களுமிதற்கொப்பாகுமோ, கைத்தலத்திநெல்லிகங்காண்டியால். (ககூ)

அஞ்சனாயகியம்மையோடுமோ, ரெஞ்சலின்றியேயென்றுமேவுவார்
மஞ்சலேயெனுங்கண்டவள்ளலார், துஞ்சலின்றுபேருள்சுரந்தரோ. (௨0)

வள்ளலாரெதிர்வயங்குதீர்த்தமொன், றுள்ளலாரொலாமுலகமுள்ளலார்
நள்ளலாரொலாமின்பநள்ளலார், விள்ளலாரொமதுள்ளம்விள்ளலார், (௨௧)

பிறங்குமாவயிற்பிரமதீர்த்தமொன், றறங்குலாவுமற்றதன்சிறப்பினை
நிறங்குலாவுமற்றெவர்நிகழ்த்துவார், மறங்குலாவுதறவிர்க்குமற்றது. (௨௨)

ஏத்துகாவிரியிடபதீர்த்தச்சீர், பாத்தியாமெலாம்பகரற்பாலமோ
சீத்துவல்வினைசிதைக்கவல்லது, கோத்துநன்னலங்கொளக்கொடுப்பது. (௨௩)

அந்தமாத்தலமடையின்வல்வினை, சிந்தவாய்ப்பதுசித்தசுத்தியோ
முந்தயாவையுமுடியுமென்றுதன், சந்தவானுலகத்துச்சார்ந்தனன். (௨௪)

அனையன்சென்றபினான்றவேதியன், புனையவல்லமாயூரம்புக்கண
ணினையவின்பருணிமலனுக்கெதிர், துனையவேகிநற்றீர்த்தந்தோய்ந்தனன். (௨௫)

நீறுபூசினனிகழுமாமறை, கூறுகண்மணிகுலவப்பூண்டன
னாறுசேர்சடையமலவள்ளலா, ரேறுசீர்த்திருமுன்னரெய்தினான். (௨௬)

கண்டுதாழ்ந்தனன்கசிந்தெழுந்தனன், மண்டுகாதலிற்றுதிவயக்கினன்
றொண்டுபூண்டவர்க்கருளுஞ்சுந்தரி, யண்டுமஞ்சனாயகியைச்சார்ந்தனன். (௨௭)

ஆங்குமிங்ஙனமன்பிற்போற்றினன், வீங்குமானந்தமிகுபெருக்கெழத்
தேங்குமேதுவாஞ்சித்தசுத்திபூண், டோங்குமாமறையோனுவந்தனன். (௨௮)

மாரவேளுடல்பொடித்தவள்ளன்மா, யூரநாயகனருளுறுத்தலாற்
சாரவானவர்தக்கமாதவர், பேரவாவுறுமின்பம்பெற்றனன். (௨௯)

சிந்தவல்வினைசித்தசுத்தியை, வந்தகாலையேவழங்கவல்லது
பந்தம்பாற்றுமாயூரமென்றிடி, லிந்தமாத்தலமெதனோடொப்பதே. (௩0)

சுசன்மப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௯௬௬.

காகபூசையுரைத்தபடலம்.

மின்னுபொன்மேருவிலங்கலினேர்பான்
மன்னுமோராலமரத்துறுபொந்திற்
பொன்னுமொவ்வாமனம்வாய்ந்தபுசண்ட
னென்னுமோர்காகமிருந்ததையன்றே. (௧)

அத்தகுகாகமனேககற்பங்க, ளொத்தக்கணப்பொழுதென்றுளமுன்னுஞ்
சித்தவிகற்பமிலாவதைத்தேர்ந்தார், முத்தவசிட்டன்முதற்பலரம்மா. (௨)

மற்றதைக்காண்டிடும்வாஞ்சையுளத்தி, னுற்றனரோர்பொழுதுற்றனராங்குக்
கற்றவர்வந்தமைகாகமுநோக்கிப், பெற்றதுநன்குபிறங்குமகிழ்ச்சி. (௩)

வருகவிருக்கெனவாயுரைசெய்ய, வருகினிருந்தனரத்தகுகாலைப்
பொருவில்கற்பம்பலபோயதுகண்ட, வுருவுளைகாரணமோதிதற்கென்றார். (௪)

வே று.

என்றலுங்காகங்கூறுமுலகமீரேழுமேத்த
நன்றமைமாயூரத்தினம்பிரான்றிருமுன்றீர்த்த
மொன்றநன்காடியந்தவுத்தமப்பிரானைப்போற்றி
வென்றவத்தலம்வசித்துமேதகவமர்ந்தேன்பன்னாள். (ரு)

அதுபொழுதமலமூர்த்தியாரருள்சுரந்துதோன்றிக்
கதுமெனவென்னைநோக்கிக்கற்பமெண்ணில்லகண்டு
முதுபுகழ்ச்சித்தசுத்திமுயங்கிமெய்ஞ்ஞானம்வாய்ந்து
சதுமுகன்முதலோரோத்தத்தவாதினிதிருத்தியென்றான். (சு)

உறுகற்பம்பலகண்டும்மோருரோமமுங்கழிதராமை
பெறுசிற்பம்வாய்ந்தமேனிபெறலருமுண்மைஞான
மறுவற்றவிதந்தந்தன்றோமாயூரமென்னவின்ன
லறுசுற்றத்தோடும்வைகுமனையபுள்ளுறைக்குமன்றே. (எ)

எனக்குமுன்னளவில்கற்பங்கண்டஃதிருப்பதாலென்
றனக்குநல்கியதுபோலத்தலம்பலர்க்களித்ததுண்டு
மனக்குநன்றுயவம்மைமயூரமாயங்குப்பூசை
கனக்குமன்போடுசெய்ததிருதரங்கண்டேன்யானே. (அ)

மலர்மிசைவ்தியும்புத்தேள்வயங்குமைமுகங்களோடு
பலர்புகழ்மாயூரத்தொன்பதுதரம்போற்றக்கண்டே
னுவர்தலற்றொருமுகந்தீர்ந்தொருபதுதரம்பூசித்துக்
கலர்கொளற்கரியமேன்மைகைக்கொடுபொலியக்கண்டேன். (கூ)

மாயவன்சுத்தவெள்ளைவடிவனாய்மாயூரத்துத்
தூயவன்சரணம்பத்துத்தரந்தொழுதேத்தக்கண்டே
னாயவன்கரியமேனியடைந்துபன்னிருகாலங்கு
மேயவனாகிப்போற்றவிழிகொடுதெரியக்கண்டேன். (க0)

இனையவர்புரிந்தபூசையித்துணையன்றிக்காணேன்
முனையவெங்குலிசத்தோனுமொய்த்தபன்மனுக்கடாமுந்
தனையவந்தமரரொன்றுசொலப்படுமிலேகராய
வனையவர்போற்றக்கண்டவதற்குமோரளவுமுண்டோ. (கக)

பரசிவனென்றோவன்றேயுள்ளமாயூரப்பண்பின்
வரமுறவுரைப்பார்யாரோவல்லவராவரின்னும்
புரமொருமூன்றுஞ்செற்றோன்கயிலையிற்பொருந்துநாண்முற்
றிரமுறவினையதாயகேத்திரஞ்செறிந்துவாழ்வான். (கஉ)

பொருந்தவப்பெருமான்செய்தபூரணவருளினாலே
திருந்தவித்தகையபூமிசெறிபெருஞ்சாம்பராகி
யிருந்ததுநானனேகதரங்கண்டேனின்னுந்தேண்மி
னருந்தவமுனிவீர்வேறுற்றமைந்ததும்பல்காற்கண்டேன். (கங)

கடுந்தொழிலவுணன்பூமிகவர்ந்ததும்பல்காற்கண்டே
னடுந்தொழில்வராகமுன்போலமைத்ததும்பல்காற்கண்டேன்
படுந்தொழில்வசிட்டோரும்போலெழுவரைமுன்பார்த்தேன்
விடுந்தொழில்வியாசர்வேதம்விரித்ததும்பல்காற்பார்த்தேன். (கச)

பாற்கடலமரர்கூடிக்கடையப்பன்னிருகாற்கண்டேன்
மாற்கவினிரோணுகைப்பான்மால்பிறப்பறுகாற்கண்டே
னூற்படுக்கையினுன்புத்தனுகமுப்பதுகாற்கண்டேன்
மேற்படுபெருமான்பல்காற்றிரிபுரம்வீப்பக்கண்டேன். (௧௫)

மாயவன்பாணமாகிவந்ததுமெண்காற்கண்டேன்
றூயவம்மால்பன்னோர்காலிராமனுய்த்தோன்றக்கண்டே
னுயமற்றனையான்கண்ணனுகவீரெண்காற்கண்டேன்
பாயவன்பார்த்தனோடுபரமன்போரொண்காற்கண்டேன். (௧௬)

சுந்தரன்காமவேளைச்சுட்டதுமுக்காற்கண்டே
னந்தகன்வீரஞ்செற்றதமைதரவிருகாற்கண்டேன்
மந்திரமறையோன்சென்னிமடித்ததுமெண்காற்கண்டேன்
முந்தியமாயனெய்த்தேர்முகந்ததும்பல்காற்கண்டேன். (௧௭)

இவைபலகாண்டலாலேவந்ததுமெனக்கொன்றில்லை
நவைசெய்யிவ்வுடம்புதாங்குநசைசிறிதேனுமில்லை
குவைபடுதத்துவத்தின்கோளெலாமுதறிப்போக்கிச்
சிவையொருபாகன்றாளேசேருதற்கெண்ணங்கொண்டேன். (௧௮)

உடம்பொடுமிருக்குங்காறுமுறக்கநீத்திருக்கவேண்டு
மடம்படுமுறக்கமுற்றால்வரும்பலபிறவிநீவி
ரிடம்படுமாயூரத்தினெந்தையெம்பெருமாற்சார்ந்து
திடம்படுமுறுதிபெற்றுச்சிறக்கவென்றுரைத்ததன்றே. (௧௯)

உரையதுகேட்டபோதேயுவந்தனராகியாருந்
தரைபுகழ்மாயூரத்தைச்சார்ந்துநற்றீர்த்தமாடி
வரைசிலையாகக்கொண்டவள்ளலைத்தொழுதுவாழ்த்திப்
புரையறுபேரானந்தப்புணரியிற்றோய்ந்துவாழ்ந்தார். (௨௦)

தண்ணியபெருமாயூரத்தலப்புகழின்னதென்னிற்
கண்ணியவனந்தனாலுங்கரைதரமுற்றுங்கொல்லோ
பண்ணியதவத்தீரந்தத்தலத்தினைப்பரவாரொல்லா
மண்ணியபுலையரோமற்றவர்துயர்க்கொழிவுமுண்டோ. (௨௧)

காகபூசையுரைத்தபடலம் முற்றிற்று.

ஆ_திருவிருத்தம் ௯௦௭.

வயிரவபூசைப் படலம்.

எண்ணியவெண்ணியாங்கேயடியவரெய்தநல்கும்
புண்ணியமாயூரேசன்பொலிதிருவருளாற்சிட்டி
நண்ணியபிரமன்பின்னரயர்த்துநாமுதலேயென்றோர்
திண்ணியசெருக்குக்கொண்டான்சிறியர்தஞ்செய்கையென்னே. (௧)

இவனிலையினையதாகவிணர்த்துழாய்மோலிமாலுஞ்
சிவனருளுணரான்யாமேசிருட்டியாதிகள்செய்வோமெப்
புவனமுநம்மதாணைபொருந்துமென்றெண்ணிப்பூமே
லவனினுஞ்செருக்குக்கொண்டானிவனுமற்றவன்பிதாவே. (௨)

இருவர்தமுள்ளக்கொள்கையின்னதேயாகவோர்நாண்
மருமலர்க்கமலத்தோன்பான்மாயவன்சென்றானன்னா
னிருண்மலச்செருக்கினாலேயிருக்கைநின்றெழான்கைகூப்பா
னொருமுகமனும்பேசானாயூமனாத்திருந்தானம்மா. (௩)

மாயவனதனைக்கண்டுமலரவன்வதனநோக்கி
யேயுமென்வரவுகண்டுமிருக்கைநின்றெழுந்திலாய்நீ
பாயவந்தனமுஞ்செய்யாய்பகர்ச்சியுமில்லாயின்று
மேயதென்னுனக்கோதென்றான்மற்றவன்விளம்பலுற்றான். (௪)

வந்தநீயெனக்குமுந்திவந்தனஞ்செய்தாயில்லை
யந்தவோர்குற்றநின்மேலாகவும்பொறுத்துளேன்பா
லிந்தவாறுரைத்தல்செய்தாயிச்செருக்காமோவென்றான்
சந்தமாமறைநூல்வல்லான்றன்செருக்குணரானானன். (௫)

உன்னையான்வணக்கஞ்செய்வதுண்டுகொலுரைத்தியென்றான்
பின்னைவாழ்நிறத்தானகஞ்சன்பேதமாம்பிறவிதோறு
நின்னையான்படைத்தேனெல்லாவுலகமும்படைத்தேனீப்பி
லென்னைநீகாக்குமாறிங்கியம்புதியென்றுசொற்றான. (௬)

முந்திநிற்படைத்ததெண்ணாய்முறைதபமொழிதல்செய்வாய்
புந்திசற்றில்லாயிந்தப்புன்மையென்மைந்தவென்றா
னுந்திபூத்தவன்படைத்ததுண்டுகொலென்றுகோப
நந்தியோரறையறைந்தானாரணன்கொடிற்றிற்கஞ்சன். (௭)

கதுப்பறையுண்டமாயோன்கண்சிவந்தெழுந்துகஞ்சன்
விதுப்புறக்கபோலந்தோறும்வெய்தெனவறைந்தானாக
மதுப்பதுமத்தினானுமாண்டதன்றண்டங்கொண்டு
சதுப்புயமுடையான்மேனிதடித்திடத்தாக்கினானே. (௮)

மாயனுந்தனதுதண்டம்வலிக்கரத்தெடுத்துவீசிப்
பாயமென்மலரோன்மேனிபதைத்திடப்புடைத்தானாக
வாயவக்காலைவிண்ணோரஞ்சினர்மகவானாதி
மேயவெண்டிசைகாப்பாளர்வெயர்த்தனர்கயிலைசார்ந்தார். (௯)

நந்தியைவணங்கிப்போற்றிநயந்தவனனுஞைபெற்று
முந்தியுட்புகுந்துபெம்மான்முன்பணிந்தெழுந்துநின்று
புந்தியின்மலரோன்மாயோன்புவனகாரணர்தாமென்றே
நந்தியசெருக்கினோராய்க்கலாய்த்தனர்நடுக்கமுற்றோம். (௧0)

இருவர்தஞ்செருக்குமாயவிப்பொழுதருடியென்று
பொருவிலெண்டிசைகாப்பாளர்புகன்றனர்வேண்டலோடு
மொருவருங்கருணைமூர்த்தியுலககாரணனெம்பெம்மான்
வருகுறுநகையனாகிவயிரவற்றோற்றினானே, (௧௧)

தோற்றியவடுகப்புத்தேடுணைமலரடியிற்றாழ்ந்து
போற்றியகையனாகிப்புரிபணியென்னையென்னச்
சாற்றியமலரோன்மாயோன்றலைக்குமேற்கொளுந்தருக்குக்
காற்றியநினைத்தோமென்றானவனதுகருத்துட்கொண்டான். (௧௨)

முத்தலைச்சூலமேந்திமூண்டகன்மால்கலாய்க்கு
மத்தலையடைந்தானாகவனைவருந்தொடர்ந்துசென்று
ரித்தலையினையனெய்தற்கேதுவென்னென்றுள்ளஞ்சித்
தத்தலையுறங்குமாயோன்மறைந்துவைகுந்தஞ்சார்ந்தான், (௧௩)

அதுகண்டுமச்சுறுமலம்புயன்வடுகற்பார்த்தென்
முதுமைந்தவருதியென்றான்மொழிந்தவாவருவேனென்று
கதுமெனச்சினந்துசென்றுகையுகிரொன்றனலைப்
பதுமனோர்தலையிடந்துவீழ்த்தினான்பதறிவீழ்ந்தான். (௧௪)

வீழ்ந்தவனுய்யவையன்விளாந்தருள்செயவெழுந்து
தாழ்ந்தனனிற்பவெள்ளுந்தலையிழந்ததனையோர்ந்து
வாழ்ந்தனையிருத்தியென்றமடிதலைகையிலேந்திச்
சூழ்ந்தவைகுந்தம்புக்கான்றேற்றினான்விடுவச்சேனன். (௧௫)

அனையனைச்சூலத்தேற்றேயச்சுதன்முன்புசென்று
முனையவச்சூலந்தன்னாற்கோதண்டந்திறப்பமொய்த்து
வனையவாய்வழியுநெய்த்தோர்வண்கரக்கபாலத்தேற்றா
னினையநாள்பல்லசெல்லவிளைத்துமூர்ச்சித்துவீழ்ந்தான் (௧௬)

மங்கலந்தருதியென்றுமாமகளிரந்துவேண்ட
வங்கவட்கிரங்கியன்னாற்காருயிர்கொடுத்துப்பின்னர்
மங்கியவிடுவச்சேனன்றனக்குமுன்மாட்சிநல்கிக்
கங்கைசூழ்கிடந்ததெய்வக்காசிமாநகரமுற்றான். (௧௭)

உற்றவன்விசுவநாதனெண்மலர்ப்பாதம்போற்றக்
கற்றவர்புகழ்வோயிந்தக்காசிமாநகரின்மேலாய்
நற்றவர்வணங்கவென்றுநாமமர்தானமொன்று
மற்றதுபொன்னிசூழுமாயூரமென்பதம்மா. (௧௮)

ஆயவத்தலத்தையண்மியாங்கெமைப்பூசையாற்றி
நேயமிக்கிருத்தியென்னநெரோலெனவடுகப்புத்தே
யேமெய்த்தவமுள்ளாரோசூழுமாயூரஞ்சார்ந்தா
னுயன்முற்பொலியாநிற்குநலத்தகுதீர்த்தந்தோய்ந்தான். (௧௯)

விள்ளலைக்குறித்துநின்றமேன்மையோருளத்தினீங்கா
வள்ளலைக்கருணைச்செல்வியஞ்சனாயகியைமாறா
துள்ளலத்தெழுபேரன்பாலுருகுபோற்றிநின்றான்
றெள்ளலைக்குறிக்குமையனெதிர்ந்திதுசெப்புகின்றான். (௨0)

மைந்தநீயின்றுதொட்டுவயிரவகாலனாகி
யுந்துகேத்திரத்துக்காவலொருங்குபூண்டமர்திகையிற்
சந்தமாங்கபாலநெய்த்தோர்தக்கநின்கணத்தார்கொண்டு
நந்தநன்களித்தியென்றான்வடுகனுமதுநயந்தான், (௨௧)

கேத்திரத்திறந்தோர்தம்மைக்கிளர்நமன்கைக்கொடாத
மாத்திறல்வடுகத்தேவையாயிடைவழுத்துவோர்க
ளேத்துறுநரகவாதையிடர்ப்படார்பாவரோனு
மூத்தவனுயவன்னான்முருக்கிடவுயர்வரன்றே. (௨௨)

வயிரவபூசைப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௦௦௯.

திருமாலவதாரமூர்த்திகள் பூசித்தபடலம்.

சோமகனென்னுமசுரன்முன்னாட்சுருதியனைத்துங்கவர்ந்துகொண்டு
பாமநெடுங்கடல்புக்ககாலைப்பார்ப்பனமாக்கள்வெரீஇயிரப்ப
காமமழுப்படையெம்பிரான்செய்நல்லருள்பெற்றுநறுந்துழாய்ப்பைந்
தாமமுகிலொருமீனமாகித்தாந்திரைமோதுஞ்சலதிபுக்கான். (௧)

புக்குத்தருவனுயிர்சவட்டிப்போற்றிடுவேதமனைத்துங்கொண்டு
நெக்குக்கசிவுளத்தார்கரத்துநீட்டுபுசிந்தைத்தருக்குமேவித்
திக்குக்கலங்கப்புவிகலங்கத்தேவருலகுநிலைகலங்கப்
பக்குப்பிலமும்வெரீஇக்கலங்கப்பாய்திரையாழிகலக்கினானால். (௨)

ஆயபொழுதுபிரமனாதியமரரெல்லாருங்கயிலைநண்ணி
மேயதுமுற்றும்பரம்பரற்குவிண்ணப்பஞ்செய்யநகைமுகிழ்த்து
மாயமகரவலிசிலைதத்துவம்மெனச்சாத்தனையேவினனைத்
தூயவன்மீன்வலைவீசுவோனாய்த்தொக்கதிரைக்கடல்வாய்ப்புகுந்தான். (௩)

நாறுந்துழாயணிமீன்பிடித்துநலியச்சவட்டிவிழியெலும்பு
தேறும்படியிடந்தேகியெங்கள்சின்மயனங்கைவிரலிற்சேர்த்தான்
பாறுமமரர்கலக்கந்தீர்ந்தார்பைம்பொற்றிருமறுமார்பினானு
மேறுபிழைக்குக்கழுவாயாற்றவெண்ணிமாயூரமடைந்தனனே. (௪)

வள்ளியநாதன்றிருமுன்மேயமாப்பெருந்தீர்த்தத்திடைப்படிந்து
தெள்ளியவாலயத்துட்புகுந்துதேவர்தந்தேவனைச்சின்மயனை
யுள்ளியயோகியருள்ளத்தானையொப்புயர்வில்லாவொருவன்றன்னை
நள்ளியவன்பிற்றொழுதுபோற்றநாதன்மகிழ்ந்திதுகூறலுற்றான். (௫)

ஆற்றியதீமையனைத்துநீத்தாயற்புதமாயித்தலத்துமேவிச்
சாற்றியதீர்த்தம்படிந்துநம்பொற்றாள்வழிபட்டதகவினாலே
போற்றியகாவற்றொழிலுமுன்போற்பூண்டுநின்பேருலகெய்திவாழென்
றேற்றியசேக்கொடியானிசைத்தானேற்றுத்தொழுதகன்றான்முகுந்தன். (௬)

அதிதிமகாருந்திதிமகாருமார்கலிமுன்னர்க்கடைந்தகாலை
மதிதொடுமந்தரவெற்பழுந்தவள்ளற்பரமன்கருணைபெற்றுப்
பொதிவலிமாலோர்கமடமாகிப்பொற்பமுதுகினுறச்சுமந்து
பதியுமமிர்தமெடுத்தபின்னர்த்தருக்கிப்பரவைகலக்கினானால். (௭)

அந்தப்பொழுதுதொழுதுதேவரமலற்குரைப்பவனையனும்மோர்
தந்தப்பிரான்முகநோக்கியாமைதருக்குமுழுதுமுருக்குகென்னக்
கந்தப்பகன்றைத்தொடையலானுங்கருதும்பரதவனாகிப்போகி
முந்தப்பிடித்தொருகச்சபத்தைமுருக்கித்திருக்கிக்கருக்கினானே. (௮)

மற்றதனோடுபெயர்த்துவந்துமாதேவன்மார்பிலணிந்துபோனான்
சொற்றகவுத்துவமார்பினானுந்தோற்றுப்புரிபிழைத்தீர்வுதேர்ந்து
கற்றவரோத்துமாயூரமெய்திக்காமருதீர்த்தம்படிந்தெழுந்து
பொற்றபிரான்முன்னர்ச்சென்றுதாழ்ந்தான்போற்றிசயசயபோற்றியென்றான்.

மாறுக்கருணைமுழுமுதலேவாள்விட்டொளிகெழுமாமணியே
தேறுச்சிறியன்புரிபிழையைச்சிந்தைகொள்ளாதருள்செய்தியென்ன
நீறுப்புரம்பொடிசெய்தபெம்மானேர்ந்துநின்றீமைகழிந்துபோய
தாறுப்பொலிநம்மருட்கிலக்காயமரொனமாலுந்தொழுதுபோனான். (௧௦)

பின்னுமோர்காலத்திற்செம்பொற்கண்ணன்பெற்றவரத்தின்வலியினாலே
துன்னுபுடவிமுழுதும்பாயிற்சுருட்டிப்பிலம்புக்கொளித்தகாலை
மன்னுமுயர்பதிதன்னருளான்மாயோன்சுவேதவராகமாகிக்
கொன்னுமங்குற்றவனைச்சவட்டிக்கோட்டின்மண்கொண்டுமுன்போலவைத்தான்

ஆயவோர்காலைத்தருக்குமேவியண்டமனைத்துநடுநடுங்கப்
பாயவரைகண்மருப்பற்பிற்கோத்துப்பற்பலவாகவெடுத்துவீசத்
தீயதுவந்ததுலகிற்கென்றுசிந்தனைசெய்துவானாடர்யாரு
மேயகயிலைப்பிரானைத்தாழ்ந்துவிண்ணப்பஞ்செய்துவிளம்பினாரோ. (௧௨)

கேட்டபிரானுமுறுவலித்துக்கேகயமூருநறுங்கடப்பந்
தோட்டணிமார்பன்வதனநோக்கித்துண்ணெனவிப்பொழுதேயடைந்து
கோட்டடலேனக்குறும்படக்கிவருதியெனவக்குமரவேளு
நாட்டஞ்சிவந்தோர்கிராதனாகிநடந்தனன்கோலத்தினேரெதிர்ந்தான். (௧௩)

கண்டபொழுதேசினந்துகோலங்காருங்கடலுநடுங்கவார்த்துக்
கொண்டவரைகள்பலமருப்பிற்கோத்துப்புவனங்குலையவீச
வண்டமனைத்தும்புரக்குஞ்செவ்வேளத்தனையும்பொடியாகநூறி
மண்டமுடுகியெதிர்ந்துடற்றிமற்றதன்கோடுபிடுங்கினானே. (௧௪)

கோடுபறித்தெழுந்தெங்களையன்கோமளமார்பிலணிந்துபோனா
னாடுவராகனிதயத்தெண்ணிநாமெவன்செய்தாமெனக்கவன்று
கூடுமாயூரத்தலத்தடைந்துகோகநகம்பொலிதீர்த்தமாடி
யாடுபிரான்பொன்னடிகள்போற்றியஞ்சலிசெய்துதுதித்தனனே. (௧௫)

அன்பரையாளுங்கருணைவாழ்வேயாறாறினுக்குமப்பாற்பொலிவோய்
மன்பரையோடும்விடாதமர்ந்துமன்னுயிர்யாவும்புரக்கும்வள்ளா
லின்பரைமாத்திரையேனுமில்லாவேழைத்தொழிலுவந்தேற்குத்தோளி
லென்பரையிற்சருமம்புனைந்தாயின்னருள்செய்துபுரத்தியென்றான். (௧௬)

உற்றசெருக்கின்பிழையொழிந்தாயோங்குவைகுந்தநகரமேவிச்
செற்றம்விளைக்குந்தருக்குநீத்துத்தெய்வநம்பேரருள்சிந்தைசெய்து
கற்றதிதிசெய்தமர்தியென்றான்காகுத்தனுங்கைதொழுதுபோற்றி
யுற்றமகல்விடைபெற்றுப்போனானனைவழிநின்றினிதுவாழ்ந்தான். (௧௭)

வேறு.

மீட்டுமொருகாலத்துவெய்யவலியிரணியன்றன்
னாட்டுபெருந்தவத்தாலேநல்லவரம்பலபெற்று
வீட்டுமொருபகையின்றிவிரிபுவனந்தாட்படுத்துக்
கூட்டுநடுநடுக்கமுறக்கொடுந்தொழிலேதலைநின்றான். (௧௮)

அக்காலமவனைவெலற்காயதிறனுறத்தேர்ந்து
நக்காலமெடுத்தயின்றநம்பர்திருவருள்பெற்றுத்
திக்காலநிமிர்ந்தபுகழ்த்திருமறுமார்புடையண்ணன்
முக்காலஞானமுணர்முனிவர்புகழவன்மைந்தன். (௧௯)

பக்கமொருதன்கூறுபதியநிறுவினன்வலிமை
தொக்கநரமடங்கலாய்த்தூணின்றும்வெளிவந்து
தக்கபகலிரவல்லாக்காலத்திற்றரைவானம்
புக்கவிடமல்லாதவிடத்தவனைப்புரிந்திருத்தி. (௨௦)

நெஞ்சுபிளந்துறுசெந்நீர்நிரம்பமாந்தினனதனா
லஞ்சுவெறிதலைக்கொண்டாங்கமரர்களைவருத்திடலு
மஞ்சுபொலிகளத்தான்பொன்மலரடிவீழ்ந்தவரிரப்பத்
துஞ்சுபடர்வலிவீரற்பார்த்திதனைச்சொற்றனனால். (உக)

வயவீரவிப்பொழுதேநரமடங்கல்வெறிமாய்த்து
நயமாரவருதியெனநங்கள்பிரானருள்செய்யச்
சயவீரபத்திரனுஞ்சரபவுருக்கொண்டெழுந்து
புயனேருமுடம்பினரமடங்கல்வலிபொருதழித்து. (உஉ)

கீண்டுசருமங்கவர்ந்துகிளர்பெருமான்பெரும்பியலிட்
டாண்டுவணங்கின்போனானறிவுதிப்பமாயவனு
மீண்டுபிழைக்கென்செய்வாமென்றிரங்கிக்கவலுற்று
வேண்டுபொருளருடிருமாயூரத்தைவிரைந்தடைந்தான். (உங)

மறமனைத்தும்பொடியாக்குமாதீர்த்தம்படிந்தாடித்
திறமனைத்துமருள்வள்ளல்சேவடிமேற்பணிந்தெழலு
நிறமனைத்துந்துழாய்புனைவோய்நின்பிழைதீர்ந்தனையுலகை
வறமனைத்துந்தவிர்த்தோம்பிவாழென்றான்றொழுதகன்றான். (உச)

வேறுமொருகாலத்துவெய்யமாவலியென்பான்
மாறுதவிர்த்தெவ்வுலகும்வயங்கியதன்னடிப்படுத்துப்
பேறுதருமொருவேள்விபெயர்வறச்செய்திடல்குறித்தான்
சீறுகொளுமவனைவெலத்தம்பிரானருள்பெற்று. (உரு)

ஆன்றதவக்காசிபற்குமதிதிக்குமொருமகவாய்த்
தோன்றவிகழ்குறளுருவிற்றோன்றிமகக்களம்புகுந்து
மூன்றடிமண்கொடுவென்றான்மொழிந்தபடியவன்கொடுப்ப
வேன்றனனோங்கினன்றரைவிண்ணிரண்டடியுள்ளாக்கினான். (உசு)

ஓரடிமற்றவன்றலைமேலுறவைத்துப்பிலத்தழுத்தி
பாரமிகுசெருக்கடைந்தான்பண்ணவர்மற்றதுதேர்ந்து
நாரமலிசடையான்பானண்ணியிறைஞ்சினருரைப்ப
மாரனுடல்பொடித்தபிரான்வடுகனைக்கூயேவினான். (உஎ)

அன்னவன்வந்துடன்றுசமராடிவலியறச்சவட்டி
யுன்னரியவுடம்பின்றோலுரித்தொருசட்டையிற்பூண்டு
பின்னமறவொளிர்சட்டைநாதனெனும்பெயர்பூண்டான்
றன்னமர்கையவன்முதுகந்தண்டெலும்புகவர்ந்தமைத்து. (உஅ)

பார்புகழுமொருதண்டபாணியெனும்பேர்பெற்றான்
சீர்திகழுமொருகுதிகாற்சிறந்தநரம்பினைவாங்கித்
தார்பொருவவணிந்துநரம்பணியனெனும்பெயர்தாங்கி
வார்தருதன்கடுங்கோபமாற்றினான்வயிரவனே. (உகூ)

மாயனதுபொழுதனைத்துமறவாமலுளத்துணர்ந்து
நேயமிறன்பிழையகலநெடுங்கழுவாய்செயக்குறித்துத்
தேயமெலாம்புகழ்ந்தேத்துந்திருமாயூரத்தடைந்தா
னாயபுகழ்ப்பெருந்தீர்த்தமாடினானீறணிந்தான். (ஙo)

கண்மணிமாலிகைபுனைந்துகருத்துறவைந்தெழுத்தெண்ணி
வண்மயிலைப்பெருமானைவள்ளலெனும்பெயரானை
யொண்மயிலோர்புறத்தானையுவந்தேத்திவழிபட்டான்
கண்மருவுநுதலானுந்திருவுள்ளங்களிகூர்ந்தான். (௩௧)

பற்பலகாற்பிழைசெய்துதண்டிக்கப்பட்டனையான்
மற்புயமாயவசிறியமதியொருவிவாழென்று
னற்புதனையெல்லாரின்னருளென்றெயஞ்சலித்துக்
கற்புயர்மாமகள்கொழுநன்களித்தேத்திப்போயினன். (௩௨)

திருநெடுமாலவதாரமைந்திடத்துஞ்செய்தபிழைப்
பருவரன்மாய்த்ததுகவுரிமாயூரமெனுப்பகரில்
வெருவருமத்தலம்போலவிண்ணிடத்துமுண்டுகொலோ
பொருவருமாமுனிவீர்காள்புந்தியுறத்தெளிவீரோ. (௩௩)

திருமாலவதாரமூர்த்திகள்பூசித்தபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௦௪௨.

தருமன்பூசித்தபடலம்.

ஏதப்படுந்திறமெல்லாமொழியவிமையவரு
மேதக்ககேள்விமுனிவோரும்வேந்தும்விதியுமோர்பால்
சாதத்தமைந்ததிருமாலுமுள்ளித்தகவணங்கி
யோதப்பொலியுந்திருக்கடவூரொன்றொருதலமே. (௧)

அந்தத்தலத்தைம்படைமார்பிலங்கவணிசெய்குழை
சந்தச்செவியிற்பொலியச்சிறுதண்டைதாள்விளங்க
வந்தற்புதத்துயர்மாற்கண்டனென்னும்மழமுனிவன்
கந்தப்புதுமலர்தூய்ப்பெருமானைக்கண்டேத்தினனே. (௨)

செருந்திபுன்னைகமரவிந்தங்கூவிளஞ்செங்கழுநீர்
குருந்துமந்தாரந்துரோணமறுகுகுரவம்வழை
திருந்துகடுக்கைகரவீரமாதிச்செழுமலர்கொண்
டருந்தவமாமுனிபன்னாளும்பூசனையாற்றினனே. (௩)

இவ்வண்ணம்பூசனையாற்றிடுகாலையெழுபுலிங்கஞ்
செவ்வண்ணமாயவுலோசனம்வீசத்திருக்குளத்தோ
டவ்வண்ணமாயபெருமானருட்குரியானைவௌவத்
தெவ்வண்ணமேவிமறலிபகடுசெலுத்தினனே. (௪)

கூற்றுவரக்கண்டுசங்கரவோகொடுஞ்சழுண்டு
போற்றுபிரமன்முதலோர்க்குயிர்தந்தபுண்ணியவோ
வேற்றுமிசையுவந்தொள்ளடியாரையெதிர்பவவோ
தோற்றுபயந்தவிர்த்தாள்புகலென்றுதுதித்தனனே. (௫)

துதிக்குமதனுக்கிரங்கிச்சுயம்பெருஞ்சோதிமறை
மதிக்குங்கருணைப்பிழம்பாயவன்வெளிவந்துபின்னைத்
திதிக்கும்படியுற்றனமென்றருளிச்செறிந்தசின
முதிக்கும்படியெதிர்நின்றவன்மார்பிலுதைத்தனனே. (௬)

உதையொன்றுகொண்டுயிர்மாண்டானமன்பின்னுயிரளிப்பக்
கதையொன்றுகையொடெழுந்தினிச்செய்யக்கடவதென்னென்
றிதையொன்றுவெற்பத்தனைபாவமேனுமிறுக்கும்வளந்
ததையொன்றுபூம்பொழின்மாயூரமாத்தலஞ்சார்ந்தனனே. (எ)

சார்ந்துதிருமுனர்த்தீர்த்தம்படிந்துதவாதவினை
யீர்ந்துபொலிதிருவெண்ணீறுபூசியெழுத்தைந்தெண்ணி
யோர்ந்துதிருப்பெருங்கோயிலைச்சார்ந்துருகிப்பணிந்து
தேர்ந்துபெருவள்ளலாரடிப்பூசனைசெய்தனனே. (அ)

புண்ணியமாரஞ்சனுயகிபாதமும்போற்றிசெய்து
கண்ணியவத்தலத்தீசானதிக்குக்கலந்துநயந்
தண்ணியமேன்மைச்சிவலிங்கமொன்றங்கமையநிறீஇத்
தண்ணியதீர்த்தமுந்தொட்டரும்பூசைசமைத்தனனே. (கூ)

காலையிற்றன்செய்சிவலிங்கபூசைகதிர்ப்பச்செய்து
சோலையிற்பூங்குழல்பால்வள்ளலார்முன்றனைந்துவந்து
வேலையிற்றோன்றுநிறத்தானெப்போதும்விழைந்திறைஞ்சு
மாலையிற்போற்றித்துதிபலவாகவழுத்துவனே. (கo)

அத்தாவெனிலவர்தன்மையெண்ணுமலருள்சுரக்கும்
பித்தாகொடியவெனையுகன்காண்டருள்பேசரிய
சுத்தாதொழும்பர்தமெய்ப்பில்வைப்பேசுடரார்மணியே
முத்தாசெழும்பொழின்மாயூரமேயமுழுமுதலே. (கக)

காவாயெனிலவர்தன்மையெண்ணுதுகடைக்கணிக்குங்
கோவாயெனையுங்குறித்தாண்டுகொள்கொடுநஞ்சமுண்டுஞ்
சாவாய்மறைமுடிக்கெட்டாய்மெய்ஞ்ஞானத்தனிச்சுடரோ
மூவாய்செழும்பொழின்மாயூரமேயமுழுமுதலே. (கஉ)

அன்னேயெனிலவர்தன்மையெண்ணுமலருள்சுரக்கும்
பொன்னேயெனுஞ்சடையாயடியேனையும்பொற்புறவாள்
பன்னேதகவுந்தவிர்தரயாரும்பரிந்துதொழு
முன்னேய்செழும்பொழின்மாயூரமேயமுழுமுதலே. (கங)

என்றுதுதிக்குங்கொடுங்கூற்றுவன்முன்னெழுந்தருளிக்
கன்றுமிருகங்கரத்தேந்தினன்கொடுங்காலவுனை
யொன்றுபிழைதவிர்ந்தாய்முன்னையாட்சியினேன்றிடுதி
பொன்றுதறிண்ணநமைப்போற்றுநர்பாற்புகுதரினே. (கச)

அன்றியுமித்தகுமாயூரங்கண்டவராரொனினுங்
கன்றியுநின்னகர்காணப்பெறார்கருதாயெனினின்
வென்றியுமாக்கமுமாட்சியும்யாவும்விளிந்தொழியு
மொன்றியுமொன்றுக்கலப்புறுவார்க்கஃதுறுவதன்றே. (கரு)

கூடியவன்பினொருநீயருச்சித்தகோசத்தியா
நீடியபேரருளோடுறைவோமங்கிறைகுறியும்
பாடியவாவியுமூருநின்பேராற்பரவுகவென்
றூடியகூத்தன்மொழிந்தான்மறைந்தனனுவயினே. (கசு)

புத்தியென்றேற்றுப்பணிந்துதன்னூர்ப்புகுந்தானியமன்
சித்திபெற்றெய்தியதோர்ந்துதற்சேர்ந்தகணங்கட்கெல்லாம்
பத்திசெய்வள்ளலருளொடுத்தோதிப்பரவுசெங்கோ
லெத்திசையுஞ்செலமுன்போனடாத்தியிருந்தனனே. (௧௭)

தருமன்வரம்பெற்றகாரணத்தாலத்தலம்பொலிந்து
தருமபுரஞ்சிவலிங்கம்பொலிந்துதருமலிங்கந்
தருமம்வளர்க்குந்தடமும்பொலிந்துதருமதடந்
தருமமுணர்ந்தவரொன்றேருதிடும்பெயர்சார்ந்தனவே. (௧௮)

காரட்டநீலகண்டப்பெருமானமன்காய்ந்தியற்று
போரட்டகாரணத்தாலந்தத்தானமூம்போற்றுமொரு
வீரட்டமாயதுமாயூரத்தெல்லையுண்மேவியது
பேரட்டமூர்த்தியங்கக்கோலங்கொண்டுபிறங்குவனே. (௧௯)

காலசங்காரப்பெருமானைக்காலன்பதிட்டைசெய்த
வாலமுண்டானையிடமோரிரண்டினுமண்ணித்தொழா
மூலபண்டாரமென்மாயூரத்தாதிமுனம்பணிவார்
சாலவுண்டாகுமின்பத்தினராகித்தழைபவரோ. (௨௦)

தருமன்பூசித்தப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௦௯௨.

காமன்பூசைப்படலம்.

கனிவனப்புமை, பனிவரைத்தலைத், தனியுதித்தநாட், குனிபொருப்பினன். (௧)

நாரவாவிமா, யூரமாநகர்ச், சாரவாயகா, லாரவாந்திசை. (௨)

ஆய்தருங்கடுக், காய்வனத்திடை, மாய்வில்யோகமுற், றேயிருந்தனன். (௩)

ஆயநாளுயி, ராயயாவையு, மாயபோகமற், றுயவைகின. (௪)

மாயனென்னுபு, நாயன்மேற்கணை; போயின்னேதொடு, சேயனேயென. (௫)

மாரவேளுமோ, ரீரமார்கணை, நேரவாய்த்தொடுத், தாரவோடினன். (௬)

ஏறுசேவகன், கூறுமோர்விழி, வீறுதீயினு, னீறுபட்டனன். (௭)

இரதிமாழ்குற, வரவப்பூணினன், பரவனங்கனும், வரமளித்தனன். (௮)

உருவந்தற்கலான், மருவிலானைக்கண், டொருமடந்தையுட், பொருமறீர்ந்தனள்.

மழைபொருங்களத், துழைகொள்கையற்குப், பிழைசெய்தாமெனக், குழையு
[நெஞ்சினன். (௧௦)

தாரமாதொடு, மீரவான்பொழி, லாரமேய்மா, யூரமெய்தினன். (௧௧)

பாவநாசநீர், மேவமூழ்குபு, தேவதேவையைந், தேவன்போற்றுவான். (௧௨)

தஞ்சமேயென, வஞ்சலம்மையோ, டெஞ்சலின்றிவேண், மஞ்சன்போற்றுவான்.

போற்றுநாளிடை, நீற்றுமேனியா, ணூற்றுபேரரு, ளேற்றுவாழ்ந்தனன். (௧௪)

நட்டமாடிநேர், பட்டவேளுடல், சுட்டதானம்வீ, ரட்டமாயதே. (௧௫)

அந்தத்தானத்தை, முந்தப்போற்றிடி, னெந்தப்பேறுமே, வுந்தத்தோயுமே. (௧௬)

பாரவாவுமா, யூரவெல்லையுட், சாரவானர்வா, யாரவேத்திட. (௧௭)

இட்டமாய்வீ, ரட்டநான்கெனிற், பட்டமான்மியஞ், சட்டயார்சொல்வார். (௧௮)

காமன்பூசைப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௦௮௦.

தீர்த்தவிசேடப்படலம்.

கரவுதீர்மனம்புகுங்கணிச்சியங்கைவள்ளலா
ருரவுசேருமபிமுகத்தினுற்றுநாளுமுயர்புறும்
விரவுபாவவிபினமாய்க்கவெந்தழற்சுவாலையாம்
பரவுமான்மியங்குலாயபாவநாசதீர்த்தமே. (௧)

அட்டமூர்த்தியாதிநாளிலங்கைதாங்குசூலத்தாற்
றெட்டகாரணந்தெரிந்துசூலதீர்த்தமென்னவு
மிட்டவாதிநாளினுயதெண்ணியெண்ணிலாவளம்
பட்டவாதிதீர்த்தமென்னவும்பகர்ச்சிமேயதால். (௨)

தேவதேவவள்ளலார்திருந்துசன்னிதித்தலைப்
பூவராதியாவரும்புகுந்துமூழ்கின்மற்றவர்
பாவநாசமாக்கலாற்பாவநாசதீர்த்தமென்
றேவரும்புகழ்ந்துரைக்குநாமமெய்திற்றப்புனல். (௩)

தருமமேவநல்கலாற்றருமதீர்த்தமிகுதியு
மருவருத்தநல்கலாலருத்ததீர்த்தமாண்புசால்
பொருவில்காமநல்கலாற்காமதீர்த்தம்புன்மைதீர்த்
திருவுமுத்திநல்கலான்முத்திதீர்த்தமென்பரால். (௪)

செம்மைமேனிவள்ளலார்திருந்துசொற்றலைக்கொடு
மும்மைஞாலமீன்றதேவிமூழ்கமுன்னுருத்தரு
மெம்மையாள்பெருந்தடத்திலங்குமான்மியம்பல
வெம்மையார்மறத்தினைக்குமைக்கும்வீறுமிக்கதே. (௫)

கரையின்மேல்விருக்கமேவுகாமர்மஞ்ஞைநீழலப்
புரையில்வாவியூடுதோன்றல்போந்துமுன்னமூழ்கிய
வரையின்மஞ்ஞையாதியாயமஞ்ஞையின்கண்வாங்கிய
விரைகுலாமுடம்புதன்னுள்வைத்திருத்தல்விழையுமே. (௬)

அன்னமாதியெண்ணில்புட்களன்னநீர்ப்பயின்றிடன்
முன்னமாமயூரமெண்ணிலாதமூழ்கித்தேவுரு
நன்னர்மேவுதிறனுணர்ந்துநாமுமெய்தலாமெனுப்
பன்னவாரிசப்புனற்பயிற்சியாற்றலொக்குமே. (௭)

துறைவிராயநான்முகந்துதைந்துபூவிருக்கைபெற்
றிறைவிராயபல்லுயிர்ச்சிருட்டியன்னமேய்ந்துரு
மறைவிராயவொலிவிளக்கிமுளரியோம்புமாண்பினுற்
பொறைவிராயமண்படைத்தபுலவனுக்குமப்புனல். (அ)

சங்கநேமியேந்தலாற்றண்டுழாயளாவலாற்
பங்கயக்கண்மாவெர்டும்பார்மகட்டழுவலாற்
றுங்கவாமைமீனுருத்தொடர்ந்தவாந்திறத்தினு
லங்கண்ஞாலமுழுதுமோம்புமண்ணலுங்கடுக்குமே. (௯)

இருவராலளந்திடாமையியைதலால்விலங்கலீன்
பருவராததோகைவந்துபண்பளாயுவத்தலா
லருவராமல்யாருமண்மியடர்மலங்கழித்தலாற்
பொருவராதபுண்ணியப்பிரானையொக்கும்பூம்புனல். (௧௦)

வேறு.

திருந்தியபாவநாசத்தீர்த்தந்தோய்சென்னியெல்லாம்
பொருந்தியதெய்வக்கங்கைப்புண்ணியதீர்த்தந்தோயு
மருந்தினுமினியநன்னீரிருகண்ணுன்மகிழ்ந்துகாண்பார்
வருந்துதலொழிந்துமுக்கண்வாய்ப்பதற்கையமின்றே. (௧௧)

புரவொன்றுபாவநாசப்புண்ணியப்பெருந்தீர்த்தத்தி
னரவொன்றோர்மண்கேத்தையங்காந்துபற்றியுண்ண
விரவொன்றுகண்டமாதியியைந்தவத்தவனேபின்ன
ருரவொன்றுமதனைப்பூண்டதும்பராதியர்வியந்தார். (௧௨)

பூதமோரைந்துளொன்றாய்ப்பொலிதனக்குள்ளதாய
வேதமில்குறிதெரித்தாங்கெங்கணுமலர்வகஞ்ச
மாதரம்பொலியமூழ்கினுதனமாதல்வேண்டி
மாதர்மற்றவையொருங்குவாய்ந்துசேர்ந்திருத்தன்மானும். (௧௩)

அன்னசெங்கமலமேலாலணிவனேயமருங்காட்சி
மன்னவிங்கடுத்துமூழ்குமாட்சிமையாளரங்கை
பன்னமற்றிதுபோற்பெற்றுப்பரிப்பதுமிதைத்தானென்று
நன்னயம்பொலியயார்க்குமுணர்த்துமோர்நலமேபோலும். (௧௪)

திருந்தியபாவநாசத்தீர்த்தமேல்கரைப்பாலையன்
பொருந்தியதிருமுன்வைகிப்பொற்பமைசிராத்தஞ்செய்வோர்
பெருந்துயரளற்றிலாழும்பிதிரரைக்கரையேற்றிச்சீர்
தருந்திருச்சிவலோகத்திற்றங்கவேற்றினவராவார். (௧௫)

மருவரும்பாவநாசவளம்பொலிதீர்த்தக்கோட்டிற்
பொருவருஞ்சிராத்தஞ்செய்யும்புண்ணியர்தருமெள்ளொன்றற்
கொருவருஞ்சிவலோகத்திலொருபத்துநூறாண்டெல்லை
வெருவரும்பிதிரர்மேவவிட்டவராவரம்மா. (௧௬)

வயங்குறுமாண்டின்றோற்றமருவுமீரயனத்தோற்ற
நயங்கிளர்திங்கட்டோற்றநலமலியிருவாக்க
ளியங்கிருகதிரைநாகம்விழுங்குநாளிவைமுன்னுகப்
பயங்கிளர்விசேடநாளிற்படிதரிலதிவிசேடம். (௧௭)

தனுவைமண்ணாதிகொண்டுசமைதரச்சுத்திசெய்து
மனுவைநன்கியையவோதிமாண்புடைவிதிவழாமற்
புனிதவத்தீர்த்தமாடிப்புராதனனடியார்கையி
லினிதலைமசெம்பொன்னாதியேன்றமட்டுதவல்வேண்டும். (௧௮)

புண்ணியவந்நீராடிப்பொருளளவைக்குத்தக்க
கண்ணியதானஞ்செய்துகருதரும்வள்ளலார்க்கு
நண்ணியவவர்பான்மேவிநகுமபயாம்பிகைக்குந்
தண்ணியவபிடேகாதிசமைத்திடிலதிவிசேடம். (௧௯)

வள்ளலாரந்நீராடுமாண்புடைத்தினத்துமூழ்கி
யெள்ளலாகாதவன்னமினிதவரடியாருண்ண
நள்ளல்கூரனையதீர்த்தக்கோட்டின்வாய்நயப்பவூட்டுந்
தெள்ளல்கூர்மனத்தார்பேறியாவரோசெப்பற்பாலார். (௨0)

அலையெறியனையதீர்த்தத்தமைந்தசோபானங்கட்கு
நிலைதபுகிலமுண்டாகினிலையுறப்புதுக்குவோரு
மலைதருதொள்ளிபோக்கிப்புனிதமேவயக்குவோரு
மிலைமலர்நந்தனங்கள்கரையுறவியற்றுவோரும். (௨௧)

கருணையங்கடலாம்வள்ளல்காமருபிராட்டியோடும்
பொருள்பெறுமகார்களோடும்புணைவிழைந்துலவுசாறு
பெருகவத்தீர்த்தத்துள்ளாற்பிறங்குறநடாத்துவோரு
மிருளறுசிவலோகத்தேபுகுந்துபேரின்பந்துய்ப்பார். (௨௨)

இதுவரையுரைத்துவந்தவறமியற்றாரோயேனு
முதுபுகழத்தீர்த்தத்தின்முயங்கனுசிதஞ்செய்யாமை
யதுவுமோரறமேயாகுமவ்வறமேனுஞ்செய்க
சதுமுகன்முதலோர்போற்றுஞ்சிவபுரஞ்சார்தல்வேட்டார். (௨௩)

இன்னமாதீர்த்தந்தன்னிலெவ்வெத்தேயத்துள்ளாரு
நன்னர்வந்தாடல்வேண்டுநட்பதுமுற்றாதென்னி
லென்னவூர்தியின்மேலேனுமிவர்ந்துவந்தாடல்வேண்டுஞ்
சொன்னதுமுற்றாதென்னிற்சொல்லுதுமப்பாற்கேண்மின். (௨௪)

வயங்குபொன்னுதவியந்நீர்வரவழைத்தாடல்வேண்டு
மியங்குமற்றதுவுமொல்லாதெனிற்படிந்தாடினோர்த
நயங்குலவடியிற்றாழ்ந்துநயந்துளங்கசிதல்வேண்டும்
பயங்கிளரதுவுமுற்றாதென்றிடிற்பகரக்கேண்மின். (௨௫)

சாற்றுவண்பாவநாசத்தடம்புனறோய்ந்துவந்த
காற்றுமேற்றோயுமாறுகனிவுடனேற்றல்வேண்டு
மாற்றுமற்றதுவுமேலாதெனிலந்நீர்ப்படிந்ததாகப்
போற்றுபாவனைசெய்தேனும்பொலிந்தினிதிருத்தனன்றாம். (௨௬)

அன்னதுமொல்லாதென்னிலவர்க்குநாமுரைப்பதில்லை
கொன்னவில்சூலைகாசங்குட்டநோய்கரட்டுவாதம்
பன்னருங்குன்மமுன்னாப்பற்பலகொடுநோயாவுஞ்
சொன்னவத்தீர்த்தத்துள்ளோர்துளிகொளிற்றொலைந்துபோமால். (௨௭)

இளர்புகழ்மிகுமாயூரகேத்திரத்தெல்லையுள்ளால்
வளர்பலதீர்த்தமின்னும்பற்பலவயங்காநிற்குந்
தளர்விலன்னவையாங்காங்குச்சாற்றுதுமுணர்ந்துகொண்மின்
களர்முதன்மருவுமண்ணல்கழற்கன்புபூண்டுளீரோ. (௨௮)

தீர்த்தவிசேடப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௧௦௮.

அகத்தியர்பூசைப்படலம்.

பிரியமிருத்தவரைக்கலைசோலைபெருமுகின்மேற்போர்வை
யிரியவல்லாத்தலைச்சுற்றுவிண்கங்கையெனக்கொடிருமலயத்
தரியதவத்தினுயர்ந்தவனுயவகத்தியமாமுனிவன்
மரியபன்மாணவர்கூட்டந்தழுவவயங்கியமர்தருநாள். (௧)

வண்ணம்பொலியுமறைத்தலைமேவியமாயூரமாத்தலம்புக்
கெண்ணம்பொலியும்படிவள்ளலார்தமிணையடிச்சேவைசெயத்
தண்ணம்பொலியுந்திருக்கையவர்தந்தவாவருளாலெழுந்தான்
றிண்ணம்பொலியுமொருபன்னிருவருஞ்சேவித்துச்சூழ்தரவே. (௨)

கானமுங்குன்றுநதியும்பதியுங்கடுஞ்சுரமுங்கடவா
வீனமுந்துன்புமிலாதமாயூரத்தையெய்தியெண்ணில்லாச்சிவத்
தானமுந்தோய்ந்துவரும்பெரும்பொன்னித்தடநதிநீராடி
யேனமுமன்னமுங்காணரும்வள்ளலையெண்ணிவெண்ணீறணியா. (௩)

கண்மணிபூண்டைந்தெழுத்துங்கணித்துக்கசிந்துமணல்கவரா
விண்மணிநேரமிளிர்பெருங்கோவிலுண்மேவிவிளங்கொருசார்
தண்மணிவீசுமொருபெருங்கோட்டுத்தலைவனுருப்புனையா
வண்மணிநேருமகத்தியமாதவமாமுனிபூசைசெய்வான். (௪)

பன்னிருமாணவரும்பணியேற்றுப்பகர்ச்சிவழியொழுகத்
தன்னிருசைநீரொடுமஞ்சனமாதிதயங்கநடாத்தியபி
னென்னிருவல்வினையுந்தபுத்தாருமிறைவற்குத்தன்பெயரிட்
டுன்னிருபாதம்வணங்கியெழுந்துநின்றேத்திடுவான்றுதியே. (௫)

மண்ணவராதியர்சூழ்ந்தினிதேத்திடுமாமயிலாடுதுறைக்
கண்ணவர்செய்பணிகண்டருள்செய்யுமகத்தியவாரணமே
நண்ணவராகமுன்னுயவைமாற்றிநயந்தருகற்பகமே
பண்ணவருட்கொள்சிந்தாமணியேநீபல்லாண்டுபல்லாண்டே. (௬)

எத்திக்குந்தன்னரையாடையெனப்புனையீசன்றிருமகனே
முத்திக்குவித்தெனயாவரும்பேசமுளைத்தவமொய்யமர்செ
யத்திக்கிரங்கியருள்பதித்தூர்ந்தவகத்தியவாரணமே
பத்திக்கினியபராபரனேநீபுல்லாண்டுபல்லாண்டே. (௭)

வாசவன்மாமலரோனெடுமான்முதல்வானவர்சூழ்ந்தேத்தப்
பேசரிதாமிடையூறுதவிர்த்துப்பெரிதருள்புண்ணியனே
யாசமையாச்சிவயோர்கருளத்துளகத்தியவாரணமே
பாசமொடங்குசமேந்தியகையாய்பல்லாண்டுபல்லாண்டே. (௮)

எனறுதுதித்துக்கணேசனனுஞைபெற்றேகுபுவள்ளன்முன
நன்றுதிருமஞ்சனமுதல்யாவுநயம்பெறச்சேகரியா
வன்றுபெருதவுளத்தொடுமொட்டுதலாதியினிதியற்றித்
துன்றுபன்மாணவரோடுமெதிர்நின்றுதோத்திரஞ்சொல்லுவனல். (௬)

வேறு.

ஒருபோகுமயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

மாமேவுமுகிறவழும்வளமேவுபல்சிமயந்
தாமேவுசையமெனுந்தனிமேவுவரைநின்றும்
வயங்குபலமணித்திரளுமால்யானைக்கோடுகளு
மியங்குகதிர்புரைபொன்னுமெறிவிரைச்சந்தகிற்றுணியு
மிருகோடுஞ்செறியவெடுத்தெறிந்துதுவைத்தெவ்விடத்து
மருகோடும்புனற்பொன்னியாறுலாஞ்சோணாட்டிற்
காமருபல்வளம்பொலியுங்கவுரிமாயூரத்தின்
மாமருவஞ்சுடர்பரப்புமணிக்கோயில்வீற்றிருப்போய்.

அடைப்பதுமத்தவனணுகியன்பினராதிக்கப்
படைப்பதுமற்றனதென்றுபாங்குபெறக்கொடுத்தருளிக்
கலங்காவலவுணருளங்கலங்காமல்வந்திறைஞ்ச
நிலங்காவலுனக்கின்றுநேர்ந்தனமென்றருள்செய்து
புரந்தரன்முனெண்மர்களும்பொருந்துமலர்தூயிரப்ப
நிரந்தரமெண்டிசைக்காவனீர்புரிமினெனப்போக்கி
வானேருமிருகதிருமண்ணோரும்பாதலம்வா
ழேனோருந்தொழவியைந்தவினிதளித்தவருளோய்கேள்.

இவையிரண்டும் எட்டடித்தரவு.

அம்மையொருபறவையுருவாகவருள்புரிந்தனைநீ
செம்மையொருபறவையுருச்செறிந்தமைக்குத்தகல்குறித்தோ.
மயிலுருவப்பூசையினேமாதேவிபன்னளும்
பயிலுருவப்பூசையினேபரம்பரநிற்கதிவிருப்பம்.
மயிலுருவப்பூசையெனில்வயங்குநின்மேனியிலுமைமுன்
பயிலுருவப்பூசைபோற்பஃறெடிக்கதோயாதே.
தோகையாய்நடித்ததினுஞ்சுந்தரிக்குமன்றிடைநின்
ஞோகையாய்நடித்ததுமிக்கோகையாய்முடிந்ததே.
மாவடியின்வீற்றிருப்பாய்வடுவெரியேனென்பாய்மென்
பூவடியாள்கொடுத்தவடுப்புந்திசெயும்வடுவன்றே.
யருளபயாம்பிகையைமணமாற்றினையாற்றுயேற்
றெருளமறைவிதித்தவிதிதெளிவிப்பாரிலையன்றே.

இவையாறுந்தாழிசை.

அரியயன்முதலியவமரர்பலருமுய- வருவிடமமுதுசெய்மணமலிகருணையை.
இமையவர்முதலியவெவருமுள்ளலைதர- வமைதருதிரிபுரமழல்செயுமுறுவலே.
வருவதுகருதலின்மறையவனிழிவுறா- தருதலைகரமுறுதகைபுரியுகிரினை. [லினை,
நிசிசரரிறைவன்மெய்நெறுநெறுநெறுவென- வசியொடுவரைநிறுவடியொருவிர

இவைநான்குமராகம்.

ஒலிகொண்டபடைத்தல்புரவுள்ளனவீற்ெருருங்கழிக்கும்
வலிகொண்டநினக்கொருவன்மகமழித்ததொருபுகழே.
சிங்கவிறன்மாய்த்துரிகொடிறலுடையநினக்கொருமா
தங்கவிறன்மாய்த்துரிமேற்போர்த்தியதுந்தக்கதே.
யெண்ணில்கூற்றெய்தினுமாய்த்தெழுநின்ேறார்நாமமெனிற்
கண்ணில்கூற்ெறன்றனுக்காக்காலெடுத்தலழகிற்றே.
நினைக்குறிப்பார்பல்காமர்நேர்வரினுமாய்த்திடவெய்
வினைக்குறிப்பாரொருவனுக்காவிழிதிறத்தல்வேண்டுமே.
பல்லுயிரைமயக்கிவினைப்பயனூட்டுந்திறலாய்க்குச்
சில்லுயிரைமயக்கிமயற்றிறமூட்டலருமைத்தே.
இத்தலத்தின்புற்ருருக்கெளியையாயரிதாநீ
கைத்தலத்தாமலகமெனக்காட்சிதருங்கருத்தென்னே!

இவையாறும்பெயர்த்தும்வந்ததாழிசை.

யோகவித்தமனெனுமொருவன்போற்றவி - வேகவுத்தமக்கதிவிழைந்துநல்கினை.
குண்டினகோத்திரக்குமரற்காந்ர - கண்டினபிதிரருக்கருள்சுரந்தனை.

இவையிரண்டும் நாற்சீரோரடியம்போதரங்கம்.

அரியயன்முதலியர்க்கரியகாட்சியை.
மரியவெவ்வுயிரினுமருவுமாட்சியை.
பிரியமிக்கவருளம்பிறங்குமாட்சியை.
யுரியவொன்பஃதெட்டாெருருவும்பூட்சியை.

இவைநான்கும்நாற்சீரோரடியம்போதரங்கம்.

மறைமுதலெவையுநவின்றனை. மருவினர்பிரிவறநின்றனை.
யறையடியவர்பெறுமொன்றனை. யவரடுமலவலிகொன்றனை.
கறைதபுமுயிரொமதென்றனை. கருதலர்வலிகெடவென்றனை.
நிறைதரநடநவின்மன்றனை. நிகழ்கருணையொடுகவின்றனை.

இவையெட்டும் முச்சீரோரடியம்போதரங்கம்.

இந்துசூடினை. வந்துகூடினை. ஏதநீக்கினை. போதமாக்கினை.
பந்தமாற்றினை. சந்தமாற்றினை. பண்செய்வாயினை. எண்செயாயினை.
நிந்தையற்றனை. அந்தைசெற்றனை. நேயமூட்டினை. மாயம்விட்டினை.
சுந்தரத்தினை. யந்தரத்தினை. தொக்கசோத்தினை. நக்கசுத்தினை.

இவைபதினாறுமிருசீரோரடியம்போதரங்கம்.

எனவாங்கு, இதுதனிச்சொல்
யாவரும்வழுத்துமெண்டோட்செல்வ - பாவரும்புகழபயாம்பிகைபாக
மறைமுடிவிளங்குமாயூரேச- நிறைதரவெவையுநிரப்புபெருவள்ளால் [ருத்தி
விழைந்தடியேன்செய்விண்ணப்பமொன்று -குழைந்தநின்னடியார்கூட்டம்பொ
யொன்றியுமொன்ருதுவக்கு- நன்றிசெயின்பநயந்தளிக்குகவே. (கo)

இவையெட்டடியான்வந்தநேரிசையாசிரியச்சுரிதகம்.

வேறு.

என்றுதுதித்துவணங்கிப்போற்றியெம்பெருமாட்டிதிருமுன்சென்று
நன்றுசிறப்பப்பணிந்தெழுந்துநாடுந்திருமஞ்சனமுற்கொண்டு
கன்றுதவிர்த்திடும்பூசையாற்றிக்கைகள்குவித்துள்ளுருகிச்சூழ்ந்து
துன்றுமகிழ்ச்சியின்முன்னர்நின்றுதோத்திரமின்னணசொல்லலுற்றான். (கக)

வேறு.

கருமுகில்விளர்ப்பக்கறுத்துநெய்த்திறைவன்கண்கவர்கருங்குழல்போற்றி
யொருபரம்பரன்செஞ்சடைப்பிறைவிளர்ப்பவுற்றொளிர்திருநுதல்போற்றி
பெறுமறைத்துதியோடிழிந்தவென்றுதியும்பிறங்கவேற்றருள்செவிபோற்றி
மருவுபல்லுயிரும்வாழ்தரக்கருணைவழிதருவிழித்துணைபோற்றி. (கஉ)

விறல்கெழுமேருவில்லியைப்பொருதுவெலும்புருவச்சிலைபோற்றி
யுறல்கெழுகோம்பியுருத்திரிநாசியொள்ளியகுமிழ்மலர்போற்றி
யறலிலாதமைந்தநீர்நிலையென்னலாகியகபோலங்கள்போற்றி
யிறல்செய்வெவ்விடமுண்டவர்மறைச்செவ்வாய்க்கின்பஞ்செய்பவளவாய்போற்றி. (கங)

அழனகைகுளிருநன்னகையாகவணிநகையெழுநகைபோற்றி
தழல்சுடுகுழலும்யாழுமொவ்வாதுதமிழ்நிகர்த்தெழுமொழிபோற்றி
கழலரிதாகமங்கலம்பூண்டுகந்தியிற்பொலிகளம்போற்றி
புழல்படுபசுவேயிணைதராதழலுட்புகப்பொலிதோட்டுணைபோற்றி. (கச)

ஓரும்யாழ்த்தண்டின்வனப்பறச்சவட்டியொளிகிளர்முன்கரம்போற்றி
யூருவிலொன்றுபதியவெவ்வுயிர்க்கும்பயந்தபுமொருகரம்போற்றி
சேருமொண்காந்தளிதழெனச்சேந்துதிகழிருகைவிரல்போற்றி
சாருவின்மூக்கிற்பொலிந்துசேந்தொளிருந்தண்மலர்விரலுகிர்போற்றி. (கரு)

வாருமொள்வடமும்புனைந்துமெய்ஞ்ஞானம்வழிதரத்தருமுலைபோற்றி
பாருமற்றுலகுமடங்கியுந்தோற்றுப்பண்புதரத்தெழில்போற்றி
கூருநல்வனப்பினந்தியாவட்டங்குலவுமுந்திச்சுழிபோற்றி
தேருமூவுலகுளிருப்பதுதெரித்துத்திகழுமும்மடிப்பெழில்போற்றி. (கசு)

செய்யவான்பொதிந்தமின்னெனவுடுத்தசெம்பட்டுச்சிற்றிடைபோற்றி
யுய்யவெவ்வுயிரும்வெளிவரத்தோற்றியுருக்கிளர்கடிதடம்போற்றி
யையசெம்பட்டான்மறைத்திடப்பட்டவரம்பையங்கவானெழில்போற்றி
மையகல்காமதேனுவின்மூக்காமணிமுழந்தாளெழில்போற்றி. (கஎ)

திருவளர்கணைக்கால்போற்றியொண்கரடாஞ்சிறுதராசுத்துணைபோற்றி
யுருவளர்கமடப்புறவடிபோற்றியொளிகெழுவிரலுகிர்போற்றி
மருவளர்தளிரிற்சேந்தடியேங்கண்மனம்புகுமுள்ளடிபோற்றி
குருவளரபயாம்பிகைப்பெருமாட்டிகுலாவுநின்பேரெழில்போற்றி. (கஅ)

என்றுதோத்திரஞ்செய்தங்குநின்றேகியெழில்வளர்குமரநாயகன்மு
னன்றுசென்றிறைஞ்சிமஞ்சனமாதிநலத்தகக்கொண்டுபூசித்து
நின்றுநெக்குருகிச்செந்தமிழ்மணக்குநிகரிலாச்செய்யவாய்முனிவ
னென்றுமிக்கன்பின்மகிழ்ச்சிமீக்கிளைப்பவுறுதுதிசெய்யலுற்றனனே. (ககூ)

வேறு.

பூமிமணவாளனுமொண்புண்டரிகத்தவனு
நாமிதுசெய்குவதென்றுநயந்துளத்திற்கருதித்
தோமிரியவடைந்தேத்துஞ்சுந்தரனைக்குமர
சாமிதனைவணங்காததலையென்னதலையே
சரவணபவனைவணங்காத்தலையென்னதலையே. (௨௦)

முந்தனுயிர்க்குயிராயமுதல்வனடியவர்சம்
பந்தன்வலிகெழுபுயங்கள்பன்னிரண்டுமளையுஞ்
சந்தனொருபிறையனையதந்தனிளையவனங்
கந்தனுருக்காணாதகண்ணென்னகண்ணே
கடம்பனுருக்காணாதகண்ணென்னகண்ணே. (௨௧)

கடியேறுமலரோனைக்கடுஞ்சிறையில்வைத்துப்
படியாதியெவ்வுலகும்படைத்தருளும்பிரானை
முடியாதமுதலோனைமூவர்பெருமானை
வடிவேலன்றனைப்பேசாவாயென்னவாயே
வள்ளிமணாளனைப்பேசாவாயென்னவாயே. (௨௨)

காவலான்முதற்றேவர்கைகுவித்துப்போற்ற
வேவலாளாகியசூரொறுமொழியச்சவட்டி
மேவலானினிதமையும்விண்ணாடுபுரந்த
சேவலான்சீர்கேளாச்செவியென்னசெவியே
செவ்வேடன்சீர்கேளாச்செவியென்னசெவியே. (௨௩)

கந்தானைமுகற்கிளையநாயகனையெமக்குந்
தந்தானைத்தன்சரணந்தன்னடியார்க்கொருதோ
முந்தானையுலகீன்றவுமையாள்கண்மணியின்
வந்தானைநினையாதமனமென்னமனமே
மயிலானைநினையாதமனமென்னமனமே. (௨௪)

திங்கோயுமவுணர்குலஞ்சிதைந்தழியமாட்டிப்
பாங்கேயுமமரர்சிறைவிடுத்தருள்பண்ணவனை
நாங்கேடில்பூதமடையநன்றுபுரிந்தருளுங்
காங்கேயன்றொண்டுசெயாக்கையென்னகையே
கந்தவேடொண்டுசெயாக்கையென்னகையே. (௨௫)

வேறு.

இவ்வண்ணந்துதித்தபின்னரிருந்தமிழ்முனிவனென்பான்
செவ்வண்ணம்வாய்ந்தவாய்ந்தசிந்தைமாணாக்கரோடு
மவ்வண்ணம்பெருமான்முன்னரணுகியானந்தம்பொங்க
நவ்வண்ணமுழுதுமாய்த்துநல்லருள்பெற்றுப்பின்னர். (௨௬)

இகலருமாயூரத்தினெல்லையோசனையுஞ்சூழ்ந்து
புகலருமாங்காங்குள்ளதலமெலாம்போற்றிப்போற்றி
யுகலரும்பெருந்தவம்பூண்டொள்ளியபொதியஞ்சார்ந்து
பகலருமகிழ்ச்சிபொங்கப்பரவிவீற்றிருந்தானன்றே. (௨௭)

அகத்தியமுனிவன்செய்தவரும்பெறற்கூபமாய
வகத்தியதீர்த்தமாடியவனிதருச்சித்துய்ந்த
வகத்தியவிநாயகன்பொன்னடிவழிபாடுசெய்வா
ரகத்தியக்கங்களைந்தேயரும்பெரும்போகத்தாழ்வார். (௨௮)

மேதகவமையமேவுமகத்தியவிநாயகற்கு
மோதகமாதிவீசிமூவிலைதூர்வைசாத்தி
மாதகவமையப்பூசைவயக்குவார்யாவரேனும்
பாதகமனைத்துநீந்திப்பரகதிச்செல்வராவார். (௨௯)

குறுமுனியன்பிற்செய்தகுணங்கெழுதோத்திரத்தை
மறுவறக்கற்றுநாளுந்துதிசெயுமாண்புமிக்கோர்
வறுமைநோயடையாரூறுமருவுறாரடையவேண்டு
முறுதியேபெற்றுவாழ்வாரவர்க்கிணையுலகத்தியாரே. (௩0)

அகத்தியர்பூசைப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். ௧௧௩௮.

கண்ணுவர்பூசைப்படலம்.

கற்றாருள்ளகலாதகண்ணுவமாமுனியென்பான்
பற்றாயமனைவியொடுபரவுபுகழ்ப்பெருங்காசி
யுற்றாதரவுசிறப்பவுயர்கங்கைமூழ்கிடுவான்
வற்றாதநதிவளாயூர்வனங்கடக்கும்வழிநடப்பான். (௧)

வழிநடக்குமவ்வேலைமடமாதரொருமூவர்
கழிநலத்தினருடம்புகறுத்துவழியெதிர்ப்பட்டார்
பழிவளைத்தபுலைமாதரொன்றுமுனியுளம்படர்ந்து
கழிகவயலிடத்தென்றுபேசானாய்க்கையசைத்தான் (௨)

கையசைத்தற்ககலாமைகண்டுமுனிநனிசினந்து
பொய்யமையும்புலைமடவீர்போமினயலெனப்புகன்றான்
மெய்யமையுநீயாவன்விளம்பெனக்கண்ணுவமுனியான்
செய்யமனையொடுங்கங்கையாடிடச்செல்குவனென்றான். (௩)

கண்ணுவனிப்படியுரைக்கவவர்நகைத்தார்களாயவரு
ளொண்ணுதன்மந்தாகினியீதுரைசெய்வாண்முனிவாகேள்
விண்ணுதலுங்கங்கையான்மேவியமற்றிவள்வாணி
யெண்ணுதல்செயிவளோகாளிந்தியெனவெடுத்துரைத்தாள். (௪)

மூவருமிப்புலையுருவமுன்னியதென்னெனவினவத்
தாவருமாபாவரெலாந்தலைப்பட்டெம்பான்முழுக
வோவருமப்பாவமேற்றுடம்புகறுத்திழிவுற்றோம்
மேவருமாயூரத்துவிரும்பிடபதீர்த்தத்தில். (௫)

முழுகியொழித்தாங்கமருமுதல்வனருளினுமூழ்கிப்
பழுதுதவிர்த்தீங்கடைவோமென்றுபகர்ந்தனர்போனார்
செழுமறைக்கண்ணுவமுனியுமீதென்னாமெனத்தெரிவான்
வழுவின்மனையாட்டியொடுமற்றவர்பின்றொடருற்றான். (௬)

அந்தமூவரும்புனனாட்டமைந்ததிருமாயூரச்
சந்தமிகுமிடபதீர்த்தத்துறையிற்படிந்தாடி
நதந்வமைதன்னுருவநண்ணினார்தேசுற்றார்
பந்தமகனீறணிந்துபரம்பரனைத்தொழவெழுந்தார். (௭)

ஒளிவளராலயம்புகுந்தாரொருவள்ளற்பெருமானை
யளிவளர்பன்மலர்க்கூந்தலஞ்சனாயகியுமையைத்
தெளிவளரன்புறத்தொழுதார்தேமலர்கொண்டருச்சித்தார்
களிவளருண்மகிழ்ச்சியராய்க்கன்னியர்மூவருமீண்டார். (அ)

காமருதம்மிடம்புகுந்தார்கண்டனன்கண்ணுவமுனிவன்
மாமருமந்தாகினிசேர்வாஞ்சைமனத்தறவொழித்தா
னாமருவின்சுவையிடபதீர்த்தநீர்நயந்தாடி
தேமருவப்புனற்பெருமைதெரிதரவாங்கெடுத்துரைப்பான். (கூ)

எல்லீருமிதுகேண்மின்னெல்லாரும்படிந்தாட
வல்லீருங்குழன்மூவராய்தருசானவிவாணி
சொல்லீரும்பெரும்புகழ்க்காளிந்தியிவர்தொகுமறத்தால்
வில்லீருங்காருடம்புமேவியிவணடைகுற்றார். (க0)

இடபதீர்த்தம்படிந்தாரினிதமைதம்முருப்பெற்றார்
கெடலருமற்றவர்பாவங்கெடுத்திந்நீரோற்றிருந்தும்
விடலருமுன்னையினுநனிவிளங்கியதீததிசயமே
மடமயிலோர்பாலுடையவள்ளலாரருளிதுவால். (கக)

கண்ணாரக்கண்டனன்யானென்றெடுத்துக்கழறினான்
மண்ணாடரதிசயித்துவாழ்த்திமூழ்கினருய்ந்தார்
விண்ணாடர்மலர்தூவிவிழைந்தாடிமகிழ்சிறந்தா
ரொண்ணாடுகண்ணுவனுமிரியாதகளிப்பினனாய். (கஉ)

பின்னுமனையாட்டியொடும்பிறங்கிடபப்புனலாடி
மன்னுதிருநீறணிந்துவயங்கியகண்மணிபூண்டு
துன்னுபொருட்பதமைந்துஞ்சுவைகொளவுட்கணித்ததற்பின்
மின்னுமணிக்கோபுரங்கண்மிளிர்பெருங்கோயிலையடைந்தான். (கங)

அடியார்தம்பெருவாழ்வையளவிலாக்கருணையனைக்
கொடியார்முப்புரம்பொடித்தகோமானைமிகமுயன்று
நெடியானுநான்முகனுந்தேறாதநின்மலனை
வடியார்பைங்கொன்றையணிமாயூரேசனைத்தொழுதான். (கச)

அடங்காதபெருங்காதலாருகவனையபிரா
ணிடங்காவல்கொண்டுறையுமெம்பெருமாட்டியைக்கருணை
மடங்காதபெருஞ்செல்வவாழ்க்கைமுதல்வியையன்பு
தொடங்கார்வத்தொடும்போற்றித்தொழுதெழுந்தான்கண்ணுவனே. (கரு)

இந்தவிதமிருவரையுமியைதரப்பன்னாள்பூசித்
தந்தமிலாப்பரம்பரன்பேரருள்பெற்றெண்ணியதடைந்து
கந்தமலர்க்குழன்மனைவிதன்னொடுங்கண்ணுவமுனிவன்
சந்தமிகுதன்னிருக்கைசார்ந்துவாழ்ந்திருந்தனனே. (கசு)

கங்கைமுதன்மூவருக்குங்கலந்தபெரும்பாவமறுத்
தங்கையினாமலகமெனமுன்னையுருவளித்ததெனிற்
சங்கையிலாவிடபதீர்த்தப்பெருமைசாற்றுநர்யார்
நங்கையொருபாலுடையநம்மானேசொலுந்திறத்தோன். (கஎ)

கண்ணுவர்பூசைப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். ககருச.

இலக்குமிபூசித்தபடலம்.

இந்திரப்பிரத்தமென்னுநகரத்திலென்றும்வாழ்வா
னிந்திரதத்தனென்னுமிருபிறப்பாளனில்லா
ளிந்திரன்மார்பம்புல்லுமிந்திராணியினுமாயோ
னிந்திரையினுமேர்வாய்ந்தாளிலக்குமியென்னும்பேராள். (௧)

அனையவடவனைவஞ்சித்தகத்துளபொருள்களெல்லாந்
தனையினீன்றதந்தைதாய்மனைப்புகுத்திவிட்டா
ணினைதருமஞ்ஞளனோர்நாளதுகண்டுநேர்சினந்தான்
வினைவலியவனுண்கண்டத்திட்டுயிர்வீந்தாளன்றே. (௨)

வீந்தவளொருபேயாகிமேதினியுழலுங்காலைச்
சாந்தரூபத்தனாயசாபாலிமுனியைக்கண்டா
ளாந்திறமவன்பாற்கூறிலடுத்திடுநன்மையென்று
தேர்ந்தவளாகியன்னான்சேவடிவணங்கினாளே. (௩)

வணங்கியபிரேதமாதைமாண்டசாபாலிபார்த்திங்
கிணங்கியநீயார்வந்ததெதுகுறித்துரைத்தியென்றா
னுணங்கியவவளுமுன்னர்நடந்தவையொருங்குகூறிப்
பிணங்குமிவ்வடிவநீங்கும்பெற்றிகூறென்றுதாழ்ந்தாள். (௪)

மாமுனிவனுமிரங்கிக்கிருத்திமமாதைநோக்கி
நாமுருநின்னைநீங்கநாடுமாயூரத்தெய்தி
யேமுறுமிடபதீர்த்தத்தினிதுதோய்ந்தடியோர்முச்
சோமுனிவள்ளலாரைத்தொழுதுபூசித்தியின்னும். (௫)

முழுதுலகீன்றசெல்வியஞ்சனாயகிமுன்சென்று
தொழுதுளமுருகுவாயேற்றொலைந்திடுமண்ணைரூபம்
பழுதருவனப்புவாய்ந்தமாணிடமகளாய்ப்பண்பார்
செழுமறைப்பிரமதத்தற்கூடுபுசெழித்துவாழ்வாய். (௬)

என்றுசாபாலிகூறவறிவிலேனுய்ந்தேனென்று
கன்றுபேய்வடிவமாதுகனிந்தவனடியிற்றாழ்ந்து
நன்றுசால்விடையும்பெற்றுநாடுமாயூரத்தெய்தித்
தொன்றுசாலிடபதீர்த்தத்துறையினையடைந்தாளன்றே. (௭)

துறையகம்படிந்தெழுந்தாடுயர்க்குணுங்குருவநீத்தா
ணிறைவனப்பமைந்தமங்கையுருவநேர்பெற்றெழுந்தா
ளறைதரமுடிதராதவானந்தமகிழ்ச்சிபெற்றா
ளுறைபெருந்தவச்சாபாலியுரையினைவியந்தாளன்றே. (௮)

மணிமதில்சூழுங்கோயில்வலம்புரிந்துட்புகுந்து
பணியணிவள்ளலாயபரம்பரன்றனைப்பூசித்துப்
பிணிமுகவுருவநீத்துப்பிறங்குமையவண்முன்சென்று
கணிதமிலன்புபொங்கக்கைகுவித்திறைஞ்சிநின்றாள். (௯)

ஆயவக்காலையெங்களஞ்சனுயகியுஞானத்
தூயமெய்ச்சோதியாயசுந்தரவள்ளலாரு
ரேயமிக்கருள்செலுத்தநிரம்புமந்நகரில்வாழ்க்கை
பாயநற்பிரமதத்தப்பனவன்கண்டனன்வேட்டானல். (க0)

அனையவனோடுங்கூடியளப்பரும்போகந்துய்த்துப்
புனைதருமகவும்பெற்றுப்பொலிதருவள்ளலாரை
நினைமயிலுருக்கொண்மாதைநித்தலுஞ்சென்றுபோற்றிக்
கனைகடலுலகம்போற்றிக்கைகுவித்திடவாழ்ந்தாளே. (கக)

இலக்குமிபூசித்தபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ககசா.

விசாலன் பூசித்தபடலம்.

பங்கமேவியபண்ணைநின்றெழுதருவாளை
சங்கமூர்பெருவானதித்தலைதுளைந்தாடு
மங்கநாடினிதளிப்பவன்மதிக்குலத்தமைந்தோன்
றுங்கமேயமைவிசாலனென்றிடும்பெயர்த்தோன்றல். (க)

ஒருவன்வையகம்புரக்குநாளொண்ணிறத்தமைத்த
திருவணுகியமுகுந்தனன்புடையர்போற்றிரியும்
வெருவராவயிணவமறையவர்சிலர்மேவிப்
பருவராவவற்குண்மையினிதுவிதுபகர்வார், (உ)

சமையமாவதுவயிணவசமயமேதகவி
னமையமேவியதெய்வமுமருட்டிருமாலே
சமையயாவையுந்தருபவரவனடிசார்ந்தார்
கமையவாவியமனத்தினுய்தெரிதரக்காண்டி: (ங)

அருமையாகியவயிணவசமையத்தையுடைந்து
பெருமையாகிய்திருநெடுமாலடிபேணி
யொருமையாகியவவனடியார்களையூட்டிக்
கருமையாகியபிரபஞ்சவாழ்க்கையைக்கடந்து. (ச)

முந்தியெய்தியோங்கலைகெழுவிரசையின்மூழ்கித்
தந்திகாத்தவன்வைகுந்தத்திருநகர்சார்ந்து
நந்தியார்திருமாமணிமண்டபநணியவ்
வுந்திபூத்தவனுருவம்பெற்றமர்தலேயுண்மை. (ரு)

மறைபுகன்றிடலிதுவலான்மற்றுமொன்றுண்டோ
விறையுமற்றொருதெய்வத்தையுன்னுதலிழிபே
முறையின்மற்றொருகருமத்துமுயறலுமுனிவே
தறைபுரப்பவநினையன்றியெவருணர்தகையோர், (சா)

என்றுபாஞ்சராத்திரமெடுத்தியம்பினரிறைவ
னன்றுநல்கியபொருளொடும்வயிணவரகன்றார்
நன்றுநீங்கியவிசாலனுமமைச்சர்முன்னல்லோ
ரொன்றுமார்க்கமிதன்றெனவுரைப்பதுங்கொள்ளான், (எ)

ஓங்குவைணவசமயமேசமயமற்றதற்குப்
பாங்குமேவியதெய்வமாம்படியளந்தவனே
வீங்குதெய்வமற்றவனடிக்கன்பரோமேலோர்
தேங்குமிவ்வலால்வேறிலையென்றுளந்தெளிந்து. (௮)

நீறுகண்மணிபூண்பவரொதிருறநேரிற்
சீறுபாம்பினும்வெய்தெனச்சீறுபுசினப்பா
றூறுகுடிதனுலயங்களுக்கிடரமைப்பான்
மாறுகொண்டவத்தீயவன்செயலெவர்வகுப்பார். (௯)

சிவாவெனச்சொலிற்சிக்கெனச்செவித்துளைபுதைப்பான்
றவாமகிழ்ச்சியின்வைணவரடித்தலஞ்சார்வா
னவாவிமற்றவர்க்கோதனமினிமையினமைப்பா
னுவாமதிக்கடலெனவவர்க்கூட்டிமிக்கொலிப்பான். (௧௦)

மறையுரைத்திடுகருமங்களனைத்தையுமறுத்துப்
பொறைமுதற்குணமொன்றிலையாம்படிபோக்கி
நிறைதவத்தினர்க்கூறிழைத்துழிதந்துநிரயச்
சிறையிருப்பவனொருதினம்பிணிதெறச்செத்தான். (௧௧)

வெய்யதூதுவர்கொடுவலிப்பாசத்தால்வீக்கி
வையமஞ்சுறுமாற்கதண்டங்களுமியற்றிச்
செய்யகோலுடைக்கடவுண்முற்செலுத்தினராகக்
கையவந்தனையோவெனக்கனன்றுகூற்றுவனும். (௧௨)

வல்லசித்திரகுத்தனைப்பார்த்திவன்வையத்
தல்லசெய்தனவுரைக்கெனவனைத்துமாங்குரைப்பக்
கொல்லமுந்தெழுவிடத்தினுங்கொதிகொதித்தழன்று
சொல்லவும்படாக்கொடுந்தண்டம்புரிகெனச்சொற்றான். (௧௩)

சொற்றபோதுபல்லோர்புலிப்போத்தெனச்சூழ்ந்து
செற்றமேவுவைவாள்கைக்கொண்டுறுப்பறச்சிதைப்பார்
வெற்றவல்லிருப்புலக்கையின்வெய்தெனப்புடைப்பார்
துற்றவெந்தழற்கொதிநிறைநெய்யினுட்டோய்ப்பார். (௧௪)

நுங்குகுன்றெனக்கண்களைச்சூலுவர்நுறுக்கிப்
பொங்குநெய்நிறைசாடியிற்போகட்டுவறுப்பார்
தங்குமீயத்தையுருக்கிவாய்வழிவிட்டுத்தடிவார்
மங்குமாறுபல்கொடுமையுங்கதறிடவகுப்பார். (௧௫)

இந்தவாறுபஃறண்டங்களெண்ணிறைாற்றிப்
பந்தமாமிரவுரவமுற்பற்பலநரகு
நந்தவாரஞொண்ணிலாநாளெலாந்துளைந்தான்
பிந்தவந்தொருவிந்தத்திற்பேயுருப்பெற்றான். (௧௬)

விந்தமர்ல்வரைப்பேயெனப்பிறந்துழல்வெய்யோன்
சந்தநீர்நிழல்வயிரவராணையிற்சாரா
னந்தவெம்பசிதாகமுநலிந்துழிதருவான்
கந்தமாமலர்ப்பொழில்சுலாம்லயத்தைக்கண்டான். (௧௭)

ஆங்குமேவியகும்பமாமுனிவனையடுத்தான்
பாங்குமேவுமற்றவன்றிருவடிமிசைப்பணிந்தான்
றேங்குதன்பெருந்தீவினையாவையுஞ்செப்பி
நீங்குமாறினிதருளெனநிகழ்த்தினனழுதான். (க௮)

ஆயகாலையிற்சிவத்துரோகம்புரிந்தடுத்த
தீயநின்முகங்காண்டலுந்தீமையாய்முடியும்
பாயபற்பலநாணரகழுந்தினும்பாறா
வேயமற்றிதற்கெவர்கழுவாயெடுத்திசைப்பார். (க௯)

அன்னதாயினுமடுத்திரந்தனையொருகழுவாய்
நன்னரோதுதுங்கேட்டியான்மறத்தொழினயந்தோய்.
முன்னர்நாள்வடதிசைக்கிறைமாளிகைமுயங்குஞ்
சொன்னநேர்குணச்சுசீரவாவென்னுங்கந்தருவன். (௨0)

பெற்றபுத்திரிமனோக்கினியெனும்பெயர்பெற்றாள்
வெற்றபல்வகைத்தேயத்தும்விளைநலங்காண்பா
னுற்றகாயமார்க்கத்துறவியங்குபுவருவா
ளற்றமொன்றிலாவிந்துவாவிக்குநேரடைந்தாள். (௨௧)

மிகுவளங்கொள்கஞ்சாற்றொருவிந்துவாவியின்பா
னகுதவம்புரியுருசிமாமுனிவனன்மைந்தன்
றகுகுணத்தினன்மித்திரனெனும்பெயர்சார்ந்தான்
றொகுபுகழ்ச்சிசால்பிரமசாரிப்பெருந்தூயோன். (௨௨)

ஆங்குமெய்த்தவமாற்றினனிருந்தனனாக
வீங்குமென்முலைமனோக்கினியவனலம்விழைந்து
தேங்குகாமவேள்பெய்கணையானிறைசிதைந்து
தாங்குமண்மிசைவந்தவன்முன்னின்றுசாற்றும். (௨௩)

கந்தவேளினுங்கட்டழகுடையவவென்னைச்
சந்தமார்மணம்புரிந்திளமுலைதழுவென்ன
நந்தமாரியனருள்வழிநடாத்துதுமென்றா
னெந்தநாளதுபெறுவதென்றவளுளத்தெண்ணி. (௨௪)

இருகைகொண்டுதன்னிளமுலைகுழைதரத்தழுவித்
திருகையில்லவன்பவளவாய்ச்சுவைத்தலுஞ்செய்தா
ளொருகையாற்பறித்தப்புறத்தவள்செலவொதுக்கி
முருகைநேர்பெருவனப்பினான்சினந்திதுமொழிவான். (௨௫)

பிரமசாரியாய்த்தவஞ்செயுமென்னைநீபிணைந்து
கிரமமின்றிவந்திதுசெய்தாயிழிந்தசீர்கேடி
சிரமிக்கதோர்பேயுருவாகெனச்செப்பிப்
பரமநாயகனருள்குறித்திருந்தனன்பனவன். (௨௬)

ஆயவேலையிற்பேயுருவடைந்தனளணங்கு
தூயவத்தடந்தோய்தரத்தூத்தவவசித
னேயமோடணைதரல்கண்டுநேரிழைபணிந்து
தீயவிவ்வுருத்தீர்தரவருளெனச்செப்ப. (௨௭)

அன்னமாதவவசிதனுமிரங்கிமாயூர
மென்னவோதுமாத்தலத்தினின்னேவிரைந்தடைந்து
நன்னர்சாலிடபப்புனன்மூழ்கெனநவிலச்
சொன்னபோதுவந்தாடினுண்மனேக்கினித்தோகை. (உஅ)

ஆடிப்பேயுருவகன்றுமுன்னுருவமேயடைந்தா
ஞடிச்சென்றுமாயூரநாயகனடிபோற்றிப்
பாடித்தேவர்சூழஞ்சனுயகியையும்பணிந்து
கூடிப்போயொருமித்திரன்முனங்குறுகினளால். (உகூ)

அந்தவேலையிலசிதனுமுருசியுமணைந்து
சந்தமாருமித்திரற்கவட்கொண்மணம்புணர்த்தார்
பந்தமோடுவீடுதவிடும்பரமனருளான்
முந்தவாம்பெரும்போகத்துமுயங்கிவாழ்ந்திருந்தாள். (௩௦)

உற்றதீவினையால்வணவத்தொடக்குண்டு
சொற்றபல்கொடுநரகெலாந்திளைத்தபேய்விசால
கற்றமேலவர்புகழுமத்தீர்த்தத்தைக்கலந்து
முற்றமூழ்குநம்பிரானையேத்துதியெனமொழிந்தான். (௩க)

கும்பமாமுனியருளியமொழிதலைக்கொண்டே
யம்பராவணிசடையர்மாயூரத்தையடைந்தான்
வெம்பமேவுபாதகமெலாநொடிவரைவீட்டிக்
கம்பமேவுறப்புரியிடபப்புனல்கலந்தான். (௩உ)

ஆடினன்கொடும்பேயுருவங்ஙனேயொழிந்தான்
கூடினன்பெருங்களியிமையவருருக்கொண்டா
னடிநான்முகன்போற்றியவள்ளலைநயந்து
பாடினன்பெருங்கோயில்புக்கவன்பதம்பணிந்தான். (௩௩)

அஞ்சனுயகிபூசையுமன்புறச்செய்தா
னெஞ்சலின்றியாங்கிங்ஙனஞ்சிலபகலிருந்து
வஞ்சர்பாலுறுவள்ளலார்திருவருள்வாங்கித்
தஞ்சமார்சிவலோகத்துச்சார்ந்துவாழ்ந்திருந்தான். (௩ச)

அங்கநாடுகாத்தவன்பட்டபாடுமுற்றறிந்தும்
பங்கமார்வினையாற்சிவநிந்தைபண்ணிடுவார்
பொங்கனேகவெந்நிரயமும்புகுநதுழன்றிழிக
வெங்கள்செய்கைமற்றவன்புகழிசைத்துவாழ்ந்திருக்கை. (௩ரு)

விசாலன்பூசித்தபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். கஉ௦க.

யாவணமுத்தியடைந்தபடலம்.

மகதியாழ்முனிவன்றும்புருவொடு, நிகரிலாவிமயப்பெயர்நீள்வரை
யகரிலாவுமஞ்சாரலணைந்தன, னுகலிலாவெறுழோர்கரிகண்டதே, (க)

கண்டகாலைமுற்சன்மங்கருத்துணர்ந், தண்டர்போற்றுமவன்கழற்றாழ்ந்தது
விண்டபாசமுனிவனும்வேழநீ, கொண்டவெண்ணமென்கூறுகதில்லென்றான். ()

முனிவகேண்மதிமுற்சனனத்தியான், புனிதனாயபிராமணபுத்திரன்
றனியனுமமாசாந்தனென்றேதுவா, ரினியமால்பதம்பூசித்திருந்தனன். (௩)

ஆயகாலையகத்தியராதிய, நேயமாரொழுவோருநிறைபெருந்
தூயமாகயிலாயந்தொழச்சென்றார், காயவாறவர்க்கண்டும்வணங்கிலேன். (௪)

இருக்கைநின்றுமெழேனவர்கண்டிவன், செருக்கமைந்தவனென்றுசினந்தனர்
பொருக்கெனவெம்புகர்முகமாகென்றார், வெருக்கொளாவவர்தாண்மிசைவீழ்ந்த
[னன். (௫)

அடியனேனறியாமையினாற்றிய, கொடியதீமைகொள்ளாமலிதற்கொரு
முடிபுசொன்மின்முனிவரர்காளென்றே, னொடிவின்மற்றவருள்ளமிரங்கியே. ()

ஆண்டுநூறிபமாகியமருதி, யீண்டுநாரதமாமுனியெய்திடும்
பூண்டுமற்றவன்பொன்னடித்தாமரை,வேண்டுவாயெனிற்றீர்வுவிளம்புவான். (௭)

என்றுகூறியெழுவருமேகின, ரன்றுதொட்டிபமாகியலைந்தனன்
சென்றுநூறுவருடமுந்தீர்ந்தன, நன்றுதீர்வுரையென்றுநவின்றதால். (௮)

கேட்டநாரதன்கேழ்கிளர்பைந்துழாய்த், தோட்டலங்கலந்தோளரிபூசையா
னாட்டமூன்றுடைநாதனடியவர், தாட்டளிர்க்குவணங்கறவிர்ந்தனை. (௯)

அன்னதீமையினாலிபமாயினை, யென்னரோனுமிறைவனடியரை
நன்னரோத்திவணங்கினலமுறும், பின்னரொன்றிடிற்பீழைபெருகுமே. (௧௦)

அட்டமூர்த்தியடியர்வணக்கநீத், தொட்டமாலயனாதியவும்பர்கள்
பட்டபாடுபகரவொண்ணாதெனின், முட்டநின்னைமொழியவும்வேண்டுமோ. ()

என்றுமேலவர்தன்மையியம்பிமே, லொன்றுகூறுவதுண்டுமாயூரத்து
நன்றுசார்ந்திடபப்புனலாடிமூழ், கன்றுமிவ்வுருத்தீருமதற்குமேல். (௧௨)

பண்டைநல்லுருவெய்தும்பலருந்தாழ், கண்டைமால்விடையான்கழல்போற்றிடி
னிண்டையானுநறுமுறுப்பெய்திட, வொண்டைவான்சிவலோகமுறுவையால். ()

போதியென்றுபுகன்றனனாரத, னீதியென்றுநினைந்துமதகய
மாதிநாதன்மாயூரமடைந்துதோ, மோதியாளிடபப்புனன்மூழ்கிற்றே. (௧௪)

முழுகுங்காலையின்முன்னுருப்பெற்றதாங், கொழுகுதானவுருவமறைந்தது
பழுதுதீர்ந்ததென்றெண்ணிப்பரமனைத், தொழுதுய்வாமெனவாலயஞ்சூழ்ந்ததே.

அஞ்சனாயகியாரொடும்வள்ளலை, யெஞ்சலின்றியியைதரப்பூசித்துத்
தஞ்சமார்சிவலோகத்திற்சார்ந்தது, வஞ்சமில்லாமகிழ்ச்சியின்வைகிற்றே. (௧௬)

யானைமுத்தியடைந்தபடலம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம். ௧௨௧௭.

குதிரைகண்முத்தியடைந்தபடலம்.

மன்னுமயோத்திநகராளுமனுவங்கிசத்துத்திலீபன்பா
லுன்னும்பரிகளிரண்டுள்ளவுடம்புமுழுதும்விளர்த்திருக்கத்
துன்னுஞ்செவிகண்மாத்திரமேகறுத்துத்தோன்றப்பொலிவனவான்
மின்னுமனையபாடலத்தான்வென்றூன்றிசையோரொட்டுமவன். (௧)

அன்னதுரகமொன்றற்கொன்றவாவியொருநாளிதுபேசு
முன்னமரசாளிவன்மார்பின்முந்நூன்மறையோனாயிருந்தா
னன்னர்யானுமொருவணிகனாகியமர்ந்தேனயந்தவன்பாற்
சொன்னமிகவுங்கடனாகக்கொண்டேன்கொடுத்துத்தொலைத்திலேன். (௨)

அந்தவினையாற்றசமகிடமாகியவற்கிப்பவத்துழைத்தேன்
பந்தமொழியாதிருப்பதனாற்பரியாயுழைத்தும்வருகின்றே
னெந்தநாண்மற்றிதற்கொருதீர்வெய்துமென்றுசொலியமுத
துந்தவொன்றுமற்றொன்றூங்குரையாநிற்குந்தன்சரிதம். (௩)

முன்னமொருசூத்திரன்யானுமுந்நூன்மறையோனாமிவன்பாற்
பன்னவரியகடன்கொண்டேன்பாதிகொடுத்துந்தொலைத்திலே
னன்னபிழையாற்கயமொருபானாகியுழைத்தேன்பரியாயு
மின்னமுழைத்துவருகின்றேனென்றுசொல்லியமுததே. (௪)

தொள்ளையகன்றமனத்திறையெவ்வுயிர்ப்பாடையுந்தேர்துணிபினாற்
கிள்ளையிரண்டுமொன்றற்கொன்றுரைத்தவார்த்தைகேட்டிரங்கித்
தள்ளையனையகுருவசிட்டன்றாள்கள்வணங்கித்தெரிவித்தான்
வெள்ளையமையாப்பெருங்கேள்விமேலோனவனுமிஃதுரைப்பான். (௫)

மன்னாவெவைக்குமிரணவிமோசனஞ்செயறமேமாண்டதா
மின்னாவொழியப்பரியிரண்டுமின்னேதிருமாயூரத்தைத்
துன்னாவிடபதீர்த்தத்தின்முழுகிற்றொலையுந்துணிபிதுவே
யுன்னாவிதுசெய்திடுதிறனுமுனக்கேயமையுமென்றுரைத்தான். (௬)

என்றபொழுதேபரியிரண்டுங்கைக்கொண்டெழுந்துமாயூரத்
தொன்றவடைந்தான்புகழிடபத்துதகத்திரண்டனையுநனைத்தான்
மன்றவெவருமதிசயிப்பவாசியுருவமதுமாறி
நன்றமையுந்தேவுருவாகநரேந்திரனுங்கண்டுளமகிழ்ந்தான். (௭)

நற்றேவுருவங்கொண்டபரிநக்கதிருக்கோயிலையடைந்து
முற்றேதமும்விண்டொழிதரநான்முகன்மான்முதலோர்க்கரியானைப்
பற்றேதுமிலார்பெருவாழ்வைப்பாகப்பிராட்டியொடும்போற்றி
யெற்றேமலர்வானவர்பொழியச்சிவலோகஞ்சார்ந்திருந்தனவே. (௮)

மாறாவிரணமோசனஞ்செய்மாண்பார்தீர்த்தப்பெருஞ்சிறப்பும்
பேறாவுயர்ந்தசிவலோகம்பேணிக்கொடுத்தார்பெருஞ்சிறப்புந்
தேறாவுளத்துமகிழ்வுற்றுத்திலீபனயோத்திநகரடைந்து
கூறாவசிட்டமுனிவனுக்குக்குறித்துமகிழ்ந்துவாழ்ந்திருந்தான். (௯)

குதிரைகண்முத்தியடைந்தபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௨௨௬.

கரமுங்கழுகுமுத்திபெற்றபடலம்.

மாயிடமதியென்னும்வளநகரரசாள்வோன்
றேயிடர்தபுசிங்கத்துவசனெனும்பெயரான்
காயிடர்புரிமிருகங்களுலியகானடைந்து
தாயிடவரிதாக்வடுதொழிற்றலைநின்றான். (௧)

சிங்கமுங்கடமாவுஞ்செறியுளியமும்வெம்மா
தங்கமும்வல்லியமுமுதலியதபச்சாடிப்
பங்கமொன்றில்லாதபரத்துவனாச்சிரம
மங்கரும்வெயின்முதிரவந்தனன்மிகவிளைத்து. (௨)

புரவலன்வருபோதுபொக்கமின்மாமுனிவன்
பரசிவனடியுன்னிப்பண்புறயோகிருந்தான்
விரவியமறமன்னனும்வரும்வேளையிடை
யுரவொடுகண்மூடியிருப்பதெனனுவனென்னா. (௩)

மிகுசினமதுகொண்டுவேந்தர்களிளைத்துவரிற்
றகுமுகமன்புரியாய்தனியிருப்பதுநன்றோ
செகுதிறற்செறுநர்களுஞ்செய்திலரிஃதென்னா
நகுபுகழொழிவான்றாளெடுத்துதைத்தனனடுங்கான். (௪)

உதைத்தலுமுனிவன்விழித்துறுசினந்தலைக்கொண்டு
பதைத்தனனெதிர்நிற்கும்பாதகன்முகநோக்கிச்
சிதைத்தனைநினக்குரியதிருமுழுமையுமின்னே
வதைத்திடுமிழிகழுதையாகெனவைதனே. (௫)

வே. று.

ஓங்குமுனிசபித்திடலுமொருகழுதையுருக்கொண்டு
வீங்குபெருங்குரல்காட்டிவிழியெதிர்கண்டவர்பலருந்
தாங்குகதைகொடுமொத்தவெரிநுடைந்துதளாயுழன்றான்
பாங்குபெறுமவன்சுற்றத்தவர்பலருமதுகண்டார். (௬)

கண்டபொழுதினிச்செய்யக்கடவதெவனெனக்கழிந்து
வண்டணையுமலர்மாலைமணிமகுடமவனீன்ற
திண்டிறன்மைந்தனைச்சூட்டித்திரையாழிப்புவிகாத்தார்
மண்டிரியக்கழுதையும்பல்லிடந்தோறுமரீஇயலைந்து. (௭)

ஒருகஞ்சகாரனிடைத்துற்றதவனதைப்பிடித்துப்
பருவந்துவெரிநுடையப்பாத்திரத்திண்சுமையேற்றி
மருவந்தமாதியிலாமாதேவன்விழாநடக்குந்
திருவந்தநகரமெல்லாஞ்செல்லுவானதுபோல. (௮)

வயங்குபுகழ்மாயூரத்தைப்பசிவான்றிருநாட்கு
முயங்குபலசரக்கமைத்தமூடைவெரிநிறச்சுமத்தி
யியங்குகழுதையைநடத்தியடைந்தொருசாரிறக்கினன்
றியங்குகழுதையும்புழுதிசெறிதரவீழ்ந்ததையன்றே. (௯)

வீழ்ந்தவிழிகழுதையிடம்வெய்யவாய்க்கழுகொன்று
சூழ்ந்தமனக்கவலையொடுந்தோன்றிநீயாரொன்ன
வாழ்ந்ததுயர்க்கழுதையுந்தன்வரவமையவெடுத்தோதித்
தாழ்ந்தபிறப்புறுநீயார்சாற்றிடுதியெனக்கென்ன. (௰)

என்றலுந்தூமரனெனும்பேரியைந்தவொருகிராதன்யான்
கன்றலிலாவிந்தவரைக்கானகத்துக்குடியிருந்தே
னென்றவவண்வருவாரையுயிரோடுபொருள்கவர்ந்து
நன்றமையாவயிரேம்பிநாய்க்குலத்துங்கடையானேன். (கக)

அன்னநாள்களிலொருநாளாங்கடையுமகத்தியனை
மன்னநான்வழிபட்டேன்மற்றந்தப்புண்ணியத்தான்
முன்னம்யாதுறநிகழ்ந்ததஃதுணருமூதுணர்ச்சி
துன்னயான்வசித்திடுவேன்சுகமாயதஃதொன்றே. (கஉ)

பல்லைவழிப்பறித்தடர்த்தபாவத்தாற்பன்னெடுநா
ளுலர்தலிலாக்கொடுநரகத்துழன்றெருவையுருவடைந்தேன்
புலர்தலிலாவிவ்வுருவும்போக்கியுயர்தருபர்க்கு
மலர்தலைஞாலத்துள்ளதீர்த்தமெல்லாமரீஇப்படிந்தேன். (கங)

எங்குமிதுதீர்ந்ததிலையித்தலமாத்தலமென்பார்
பொங்குமிதிற்பொலியிடபப்புண்ணியதீர்த்தத்தடைந்து
முங்குவமென்றடைந்தனன்யானீயும்வாமுழுகுவமேற்
சிங்குதலில்வினையனைத்துந்தீருமெனச்செப்பியதே. (கச)

கழுகுரைத்தமொழிகொண்டுகரமுமதன்பின்றொடர்ந்து
முழுகியதுசிறைக்கழுகுமுழுகியதுமுனிதக்க
பழுதுருவமிரண்டுமொரீஇப்பரவுதேவுருவடைந்து
செழுமலர்கைக்கொடுவள்ளல்சேவடிகளருச்சித்து. (கரு)

மன்னியபேரருளஞ்சஞயகிதன்மலர்ப்பதமுந்
துன்னியவன்பொடுவழுத்திச்சுரகணங்களெதிர்கொள்ள
மின்னியபொன்விமானத்துமேற்கொண்டுவானுலக
முன்னியபோகங்கவர்ந்துமுனிவின்றியிருந்தனவே. (கசு)

கரமுங்கழுகும் பூசித்தபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். கஉசஉ.

பாம்புமுத்தியடைந்தபடலம்.

பெருமதிலிந்திரப்பிரத்தம்புக்கொரு
தருமனன்மகந்தெரிந்தனையன்றன்னொடும்
வெருவருங்கானிடைவேட்டமாடுவான்
பொருவரும்யதுகுலக்கண்ணன்புக்கனன். (க)

உறுமவண்மாசுணமொன்றுகண்டனன்
றெறுதொழிலிதுவுமோர்சிலம்புகொல்லென
மறுவறுமனத்திடைமதித்துளானசை
வுறுகிடையதன்வரவறியலாமென. (உ)

பாவகீயிவ்வணம்படிக்கிடந்தனை
தேவனேவவுணனேசெப்புவாயென்றான்
மேவரும்வரையெனக்கிடந்துவெந்துய
ரோவறுமாசுணமுரைக்கலுற்றதே, (ங)

நகுகதிரவன்குலங்குடன்யான்முன
மிகுதிறலுடைமையின்வேட்கைகூர்தரச்
செகுபரிமகமொருநூறுசெய்தனன்
றொருகுசுடர்வானகந்துதையவெய்தினேன். (௪)

முழுவலியிந்திரபதமுயங்கியான்
செழுநலச்சசிமுலைதிளைத்தல்வேட்டன
னெழுவருஞ்சிவிகைவைத்தியையத்தாங்கினார்
தழுவுறும்வேட்கையாற்சர்ப்பவென்றனன். (௫)

குறுமுனியெமையுணர்கொள்கையற்றவெந்
தறுகண்மையுளங்கொடுசர்ப்பவென்றனை
யறுதிருவுற்றுநீசர்ப்பமாகென்றான்
மறுகியிவ்வுருக்கொடுமண்ணில்வீழ்ந்தனன். (௬)

அன்றுதொட்டின்றளவசைவிலாதிவ
ணொன்றினனுறுதுயரொழிவுகண்டிலே
னன்றுநீவந்தனைநன்மையாவதீ
தென்றொருதீர்வுசொற்றிடுதியென்றதே. (௭)

கண்ணனுமுளத்திடைக்கருதியைம்முகத்
தண்ணன்மாயூரத்தையடைந்தியாவரு
மெண்ணுமோரிடபதீர்த்தம்படிந்திடிற்
றுண்ணெனுமிவ்வுருத்தொலையுமென்றனன். (௮)

பெயர்வறக்கிடக்கும்யான்பிறங்குமத்தலத்
தயர்வுதீர்த்திடும்படியடைவதெப்படி
யுயர்புளாய்சற்றுணர்ந்துரைத்தியாலெனச்
சயமிகுமவனிதுசமையச்செய்தனன். (௯)

வள்ளலைவணங்கியிம்மாசுணத்துரு
விள்ளலையுறவருள்விளைத்தியென்றுதீங்
கள்ளலைமலரொருகரத்தெடுத்தன
னெள்ளலையிலாதவனெறிந்திட்டானரோ. (௧௦)

எறிதலுமிடபதீர்த்தத்துவீழ்ந்தது
செறிதருபாப்புருச்சிதையத்தேவுரு
வறிதரப்பெற்றதாங்கஞ்சனாயகி
பறிபுரைசெஞ்சடைப்பரனைப்போற்றிற்றே. (௧௧)

போற்றுபுவிமானமேற்பொலிந்துவானவர்
தூற்றுபன்மலரொடுஞ்சுவர்க்கம்புக்கது
கீற்றுவெண்பிறைச்சடைக்கேடிலானுக்கன்
பூற்றுளத்துறவவணுறைந்துவாழ்ந்ததே. (௧௨)

பாம்புமுத்தியடைந்தபடலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம், ௧௨௫௪.

நரியுங்குரங்குமுத்திபெற்றபடலம்.

அணிகுலாமவந்தியிற், றணிவிலாதருத்திரர்
நணிவிடாதநண்பினுற், றுணிபுவாய்நதவிருவரோ. (௧)

இருவரும்பன்னுள்செல, மருவுநண்பின்வாழ்ந்தவர்
வெருவமைந்தவூழினுற், றருமனூரடைந்தனர். (௨)

ஒருவனுற்றவிருவரு, ளொருவின்மண்ணிடைப்பின
னொருவனிகலனுயினு, னொருவன்கடுவனுயினுன். (௩)

ஆயும்வானரமுங்கோ, மாயுவுஞ்சின்னுள்செலத்
தோயுமோரிடத்திடை, யேயுமாறுகூடின. (௪)

கொம்பில்வாழும்வானரம், வெம்புபாவம்யாதுசெய்
திம்பரீதுற்றுயெனுச், சம்புவைவினுயிற்றே. (௫)

மறையவர்தமக்குப்பொ, னிறைதரக்கொடுத்துமென்
றிறையுமீதராமையா, லுறையுமிவ்வுருப்பெற்றேன். (௬)

பெற்றதன்றியும்பிண, முற்றவுண்டுழல்கின்றே
னுற்றநீயிவ்வுருவுறுங், குற்றம்யாதுகூறென. (௭)

பரதிரவியங்கவர்ந், துரவுமேவவாழ்ந்தனன்
விரவுமந்தவினையின்வா, னரவுருவநண்ணினேன். (௮)

என்றிரண்டும்பேசுபு, கன்றிநையுங்காலையி
லொன்றவற்றினன்மைபோ, லன்றுகாசிபமுனி. (௯)

ஆங்குமேவினுனுளந், தேங்குதுன்புந்தேறினுன்
வீங்குமுங்கள்வினைகெட, வீங்குவம்மினென்றனன். (௧0)

முனிவன்பின்னரிகலனுங் கனியவாவுகடுவனு
மினியதாகவெய்தின, தனியமர்மாயூரமே. (௧௧)

இடபதீர்த்தப்பாலடைந், தடர்தரும்வினையெலாந்
தொடர்புதீரமுழுகுமென், றுடனுரைத்துளானரோ. (௧௨)

சொற்றவாறுமூழ்கின, வுற்றதீமையோப்பின
பெற்றதேவுருவொடு, மற்றந்தீர்ந்தெழுந்தன. (௧௩)

முனிவனைப்புகழ்ந்தன, தனியனுயதம்பிரா
னினியவஞ்சனுயகி, பனிமலர்ப்பதந்தொழா. (௧௪)

மானமீதமர்ந்தொரு, தானமேவியாவரு
மானசெய்தமைத்திட, வூனமின்றிவாழ்ந்தன. (௧௫)

நரியுங்குரங்குமுத்தியடைந்தபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௨௬௯.

கங்கைமுத்தியடைந்தபடலம்.

வருநிருமேதனென்றுமாண்பருச்சேபனென்று
மிருமுனிவரர்முன்புள்ளாரோத்துநல்லொழுக்கமிக்கார்
பொருவருமனையார்தீர்த்தமெவற்றுள்ளும்புக்குமூழ்க
மருவுமோர்விருப்பங்கொண்டார்மற்றெழுந்தனரக்காலை, (௧)

மன்னுமாயூரமேவிமாதேவவள்ளலாரைத்
துன்னுமற்றவர்பான்மேயதோகைமாமயிலைப்போற்றி
முன்னுநல்விடபதீர்த்தமுழுகலேயமையுமென்று
பன்னுமாகாயவாக்கொன்றெழுந்ததப்பனவர்கேட்க. (௨)

அதுதெரிந்தனையருள்ளத்தளவிலாமகிழ்ச்சியெய்திக்
கதுமெனமாயூரத்தைக்கலந்திடும்விருப்பமேவிச்
சதுமுகன்றொழுதவந்தத்தானஞ்சேர்நடவைதேர்ந்து
குதுகலமெழவெழுந்துநடந்தனர்கோதொன்றில்லார், (௩)

வழிவருகாலையாங்கோர்வன்கண்வெங்குணுங்குநேர்வந்
துழிதராவவரைப்பற்றியுண்பதற்கடர்ந்ததாக
வழிதராவனையர்நோக்கியழன்றனருங்காரஞ்செய்
தொழிதரப்புரிந்தாரப்பேய்க்குதித்ததோரறிவாங்கம்மா. (௪)

அறிவுவந்துதிப்பவப்பேயன்னவரடியிற்றாழ்ந்து
செறியுமென்வரலாறெல்லாஞ்செப்பிடநீவிர்கேண்மின்
முறிவில்வேதியர்குலத்துமுளைத்துளேன்கங்கையென்னும்
பிறிவிலோர்பேரும்பெற்றேன்பிதாவெனையேழாண்டெல்லை. (௫)

ஒருமறையவற்குத்தானமுதவினன்பத்தாண்டெல்லைப்
பொதுவறமுறக்குறைந்தேன்பொலிதருபன்னீராண்டில்
வெருவரக்கொழுநன்வீந்தான்விதவையாய்க்கழிந்தயான்மற்
றருவருப்புடையேன்செம்பொன்றேடுமாருசைவைத்தேன். (௬)

அடைபவர்யாவரோனுமவரிழிபுயர்பெண்ணுமன்
மிடைதருசெம்பொன்வாங்கிவிழைதருமன்னமீவே
னுடையரல்லாதார்மேவினொருபிடிசோறுமீயேன்
கடைபடவிந்தவாறேயீட்டினேன்கனகமேன்மேல், (௭)

ஈட்டியுமறத்தினுக்கோரொட்டுணையேனுமீயேன்
கூட்டிவைத்தெண்பதாண்டிற்குலைகுலைந்திறந்துமாண்டேன்
பூட்டியபாதகத்தாற்புலைசெய்பேயுடம்புபெற்றே
னூட்டியதவத்தீரும்மானல்லறிவுதித்தல்வாய்ந்தேன். (௮)

இனியிதுகழிதருந்தீர்வியம்பிடவேண்டுமென்ன
முனிவருமிரக்கமெய்திமுயன்றெம்மோடணைதியென்னக்
கனிதருமன்பினோடுதொடர்ந்ததுகடியபேயு
நனிவியந்தவருஞ்சென்றுநாடுமாயூரம்புக்கார். (௯)

இடபதீர்த்தத்துமூழ்கென்றியம்பவுமூழ்கிற்றப்பேய்
மடமைசெய்பேயுடம்புமாறித்தேவுடம்புபெற்று
விடவரிதாகும்வள்ளன்மென்மலரடிகள்போற்றிக்
கடனமர்தெய்வலோகங்காணிகொண்டமர்ந்ததன்றே. (௧0)

இருமுனிவரருநோக்கியிறும்பூதுமிகவுங்கொண்டார்
மருமலர்க்குழலாள்பாகவள்ளலாரருள்வியந்தே
பொருவருமந்நீராடிப்புண்ணியப்பிரானைப்பன்னா
ளருவருப்படையாவன்பினருச்சித்தங்கமர்ந்தாரன்றே. (௧௧)

பலபகலருச்சித்தேத்தும்படிமையர்வள்ளற்பெம்மா
னலமிகுகருணையஞ்சனாயகியிவர்தாஞ்செய்யு
நிலவுபேரருளினாலேநின்மலமுத்தியுற்றுக்
குலவுமானந்தவாழ்க்கைகூடிவீற்றிருந்தாரன்றே. (௧௨)

கங்கைமுத்தியடைந்தபடலம் முற்றிற்று.

ஆ. திருவித்தம். ௧௨௮௧.

பூனையுங்கிளியுமுத்தியடைந்தபடலம்.

பெருக்குமந்தாகினிப்பாற்பெருந்தவப்பரத்துவாச
னிருக்குமாச்சிரமமொன்றுண்டிலகுறுமதனைச்சூழச்
செருக்குவெங்கதிரோன்வெப்பமுழுமையுந்தீருமாறு
முருக்குமந்தளிர்ப்பூஞ்சோலைமொய்த்துளதங்கணம்மா. (௧)

பறவைகள்பல்லவாழும்பயிறருமவற்றினுள்ளு
முறமிளிரழகுவாய்ந்தவொப்பிலாக்கிள்ளையொன்று
பெறலருங்கனிகள்கோதிப்பேட்டொடுமின்பந்துய்த்தாங்
கறவெழுஞ்சோபமேவியயர்ச்சியினுறங்கிற்றன்றே. (௨)

உறங்கிடுமமையநோக்கியொருகரும்பூனைவந்து
மறங்கிளர்திறத்திற்பற்றவாய்வெரீஇக்குழறியஞ்சு
நிறங்கிளரனையகிள்ளைவெருகினைநேரோநோக்கிப்
பிறங்குமற்றுனக்கியானென்னபிழைசெய்தேனென்றுமின்றால். (௩)

மன்னனும்பிழையிலாரைவருத்திடுங்கொடியோர்க்காணிற்
பன்னருந்தண்டஞ்செய்வான்படுபிழையொன்றுஞ்செய்யா
வென்னமைதியுநீதேர்ந்துமிதுசெயறருமமாமோ
முன்னர்நின்பிறப்புந்தேர்வேன்மொழிவனென்றறைந்ததன்றே. (௪)

கிளியிதுபுகறலோடுங்கேடுசூழ்மார்ச்சாலத்திற்
களிசிறிதரும்பிற்றாகவஞ்சிறைக்கிள்ளாய்நீயென்
னொளிகிளர்முன்னைத்தோற்றமுணர்ந்ததுமெய்யேயென்னி
லினிதகவுயர்பிரண்டுமியம்பெனவியம்புமன்றே. (௫)

பெருவளவிதர்ப்பநாட்டிற்* பிருகத்திரதப்பேர்வாய்ந்து
மருவியமன்னனியான்மனுநெறிதவறினின்றுட்
டொருவறவாழ்வாருள்ளமுலைதரமிக்கலைத்தாய்
பருவரலனேகஞ்செய்தாய்பரந்தவத்தீமையாலே. (௬)

இறந்துபன்னரகுந்துய்த்தாயெண்ணிறுள்கழிந்தபின்றை
யுறந்துமட்டோற்றமுற்றுயுற்றமூவயுதமாண்டு
விறந்துபல்கிருமியானுயதற்குமேற்பூனையாகப்
பிறந்துவந்தனையீங்கென்னைப்பிடித்தென்னபயன்றுய்ப்பாயால். (௭)

உனக்கியான்புரோகிதஞ்செய்துறைந்ததோடத்தினுலே
சினக்கும்வெந்நரகந்துய்த்தேன்சிலவிழிபிறப்புமுற்றேன்
மனக்குநன்றமையாவிந்தக்கிள்ளையாய்வந்தேனீது
தனக்குமோர்தீர்வுதேடியிருக்கின்றேன்சமையக்காணேன். (௮)

என்றதுவன்னியுண்மையென்றுகொண்டதுவில்லாள
மன்றதுபொழுதிலெல்லாமறிந்தமர்பரத்துவாசன்
சென்றதுபோகத்தக்கதீர்வுநானுரைப்பேனென்று
நன்றதுகருதிரண்டின்முன்னுறநணுகினின்று. (௯)

கிள்ளையேவெருகேயின்றியான்கிளக்குமோர்வார்த்தைகேண்மின்
றள்ளையேயனையானெங்கடம்பிரான்மாயூரத்தில்
வெள்ளைதீரறிஞர்போற்றுமிடபதீர்த்தத்தைமேவித்
தொள்ளைமேவாமலாடிற்றெலையுநுந்தீமையென்முன். (௧௦)

என்றலுமவிரோதங்கொண்டிரண்டுமாயூரமேவிக்
கன்றலிலிடபதீர்த்தங்கலந்துளமுருகிமூழ்க
வொன்றல்செய்பண்டைத்தீமையுருவொடுமொழிந்துபோக
மன்றல்செய்தெய்வமேனிவாய்ந்தவவ்விரண்டுமம்மா. (௧௧)

தேவுருமிரண்டுமெய்திச்செம்பொன்செய்கோயின்மேவி
மூவுருமுதலையுஞ்சலம்மையைமுன்னிப்போற்றி
யாவுருத்துவசத்தன்றாரருள்பெற்றுவானஞ்சென்று
மேவுருத்தேவர்போற்றவிளங்கிவீற்றிருந்தமாதோ. (௧௨)

பூனையுங்கிளியுமுத்தியடைந்தபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௨௯.

சயதுங்கன்முத்தியடைந்தபடலம்.

அரவுமதிபுனைசடிலத்தண்ணலாரினிதமரும்
பரவுபுகழ்ப்பெருங்காசிநகராளும்பண்புடையான்
சரவுரவிற்பகைதடியுஞ்சயதுங்கனெனும்பெயரான்
புரவுநெறிதவறுதுபோற்றிவாழ்தருநாளில். (௧)

* பிருகத்ரதன்—பெரியதேரினன்.
சித் - சித்தெனத்திரிந்துநின்றதுபோல, பிருகத்பிருகத்து எனத்திரிந்துநின்றது.

பொல்லாதவைணவமாம்புன்சமயக்கோட்பட்டு
வெல்லாதபொய்படுநூன்மேற்கொண்டுசிவசமய
மொல்லாததென்றுகூடிந்தூத்தைவாய்கொடுகுரைத்துக்
கல்லாதகடையரினுங்கடைப்பட்டானந்நாளில். (௨)

சாத்திரங்கடெரிதேவசர்மிமறையவன்மைந்த
னேத்தவருமரிசாமியெனும்பெயரானிளம்பருவம்
வாய்த்தவன்றன்மனைவியுடன்மணந்துதுயின்றனனவளு
மேய்த்தவுடையில்லாளாயினைத்தலையுற்றுறங்கினாள். (௩)

மேயவக்காலையின்மதனவேகனெனுங்கந்தருவன்
மாயமிக்கானடைந்துறங்குமங்கைவனப்புருநோக்கித்
தேயமுற்றுமில்லாததிப்பியமென்றதிசயித்துத்
தோயவைத்தகாதலினான்கவர்ந்துதூரத்தொளித்தான். (௪)

அரிசாமியுறங்கிவிழித்தணங்கையமளியிற்காணான்
றிரிவாகவெங்கொளித்தாய்செம்பொன்னேயெனக்கவன்று
பரிவாகிநகரமெலாம்பதைபதைத்துத்தேடினா
னெரிதாவியெழுந்ததெனப்பசியழலினுயங்கினான். (௫)

நகரமாமதிற்பதுமநாபனெனுமறையோனிற்
றகரவார்குழலாள்பாற்பிச்சைதாவெனப்புகுந்தான்
பகரம்மாமடவாளும்பரிந்தன்னமதுகொடுத்தா
ளுகரவொருகுளத்தாற்கீழ்நோற்றமறையோனடைந்தான். (௬)

அங்கிருந்துநுகர்காலையாலுறையுமொருகலுழன்
பொங்குசினத்தரவினைத்தன்பசியவிக்கப்புசித்திடுங்கால்
வெங்குணத்தவ்வரவமுங்கிவிடங்கான்றததுதுயரம்
பொங்குமறையோனுணவிற்பொருந்தியதோராதுண்டான். (௭)

உண்டபொழுதவனுயிரையுண்டனன்வெங்கூற்றுவனுங்
கண்டபலர்சொலப்பதும்நாபனுளமிகக்கலங்கிக்
கொண்டமனையாட்கிந்தக்கொடும்பாவமுற்றதென
வண்டர்புகழத்திரியையடைந்துபுகன்றழுதனனே. (௮)

அந்தமுனியுளத்தெண்ணியரவினைப்புள்வருத்துதலாற்
றந்தவிடமொழுக்கிற்றுக்கருடனுந்தன்பசிதணிக்க
முந்தவரவினையுண்டதுன்மனைவிமுகந்தளித்தாள்
சந்தமிகுமனம்பாவஞ்சாராதிம்மூவருக்கும். (௯)

என்றுநவின்றிடுகாலையெழுந்ததோர்காயமில்வாக்
கொன்றுநெறிமுறைதிரிந்திவ்வூராளுஞ்சயதுங்க
னென்றுசொலுங்கடையோனையிப்பாவஞ்சூழ்ந்ததென
வன்றுமதிமருண்டனையாளுவாவென்றுழிதருவான். (௧௦)

உறங்காதுநலஞ்சிறிதுமுன்னாதுகொடும்பாவ
மறங்காதுசயதுங்கமன்னவனைச்சூழ்தரலும்
பிறங்காதுபேய்போலப்பிதற்றியலைந்தனனந்தோ
வுறங்காதுசைவநெறிமதியாமைவீண்போமோ. (௧௧)

இந்தவிதம்பன்னாளுமிழிந்துழலுஞ்சயதுங்க
னந்தவொளிர்கங்கைமுதனவில்பலதீர்த்தம்படிந்துஞ்
சந்தமிக்வளவில்லாத்தானமுதலியபுரிந்து
மெந்தவுபாயத்தினுமஃதிரியாமைநிலைத்ததே. (௧௨)

சனகனொருதினத்தங்குச்சார்தரமற்றவற்போற்றி
யனகவிதற்கொருகழுவாயறையென்னச்சிவங்குறியா
முனகரினக்குரைத்தாலுமுழுத்தோடமாமிதற்குக்
கனகசபைநடிப்பவன்பொற்கழற்சார்பேகழுவாயாம். (௧௩)

ஏற்றமிகுமாயூரமென்னுமொருதலத்தடைந்து
சாற்றவொளிர்புகழிடபதடந்தீர்த்தம்படிந்தாடிப்
போற்றவமர்பெருமானைப்பூசனைசெய்திடுவாயேற்
றேற்றனநிற்றொடர்பிரமக்கொலையாதித்துன்பனைத்தும். (௧௪)

என்றுவிடைகொடுத்திடலுமெம்பிரான்மாயூர
மென்றுபுகுந்திடுவாமென்றிரவுபகலுறநடந்தே
யென்றுமிளிர்மணிமாடமெழில்செயுமத்தலத்தடைந்தா
னென்றுநிருமலமாயவிடபதீர்த்தம்படிந்தான். (௧௫)

படிந்த்வுடனெழிந்தனவெப்பாதகமுமதுகண்டு
முடிந்தபுனலிதுவென்றுமுன்னியுளமகிழ்வுற்று
வடிந்தகுழைச்செவியழகர்வள்ளலார்தளிபுகுந்தான்
றடிந்தவினையினனையசயதுங்கமன்னவனே. (௧௬)

மறைமுடியினடன்மிடும்வள்ளலார்பதம்போற்றி
யறைகருணைப்பெருவாழ்வாமஞ்சனையகியென்னு
மிறைவிபதங்களும்போற்றியெண்ணில்விழாச்சிறப்பித்துத்
தறைபுகழுஞ்சயதுங்கன்சைவசிகாமணியானான். (௧௭)

மன்னியவாலயப்பணியும்வயங்குமணிப்பொற்கலமு
மின்னியபல்பாத்திரமும்பரிவட்டவிதம்பலவுந்
துன்னியவன்பினிற்கொடுத்துத்தொக்கசிவனடியார்க்கு
நன்னியமத்தொடுமன்னநயந்துநனியூட்டினான். (௧௮)

வெண்ணீறுங்கண்டிகையுமெய்விளங்கும்படிபுனைந்து
கண்ணிலக்குழல்பாகர்கழலிதயத்துறப்பதித்துத்
தண்ணீர்மைகொடுபொலியுஞ்சயதுங்கன்விடைகொண்டு
மண்ணீர்மைநலஞ்சிறந்தவண்காசிநகர்புகுந்தான். (௧௯)

அந்தநகரிடைப்பன்னாணன்னெறியினரசளித்துச்
சந்தமிகுசைவமேசமயமெனத்தாபித்துக்
கந்தமலர்க்குழல்பாகவள்ளல்பெருங்கருணையினான்
முந்தவுயர்சிவலோகமுற்றுவாழ்ந்திருந்தனனே. (௨௦)

சயதுங்கன்முத்தியடைந்தபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௩௧௩.

தீர்க்கசங்கைமுத்தியடைந்தபடலம்.

தண்ணியகுணத்தான்மிக்கதசரதராமனென்பான்
கண்ணியவிராவணாதியாரையுங்களத்தின்மாட்டிப்
புண்ணியவயோத்திமேவிப்பொலிந்தரசாளுநாளி
லெண்ணியவசுவமேதயாகமொன்றியற்றினானே. (௧)

ஆற்றுமவ்வேள்விகாண்பானட்டகோண்முனிவனாதிச்
சாற்றுபன்முனிவரெல்லாஞ்சார்ந்தனரிருந்தார்பின்னர்
மாற்றும்வெவ்வினையோனாயவுரோமசமுனிவன்வந்தான்
றோற்றுமவ்விராமனாதியாவருந்தொழுதாரன்றே. (௨)

அந்தமாமுனியாங்குள்ளவட்டகோண்முனியைத்தாழ்ந்தான்
வந்தநீநூறுகற்பமாண்புறக்கண்டுவாழ்வாய்
பிந்தயான்பாதிகண்டேன்பெரியவனீயேயென்றா
லுந்தநன்கிறைஞ்சல்கூடாதெனவுரோமசனிசைப்பான். (௩)

ஆண்டுயர்பொன்றனாலேபெருமைவந்தடையுங்கொல்லோ
வீண்டுநீமாயூரத்திலியைதரவருடந்தோறும்
வேண்டுமாவிடபதீர்த்தம்விருப்பொடுமாடல்செய்வாய்
தூண்டுநீயெனக்குமேலோனென்றனன்பின்னுஞ்சொல்வான். (௪)

திராவிடதேசத்தெல்லாவரைகளுந்தெரிந்தமேலோன்
பராவுகுண்டினப்பேர்வாய்ந்தகோத்திரப்படிமையாளன்
விராவுநற்குணத்தான்மிக்கவிட்டுணுசாமியென்பான்
றராதலம்புகழுமன்னான்றன்மனையிரோவையென்பாள். (௫)

அரிகவிசிவனென்றோர்மும்மைந்தர்களவனுக்குள்ளார்
தெரியரியுயர்புதேர்ந்துசெய்வித்தான்வதுவையீன்றோ
னாரியமற்றிருவோர்தாமுழுமுழுதொழிற்செல்வராகிப்
பிரியம்வைத்திலர்மூன்றோனைத்துரந்தனர்பெயர்ந்துபோக. (௬)

அனையனுமனைவிதன்னையான்றமாதுலனில்வைத்துத்
தனைநிகரிடபதீர்த்தந்தழைதருதுலாத்திலாடிப்
புனையுமாயூரநாதன்பொன்னடிதொழுவேனென்று
நினையுமுன்னெழுந்துபோந்தான்சித்திரகூடநேர்ந்தான். (௭)

சுடுபசிதாகமேவிவருபவன்றீமங்கண்டு
வடுவறவாழ்வாரிங்குண்டென்றுளமதித்துச்சார்ந்தான்
கடுவினோரரக்கியன்னான்வரவினைக்கண்டுவந்து
படுமறைக்குலப்பெண்ணாகியெதிர்வந்தாள்பண்புகூட. (௮)

காட்டநேடிடுவாள்போலப்பயிலுங்காரிகையைநோக்கி
வாட்டநானடைந்தேனன்னாய்மடையுதவிடுவாயென்றான்
வேட்டவாறுணாத்தானென்னாவிழைந்தவளழைத்துவந்து
கோட்டமிலன்னமூட்டித்துயிலெனக்கூறினாளால். (௯)

வழிவருவருத்தத்தாலேமிகத்துயின்மறையோனுவி
யொழிவுசெய்திடுவானுள்ளத்துள்ளினனன்னகாலைப்
பழியினையஞ்சுமெங்கள்பரம்பரன்மாயூரேசன்
கழியருள்வலியாலோர்வாக்கெழுந்ததாகாயநின்று. (௧0)

அரக்கிநீமறையோற்கோறலவற்குநிற்றெரிப்பினிற்சா
ரிரக்கமிலுருவநீங்கவினிதருள்சுரக்குமென்ற
துரக்கவினடைந்தனனுமறையவன்விழித்ததோர்ந்து
பரக்கமுன்னுருவங்கொண்டுபணிந்தனணின்றாளன்றே. (௧௧)

முனிவனுமச்சமெய்திமுனியும்வல்லரக்கிநீயார்
கனிதருமென்பாலென்னகாரியமுனைத்தியென்னப்
புனிதனேதீர்க்கசங்கையெனும்பெயர்பூண்டுளேன்யான்
றுனிசெய்முற்பிறப்பினீட்டுதீவினைசொல்லக்கேண்மோ. (௧௨)

திரையெறியமுனுநீரஞ்செறிதருமிராமனென்னும்
புரைதவிர்மறையோனீன்றபுதல்விவேங்கடியாநாமம்
விரையவொண்கிருட்டிணற்குவிழைந்தெனைக்கொடுத்தான்றந்தை
வரையுமென்புருடனில்லில்வாழ்க்கையைமதித்திலாதேன். (௧௩)

மாமனைமாமிதன்னைவைதுபோராடல்செய்வேன்
றாமவெந்தழலேபோலத்துட்டையாய்த்திரிவதோர்ந்து
நாமவென்புருடனோடுநானும்வேறிருக்குமாறு
காமருநகரத்துள்ளார்வைத்தனர்கலாய்த்தறீர. (௧௪)

கொழுநனைப்பேணல்செய்யேன்கொடுமைசெய்துபத்திரிப்பேன்
றழுவொருதினம்பதக்குத்தண்டுலவடிசிலுண்பேன்
வழுவிலேன்கொடுமைக்கஞ்சிமாண்டனன்புருடனென்பான்
கழுதுறங்கினுமுறங்காதுழிதருகடன்மைபூண்டேன். (௧௫)

இச்சையிற்றிரிந்துபன்னாளிரும்பொருளீட்டல்செய்து
வச்சைமிக்கடைந்தேன்பின்னாட்கரவரப்பொருளைவௌவக்
கொச்சையுற்றிறந்தேன்பொல்லாக்கொடுநரகுழன்றுபின்னாட்
பச்சையூனுகராநிற்குமரக்கியாம்படிவம்வாய்ந்தேன். (௧௬)

இதுதவிர்கழுவாய்நீயொன்றியம்பிடினுய்வேனென்றாண்
முதுபுகழ்மறையோனோர்ந்துமுனிவறவென்பின்வந்தாற்
கதுமெனவொழிப்பேனென்றுகரைந்தனனெழுந்துசென்றா
னதுதெரிதீர்க்கசங்கையரக்கியுந்தொடர்ந்துசென்றாள். (௧௭)

மறையவன்மாயூரத்துவந்தனனிடபதீர்த்தத்
துறையினையடைந்துபார்த்தான்றெட்டிராக்கதியைக்கண்டா
னிறைபுனலிதினீழ்கினீங்குமிப்பிறவியென்றா
னறைதரறலைமேற்கொண்டாங்கரக்கியுமூழ்கினாளே. (௧௮)

முழுகலுமிழிந்தயாக்கைமோசித்துத்தெய்வயாக்கை
பழுதறவடைந்தாணின்றபணவனைத்தொழுதாள்வள்ளல்
செழுமலர்ப்பாதத்தோடுதேவியொற்பதமும்போற்றி
யொழுகொளிவிமானமேற்கொண்டுற்றனள்சுவர்க்கத்தம்மா. (௧௯)

வேதியனிறும்பூதுற்றுவிளங்குமத்தீர்த்தமாடிப்
பூதியர்வள்ளலாரையஞ்சனுயகியைப்போற்றிக்
காதியவினையனுகிக்கருதியவனைத்தும்பெற்று
மாதியறன்னிருக்கைவந்துவாழ்ந்திருந்தானன்றே. (௨௰)

அத்தகுமிடபதீர்த்தமாண்டுதோறுநீயே
யுத்தமமறையோனின்னையொப்பவரொருவரில்லை
வித்தகமுனிவாநின்னைமிகப்பணிந்திடுவேனென்றுன்
சித்தமுள்ளுவந்தார்யாருஞ்செப்பியதுண்மையென்றார். (௨௧)

தீர்க்கசங்கைமுத்தியடைந்தபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௩௩௪.

பார்க்கவிபூசித்தபடலம்.

வண்டுபாண்செயப்பரிசெனமணமதுப்பொழியுந்
தண்டுழாயணிசக்கரப்படையுடைமாற்குக்
கண்டுநேர்மொழித்திருமகள்புவிமகள்காதன்
மண்டுநீளையென்றுரைசெய்மும்மனைவியருள்ளார். (௧)

அந்தமூவருணீளைமேலதிவிருப்பமைத்துச்
சந்தமார்தரவாழ்ந்தனன்றண்டுழாய்முகுந்தன்
பந்தமேயமற்றிருவருமஃதுளம்பதித்து
நந்தவும்மழுக்காறமைத்தமர்தருநாளில். (௨)

ஒருதினந்திருமகள்புடையதிவிருப்புற்று
மருவுதற்குளங்கொடுசென்றுதழுவினன்மாயோன்
பொருவருஞ்சினங்கொடுகரம்பறித்தனள்போக்கிப்
பருவநீளைகண்டிடினழன்றிடுமென்றாள்பைம்பொன். (௩)

உண்மையோதுவனுன்புடைவிருப்பமேயுள்ளே
னெண்மையாகியநீளைபாலெவ்விருப்புள்ளேன்
பெண்மைமாமணியேபெருஞ்செல்வமேபேறே
வண்மையாளுநீகூறியலையென்றனன்மாயோன். (௪)

யாதுகூறினும்யான்றருமின்பம்வேம்பாகு
மாதுநீளைதனின்பம்வான்கரும்படுகட்டி
யோதுமாறதைவிட்டிதுகொளவுயர்பன்று
மோதுசக்கரப்படையினுயகலெனமொழிந்தாள். (௫)

குற்றமெத்தனைசெய்யினும்பொறுத்தருள்கூர்ந்து
சொற்றவின்பமெற்குதவுதிமலர்ச்செழுந்தோகாய்
செற்றவின்சுவைவாயூறல்சிறிதருத்தாயே
யூற்றவென்னுயிரொழிவதுசரதமென்றுரைத்தான். (௬)

என்னசொல்லினுமிணங்குறேனீளைபாலெய்தென்
றன்னமன்னவளழன்றனளாயவக்காலை
நன்னர்மாலவளடிமிசைவிழுந்தனனயந்தா
னின்னமுஞ்சினங்கொளறகாதென்றுநன்கிசைத்தான். (௭)

அதுவுமெண்ணலடாளிஞன்முடிமிசையுறைந்து
கதுமெனப்புறத்தகன்றனண்மாயனுங்கவன்று
முதுசினங்கொடுமானிடமாகெனமொழிந்தான்
பதுமையொண்பிருகுவின்சுதையாகவுற்பவித்தாள். (௮)

பிறந்தபின்னைபார்க்கவியெனுமொருபெயர்பெற்றுச்
சிறந்தமங்கையம்பருவம்வந்தடைதலுஞ்சிறப்பா
லுறந்ததாதையைத்தொழுதொருமால்வந்துபுணரு
மறந்தவாதநோன்பருளுதியெனக்கெனவறைந்தாள். (௯)

மகளிரத்தலும்பிருகுவுங்கவுரிமாயூரந்
துகளிலாத்தலமத்தலத்திடபாற்றேயம்
புகழ்மிகுத்ததாங்காடுபுவள்ளலைப்போற்றி
னிகழ்வுதீர்தரவெண்ணியதெய்துமென்றிசைத்தான். (௧௦)

தந்தைசொற்படியெழுந்தனள்பார்க்கவிசார்ந்தா
ரந்தைசெற்றிடுகவுரிமாயூரத்தையடைந்தாண்
முந்தையற்புதமாந்துலாத்தீர்த்தத்தின்மூழ்கிச்
சிந்தையற்பொடுவள்ளறன்கோயிலுட்சென்றாள். (௧௧)

சென்றுவள்ளலையஞ்சனாயகியொடுஞ்சிறப்ப
நன்றுபூசித்துக்கனிதரவமர்தருநாளின்
வென்றுமேம்படுவள்ளலார்திருவருள்விளைப்ப
வன்றுவந்துமால்பிருகுவினுறையுளையடுத்தான். (௧௨)

அடுத்தமாலுநின்மகளைபெற்களித்தியென்றிரப்ப
மடுத்தமற்றவனோடுமாயூரத்துவந்து
விடுத்தவேட்கையன்வள்ளலார்திருவருண்மேவிக்
கொடுத்தமைந்தனன்பார்க்கவிதன்னைமால்கொண்டான். (௧௩)

கொண்டகாதலினவளொடும்வைகுந்தங்கூடி
யண்டர்போற்றிடவாழ்ந்தனன்வயப்படையைந்தான்
கண்டமாதவப்பிருகுவுமுறையுளைக்கலந்தான்
றண்டவாப்பெருமகிழ்ச்சியையாவருஞ்சார்ந்தார். (௧௪)

நன்றுசேர்தருமாதவப்பிருகுவாநல்லோ
னன்றுதொட்டுமான்மாதுலனெனுமுறையடைந்து
கன்றுமான்மழுவேந்தியவள்ளலைக்கருதி
யென்றுமின்பருவாழ்க்கையேபூண்டினிதிருந்தான். (௧௫)

பார்க்கவிபூசித்தபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௩௪௯.

கலைமகள்பூசித்தபடலம்.

ஞாலமீன்றவனகரத்தோர்தினம், வாலகில்லியர்வந்துதோன்றினார்
சீலமேவவருருவுகண்டுசேர்க், கோலவாணிமெய்குலுங்கநக்கனள். (௧)

சிரித்தகாலையிலவர்சினந்துநீ, பரித்தவெம்முருப்பார்த்துநக்கனை
விரித்தவுண்மைதேர்ந்திலைமேதக, வரித்தமானிடமாதியெனறனர். (௨)

என்றகாலையஃதெய்தமற்றவள், கன்றவந்ததுகழியுமாறொரு
நன்றறைந்திடுமெனநவின்றன, ளொன்றமற்றவருணர்த்தன்மேயினார். (௩)

முன்னரத்திரிமுனிவனாதியர், மன்னவோர்வனம்வதியுங்காலையி
லன்னரஞ்சவாயழல்கொள்பேயொன்று, துன்னமற்றதைநோக்கிச்சொல்லுவார்.

கொள்ளிவாய்க்குணங்குருவுகொண்டநீ, யெள்ளியிங்குறற்கேதுவோதென
நள்ளுநான்மறைக்குலத்துநங்கையா, னுள்ளுங்காந்தனோடுற்றுவாழுநாள். (௫)

அவனையெள்ளிமிக்கவமதித்திடு, சவலைநீர்மையேதாங்கிவாழ்ந்தனன்
கவலைகூருமக்கடியபாவத்தாற், றவலிலாதவிவ்வுருவந்தாங்கினன். (௬)

ஈதுதீருமாறியம்புவீரென, வோதுகொள்ளிவாய்ப்பேயுரைத்தது
சாதுவாமுனித்தலைவரோர்ந்தனர், காதும்வெவ்வினைகழியவோதுவார். (௭)

தடமமைந்தமாயூரஞ்சார்ந்துநீ, யிடபதீர்த்தநன்கியையமூழ்கினாற்
படவராப்பணிப்பரமனாரரு, ளுடன்விராவவீதொழிந்துவாழ்குவாய். (௮)

என்றுகூறவங்கெய்திமூழ்குபு, நன்றுபெற்றதுநீயுநண்ணியாங்
கொன்றுகாதலினுருகிமூழ்கினாற், றொன்றுமேவுருவுறுமெனச்சொனார். (௯)

சொற்றபோதுபாரதிதுணிந்துவந், தற்றமோவுமாயூரமண்மிநூல்
கற்றமேதையோர்களையுமப்புனல், வெற்றமேவுறவிரைந்துமூழ்கினாள். (௧௦)

முன்னுருக்கொடுமுக்கணாயகன், றன்னுருத்தரிசித்துவந்துபோய்ப்
பொன்னுருப்பெறும்பொற்பினாயகன், மின்னுருத்தழூஉம்வாழ்க்கைமேயினாள்.()

கலைமகள்பூசித்தபடலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௧௩௬௦.

இடபவரலாற்றுப்படலம்.

கரும்பினுமினிக்குமாறுகரைதருசூதற்பாரா
வரும்புறுமிடபதீர்த்தமெனப்பல்காலறையாநின்றாய்
விரும்புறுமப்பேர்பொன்னித்துறையுற்றவிதமென்னென்று
பெரும்புலமுனிவர்கேட்பப்பேசுமச்சூதமேலோன். (௧)

கயிலையங்கிரியின்மேயகண்ணுதன்மாயூரேசன்
மயிலுருவமைந்துதேவிவசித்தநாளண்டமுற்றும்
பயிலொருவினோதத்தாலேபார்த்தனன்மீள்வானெண்ணி
வெயில்விடுமணிப்பொற்கோட்டுவிடையெனும்வரைமேற்கொண்டு. (௨)

மலர்மிசையிருக்கையானும்வாரிதிக்கிடக்கையானும்
பலர்புகழ்தானவேந்தும்பண்ணவர்மற்றுளோரு
மலர்தருதத்தமூர்தியிவர்ந்துடனணையுமாறு
கலர்கொளாக்கருணைநல்கிக்கடவினானேற்றையம்மா, (௩)

நறுவிரைத்துளபமாலைநாரணன்முதல்வானாடர்
மறுவறுவள்ளற்பெம்மான்மாப்பெருங்கருணைபெற்றோ
முறுதன்மற்றிதன்மேல்யாதென்றுவந்தனரூர்திமேல்கொண்
டறுதிசற்றிலராயெம்மானடியிணைதொடர்ந்துசென்றார். (௪)

பரவுமெம்பெருமானூரும்பாய்விடைதொடர்ந்துமேவு
முரவுபெற்றனவோமற்றோரூர்தியென்றழுக்காறெய்தி
விரவுபல்லண்டமுற்றும்விரைந்தொருநொடியிற்சூழ்ந்து
புரவுசேர்திருமாயூரப்பொன்னியாற்றிடைவந்தன்றே. (௫)

விரைதரத்தொடர்ந்துசென்றுவிரிசிறைவலியிழந்து
கரையொருபத்திலக்கயோசனைக்கப்பாற்கன்றித்
தரைவிழுந்தன்மைத்தாகிச்சலிப்புமிக்குற்றுநின்ற
துரைகெழுமுரகச்சாதியொருங்கெடுத்தயிலும்புள்ளு. (௬)

அஃதுநிலைதானநாற்றியோசனைக்கப்பானின்ற
திதுகதிகொல்லோவேறோவெனக்கவன்றெகினப்புள்ளு
முதுபுகழஃதுநின்றமுன்னொருநூற்றுக்கப்பாற்
கதுமெனநின்றதம்மாகண்ணுடலாளியூர்தி. (௭)

அழலவனூதியோரேழமரரூர்திகளுமம்பொற்
கழலணிமற்றைவானோர்கதியவூர்தியுமாங்காங்குச்
சுழலமைந்தெய்த்துநின்றசொல்லலாந்தன்மையாதே
தழலுருவெம்பிரானைத்தொடர்வலித்தகவியார்க்குண்டே. (௮)

மாயவனூர்திமற்றைவானவரூர்தியாவுந்
தூயதற்றொடர்தலின்றித்தோல்வியினமைந்தாங்காங்குச்
சேயவாய்க்கழிந்துநின்றதிறனுங்காவிரிக்குநாப்பண்
மேயதன்விறலுமெண்ணிவிடையேறுசெருக்கிற்றன்றே. (௯)

செருக்கலுமஃதுள்ளோர்ந்தசின்மயக்கருணைமூர்த்தி
பொருக்கெனவிடபவேற்றைப்புண்ணியமலர்த்தாளொன்றன்
றிருக்கிளர்விரலொன்றாலேசிறிதழுத்தினனப்போது
வெருக்கிளரிடபவேறுவிரைந்துபாதலம்புக்கன்றே. (௧0)

பாதலம்புக்ககாலைப்பாவியேன்செருக்குப்பூண்டு
சாதலங்கமையுந்துன்பந்தாங்கினேனாவாவென்று
தீதலங்கிடபவேறுசிந்தைமாழாந்துதேம்பிக்
காதலங்கண்ணீர்வாரத்துதிபலகரைந்ததன்றே. (௧௧)

அடியனேனறிவிலாமையாற்செருக்குற்றேனோலங்
கொடியனேன்றீங்குமாய்த்துக்குறிக்கொளல்வேண்டுமோலங்
கடியவாளரக்கன்வேண்டக்கனிந்தருள்புரிந்தாயோல
நெடியவன்முதலோர்தேறுநின்மலப்பொருளேயோலம். (௧௨)

நினைபவர்தமையெப்போதுநினைபவவோலமோலம்
புனைதருமஃதிலாரைமறந்தருள்புராணவோல
மினைதருமிலங்கைவேந்தற்கின்னருள்புரிந்தாயோலங்
கனைகடனஞ்சமுண்டுகடவுளர்ப்புரந்தாயோலம். (௧௩)

செறிதருமடியார்செய்ததீமையைமறப்பாயோலங்
குறிதருமேனோர்செய்யுங்குணங்களுங்கொள்ளாயோல
முறியுடலிலங்கைவேந்தற்கின்னருண்முகிழ்த்தாயோலம்
வெறிதருபொழின்மாயூரவித்தகவோலமோலம். (கச)

நின்னடிக்கன்பனயகுறுமுனிநீரிற்பூத்த
பன்னமென்மலரினெய்யவொருகரம்பதியாநிற்கு
முன்னர்வல்விந்தமந்தோமுழுகியதரத்திலென்றுற்
பொன்னடிவிரலாலூன்றவேண்டுமோபுன்மையேற்கே. (கரு)

என்றுநெக்குருகியிவ்வாறேத்திடுமிடபவேற்றை
யன்றுநம்பெருமானுள்ளமிரங்கிமிக்காழ்பிலத்து
நின்றுமேலெழுகவென்னுநிகழ்த்தினனிகழ்த்தலோடு
மொன்றுதண்பொன்னியாற்றினடுவுற்றதுவகைபூப்ப. (கசு)

நதிநடுவமர்ந்துமேவுங்குண்டையைநயந்துநோக்கி
மதிமுடிபகவனேறேவயங்குமிந்நதியினுப்பட்
பதிதரவெந்தனுான்றும்பச்சிமம்பார்த்துமேவி
விதியுளியாடுவோர்க்குவேண்டுவகொடுத்துவாழ்தி. (கஎ)

உன்னொருகூற்றினிங்கேயுறைந்தனைமற்றைக்கூற்றாற்
பன்னொருநம்மைத்தாங்கிப்பாரொலாம்புகழவாழ்வாய்
பின்னொருதீர்த்தமாடார்பிறங்குமித்தீர்த்தந்தோய்வார்
துன்னொருவின்னைப்போற்றிற்றுயரொழிந்தின்பந்துய்ப்பார். (கஅ)

இன்னுமெவ்வரங்கள்வேண்டுமியம்புதிதருதுமென்ன
மன்னும்வல்லிடபந்தாழ்ந்துமாதேவமாயூரேச
துன்னுவன்செருக்காலன்றேதுயர்ப்பிலன்புக்குமீண்டேன்
மன்னுமற்றதுதீருண்மைஞானம்பாலித்தியென்ன. (ககூ)

பகருமவ்விருப்புற்றுயைப்பசியமாவாசியைக்க
ணிகரருந்தீர்த்தமெல்லாநெருங்கிவந்திந்நீர்மூழ்கும்
புகரிலத்தினத்துநீயிப்போதிரந்ததுமிரப்பத்
தகர்தலில்யாமித்தீர்த்தத்துத்தரந்தகமுளைப்போம். (உ0)

ஓங்குமத்தானமென்றுமுத்தரமாயூரப்பேர்
தாங்குமத்தலத்துநின்மேற்றகவமர்ந்தாசானுகி
நாங்குலவுண்மைஞானநல்குவேம்பெறுதியென்று
தேங்குபேரருளினேதிமறைந்தனன்றேவதேவன். (உக)

புகழுமைப்பசிதானென்றுவருவதுபொலிவுசெய்து
திகழமாவாசியைப்பேர்த்திதியென்றுவருங்கொலென்று
மிகழ்விலாவுண்மைஞானமெய்துவதென்றென்றுள்ளி
யகழ்வினையுடையதாயவிடபமாங்கமர்ந்ததன்றே. (உஉ)

எழில்வளர்தருமமென்னுமிடபமாங்கமர்தலாலே
பழிதபுமிடபதீர்த்தமெனும்பெயர்படைத்ததம்மா
மொழிதருதெய்வப்பொன்னியத்துறைமுழுகுவோர்கள்
கழிபெருஞ்செல்வத்தாழ்ந்துகதிக்கரசாகிவாழ்வார். (உ௩)

தருமமேயிடபமாகிநடுவமர்தன்மையாலே
பொருவருமனையதீர்த்தப்பெருமையார்புகலவல்லார்
மருவுமிச்சிறப்பாலன்றோகங்கைமுன்வயங்கியாவுந்
திருவமார்துலாமாதத்திற்செறிந்தவண்வசிக்குந்தன்மை. (௨௪)

மறையொருநான்குநாற்கான்மயிர்கள்சாத்திரமனைத்துங்
குறைவில்வாலகளவத்துக்கொம்புகள்சிவசொரூப
நிறைதருசுருதியோடுமிருதியுநேத்திரங்க
ளுறைதிருப்பிரணவஞ்சுவாசமாங்கொளிரேற்றிற்கே. (௨௫)

மதவிமிலுமைசொரூபம்வாண்முகமலரின்மேயோன்
சுதமிலாகமங்கணெற்றிதொக்கமுன்காலின்மூலம்
பதமிகுதீர்த்தமெல்லாம்பைந்துழாய்க்கொண்டல்கண்ட
முதவுறுதியானமுஞ்சமாதியுமோங்குகாது. (௨௬)

மற்றுளவமரரெல்லாமற்றுளவுறுப்பெலாமாய்க்
கொற்றமிக்கமருமேற்றைக்கொண்டன்மேனியன்மூன்றாய
பற்றமைவானோரெல்லாம்வந்தடிபரவிப்போனார்
சொற்றமற்றவர்தமூர்த்தித்தொழுதியுந்தொழுதவந்து. (௨௭)

எவ்வெவர்பாவமெல்லாமிரித்திடுகங்கையாதிப்
பவ்வமீறாயவெல்லாம்பரவுமாங்கெய்தியெண்ணி
லவ்வியமாதிக்கோட்பட்டலைசுரர்முதலோர்யாரு
மொவ்வவங்கடைந்துபோற்றலுறுவதோர்வியப்பாங்கொல்லோ. (௨௮)

பாதகமிக்கோரேனும்பரவுமவ்வேற்றைக்கண்டான்
மாதகவுடையாராவர்வயங்குமத்தீர்த்தமாடி
நோதகவொழியச்சூழ்ந்துநுவலபிடேகமாதி
யாதரவோடுமாற்றியஞ்சலித்திடல்விசேடம். (௨௯)

இன்னவையியற்றலோடுமெம்பிரான்வள்ளற்பெம்மான்
பொன்னவிர்கோயில்புக்குப்பொருவருமன்பிற்சூழ்ந்தம்
முன்னவன்றிருமுன்சென்றுமுனிவறக்கண்டுபோற்றிப்
பன்னருந்துதிகள்செய்துபரவிமற்றதற்குப்பின்னர். (௩0)

ஆரருண்முதல்வியாயவஞ்சனைதிருமுன்சென்று
பேரருள்கதுவப்போற்றல்பெருகியவிசேடமாகுஞ்
சீரருண்முனிவீரேற்றின்வரவிதுதெளிமினென்று
பாரருள்கொளுவுஞ்சூதன்பகருதலுற்றானப்பால், (௩௧)

இடபவரலாற்றுப்படலம் முற்றிற்று.
ஆ திருவிருத்தம் ௧௩௯௧.

உத்தரமாயூரப்படலம்.

அவ்ரவர்பொருளாய்வேறாய்க்குறிகுணமனைத்துமின்றித்
தவருளமகலானாயசங்கரன்மாயூரேச
னிவர்விடைக்கருளிச்செய்தவேற்றமாரருணினைந்து
கவர்மனமில்லாரோத்திக்கருதிடவீதுசெய்வான். (௧)

மன்னியவிடபதீர்த்தவடகணைஞாங்கரண்மை
முன்னியவிலிங்கமாகமுளைத்தனன்முளைத்தலோடுந்
துன்னியகருணைநோக்கிச்சுரர்முதலாயயாரும்
பன்னிய்வுவப்பிற்போற்றிப்பரவருள்பெற்றுநின்றார். (௨)

இருவருள்முன்னைநாள்யான்முதல்வன்யான்முதல்வனென்று
பொருதிகல்விளைத்தகாலைவயிரவப்புத்தேள்போந்தாங்
கொருவனைச்சென்னிகொய்துமொருவனெய்த்தோர்கவிழ்த்து
மருவியகலாய்த்தறீர்ப்பமற்றவருணர்ச்சிமேவி. (௩)

அறிவெனநமக்கெழுந்தவறியாமைவலியினாலே
செறிபரமனையிகழ்ந்தென்செய்தனமெனக்கவன்று
வெறிமலர்ச்சோலைசூழுங்கவுரிமாயூரமேவி
முறிவிலொண்கருணைப்பெம்மான்முன்பணிந்தேத்தினாரால். (௪)

ஆயவக்காலையெம்மானவர்க்கருள்சுரந்துநீவிர்
பாயவுத்தரமாயூரப்பதியகம்புகுந்துதூய்மை
மேயநல்விடபதீர்த்தம்படிந்தெமைவிதியிற்போற்றி
னேயநுந்தீமைதீர்ந்திட்டின்னருள்பெறலாமென்றான். (௫)

இருவருமவ்வாறேகியிடபதீர்த்தத்துமூழ்கிப்
பொருவரும்வடமாயூரப்புண்ணியப்பிரான்முன்சார்ந்து
மருவருஞ்சாந்தமொண்பூமஞ்சனமாதிகொண்டு
திருவரும்பூசையாற்றித்தோத்திரஞ்செய்யலுற்றார். (௬)

சராசரமானாய்போற்றிதத்துவாதீதபோற்றி
பராபரப்பொருளேபோற்றிபத்தியாதரிப்பாய்போற்றி
தராதலம்வெளியிங்கடத்தியசாமிபோற்றி
யராவணிசடையாய்போற்றியற்புதமூர்த்திபோற்றி. (௭)

சத்தறிவின்பரூபத்தனிமுதற்புராணபோற்றி
மத்தவெங்களிறுகீண்டுபோர்த்தியவல்லாய்போற்றி
யுத்தரமாயூரத்தினொளிர்தரும்வள்ளல்போற்றி
பித்தரோந்தீமைதீர்த்துப்பேரருள்செய்வாய்போற்றி. (௮)

என்றுநைந்துருகிக்கண்ணீரிழிதரத்துதியாநிற்கு
மொன்றுமற்றவர்முற்றோன்றியுத்தரமாயூரேச
னன்றுநும்வழுத்துவந்தோநசித்ததுநீர்செய்தீமை
அன்றுநுந்தொழின்மேற்கொண்மினெனச்சொல்லிமறைந்தானன்றே. (௯)

நன்றிசைவடமாயூர்நாதர்தங்கருணைபெற்றுத்
தென்றிசைமாயூரேசர்சேவடிமீட்டும்போற்றிக்
குன்றிசைதோளார்தத்தங்குறிக்கொளுமுலகங்கூடித்
தொன்றிசைதொழின்மேற்கொண்டுதூயராய்வாழ்ந்தாரன்றே. (௧௦)

செந்தமிழ்மணக்குஞ்செவ்வாய்த்திருமுனிவரன்முன்னாய்
வந்தமிறவத்தராயமுனிவரரளவிலாதார்
பந்தமிலாங்குக்கூடிப்பரவினர்துதித்துப்போற்றிச்
சிந்தலில்பெரும்பேறெய்திச்சிறப்புறவாழ்ந்தார்மாதோ. (௧௧)

உத்தரமாயூரப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௪௪0௨.

உபதேசப்படலம்.

புண்ணியவிரவிப்புத்தேடுலாத்திடைப்போதன்மேவப்
புண்ணியவிடபவேற்றிற்கன்றருள்புரிந்தவாறே
புண்ணியவுபதேசஞ்செய்திறனுளம்பொருந்தக்கொண்டான்
புண்ணியவுமையோர்பாகப்புண்ணியமாரூரேசன். (௧)

ஆரருளுருவமாயவஞ்சனையகிநடாத்தும்
பேரருட்டிருவிழாவென்றுலகெலாம்பிறக்கம்வாய்ந்து
சீரருண்முழுகல்போலத்தெய்வதப்பொன்னிமூழ்கக்
கூரருட்டீர்த்தமெல்லாங்குண்டையந்துறைவிராவ. (௨)

எண்ணருமுனிவர்வானோரியாவருஞ்செறிந்துமூழ்க
நண்ணருமுதனாள்போலநாடொறுந்தீர்த்தநல்கிக்
கண்ணருங்குளிர்சாலிந்துகதிரொடுவிராவுநாளி
லண்ணருந்தெய்வக்கங்கையாங்குவந்தடையநோக்கி. (௩)

முழுகுபல்கணங்களோடுபுல்லமுமுழுகச்செய்தே
யொழுகுமப்பொன்னியாற்றிற்குத்தரதிசைப்பாலெய்திப்
பழுதறமுனமுளைத்தபராவுதன்குறிக்குத்தென்பாற்
றொழுதகுகுரவனாகியமர்ந்தனன்சுரர்கள்வாழ்த்த. (௪)

மலிதவப்பெருமைகாட்டிவயங்கிடுமற்றோர்கூற்றிற்
பொலிதருசேமேற்கொண்டுதென்முகம்பொருந்தநோக்கி
நலிவறவமர்ந்துகுண்டையேற்றினைநயந்துநோக்கி
மெலிவறுகருணைதன்னாற்றனிவைத்துவிளம்பலுற்றான். (௫)

வேறு.

மேயபுறமகமென்னுமதத்துழன்றும்வருணநிலைவேட்டுநின்றும்
பாயமிருதியுமறையும்புகலுநெறியிட்டிகள்பற்பலபுரிந்து
மாயபெருவேதாந்தப்பொருடெளிந்துமுற்றியபினறிவான்மிக்கோர்
தூயபுகழ்ச்சைவநெறிப்படுந்தீக்கைக்குரிமையுறுந்தூயோராவர். (௬)

மொழிதருமத்தீக்கைபலவிதமாகுநோக்கூறுமொழிதலெண்ண
லழிவருநூல்யோகமவுத்திரியெனவேழுள்ளுமவுத்திரியென்றோத
லொழிவரியகிரியையெனஞானமெனவிரண்டாய்ப்பின்னொருமூன்றாகும்
பழிதபுநற்புகழ்ச்சமயவிசேடநிருவாணமெனும்பகுப்பினாலே. (௭)

நலமாருமித்தீக்கைக்குரியர்நமைச்சேர்தவமோர்நான்கேயாகு
நிலமாருஞ்சரியையெனக்கிரியையெனயோகமெனநிலவாநின்று
புலமாருஞானமெனவவைகொடுத்தனம்முகலம்பொருந்தலாதி
யலமாருநம்மொடிரண்டறக்கலத்தலீறாகவறையுநான்குள். (௮)

போதவுருநாமமருந்தளியிலலகிடன்மெழுகல்பொலியுமன்பின்
மேதருபன்மலர்பறித்துப்பஃறொடைசெய்தணிதல்பலவிளக்கமேற்றல்
கோதமினம்மடியரைநாமெனக்கருதியவர்பணிமேற்கோடலாதித்
தாதநெறிச்சரியையினையாற்றுவாரெம்முலகஞ்சார்ந்துவாழ்வார். (௯)

இன்னதுமுற்றியபின்மகநெறிக்காகும்விசேடமெய்தியிரும்பூசைக்குச்
சொன்னவைகொண்டாதாரசத்திமுதற்சத்தியெனச்சொலுங்கஞ்சத்து
மன்னவாதனமாதிபாவித்தாவாகித்தாவரணமாகி
யென்னவும்பூசித்தழலோம்பிடுகிரியைப்புத்திரரொம்மருகுவாழ்வார். (௧௦)

கிரியையிதுமுற்றியபினியமாதியெட்டுறுப்பின்கிளர்ச்சிமேவி
யரியவிருவளியடைத்துநடுநாடியுறப்பயின்றங்காறாதார
மரியபொருளுணர்ந்தேகிமதித்தானத்தமுதருந்திவயங்குநம்பி
னிரியலுறுதழுந்துசகமார்க்கயோகத்தினரொம்முருவமேய்வார். (௧௧)

மேதகையவிம்மூன்றுமுற்றியபினருள்பதிந்துவினையொப்பெய்து
மாதரவாம்பருவத்தியாமேதோன்றிகுருவாணத்தத்துவாக்கள்
காதலுறச்சுத்திபுரிந்தருளுறுக்குமெழுத்தைந்துங்கவினத்தேற்றிக்
கோதமையைம்பாசமிரித்தின்புறுத்தல்சன்மார்க்கங்கூறக்கேண்மோ. (௧௨)

பிறத்தலிறந்திடல்பெருகல்சுருங்கல்வெறுத்திடல்வேட்கைபெறுதலொன்றை
மறத்தனினைந்திடன்மயங்கறெளிதல்வெகுளுதலுவத்தன்மாறாத்துன்பத்
துறத்தல்களித்திடனிற்றனடத்தல்வெய்யவாதறண்மையுற்றுமேவ
றுறத்தல்கலப்புறக்கூடலிவைமுதல்யாவையுமெய்தாத்தூயதாகி. (௧௩)

நினைவரியதாயபரமானந்தமாய்வினையினீங்கியாரும்
புனையவிளங்கியஞானமாய்மலருண்மணம்போலப்புவனத்தெல்லா
நனையமருவுறவிராவினும்வேறாய்மறைமுடிவுநணுகொணாதாய்த்
தனையடைந்தார்க்கபேதமாயாவுமொருங்குணர்வதாய்த்தானேதானாய். (௧௪)

அருவுருவங்குறிகடந்துகட்டுவீடின்றியுயிர்க்கனைத்துநல்கி
மருவியுடன்றொழிற்படுத்துப்புலங்கொளுவிவீடுய்க்குமாண்பிற்றாகி
யொருமுதலாயழிவறநின்றேங்கொளியாய்விளங்கிடுவதோங்கும்வேதப்
பெருமுதலாம்பதியதுமற்றியாமேயென்றுணர்ந்திடுதிபிறங்குமேறே. (௧௫)

சத்தசத்தும்பகுத்துணர்சத்தாய்ப்பளிங்கிற்பற்றியவைதாமாயென்று
நித்தியமாய்மூவகையாயெண்ணிலவாய்வசிப்பவருநிறைவாயெல்லாம்
பொத்தியகாரிருளெர்ளியுமல்லாதகண்ணியல்பாய்ப்பொலியுநம்மாற்
சுத்தியமைந்தின்புறுவசிற்றுணர்விற்பசுக்களுணர்தோலாவேறே. (௧௬)

ஆற்றல்பலவுடைத்தாயொன்றாயழியாதாய்வடுமாசனைத்தாய்த்தொன்றாய்ப்
போற்றவுயர்நம்மருளானீங்குவதாணவமலமப்பொல்லாங்கோவ
வேற்றதனுவாதிநல்குமிருமாயையிருவினைக்குமேதுவாகச்
சாற்றுகான்மியமிவற்றைநிகழ்த்துதிரோதானமலந்தாமைந்தோர்தி. (௧௭)

தீதுதீர்விசேடபாவனைசெய்துதிருந்திடநாசியிற்புகுந்து
மோதுபாதகத்தையரித்துமைக்குழம்பாய்முகிழ்வலநாசியின்வழிக்கீழ்ப்
போதுவதாகவெண்ணியும்படந்தவத்திரமந்திரம்புகன்று. (௩௨)

முனிவொடுவலப்பாலழனிறவயிரக்கன்மிசைமுருங்கவிட்டிடுக
துனிதவிரீதேயகமருடணமாந்துயநீராசமித்ததன்பி
னனியுயர்சகளீகரணமுஞ்சமைத்துநாடுகவசத்தினீரள்ளி
யினிதுறத்தன்னைவளைத்துமாதேவனிணையடிதியானித்தல்வேண்டும். (௩௩)

குசையுடன்காயத்திரிமனுமூலங்கூறுபுமும்முக்காற்றற்பித்
திசைதரவவைபப்பத்துருக்கணித்திட்டெழின்மிகுசங்கிதைபேசி
நசைபெறவொருகாற்றற்பித்தேரம்பனகுசுடர்வேற்கரக்கந்த
னசைவறுகவுரிமனுக்களோவ்வொருகாலறைந்துதற்பித்திடன்முறையே. (௩௪)

கதிர்மனுமுக்காற்கூறிநீரிறைத்துக்காமருமந்திரந்தேவர்
பிதிர்தலின்மனுவோதுபுகரநுதியாற்பிறங்கவொவ்வொருதரந்தற்பித்
ததிர்தலினிருடிக்கங்குலியிடையான்மக்கட்குக்கனிட்டையினடியா
னுதிர்வில்பூதங்கட்குறுமணிக்கட்டாஞெளிர்பிதாமாதாஞாதிருவே. (௩௫)

ஆசான்மற்றிவர்க்குத்தற்சனிவிரலங்குட்டநள்ளொளொடுமொருகா
னேசாரத்தற்பித்திடுவதுமுறையாநிகழ்சுவாகாந்தமந்திரத்திற்
கேசாரத்தேவரிருடியர்தங்கட்கியைதருநமோந்தமானுடர்க்கு
மாசாராவவுசடந்தமாம்பூதமகிழ்ச்சிமீக்கொளும்வவுசட்டால். (௩௬)

பிதிரர்கடமக்குச்சுதாவெனப்புகல்வர்பின்னுமாசமனநன்னியாச
முதிர்தரச்செய்துநகுபிராசாதமொழிந்துமுன்சொற்றமுத்திரையா
லுதிர்தராதமுதம்விந்துவினொடுக்கியொண்கதிர்மண்டலத்தமரு
மெதிரிலாப்பரனைப்பணிந்துமூலஞ்சொற்றீகமற்றவனுக்கப்பலனை. (௩௭)

சந்திதற்காலந்தப்பிடிலொருகாற்சங்கிதையுரைத்திடல்வேண்டுஞ்
சந்தியொன்றொழியிற்சாதநூறிரண்டேற்சாற்றியதோரிருநூறுற்
சந்திமூன்றொழியினதுமுந்நூறுரைத்துத்தவிர்ந்திடவேண்டுமன்றுணவைச்
சந்திநாலாவதொழிந்திடிலிரண்டுசதஞ்செபித்திடல்வழக்காமால். (௩௮)

பிணியினர்பன்னுட்டவறிலாயிரமோர்பிணியிலார்தவறினீரயுதந்
தணிதரப்புகன்றுபாதகமுருங்கத்தக்கதாமோமமுமாற்றிப்
பணியணிப்பெருமாற்கினியதென்றெவரும்பகரபிடேகமுஞ்செய்து
கணிதமிலடியார்க்கிரும்பொருள்வழங்கிக்கைகுவித்திறைஞ்சுதன்மரபால். (௩௯)

சந்தியிவ்வாறுமுடித்தவன்பதுமாசனத்தமர்ந்தியையவாயாம
முந்தியசகளீகரணநன்கியற்றிமூலமந்திரத்துநூற்றெட்டு
நந்தியகணித்துவிருப்புண்டேன்மேலுநவின்றகோரமுமுடிபுரைத்தே
யுந்தியசகளீகரணம்பின்னருஞ்செய்தொண்பூதிதரித்திடன்முறையே. (௪௰)

அனுட்டானவிதிப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௬௯௮.

சூரியபூசாவிதிப்படலம்.

அத்திரக்கூடடைந்துபிருதிவியெழுவாய்மாயாந்தமாமுப்பத்தோர்
தத்துவநெஞ்சாற்கடந்துபூசையிடஞ்சுத்தவித்தைதாமாவெண்ணி
யொத்தபொருளோடுகிழக்குப்பார்த்தமர்ந்தத்திரத்தாலொண்கரஞ்சோதித்துச்
சித்தமுறவவுசடந்தமூலத்தாலிருகரமுஞ்சேரச்சேர்த்து. (௧)

பெருவிரற்பாற்றற்சனிகளாவிதயம்பெருவிரலாற்கனிட்டையாதி
யொருமூன்றின்பாற்சென்னிசிகைகவசந்தற்சனிக்கணுறுகுட்டத்தான்
மருவியவத்திரம்பேசிநிசிக்சகவசஞ்சொலிக்கைவயங்கச்சுற்றிக்
கருவில்லவுசடந்தமூலஞ்சொலிக்கைசேர்க்கவிதுகரநியாசம். (௨)

விழையுடம்புமூலத்தாற்சுத்திசெய்தபின்புபெருவிரலினோடாந்
தழைகனிட்டைமுதன்மூன்றாலிதயஞ்சிரஞ்சிகையிற்றவாமலந்தக்
குழைமனுக்கூறுபுநிசித்துத்தற்சனிகளாற்கண்டங்குல்வச்சுற்றிப்
பிழையொருவத்தனநடுவிற்கவசமனுவோதிவளம்பெறநிசித்து. (௩)

மத்திமைதற்சனிகளினேத்திரங்களினேத்திரங்கூறிவயங்கத்தத்திற்
பத்திமையினநாமிகைகளானகுமத்திரங்கூறிநிசித்தல்பண்பா
மத்திரமந்திரங்கூறிச்சோடிகையாற்றிசையைந்தோடைந்தும்பந்தித்
தெத்திசையும்புகன்மூலத்தான்மகாமுத்திரைமெய்யெங்குமாக்கி. (௪)

செய்யகதிராத்தனைப்பாவித்துப்பின்சீருணபாத்திரத்திற்சாந்தஞ்
செய்யமலருறுநீரூன்றுபுமுழந்தாள்சிரத்தளவுசெல்லத்தூக்கிச்
செய்யமூலம்புகன்றுதரிசனார்க்கியங்கொடுத்துச்செப்பல்வேண்டுஞ்
செய்யமனுக்கவசமூலஞ்சிலவென்றுரைத்திடுவர்தெளிந்துளோரே. (௫)

இலாடநடுச்செம்மைவிந்துநின்றிழியுநிலாவமுதமென்னவுள்ளிச்
சுலாவியத்திரத்தினாற்சோதித்தபாத்திரத்திற்றுரிசிலாது
நிலாவுகடோற்கத்தாற்கந்தோதகம்பூரித்ததனிகழ்சடங்கங்
குலாவுமூலத்தினாலர்ச்சித்தத்திரங்கவசங்கூறிக்கொண்டு. (௬)

முறைதிக்குப்பந்தமவகுண்டனஞ்செய்தேபின்னர்மொழிமூலத்தா
னிறையுற்றதேனுமுத்திரையுங்கொடுத்தந்நீர்கொண்டத்திரநிகழ்த்திக்
குறையற்றபொருணிலந்தன்மேற்புரோக்கித்துப்பின்குலவுமோர்பூ
மிறையற்றவத்திரத்தாற்பூசைத்தானத்திட்டுவிலக்கியூறு. (௭)

செம்புமுதலாயவைநற்றண்டுலமற்றிவற்றொன்றாற்செய்தவெண்டோட்
டம்புயத்துத்துவாரவலந்தண்டியிடம்பிங்கலனீசத்தோர்கொம்பன்
வெம்பழலிற்குருநடுவிற்பிரபூதாசனமழன்முன்மிளிர்நாற்றிக்கிற்
பம்புவிமலன்சாரனாராத்திகன்பரமசுகனைச்சேர்த்து. (௮)

மற்றதன்மேல்வெண்பதுமமருச்சித்துப்பூருவமுன்வளரீசான
னுற்றதிசையீருயகேசரத்திற்றீத்தைசூக்குமையொண்மேன்மை
பெற்றசெயைபத்திரைவிபூத்திநலவிமலையருள்பெறுமமோகை
சொற்றவித்துதையைநிறுவிக்கன்னிகையீசானத்திற்றுலங்குமாறு. (௯)

சறுவதோமுகியைவைத்துவிப்பிரமுத்திரைகொடுத்துத்தயங்கநாப்பண்
மறுவிலர்க்காசனஞ்சேர்த்தத்திரத்தில்வெண்டாமரைசெம்மண்டலமாவெண்ணி
நறுவிரைமாதுளம்பூவினுருவெண்டாமரையிருகைநயனம்வாகுப்
பெறுமளவத்துணைதனிமாமுகஞ்சிவந்ததுகிலாகப்பிறங்கக்கண்டு. (௰)

நிலவுகடோற்காயசூரியமூர்த்தியான்மூர்த்திநிசித்துமேலாற்
குலவுநேத்திரத்தானேத்திரமீந்துபூவொடுகைகூப்பிக்கொண்டு
கலவுறுதனின்றருணவிந்துமலருற்றதெனக்கருதிப்பின்னர்
நலவுபவிதயத்தாலேமூர்த்தியாவாகனமுண்ணயக்கச்செய்து. (௧௧)

மன்னுதாபனஞ்சந்நிதானஞ்சந்நிரோதனமும்வயங்கச்செய்து
பன்னுவிம்பமுத்திரையீந்திதயாதித்தானத்திற்பகரவற்றுன்
முன்னுபுகழ்பெறநிசித்துமுயங்குமேகத்துவமாமூலத்தாக்கித்
துன்னுதிக்குப்பந்தனமுந்தூயவவகுண்டனமுந்துலங்கச்செய்து. (௧௨)

மொழிதேனுமுத்திரைமாமுத்திரையுந்திமிராரிமூலத்திந்து
பழியினமசுவதசுவாகாந்தகடோற்கத்தாற்பாத்தியமுன்னீந்தே
யழிவில்வவுசடந்தமூலம்பகர்ந்துதண்டுலம்பச்சறுகுசாத்தி
யொழிவில்கடோற்கத்தாலெண்ணெய்யாதிகைக்கொண்டாங்குள்ளத்தாட்டி. ()

செய்யவுடைபுனைந்துகந்தாதிகளணிந்துமூலத்தாற்சிறப்பமூன்று
செய்யமலரஞ்சலியுமருக்கியமும்பதுமவிம்பச்செம்மைவாய்ந்த
செய்யமுத்திரையுநல்கியிலயாங்கமருச்சித்துத்திகழ்போகாங்கஞ்
செய்யவனுமதிபெற்றேயிதயமுன்னான்கிடத்துமவைசெப்பிவாங்கி. (௧௪)

முறையழலீசன்னிருதிவளிமூலையந்நான்குமுன்னிச்சாத்தி
நிறைகதிர்முன்விழிசாத்திக்கிழக்குமுதலத்திரமேநிரம்பச்சாத்திக்
குறைவிலிதயாதிக்கான்முத்திரைநேத்திரமதற்குக்கோவிடாண
மறைசெய்திராசனிவலியத்திரத்தினுக்கீந்திந்திரதிக்காதிநான்கில். (௧௫)

இதழ்நுதியின்மதிபுதன்பொன்வெள்ளியழன்முதனுன்கினியையச்செவ்வாய்
கதழ்சனியிராகுகேதுவைச்சாத்திவிளங்குநமக்காரமென்றுஞ்
சுதமறுமுத்திரையுமருக்கியமுநல்கிக்கதிரவற்குத்தூபதீபு
முதவிநிவேதனந்தூநீரடைக்காய்தற்பணமாதியுதவிப்பின்னர். (௧௬)

உற்றவுபவிதயத்தாலாசமனமருக்கியநன்குதவிமூலஞ்
சொற்றமையுமருக்கியநன்னீரினொடுகதிரவன்முன்றேன்றவீந்து
பற்றமையங்கங்களுக்குந்தசத்திலொன்றுசெபித்தணிந்துபணிந்துபின்னர்க்
கற்றகடோற்கத்தினுற்பராமுகவர்க்கியங்கொடுத்துக்கனிந்துவேண்டி. (௧௭)

உம்படந்தவத்திரநாராசவுயர்முத்திரையாலொழிதராது
நம்பமைந்தவங்கமனுவாதியெழப்புரிந்துபின்னர்நலம்பராவு
வெம்புதலிறிவ்வியமுத்திரைகடோற்கத்தினுன்மிகயோசித்துப்
பம்பிதயமூலத்தாற்சிவவருணன்றனையொடுங்கப்பண்ணிப்பின்னர். (௧௮)

பொலிதருமீசானத்திற்றேசச்சண்டனைச்சாத்திப்பொற்புமேய
மலிதருமாலியஞ்சாத்திப்பூசைபுரிந்தொடுக்கியபின்வயங்குதீமை
மெலிதருமாசமனசகளீகரணஞ்செய்துபின்னர்வெண்ணீறெண்மை
வலிதருநெற்றியிற்புனைதல்வேண்டுமிதுகதிர்ப்பூசைமரபாமன்றே. (௧௯)

சூரியபூசாவிதிப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௭௧௭.

சிவபூசாவிதிப்படலம்.

கண்ணியவாசமனஞ்செய்துசகளீகரணமுஞ்செய்துநீறணிந்து
புண்ணியவுருத்திராக்கமும்பூண்டுபூசைநற்றலத்தையடைந்து
திண்ணியபலபாத்திரமுமத்திரத்தாற்றிகழ்தருசுத்திநன்கமைத்து
நுண்ணியவவுசடந்தவிதயத்தைநுவன்றுவட்டகைப்புனனிறைத்து. (௧)

வழுவறுசாமானியவருக்கியத்தைவயங்குறுபிரணவங்கொண்டோ
ரொழுதரமருச்சித்தெழுதரமபிமந்திரித்துப்பின்றிக்குப்பந்தனமுஞ்
செழுவியவவகுண்டனமுநல்லான்முத்திரையுநன்குதவிமேல்பாங்கர்க்
கொழுவியதுவாரத்தத்திரமனுவைக்கூறுபுபுரோக்கணஞ்செய்து. (௨)

மேற்படித்தென்பால்விநாயகன்வடபால்வெள்ளைமேனியணடுச்செய்யா
ளேற்புறவிருத்தித்தனக்கொளிர்தென்பாலியைதரநந்தியையமைத்துப்
பாற்படுநந்திதனக்கியைவடபாற்பஃறிணைக்கங்கைமற்றவடன்
மாற்படுவடகோடிக்கண்மாகாளன்மற்றவன்றனொதுபால்யமுனை. (௩)

முறைபெறநிறுவிப்பூசித்தல்வேண்டுமுற்றுறுதெனிலனைவரையு
மிறைதபக்கூட்டியருச்சனைசெயலும்விதிதொழுதுடனிரீக்கணஞ்செய்
தறையுமேனோக்கியத்திரங்கூறியமைந்தநாராசமுத்திரையா
லுறைமலர்தெறித்தும்படந்தபாசுபதவத்திரமந்திரமுரைத்து. (௪)

பாதமுத்தாடனஞ்செய்துகீழைப்படியெனுந்தானத்துநாப்பட்
போதவத்திரதுவாரபாலனையொண்பூசனைபுரிந்துவாத்துபதி
நாதனைக்கருப்பகிரகத்துணிருதிநகுதிசையுறும்படிவைத்துப்
போதநாற்சுத்திகும்பத்திற்கியற்றிப்பொலிதருமந்திரநீரால். (௫)

தோயவத்திரத்தைச்சுத்திசெய்திட்டுத்துறுபுதநீர்வெயிற்படாநீர்
மேயமுன்னாணீர்விலக்குபுநன்னீர்விளைந்திதயத்தினால்வடித்துப்
பாயவன்பமையவெடுத்துமற்றனைத்தும்பாங்குறும்படியமைத்ததன்பின்
றீயமண்சிலைபுல்வேய்துக்கம்வியாதிதேசுதீர்த்திடலொற்கமுறலால். (௬)

புலியதண்முத்திதுகில்பிணிபோக்கும்பொலிகலைத்தோன்ஞானசித்தி
மெலிவில்கம்பளந்துக்கந்தபும்பலகைவிரும்பியதருமிவற்றொன்றின்
மலியருளுருவச்சம்புவின்றென்பான்மதித்திருந்துயர்பூசைத்தான
நலிவிலத்திரமாமதிலினுட்கவசநவிலவகுண்டனத்துள்ளாக்கி. (௭)

இருங்கரநியாசஞ்செயாச்சுழிமுனையையிரண்டுகாற்பெருவிரறொடங்கி
யொருங்கியன்மூலாதாரத்தினளவுமோரிரண்டுருவமாவதன்மேல்
வருங்குணப்பிரமரந்தரமளவும்வயங்கொருரூபமர்விதயம்
பெருங்களநாமூலம்புருவமத்தியம்பிரமரந்தரமைந்தில். (௮)

நுவலிருகலையோடளாவியதாக்கீழ்நோக்குதாமரையரும்போடு
கவலறக்கூடியிருப்பதாச்சத்திகதித்திடுதானத்தினின்று
மவமறவீழுமமிர்ததாரையினாலகம்புறநனைந்ததாவெண்ணிப்
பவமிலுங்காரமிதயத்துச்சொலிக்கப்படுவதாப்பாவனைசெய்து. (௯)

அறைவளியிடப்பானாசியாற்பூரித்தமையக்கும்பித்துங்காரத்தி
லுறைசித்தம்வைத்துவளியைமேலெழுப்பியும்படுவுச்சரிப்போடு
நிறைதருசோடிசாமுத்திரையினானிலவைந்துதானத்துந்தெறித்து
மறைவில்கீழ்நோக்குமரும்புமேனோக்கிமலர்ந்தவாப்பாவனைசெய்து. (௧௦)

வளியினை வலப்பாலுசியால்விட்டுவாயுவைமீளவுமிடப்பா
லொளிகெழுநாசிகொண்டுபூரித்தவ்வுரைத்தபூரகவளியாலே
தெளிதருமிதயமலரிருப்பவனுத்திகழுடுப்போலொளியினனு
வெளிதகல்சாந்தபீசமாமயனுவிதயசம்புடிதனுவின்னும். (கக)

மருவுமுங்காரசிகையிருப்பவனுவைத்துப்பின்பீசவிக்கிரக
னருவிலுங்காரசிகைக்கணன்புரியட்டகத்தொடேய்ந்தவனெனவெண்ணி
யொருவிலப்புரியட்டகநின்றுதீர்ந்தானுளிசெய்சூக்குமவிந்துபூதன்
கருதுமேகாங்கிநிராமயனுகக்கரிசிலான்மாவினையெண்ணி. (கஉ)

அடர்வளிதனைக்கும்பித்துமேலெழுப்பியான்றசங்காரமுத்திரையாற்
றொடர்தருமான்மமந்திரநவின்றுதோன்றவான்மாவினையெடுத்துப்
படர்பிரமாதிகழிந்துமேற்போகிப்பகர்பெருந்துவாதசாந்தத்தி
லிடர்தபுபரன்பாலின்பந்துய்ப்பதற்கேயியைந்தவனுகயோசித்து. (கங)

சத்தமும்பரிசமும்பிரமன்பாலிரதந்தண்டுழாயினுன்றன்பான்
மெத்துருவமுங்கந்தமுமுருத்திரன்பால்விழைபுந்தியோடகங்கார
மொத்தவீசன்பான்மனமொடுவிந்துவோங்கியசதாசிவப்பிரான்பால்
வைத்தவிம்முறையேயொடுங்கிடச்செய்யவருமுடற்சூக்குமசுத்தி. (கச)

பொன்னிறங்கடினங்குலிசநாற்கோணம்பொருந்தியலகரமாம்பீச
மன்னியசாதமலரவனிவிர்த்திவாய்ந்ததாமவனியைவெண்மை
துன்னியநெகிழ்ச்சியகாரமாம்பீசந்தோடுசால்பதுமநல்வாம
மின்னியமாயன்பிரதிட்டைபிறையிவ்விதம்பொலிகின்றநன்னீரை. (கரு)

செம்மைவண்சுவத்திரகாரமாம்பீசஞ்செறியுருத்திரன்வித்தையகோரம்
வெம்மைமுக்கோணத்தழலையொண்கருமைவிந்துவோராறறுகோணந்
தம்மைநேரில்லாமகேசர்நற்புருடஞ்சாந்தியாம்வளியைவான்றூம
மம்மையப்பீசஞ்சதாசிவஞ்சாந்தியாதீதமமிர்தவிந்தோடு. (கசு)

வட்டமீசானமருவியவெளியைமருவுறவெங்குமாவுடற்க
ணிட்டநன்குமையவேறுவேறெண்ணியிடையினுன்மறித்துமேனோக்கி
நட்டபிங்கலையான்விடும்பொழுதைந்துநான்குமூன்றிரண்டொன்றுவுரிமைப்
பட்டபீசத்தையிம்முறையுரைத்துப்பகர்தன்மாத்திரைகளையொழித்து. (கஎ)

நிலமறவிடத்துமறலழலிடத்துநிலவழலுறுவளியிடத்துஞ்
சலவளிவெளியினிடத்துநன்கொடுக்கிச்சரீரமவ்வவ்வடிவாக
நலமுறவெண்ணிநவையிலத்திரத்தானகுவலக்காற்பெருவிரற்றீக்
குலவுறவெழுப்பியதுகொடுசரீரகுற்றங்களனைத்தையுந்தகித்து. (கஅ)

சத்தியின்னமுதாலகம்புறநனைத்துத்தகுசித்தமாம்பதுமத்திற்
பத்திமுக்கலையோங்காரத்தாற்சுத்தவித்தையாம்படர்தவிசாக்கிச்
சுத்திகொண்மேனுற்கலைப்பிரணவத்தாற்சூக்குமமெய்கொடுவைத்து
முத்தியைங்கலைசால்பிரணவத்தோடுமூனிவிலான்மாமனுநவின்று. (ககூ)

நிலவுபூரகத்தாற்றுவாதசாந்தத்துநின்றுமான்மாவினையெடுத்துக்
குலவுறவைத்துவவுசடந்தஞ்சார்குளிர்சத்திமந்திரங்கூறி
நலமிகுவிந்துத்தானத்தொள்ளமுதானயந்தபிடேகித்தபின்ன
ரிலகியவங்கநியாசஞ்செய்திடுகவிதுதூலதேகத்தின்சுத்தி. (உ0)

தொகவிதயத்திற்சோதிலிங்கத்திற்றுவாதசாந்தத்தினின்றிறையை
நகவரவழைத்துமலர்முதற்கொண்டுநற்புறம்போலருச்சித்துத்
தகவுறுமுந்திக்குண்டஞானத்தீத்தயங்கவிந்தமுதினேமித்தே
யிகவிலப்பயனையரற்களித்திடுகவிஃதுயிர்ச்சுத்தியாம்பின்னர். (௨௧)

அகநவில்பூசையெனப்புறத்தினுங்கொண்டருள்கவென்றநுஞைமுன்பெற்றுப்
பகலருந்தாளத்திரயம்வண்டிக்குப்பந்தனமாற்றியூறொழித்து
மிகவொளிரங்கிவன்னவத்திரத்தினெடுமதில்கோலுபுகவசத்
திகலரும்வலத்தற்சனியினாற்சுற்றியியையகழ்மூன்றெனக்கருதி. (௨௨)

தூயநற்சத்திமந்திரநவின்றுசொலப்படுதேனுமுத்திரையா
லாய்தெள்ளமுதமேலொடுகீழுமளாய்நிறைந்திட்டதாவெண்ணிப்
பாயபாத்தியமுற்பாத்திரமூன்றும்பகருமத்திரசுத்திசெய்தே
யேயவிந்தமுதநீர்வவுசடந்தவிதயமந்திரத்தினானிறைத்து. (௨௩)

மருவுநாலாறெண்டிரவியமின்றேன்மலர்சந்தமறுகுதண்டுலமிட்
டொருவில்பாத்தியமங்கம்பிரமாங்கமுற்றவாசமனமர்க்கியந்தான்
பெருகுமாசனமொண்மூர்த்தியோடைந்துபிரமமற்றிவற்றருச்சித்து
வெருவிலம்மூன்றுள்விசேடமாம்புனற்குவித்தியாதேகமுஞ்சாத்தி. (௨௪)

தெரியநேத்திரமூலமுமிரதயமுஞ்சிரமுஞ்சிகையுங்கவசமும்பி
னரியவத்திரமூலமுஞ்சொலிமலராலருச்சித்துத்திக்குப்பந்தனமும்
பிரியமாறவகுண்டனமுஞ்செய்தேயான்பிறங்குமுத்திரையுநன்கீந்திட்
டுரியவத்திரத்தாற்றனைத்திரவியத்தையுறுசுசிசெய்தபினம்மா. (௨௫)

உரைகவசத்தாலப்பியுக்கணஞ்செய்தோங்கிதயத்தின்மந்திரித்தே
புரையிலாவவகுண்டனஞ்செய்துதேனுமுத்திரைபொலிதரக்கொடுத்து
வரைநறுநீரின்மலரொன்றுநனைத்துமஞ்சனகும்பத்தினிட்டு
விரைதரத்தேனுமுத்திரைகொடுப்பமேயதுதிரவியசுத்தி. (௨௬)

உன்னுமாதனத்திற்சிவாதனமார்பிலொருசிவமூர்த்தியைச்சாத்தி
முன்னுசாந்ததனாற்றிலதமிட்டொருபூமூலத்தாற்றலைமிசைவைத்து
மின்னுமாதேவபாவனைசெய்துவிளங்கிரசுவந்தீர்க்கம்புலுதம்
பன்னுமோங்காரமாதியநமோந்தமுளமனுப்பயப்பயப்பகர்ந்து. (௨௭)

மந்திரசுத்திசெய்துமஞ்சனவேதிகையில்வண்கலையுறவிரித்துப்
புந்திசெய்நாப்பணனந்தனைச்சாத்திப்பொலிதரநாற்றிசையிடத்து
முந்தியதருமஞானநல்வைராக்கியத்தொடுமொழியைச்சுவரிய
நந்தியசாத்திப்பதுமமேற்சாத்துநகுசடுத்தாதனமிதுவால். (௨௮)

மொழியதினிலிங்கமிருத்தியாசனமேமூர்த்தியேமூலமேயிவற்றுற்
பழிதபுமற்றையங்கமோரைந்தாற்பகருமெண்பூவருச்சித்துக்
கொழியருக்கியமீந்தெழுவிரைத்தூபங்கோதறுதீபமுமீந்து
வழிமதுமலரத்திரத்தினாற்களைந்துவைக்கதண்டீசற்கீசானம். (௨௯)

சுத்தநீரொண்ணெய்மாவரிசனமுற்றுகளிலாமலகமானைந்து
சித்தநன்கமைமையைந்தமிர்த்மானறுநெய்திருந்திளவெம்மைநீர்வில்வ
மொத்தகற்பூரம்பாறயிரின்றேனெண்கழைபல்கனிச்சாறு
மொய்த்தபல்லிளநீர்மூலத்தாலாட்டுமுகிழ்மலரிடையிடைச்சாத்தி. (௩௰)

நறியநீராட்டிப்புகைசுடர்வயக்கிநாலிருபூக்களுஞ்சாத்தி
யறியவண்குச்சுப்புற்கவசத்தாலமைதரச்சாத்தியோரைங்காற்
செறியமூலத்தாற்பதாகைகொண்டாட்டித்திகழ்தருசங்கிதைமனுவால்
வெறியபூநீர்பன்னொருதரமாட்டிவியோமவியாபிமுன்மனுவால். (௫௧)

சகத்திரதாரையாட்டியொண்கந்தஞ்சானுநீர்வேண்டளவாட்டி
மிகத்தழைதருசந்தனக்குழம்பாட்டிமிளிரொன்பான்கலசமுமாட்டிச்
சுகத்தியையந்தத்தருக்கியநறுநீர்தோமறவிதயத்தினூட்டி
மகத்துவம்பொலியொற்றுடையிட்டணைமேல்வைத்தொருமலருறச்சாத்தல். ௫௨

ஈதுதானிலிங்கசுத்தியைங்கரணையெறிவளித்திசையினுங்கமலப்
போதுசாறிருவைவடக்கினுந்தென்பாற்பொலிமுகங்கொண்டிடச்சாத்தி
யோதுசீர்ச்சதாசிவப்பிரானனந்தனுற்றசீகண்டனம்பிகைசெந்
தாதுநேர்கந்தன்விட்டுணுபிரமன்றக்கவீசத்துறச்சாத்தி. (௫௩)

ஆதிபீடத்தின்கீழிடத்துறவாதாரசத்தியையுமற்றதன்மேற்
சோதிசாலனந்தாசனத்தையுமதன்கட்டுலங்கனந்தனையுநன்கமைத்து
நீதிசாலிம்முக்கோணத்தின்மேலானிலவழற்கோணமுன்னான்கும்
பூதிசாறன்மாதிகளதன்மாதிபூர்வமுன்னான்கினுஞ்சாத்தி. (௫௪)

மற்றதன்மேலான்மேகலைக்கீழான்வருநிருதித்திசைக்கண்ணே
யிற்றெனுமதச்சதனத்தைமற்றதன்மேலீசத்தூர்த்துவச்சதனத்தைச்
சொற்றிடச்சாத்தியிதுசதுர்ச்சிங்காதனநடுத்தூயதாங்கந்தஞ்
செற்றநற்பீசமங்குரநாளஞ்செறிதரச்சாத்தியபின்னர். (௫௫)

ஆயபத்திரத்திற்றளத்தினைச்சாத்தியந்தமாத்தலத்தின்மூலத்தின்
மேயபீடத்தின்மீதுகேசரமுமேலுன்னதத்துமத்தியத்தும்
பாயகன்னிகையும்பீசமுஞ்சாத்திப்பதுமமாமாசனஞ்சாத்தித்
தூயவெண்கோணவாசனமேலாற்றெருக்ககேசரத்திடையம்மா. (௫)

பூருவமுதலீசானத்தினளவும்பொருந்தியவாமைநற்சேட்டை
சாருமாவிரவுத்தரிவளர்காளிதருகலவிகரணியெவரு
மோருமோர்பெலவிகரணியெஞ்ஞான்றுமொளிர்பெலப்பிரமதன்னியொடு
தேருமாசறுவபூததமனியுஞ்செறிதரச்சாத்தியபின்னர். (௫௭)

இலிங்கமூலத்திற்கன்னிகையீசத்தெழின்மனோன்மனிதனைச்சாத்தி
நலிந்திடாவட்டப்பதுமபீடிகையாநயந்துளத்தெண்ணியபின்ன
ரலங்கிதழ்நுதிச்சுற்றிரவிமண்டலமுமதிபதியயனையுஞ்சாத்தி
யிலங்குகேசரத்துநுதிவட்டமதிமண்டலமிறைமாயனைச்சாத்தி. (௫௮)

கன்னிகைவட்டநுதியழலாயமண்டலங்கருதுருத்திரனைக்
கன்னிகைநாப்பண்சத்திமண்டலத்தைக்கருத்தனுகியமகேச்சுரனை
மன்னியசாத்தித்தவாவறுகோணமருவியபீடமீதிங்ஙன்
மன்னியமேன்மைச்சிவாதனமெண்ணிவ்வயங்குறச்சாத்தியபின்னர். (௫௯)

செறியழற்றம்பநிகர்சிவமூர்த்திதிகழ்குறிவட்டத்திற்சாத்தி
யறிசிரமாதிபதாந்தந்தண்டபங்கியவிரீசானுதியானிசித்து
முறிவிலீசாதிமுடிக்கணம்மனுவான்முண்டபங்கியையினிதமைத்து
நெறியமைபடிகம்பொன்னிறங்கருமைநிகழ்செம்மைவெண்மையைந்நிறமாம், ()

மன்னுமீசானம்புருடமகோரம்வாமஞ்சத்தியோசாதம்வதன
முன்னுதண்பிறைசேர்சடைமுடியைந்தைம்மூன்றுகண்டிருக்கரம்பத்து
மின்னுவேல்வாள்சூலங்கட்டுவாங்கம்விளங்கியவரதமோர்வலப்பாற்
பன்னுதாடிமந்தமருகம்பாம்பக்கவடநறுநீலம்பற்றிடப்பால். (௪௧)

அமைதரக்கொடுவெண்சிலைநிறம்பங்கயாசனமரவநூலோடு
சமைதரவெண்ணிவித்தியாதேகந்தழைதரமற்றதுமின்போற்
சுமைகொள்பூவஞ்சலிக்குளானதுவாத்துணிந்துமூர்த்திக்கணேசாத்தி
யிமையவர்புகழுமோராந்துமுகத்துமியைதரநேத்திரங்கொடுத்து. (௪௨)

இருகரநிறையமலர்கொடஞ்சலிசெய்திமைதரமேதைமுனிரொட்
டொருவறநிறைந்தாதவன்பொருமூலமொலிகெழுபூரகத்தோடு
வெருவருந்துவாதசாந்தத்தினளவுமேதகவமையவுச்சரித்துப்
பொருவருஞானந்தமாஞ்சிவத்தைப்புகல்கோடிமதியொளியாக. (௪௩)

எண்ணிமற்றிறைக்குவிந்துவினின்றுமியைந்தபுட்பாஞ்சலியுள்ளா
னண்ணியதாக்கியிதயத்தான்மூர்த்திநகவொளிர்பிரமரந்தரத்தே
திண்ணியவாவாகனஞ்செயாவிதயஞ்செறிதரத்தாபனஞ்செய்தே
யண்ணியமற்றையிரண்டுஞ்செய்திடுகவவ்வமுத்திரையினுன்மாதோ. (௪௪)

வினவிநல்வரவாரருள்பெறீஇநின்னைமேதகப்பூசைசெய்யளவு
மனகவிவ்விலிங்கநீங்குருதமர்தியண்ணலேயெனநனிவேண்டி
மனனமர்சுவாகாவருக்கியங்கொடுத்துவளவிதயஞ்சிரஞ்சிகையே
கனமிகுகவசமத்திரமுன்னிக்கராந்தமுன்னிசித்திடல்வேண்டும். (௪௫)

மூலநன்குறைத்தேகத்துவஞ்செய்துமொழிதிக்குப்பந்தனமாற்றிச்
சாலநல்லவகுண்டனஞ்செய்துபரனோர்தக்கவான்முத்திரைகொடுத்துச்
சீலமார்மகாமுத்திரைபஞ்சமுகமுத்திரைகொடுத்தேநமாசுதாசீ
ரேலவாய்சுவாகாவென்றுபாத்தியமுனியையமூலத்திறொற்கொடுத்து. (௪௬)

மொழியறுகரிசிமலர்வவுசடந்தமூலத்தான்முடிமிசைச்சாத்திச்
செழியிதயஞ்சேர்மூலத்தாற்றூபந்தீபநன்கியைதரக்கொடுத்துப்
பழியிலாசமனமருக்கியநல்கிப்பாவனையாட்டுதல்செய்து
வழியருக்கியமுமாட்டிப்பாத்தியமுன்வரையொருமூன்றுநன்கிந்து. (௪௭)

மேயவொற்றுடையிட்டுச்சந்தரிசிவிளங்கியதூர்வைகூவிளம்பூப்
பாயபூணுடைபூணுநூலாதிபரித்திடச்சாத்தியபின்ன
ராயமுத்தத்துவாதியந்தத்திலஞ்செழுத்தோதுபுமூன்று
தூயமென்மலரஞ்சலிசெய்துசூட்டித்தொடையிண்டைமுதலியவணிந்து. (௪௮)

ஆட்டுபுமணியத்திரத்துத்தூபாதியளித்துநன்முகமுடியைந்தி
ஞூட்டுமாசமனமருக்கியங்கொடுத்துமனோரதமுத்திரைநல்கிக்
காட்டுமைம்பிரமமங்கமோராறுங்கருதிலயாங்கசத்தர்ச்சித்தே
மூட்டுபோகாங்கமருச்சனைசெய்யமுழுமுதலனுமதிபெற்று. (௪௯)

மூலமந்திரத்தாலருச்சனைசெய்துமுடியிலீசானந்தற்புருடங்
கோலமாரிதயங்குய்யத்தினகோரங்குலவுவாமம்பதாதிகளின்
மேலமர்சாதம்லாங்கியீசானம்விளங்கியபூருவந்தெற்கு
நூலமைவடக்குமேற்குறுதளத்திறேன்மையம்மனுக்கொடுசாத்தி. (௫௦)

நேத்திரநின்றநேத்திரம்வாங்கிநிலவுமீசானற்குத்தரத்துச்
சாத்திமற்றிதயமிதயத்துவாங்கித்தழலவன்றிசையிடைச்சாத்தி
வாய்த்தநற்சிரத்திற்சிரங்கொடுநயனம்வடக்கிற்சாத்துபுநிருதிக்கட்
சாய்த்தவண்சிகையையதினின்றும்வாங்கிச்சாத்திடவேண்டும்பின்மாதோ. (ருக)

கவசமெவ்வுறுப்புக்களினின்றும்வாங்கிக்கலப்புறவாயுவிற்சாத்தித்
துவசவண்கரத்தினத்திரம்வாங்கித்தொக்கபூர்வாதிநான்கிடத்து
மவமறச்சாத்தித்தற்புருடாதியிடப்பாகத்தாவாகனாதி
நவமுறுபாத்தியாதிநன்மலரானலக்கவர்ச்சனைசெயன்மரபால். (ருஉ)

பாவனையெனிலர்க்கியமதுகொடுத்தேபகர்தருதேனுவண்பதுமந்
தாவருஞ்சூலமகரியொண்சிருக்காச்சாற்றிடுமைந்துமுத்திரையை
மேவருமீசானாதிகட்கீந்துவிழைநமக்காரமுத்திரையை
யோவருமங்கம்பெறவளித்தரனுக்கொள்ளியமூலமந்திரத்தால். (ருங)

வழிமதுமலரஞ்சலிகொடுத்ததன்பின்வயங்குமாமுத்திரைகொடுத்துப்
பழியிலீச்சுரரோடிவரோசரொன்றுபாவித்துப்புகைசுடர்கொடுத்துக்
கொழிசுவையாசமனமருக்கியமுங்கொடுத்தபின்பலநிவேதனமு
மொழிவறமிளிர்பொற்கலத்துறவேற்றியொத்தநாற்சுத்தியுமாற்றி. (ருச)

ஒருசுவாகாந்தமூலமந்திரஞ்சொற்றுயர்பிரமாங்கத்திற்கியைய
மருவவெவ்வேறுநிவேதியின்றென்னில்வயங்கொருபாத்திரத்தளித்துக்
கருதுமாசமனமீந்துகைதுவட்டிக்கமழடைக்காய்வாசமளித்துப்
பெருகருக்கியமீந்தருச்சித்துத்தூபதீபமும்பிறங்குறநல்கி. (ருரு)

மேயவாசமனமருக்கியங்கொடுத்துமிளிர்சறுவதத்துவாதிபதி
யாயமந்திரத்தாலறுகுமுற்கொண்டேயணிகெழுபவுத்திரஞ்சாத்திப்
பாயநாற்சுத்திபுரிந்துகற்பூரப்பரவுமாராத்திகஞ்செய்து
தூயசுவாகாந்தகவசத்தாற்கீழ்மேலுறமும்முறைச்சூழ்ந்து (ருசு)

தூயவாசமனமருக்கியநல்கித்துலங்குநீருடிவண்கவிகை
யேயசாமரையால்வட்டமற்றிடையிலிடையிலாசமனவர்க்கியத்தோ
டாயமூலத்தாலுபசரித்ததன்பினமைந்தவீரொண்கலைமூல
மேயநற்சிறப்பினியம்பியேயிருகைவிளங்குபுட்பாஞ்சலிநல்கி. (ருள)

முன்னியமகாமுத்திரையொடுபஞ்சமுகமுத்திரையுமன்பிற்கொடுத்து
மன்னியமலர்கையிதயத்தாற்கொடுகண்மணிவடம்வலக்கையினெடுத்து
மின்னியமூலநூற்றெட்டுக்கணித்துவிளங்குமத்திரங்கவசத்தாற்
றுன்னியதிக்குப்பந்தனமவகுண்டனமிவைதுகளறச்செய்து. (ருஅ)

இதயசம்புடிதமாய்வலக்கையினிடக்கையினமர்மலர்வாங்கிப்
பதமிகுமருக்கியப்புனலேற்றுற்பவமெனுமுத்திரையோடு
கதமறமுழந்தாணிலத்திடையூன்றிக்கரிசறுசெபங்கன்மமான்மா
மதமறமனைத்துமாலயற்கரியவள்ளலார்மலர்க்கையிலளித்து. (ருகூ)

அறைபிரமாங்கத்தினுக்குஞ்செய்திடுகவதிற்பத்திலொன்றுறச்செபித்து
முறையழற்றிசையிற்றன்குருமூர்த்திமுனிவறவருசித்தங்கதனிற்
பிறைமுடிச்சிவனைப்பூசித்தியோகபீடம்வித்தியாபீடமேற்கி
னிறையவர்ச்சித்தஞ்சலிமலர்முக்காணிகழ்த்துபுதுதிசெய்துசூழ்ந்து. (சு0)

வலஞ்செயவொழிந்தான்பூசையின்பயனைமருவுறான்சிரங்கன்னங்காது
நலஞ்செயுமுகம்வாய்செங்கையோரொட்டுநகுபுவிதோய்தரத்தாழ்ந்து
குலஞ்செயுமிரண்டாங்காலமும்போற்றக்குறிக்கொளவலியிலையென்னிற்
புலஞ்செயாசனமாதியவொருமூன்றாற்போற்றலும்விதியெனப்புகல்வார். (௬௧)

புந்திசெய்பிரமநேத்திரமங்கம்பூசிபோகாங்கத்துங்கணித்த
சந்தியெண்ணுபுநாயகற்குவிண்ணப்பந்தகச்செய்தோமஞ்செயும்பொருட்டு
நந்தியயாகசாலையையடைகநகுமதிகாரமின்றென்னின்
முந்தியவட்டபுட்பத்தானாதன்மொழிபிரமாங்கத்தானாதல். (௬௨)

சாத்துபுபராமுகவர்க்கியங்கொடுத்துத்தகுதியிற்பூசனைமுடிக்க
வோத்தியையதிகாரிவலியின்றென்னிலோமத்தினொருபதின்மடங்கு
வாய்த்திடச்செபித்துவள்ளலுக்களித்துமாண்புறுபூசனைமுடிக்க
வேத்துவல்லபத்தோடினியசம்பத்துமெய்தினானுமதிபெற்று. (௬௩)

கிளருக்கியத்தோடக்கினிமேற்குக்கிழக்குறுகுண்டந்தானன்றிப்
பளகிறண்டிலந்தானொன்றினுத்தரந்தான்பழிதபுபூர்வந்தானோக்கி
வளமலிகுண்டந்தனக்குநாற்சுத்திவயக்குபுகன்னமேமேன்மை
யுளவவகிரணம்பூரணஞ்சீருறுசமீகரணஞ்சேசனமே. (௬௪)

பாடுகுட்டணஞ்சம்மாற்சனஞ்சமாலேபனமெனவுரைசெயுமெட்டு
நாடுதர்ப்பையினால்வாளினாற்குண்டநடுக்குசையாலத்திரத்தா
னீடுநன்னுதிபூர்வத்துமூன்றிரேகைநிகழ்வடக்கொன்றுறக்கீறி
யீடுகவசத்தப்பியுக்கணமாற்றியெச்சஞ்செய்ததாகப்பாவித்து. (௬௫)

மேயமற்றதன்மேலிதயத்தாற்கூர்ச்சவிட்டரமிட்டுடல்பசந்தா
ளாயவோர்முகத்தாள்பதுமமுக்கண்ணாளணியுடைமாலிகைபூண்டா
ணேயவுலகிற்காவிருதுநன்காகிநீர்படிந்தவளெனவெண்ணித்
தூயவாகீச்சுரியையவண்மூலஞ்சொல்லியாவாகனஞ்செய்து. (௬௬)

வலக்கரத்தபயங்கூர்ச்சமற்றிடக்கைவயங்கக்கமாலையொள்வரதம்
விலக்கரும்வாகீசனையவர்மூலம்விளம்பியாவாகனஞ்செய்து
நலக்குமற்றிருவர்வடிவமும்விந்துநாதமென்றெண்ணியர்க்கியமீந்
துலக்கருஞெலிகோலாதியினழற்றானுத்தமமாளிகைபழற்றான். (௬௭)

தூயபாத்திரத்துவாங்கியோர்சகலந்தொக்கதென்மேற்கினைத்திரத்தாற்
பாய்வூறகலவிட்டுநாற்சுத்திபண்ணித்தீமூலமந்திரத்தா
லாயசங்காரமுத்திரையாற்பூரகத்திடையாலழல்வாங்கி
மேயகும்பகத்தாலுந்தித்தீவிந்துமேயதீயொடுமுறப்பொருத்தி. (௬௮)

மருவிரேசகபிங்கலையினாற்றூய்மைமருவியபாத்திரத்தழற்பாற்
குருவழற்சைதன்னியமனுவாலொண்கொத்தன்னவங்கிபீசத்தை
வெருவிலுற்பவமுத்திரையினாலொருமைமேவுறவைத்துச்சங்கிதையாற்
பொருவிலர்ச்சனைசெய்தமலன்வீரியமாப்புந்தியிற்பாவனைசெய்து. (௬௯)

மன்னியவாகீசுரிகருப்பத்தவ்வரதராச்செல்வதாவெண்ணித்
துன்னியவிடையூறொழித்துமூலத்தாற்றூயகேத்திரத்துத்தாபித்தே
யுன்னியதேவிக்கிதயத்தாற்சவுசாசமனமுன்வத்திரமுதவி
முன்னியசாதாதியைந்தினர்ச்சித்துமூலத்தைந்தாகுதியீந்து. (௭௦)

பூருவமாதிவடக்கந்தமயன்மால்புகலரன்னந்தனைச்சாத்தி
நேருமுற்றிசைமுனெட்டினுந்தெய்வநிருபன்முனெண்மனைச்சாத்திச்
சாருமீசானம்பிரமனைநிருதித்தடந்திசைமாயனைச்சாத்தி
யாருமிவ்வெழுநாச்சிசுவினையோம்பியிடுகெனவிண்ணப்பஞ்செய்து. (எக)

சுடுதழற்கொருபேர்சிவத்தழலென்றுசொல்லித்தாய்தந்தையைவிடுத்துக்
கடுமிடற்றிறையையழலிரதயத்துக்கனியமுன்போலருச்சித்துப்
படுநெய்யெண்ணமுதத்தானிவேதனந்தான்பண்ணுமப்போதுமாமூலம்
வடுவறப்புகன்றுசிலபுரிந்தோமம்வருபிரமாங்கத்திற்கப்பால். (எஉ)

மூலவாகுதியிற்பத்திலொன்றேமமுடித்துப்பூரணாகுதிசெய்து
சாலமாநிவேதனப்பொருட்டோமஞ்சருவிற்செயாவவுசடந்தஞ்
சீலமார்பூரணாகுதிக்காகுந்திகழ்சுவாகாந்தமுமாகுங்
காலமாரோமத்தினுக்கெனக்கரைவர்சரிசிலாகமங்களைகண்டார். (எங)

ஆன்றவாசமனஞ்சந்தனந்தாம்பூலாதியீந்தெண்மலர்சாத்தித்
தோன்றவண்பராமுகவர்க்கியங்கொடுத்துத்தூயதீயிறையையொண்கோசஞ்
சான்றநஞ்சிவன்பால்யோசித்துமூலஞ்சாற்றிநாலாகுதியாற்றி
யேன்றநற்பிரமாதிகட்குநற்பலியையிடன்முறையென்பர்கற்றுணர்ந்தோர். (எச)

முன்னியபிரமாதியர்தமையொடுக்குமுறைமையிலொடுக்குபுதனக்கு
மன்னியதெற்கின்மண்டலமிரண்டுவயக்கிமற்றவற்றுண்முந்தியதி
லுன்னியகிழக்குமுதற்றிசைநான்கிலுருத்திரரொளிசெய்மாதாக்கண்
பின்னியகணங்களியக்கரீசாதிமிளிர்திசைநான்கினுமாதோ. (எரு)

கிரகம்வாளவுணரரக்கர்மாநாகர்கேழ்கிளர்மண்டலநடுவி
லிரவிலீசத்திலுடுக்களக்கினியினிராசிகணிருதியில்விசுவம்
பரவுகால்வருணனிவர்நடுவாகப்பண்புசால்கேத்திரபால
னுரவுறவமைத்துப்பலியருக்கியமுமுறுசுவாகாந்தத்தாலுதவி. (எசா)

இந்திரன்முதலாமெண்மர்கடம்மையேனைமண்டலத்திலெண்டிசையு
நந்தியவயனையீசத்துமரியைநகுநிருதித்திசையகத்து
முந்தியநீலலோகிதர்தம்மைமுழங்குமற்றதனடுவகத்தும்
புந்திசெய்தமைத்தேயருக்கியங்கொடுத்தும்பொலிதருமுருத்திராதியர்க்கும். ()

பலியளித்தாசமனமருக்கியமும்பண்புறக்கொடுத்துவச்சிரக்கை
வலிகெழுமகவான்முதலியர்தமக்குமற்றவைநல்கிப்பின்புறத்திற்
கலிகொடியாதிசமயபேதிகள்வன்கடுந்தழல்வாத்துதேவதைக்கு
மொலியவாமனுவாலுறுசுவாகாந்தத்துதவிவண்பலியுளத்தொடுக்கி. (எஅ)

மண்டலமிரண்டற்கேருத்திராதிமனுவினூலூட்டலகோரமுமாங்
கண்டவிவ்வாறுசெய்யெதுசெயினுங்களையவர்மனுவகத்தாக்கி
யண்டவாயாமநியாசமுமாற்றியருக்கியத்தோடரற்சார்ந்து
கொண்டவப்பலனைச்சிவாகாந்தமூலங்கூறியவ்விறைவலக்கரத்தில். (எகூ)

செழியருக்கியத்தோடாயவுற்பவமுத்திரையினீந்தெண்மலர்சாத்தி
மொழியும்மைமுகமுத்திரைநல்கிச்சாதமுதலைந்துமுடிக்கண்மூலத்தாற்
கொழியருச்சனைசெய்தருக்கியமீந்துகுலவுபோகாங்கமாமவைக்கு
மழிவிலத்திரமுனீசானமிறுதியருச்சித்தர்க்கியமுறக்கொடுத்து. (அ0)

அத்திரமலர்காராசமுத்திரையாலவிர்தருமந்திரமெழுப்பிச்
சித்திசெய்மூர்த்திமனுவிற்றிவ்வியமுத்திரைமலரானடுத்தவர்க்கு
முத்திசெய்மூர்த்திதன்னில்யோசித்துமூலத்தர்ச்சித்தருக்கியமீந்
தித்தலத்தடியேன்பிழையெலாம்பொறுத்தியென்றிரந்திரந்துறவேண்டி. (அக)

திக்குப்பந்தனமுமவகுண்டனமும்பின்செய்துகோமுத்திரையீந்து
பக்குவிள்ளாதகுருமுதலோர்க்குப்பராமுகவருக்கியநல்கி
நக்குயர்சண்டன்றன்னையாசனமுனவின்றுமூலத்தினற்சாத்தி
மிக்குயர்பரமன்புனைந்ததுண்பதுமுன்விளங்குறமூலத்தாற்கொடுத்து. (அஉ)

தனிசெபித்தளித்தென்பிழைபொறுத்தருள்செய்சாமியென்றிரந்தருக்கியமீந்
தினிதுறவொடுக்கமுத்திரைமூலத்திதயதாமரைமலரமைத்துப்
பனியருக்கியத்துநிலைபெறுமனுவைப்பண்புறவெழுப்பிவைத்திதயம்
புனிதவாசமனஞ்செய்துநீறணிந்துபுகலுகவகோரமோர்நூறே. (அங)

தூயபாற்கடலிற்றோன்றியநந்தைசுபத்திரைசுரபிசுசீலை
மேயநற்சுமனையிம்மனுவோதிமென்மலர்கொண்டருச்சித்துப்
பாயபுல்லாதியளிப்பதுகவர்ந்துபார்முழுதளித்திடுந்தாயே
யாயவென்பணிகொண்டருளெனப்போற்றலமைந்தகோபூசையென்றுரைப்பார்.

பொருந்தவிவ்வண்ணம்பூசைசெய்தவத்தர்பொலியவாவாகனஞ்செய்து
திருந்தபிடேகஞ்செய்வதேவிசேடச்சிறப்பெனும்பற்பலாகமங்கண்
மருந்தினுமினியசிவபெருமானைவழுத்தியப்படியருச்சிப்போர்
கருந்துழாயவனுந்தியர்நறுமுறுப்பக்கமழ்சிவானந்தந்துய்த்தமர்வார். (அரு)

சிவபூசாவிதிப்படலம் முற்றிற்று.
ஆ திருவிருத்தம் கசஅ0உ.

போசனவிதிப்படலம்.

கதிரவனுச்சிமேயகாலையாற்றனுட்டானந்தான்
பிதிர்வறமுன்புசெய்யாவிடினதுபிறங்கச்செய்தே
யதிர்தலின்மூன்றுங்காலமருச்சிக்கும்வலியில்லாதார்
விதிரறவெண்பூமுன்பேவிழைந்துசாத்திடுதல்வேண்டும். (க)

பூசையிவ்வாறுசெய்தபுண்ணியன்சிவபிரானை
மாசையில்கோயின்மேவிமாட்சியிற்சேவைசெய்து
தேசைமிக்கடையக்கைகால்கழுவியாசமனஞ்செய்தே
யோசைகொளிருநியாசமுறப்புரிந்திடுதல்வேண்டும். (உ)

குணதிசைபார்த்திருத்தல்குறிசெய்போதகனுக்காகும்
புணர்தருதெற்குநோக்கல்புகனிருவாணிக்காகு
மணமுறவடக்குநோக்கன்மாண்பமைவிசேடிக்காகு
மணவுறமேற்குநோக்கலமைதருசமையிக்காமால். (ங)

அறைதருகிழக்குத்திக்கியாவர்க்கும்பொதுவேயாகு
முறைதருசாதகர்க்குமொழிவடமுகமுமாகுங்
குறைதருமற்றையோர்க்குப்பச்சிமங்கோடல்கூடு
மிறைதருசெய்யநன்னூலியம்பிடும்விதியீதாமால். (ச)

அருந்தவந்தீக்கைசாதியாயவையொத்தாரோடு
திருந்தவங்கொருவர்தம்மையொருவர்தீண்டாதிருந்து
பொருந்தவோர்பந்தியாகிப்பொலிதருசடிலமில்லா
ரிருந்தலைக்கட்டுநீத்துமுழந்தாண்மேலிடக்கையூன்றி. (௫)

இழிநரைநோக்கிடாமன்மோனமாயிருந்துகொண்டு
மொழிதருகோமயத்தான்முழங்குறையாதுநீவி
யொழிவருமொருநால்வர்க்குநான்குமூன்றிரண்டொன்றுகப்
பழிதபுமிரேகைநல்லான்சுதையினுலிடுதல்பண்பாம். (௬)

அதவரசெருக்குச்சாதியாம்பலாமணக்குத்தான்றி
யிதமிலாச்சுரையாறுழையிணர்கொள்கிஞ்சுகமேதேக்கு
பதமில்செங்கொட்டைவேங்கைபசுமகிழ்ம்ணமந்தாரை
முதலியவாகாவென்றுமொழிந்தனசிவாகமங்கள். (௭)

ஏற்றபொற்கலம்விசேடமிரசிதகலமுநன்று
லாற்றவுந்துலக்கியேழ்காலகோரத்தான்மந்திரித்த
போற்றமைவெளியகஞ்சக்கலமுமாம்புகல்செம்பாதி
சாற்றலுமுண்டாமென்றுசாற்றுவரொருசாராரே. (௮)

தலைவிரியரம்பையீன்றதண்டுரியாததாய
விலையறுவாய்வலப்பாலியைதரவிடன்மாண்பாகு
நிலைகெழுபதுமம்புன்னைநீண்டபாதிரிவெட்பாலை
மலைவறுபலாசுசூதமதூகமுற்பலம்பலாவே. (௯)

சண்பகங்கடம்புபூகந்தகச்சுத்திசமைக்கினுகும்
பண்பமைநல்லானெய்யாற்புரோக்கணம்பண்ணிமேலா
லொண்படுதன்னுற்றன்னையொப்பானுற்சிவனுக்கென்றே
நண்புறவமைத்தவன்னநகுகலங்கொடுபடைத்து. (௧0)

முன்னமேகறியுப்பாதிகையினுன்முகந்திடாமற்
பின்னமிறெறுவிகொண்டுபிறங்குறப்படைத்தல்செய்து
மன்னநன்காய்வுந்திமந்திரத்தாற்புரோக்கித்
துன்னரும்வவுசடந்தவொருமிருத்திஞ்சயத்தால். (௧௧)

அறைதருவிதியினேழ்காலபிமந்திரித்தபின்ன
ரிறையவனுசான்வெவ்வேறினிதுகொண்டிடநிவேதித்
துறைவலப்பான்மயத்தானுளிரமண்டலமொன்றிட்டு
முறையினத்தலத்தேயற்பவன்னமூவிரலால்வைத்து. (௧௨)

அங்கைநீரேற்றுநாகனுதியவைவர்க்கூறித்
துங்கமார்கனிட்டைதன்னுலுகுத்தெஞ்சுந்தோயநீரைப்
பங்கமிலீசானத்தாற்பண்புறவளைத்தபின்னர்ப்
பொங்குநற்புருடங்கூறிப்பொற்புறப்பருகல்வேண்டும். (௧௩)

வேறு.

பற்றியிடப்பாணிநுகர்பாத்திரத்தையுண்பவெலா
நற்றழலாகுதியாகநயந்தேயத்திரமனுவான்
முற்றுதராக்கினியெழுப்பிமொழிபிராணுகுதிக்குச்
செற்றுபற்றேயாதிடுகதிகழ்மிருகமுத்திரையால். (௧௪)

உள்ளியமைகொம்மட்டியுறுகோவைசிக்குருக்காய்
வள்ளிவயங்குறுபசளைமாணுவெண்கத்தரிக்காய்
புள்ளிபடுபல்சுரைக்காய்புகலத்திக்காய்முதலாத்
தள்ளிவிதித்தனவருந்திக்கோகனமுத்திளைசமைத்தே. (கரு)

மருவியநன்னீரருந்திமாமணையின்புறம்போந்து
பொருவறவெண்ணிருகானீர்வாயுமிழ்ந்துபொருந்துசுசி
யொருவறயாவையும்புரிந்தேயாசமித்தொள்ளியவலக்கை
யிருவியகீரங்குட்டத்தியைவலத்தாள்விரற்பெய்து. (கசு)

இருந்துசுசியுறவெண்ணிடுபரிகைமுத்திரையாற்
பொருந்துதரந்தடவியிருநியாசமும்பொற்புறவாற்றி
வருந்துதநீரகோரமனுநூற்றேதிமௌனம்விட்டே
யருந்தலைகாய்பின்சுசிசெய்தாசமித்துநியதியனுய். (கஎ)

மன்னுமடியவர்களொடுமாதேவன்சரிதமெனு
முன்னுபுராணம்பலவுமொழிதரவொண்பொருளாய்ந்து
பன்னுசிவானந்தமுற்றுப்பயின்றிடுதன்முறையாகுந்
துன்னுகதிரவன்மேல்பாற்றெடுகடல்போய்விழுமளவும். (கஅ)

போசனவிதிப்படலம் முற்றிற்று.

ஆகதிருவிருத்தம் கஅ௨௦.

சிவாலயதரிசனவிதிப்படலம்.

கதிரவனெடுங்குங்காலமிரண்டரைக்கடிகையென்ன
வதிர்புனலமையுந்தானமடைந்துமெய்ச்சுத்திசெய்தே
முதிரனுட்டானஞ்செய்துமொய்த்தகண்மணியும்பூண்டு
பிதிர்தவிலன்புவாய்ந்துபிறங்குவார்குழாத்தினேடும். (க)

தெங்கங்காயரம்பையீன்றதிங்கனிநறுங்கற்பூரந்
துங்கமாரடைகாயேனுங்கிடைத்ததூக்கனிகளேனும்
பங்கஞ்சாராதுகொண்டுபரமனாலயத்திற்செல்க
வங்கவையரிதேன்முற்றத்தமைதருதுராலொழிக்க. (௨)

இனமறைபுகழுந்தூலவிலிங்கமென்றுரைக்கப்பட்ட
கனககோபுரமுற்றாழ்ந்துகனிக்தசிந்தையினுட்புக்குப்
பனகபூடணவேரம்பப்பண்ணவன்பாதந்தாழ்ந்து
மனனமர்நந்திப்புத்தேண்மருங்கடைந்திறைஞ்சல்செய்து. (௩)

அடியனேன்சிவபிரானைச்சேவிப்பானணைந்தேன்நீமை
கடிதரும்விடைகொடுத்துக்கடைக்கணித்தருளுகென்று
படியுறவிரந்துவேண்டிப்பயத்தொடுபத்திமேவ
முடியநீபோய்வாவென்றுமொழிந்தருளியதாவெண்ணி. (௪)

இருகரங்குவித்துட்புக்காங்கிலங்கநின்றுமையர்
பொருவில்குஞ்சிதத்தாள்போற்றிப்புண்ணியச்சிவபிரான்முன்
மருவியங்காதிசைவன்மலர்க்கையினனைத்துநல்கி
யொருவறவனையான்செய்யுமுபசாரமனைத்துநோக்கி. (௫)

நிறையருட்பாடலாகிநிரம்புதேவாரம்யாரு
மறைதிருவாசகஞ்சீரமையிசைப்பாபல்லாண்டு
குறைதவிர்புராணமின்னகொண்டுறத்துதித்தல்செய்து
மறைபுகல்விபூதிமேனிவளைந்திருகையாலேற்று. (௬)

சிறிதகன்றணுவுமண்ணிற்சிந்திடாவகைதரித்துக்
குறிதருசோமாக்கந்தர்குரவனாயமருமையர்
செறிபுகர்முகத்தேரம்பர்சேவலங்கொடிப்பிரானார்
முறிவறுமிவரைப்போற்றிவலஞ்செயன்முறைமையாமால். (௭)

இருகரசலனநீக்கியியைதரக்குவித்துக்கொண்டு
பொருவரும்பெருமான்பாததாமரையுளம்பொருத்தி
வெருவறச்சிந்தித்தேனுமவன்றுதிவிரித்திட்டேனு
மொருவருமிரண்டுநீங்காதொண்மையினியற்றியேனும். (௮)

அறைபெரும்பத்திவாய்ந்தவறுபத்துமூவராய
நிறையுடையாரைத்துதிக்கினிகழ்ந்தற்றுதியின்மேலுங்
குறைவிலாமகிழ்ச்சியம்மான்கூருமற்றதனாலந்த
முறையுடையாரைச்சிந்தித்துமுனிவறத்துதிசெய்தேனும். (௯)

இடைவெளிதோற்றுருமலினிதடியெடுத்துவைத்து
மிடைதரமுக்காற்சூழல்விதிமேலுமியம்பாநிற்பர்
கடைபடுகுணாங்கேயாவன்கைகளைவீசிச்செல்வி
னுடையிராக்கதனாமார்பினுறப்பிணித்தடையின்மாதோ. (௧௦)

அஞ்சலிசெய்துசூழினமரனேயாவனாலென்
றெஞ்சலில்சிவாகமங்களியம்பலினிந்தவாறே
மஞ்சவிர்கோயில்சூழ்ந்துமாண்டதண்டசர்பாற்போய்த்
தஞ்சமென்றிருகைதட்டித்தரிசனபலனையின்று. (௧௧)

பெற்றனனடியேனென்றுபேசியஞ்சலித்தபின்ன
ரற்றமிலுமையாள்கோயிலடைந்துபசாரமாய
முற்றவுமுன்போலாற்றிமுனிவறநோக்கிப்போற்றிக்
குற்றமில்விபூதியோடுகுலவுசெஞ்சாந்துமேற்றே. (௧௨)

உறுவலமாகச்சூழ்போந்துயர்கொடிமரப்பாற்போந்து
மறுவிலட்டாங்கமாகவணக்கமோரைங்காற்செய்து
பெறுமுறையாங்கமர்ந்துபிறங்கியமூலநூறு
மறுதிசெயகோரநூறுமடைவுறக்கணித்தல்வேண்டும். (௧௩)

சிவாலயதரிசனவிதிப்படலம் முற்றிற்று.
ஆ திருவிருத்தம் ௧௮௫௫.

செபவிதிப்படலம்.

மருவியகுற்றம்போக்குமாண்புறுகழுவாய்நாளும்
பொருவருஞ்செபமேயாகும்பொருந்தியவதுசெயும்பாக்
கிருவகைநியாசமுஞ்செய்தியையவோரிடத்தின்வைகி
வெருவில்கண்மணிசெய்மாலைமேதகக்கோடல்வேண்டும். (௧)

ஆன்றவெண்பட்டுப்பாசத்தாறைந்துநான்குமூன்று
தோன்றவோர்முகம்வாய்த்துள்ளசுடர்மணியிணங்கச்சேர்த்துச்
சான்றவொண்முகத்தினோடுமுகம்புச்சத்தொடுசேர்புச்ச
மேன்றவொற்றுமைவிராவியியைதரக்கோத்தல்வேண்டும். (௨)

புத்திவேண்டிடின்மூவொன்பான்பொற்புறுமையைந்தாகு
முத்திவேண்டிடின்மாமேருமுனிவறவருச்சித்தேத்திச்
சித்திசான்மணியொலித்தல்செயாதுமற்றையர்கணோக்கா
துத்திசாலனைத்தினுக்குஞ்சதஞ்சதமுறைத்தல்வேண்டும். (௩)

அரும்புதண்பளிங்குமுன்னுப்பலவறைந்திடுதலுண்டால்
விரும்புகண்மணிக்குமேலால்விசேடமென்றெவருஞ்சொல்லார்
பெரும்புலமையினன்யோகிபிறங்கவுள்விடுதல்வேண்டுங்
கரும்புறழ்போகந்துய்ப்போன்புறம்விட்டுக்கணித்தல்வேண்டும். (௪)

மருவியபிராணவாயுவலஞ்செலக்கணித்தல்செய்யிற்
பொருவருமுத்தியெய்துமிடஞ்செலிற்போகமெய்தும்
வருசுழிமுனையிற்செல்லமந்திரித்திடுவானாகி
லருமையொன்றேனுமில்லாதனைத்தையும்பெறலாமன்னோ. (௫)

தரைபுகழ்வலக்கையிற்றற்சனியின்மத்திமையின்மற்று
முரையநாமிகையிற்சேர்த்தேயொளிர்வடமங்குட்டத்தால்
வரையுறத்தள்ளின்வார்த்தைமந்தமானதமேயாகுங்
கரைசெயும்வார்த்தையாருங்கேட்பதாய்க்கழிந்ததன்றே. (௬)

தன்னுடைச்செவியின்மட்டேசார்வதுமந்தமாகு
மன்னுதன்மனத்தின்மட்டேமானதமாகுமென்ப
ருன்னுமிம்மூன்றனுள்ளுமொன்றினொன்றதிகமற்றுற்
பன்னுமானதமேகோடிபலஞ்செயுத்தமமாமென்பார். (௭)

எண்ணியேசெபித்தல்வேண்டும்பயனிலையெண்ணுவிட்டாற்
கண்ணியசெபமறந்தான்கணித்திடவிருமடங்கே
யண்ணியவதுதெரிந்தேயமைந்ததேனான்மடங்காம்
புண்ணியவடத்திற்காற்றுங்கழுவாயும்புகலக்கேண்மோ. (௮)

தருசிவலிங்கத்திற்குச்சாற்றியபரிகாரத்தி
லொருவறநான்குகூற்றிலொன்றுசெய்திடுதல்வேண்டும்
பெருவடமேருத்தாண்டிலாயிரம்பேசல்வேண்டுந்
திருவடமற்றகாலைச்செப்புகநூறுமன்னோ. (௯)

முட்டிலவ்விலிங்கத்திற்குமொழிதருபரிகாரத்தி
லெட்டிலொன்றியற்றல்வேண்டுமேனையமாலைகட்குங்
கிட்டுபாத்தியநல்லாசமனமருக்கியங்கேடுற்றா
லொட்டுகசதமொண்சாதம்புருடமீசானமோர்ந்தே. (௰)

உருண்டிடிலொடுக்கலற்றாலருக்கியமோரைஞ்ஞூறு
மருண்டிடாவிருநூற்றோராயிரமுடைந்தான்மாண்பாகுந்
தெருண்டவாவாகனாதியீரைந்துசெறிதுவாரத்
திருண்டிடாவருச்சித்தேத்தலியையுமைஞ்சுத்திபண்ணான். (௧௧)

சதமுறைகணித்தல்வேண்டுஞ்சாற்றவைபிறழினுன்னி
லிதமுறவதனிற்பாதிநியதியாம்பண்டமின்றேற்
சுதமின்மஞ்சனங்குன்றுற்றுற்சொல்லுகமூலநூறு
பததயிலாதிமுட்டிற்பன்னுகவிதயநூறு, (கஉ)

தூயவானைந்துமுட்டிற்சொல்லுகவதனிற்பாதி
யாயசீரிலிங்கமாதிமுடிமிசையலர்குறைந்தான்
மேயபூவிரட்டியிட்டுவிளம்பிடவேண்டுநூறு
பாயவுரோமமாதிபூசித்தபண்டத்தெய்தில். (கங)

விழைபசுத்தருமைந்தாட்டிமுச்சதம்விளம்பல்வேண்டுங்
குழைவினீரயுதங்கூறுகோழைநீரிலிங்கந்தோயிற்
பிழையறவயுதமூன்றுபேசுககோழைதோயின்
மழைபுரைகளத்தான்மெய்யில்வடித்தநீர்க்கலசந்தீண்டில். (கச)

மருவவீரயுதங்கூறுவண்கரமாதியுற்றுப்
பொருவிலானுருவசைந்தாற்புகல்கவையிருபதாங்கே
வெருவுறவிடம்பெயர்ந்தாலாயிரம்விளம்பல்வேண்டு
மொருதரஞ்சுழன்றுன்மேலாலுரைத்ததற்கிரட்டிசெய்க. (கரு)

ஆதனமீதுசாயின்மிகவுருண்டிடினுடுற்றுற்
போதமூன்றயுதஞ்சொல்கபொருவிலான்றிருமேனிக்கட்
பாததூளியதுற்றுலோரயுதமாம்பாதமுற்று
லோதவீரயுதஞ்சாத்துமொளிகிளர்சாந்தமற்றுல். (கசு)

இருமடங்கியையச்சாத்தியீசானநூறுகூற
றிருநிவேதனத்தூனத்தியுரோமங்கீடாதிசேரில்
வெருவிலோரயுதங்கூறுதெரியாதுமேவினூறே
வருநிவேதனந்தான்றப்பிலிருநூறுடயுதமாண்பால். (கஎ)

சதம்பகர்தூபமாதிதருப்பணமாதிதப்பிற்
சதமதிற்பாதியாற்றறக்கதாமறந்துவிட்டா
லிதமிகுதூபங்குன்றினீசானநூறுபேச
லிதமறவிலிங்கமாழ்நீர்வீழினோர்நியுதமெண்ணி. (கஅ)

பின்புதாபித்தல்வேண்டுமாலியப்பிலத்தில்வீழ்ந்தால்
வன்புசாணியுதங்கூறல்வளரிலிங்கங்கடந்தா
னன்பினீரயுதங்கூறலாதாரமின்றிவீழிற்
றுன்புகூர்சாணேற்சொல்கருழுமீரயுதமன்றே. (ககூ)

அறையுமாதாரமுண்டேலயுதமேயறைதல்சாலுங்
குறையுறுமிருசாணுதிக்கிவ்வாறேயேற்றிக்கூறன்
மிறைகொளும்புருடமட்டேற்பரிகாரம்விளம்பார்யாரு
முறையமைபூசையோர்கான்முட்டினுயிரமேகூறல். (உ0)

இருதினமாதிமுட்டினியைதரமுட்டுநாளுக்
கொருவிலாயிரத்திறேடுமுந்நூறோர்தினத்திற்கேற்றிப்
பெருகுறக்கணித்தல்செய்கபிறங்குநாண்மூவைந்தென்னில்
வெருவியீரயுதந்திங்களொன்னினுலயுதம்விள்க. (உக)

ஆண்டளவென்னிற்றிங்கடோறுமீரயுதமேற்றி
வேண்டுகவாண்டிற்கப்பாற்றீக்கையால்விளையுஞ்சுத்தி
பூண்டுசெய்பூசைமுன்னம்புசித்திடில்வமனம்பண்ணி
யீண்டுநீர்படிந்துபூசையிருமடங்கியற்றிப்பின்னர். (௨௨)

உணவுகொள்ளாதுமூலமொருமையினயுதமெண்ணிப்
புணர்பரற்கற்றைநாட்போற்பொலிபலிசெய்வித்தீக
குணமிலாவலையர்முன்னோர்குறிக்கொளுமிலிங்கந்தொட்டா
லுணருமோரயுதங்காகமாதிக்கீரயுதமோதல். (௨௩)

தீயநாய்க்கடுவானேக்கிற்றெளியவைந்தயுதஞாளி
யாயதுதொட்டாலோர்மூன்றயுதமானைந்துமாட்டன்
மேயவந்தணர்தொட்டாரேல்விளம்புகசதமுச்சாதிக்
கேயவோரிரண்டுமூன்றுநான்கெண்ணிப்பலிநன்றீக. (௨௪)

தீவளைப்புண்டிலிங்கந்திகழ்காந்திகுன்றுதாயி
னூவவென்றொழித்திடாமலயுதமூன்றோதனன்று
மேவவெந்திட்டதென்னில்வெறுக்குநாய்க்கெரிப்பான்றீண்டி
லோவவங்கொழித்துவேறுகொண்டொருநியுதமோதல். (௨௫)

அறிதருமிலிங்கங்கள்வராதியராற்கேடுற்று
லெறிபெருங்கவலைகூர்ந்தையெட்டுநாளுணவுநீத்துச்
செறிதரவுளத்தர்ச்சித்துத்தீங்கனியிளநீர்பாலே
குறிகொளவருந்தியண்ணலடியுளங்குறித்துவைகி. (௨௬)

கருதுபன்முயற்சியானுந்தேர்ந்ததுகவர்ந்துகொண்டு
பொருவருஞ்சுத்திசெய்துபூசைசெய்யகப்படாதேன்
மருவவேறிலிங்கங்கோடிபின்னர்வந்தடைந்ததென்னி
லொருவறவிரண்டும்வைத்துப்பூசனையுஞற்றன்மாண்பால். (௨௭)

பூசனையுபயோகத்துமறவிதான்புகுந்ததுண்டே
லாசறவிருநூறோதலன்னியன்றன்னிலிங்க
நேசமார்பூசைசெய்யிணிகழ்த்துகவிரட்டிபூசை
தேசமைபருவகாலஞ்செயான்மூலநூற்றெட்டோதல். (௨௮)

ஆடிமுன்மூன்றிற்சாத்தும்பவுத்திரமணிதல்செய்யான்
கூடியவயுதத்தோடுநியுதமுங்கூறல்வேண்டு
நீடியவிரதமாற்றுங்கிரியைநன்னியமந்தப்பிற்
றேடியபொருள்சால்காயத்திரியைஞ்ஞூறுரைத்தல்வேண்டும். (௨௯)

போற்றியநித்தியாங்கிமுட்டுறிலரன்பூசைக்குச்
சாற்றியபடியேசெய்தலிறையொடுதழல்கெட்டானன்
காற்றியவேண்டுமுந்நாட்பட்டினியதனொடுஞ்சீர்
தேற்றியவுரைத்தல்வேண்டுந்திகழ்பதினாயிரந்தாம். (௩௦)

என்றுமாயாதவங்கிமாய்தரலியையுமாயி
னன்றுபட்டினியடைந்தேயாயிரங்கூறல்வேண்டுந்
துன்றுபுத்தகமாசான்மேற்சொலுந்தன்றுளறியாதுற்றுற்
கன்றுதல்லடைந்துதேம்பிக்கணிக்கவீரயுதமன்றே. (௩௧)

குருபரனிலிங்கம்வேட்கொள்கையர்நிழல்கடந்தா
லொருமுந்நூறுனைத்தல்வேண்டுமுற்றகோவிளக்குமுந்தி
வருகுலத்தவர்தநீழல்கடந்திடில்வழுத்துநூறு
பொருவின்முத்திதனைநிந்தைபுகன்றிடிலயுதம்பத்தே. (௩௨)

போதகன்றனைநிந்திக்கினதிற்பாதிபுகறல்வேண்டுஞ்
சாதகன்றனைநிந்திக்கினதிற்பாதிசாற்றல்வேண்டு
மேதகுகுருவையேவினியுதமேவிளம்பல்வேண்டு
நீதகல்குருவைப்பூசித்திடறப்பினயுதமாமால். (௩௩)

அதுதெரியாமையென்னிலாயிரங்குருவைவெல்லக்
கதுமென்வெணிலைஞ்ஞூறாயிரமெதிர்கழறல்செய்யின்
முதுசமையியையமுன்னனைமூவரையிகழினோனாம்
பதுசதமிரட்டியாகப்பிரமம்பன்னிடுதல்வேண்டும். (௩௪)

புத்தகமண்ணில்வீழிற்பூமியின்மிசைவைத்தோதி
லொத்தவண்கயிறுமண்ணினுறில்விழிவளருந்தானஞ்
சித்தமிலசுத்தத்தானஞ்செறிதருமிறப்பில்வைத்தால்
வைத்தவைஞ்ஞூறகாமங்காமமேன்மற்றிரட்டி. (௩௫)

மிடியினுணட்பாற்சாத்திரத்தைமந்திரத்தைவிள்ளி
லொடிவிலோராயிரஞ்சொலுறுமணலிலிங்கமிக்க
கடிமரகதவிலிங்கங்கணிகலிங்கஞ்சுயம்பு
படிசலவிலிங்கமாசான்பார்ப்பதிசெந்தீயோவம். (௩௬)

பெருகுபுத்தகமாதாக்கள்பிரதமைநிவேதனஞ்செய்
திருகில்பற்பலவுநாளுஞ்செறிநின்மாலியமாகாவா
முருகுமாணிடவிலிங்கநிவேதனஞ்செய்ததோதிற்
கருகுமாலியமேயாகுமென்மனூர்கற்றுளாரோ. (௩௭)

பரசிவன்பொருள்கவர்ந்தபாதகரிரட்டியீந்து
வரமிகுகிருச்சிரத்தைமாண்புறவியற்றல்வேண்டுந்
திரமுறவறிந்தேவெளவிற்சேரவைம்மடங்குநல்கி
விரவியகிருச்சிராதிபலவாற்றவினைதல்வேண்டும். (௩௮)

சிவதிரவியங்கவர்ந்ததீயனையுறவுசெய்தோ
ரவமுறப்பார்த்தோர்யாருமருநரகழுந்தறிண்ணங்
கவலறவவருந்தக்ககழுவாயேயாற்றல்வேண்டு
மிவர்செயலின்னதாகிலவர்செயலெற்றோதேறேம். (௩௯)

உற்றவெப்பிழைசெய்தாலுமுய்யலாமுபாயமுண்டு
பற்றலர்புரங்கண்மூன்றும்பாழ்படநகைத்தபெம்மா
னற்றமில்பொருள்கவர்ந்தபுலையருக்காகமங்கள்
சொற்றனவளவில்கற்பந்துயர்க்கொடுநரகத்தாழ்தல். (௪௰)

உரைத்தவிவ்விதியைக்கொண்டேயுய்த்துணர்ந்துரைத்திலாத
வரைத்தபல்விதியுந்தேர்ந்துமாதேவன்பூசையாற்றித்
திரைத்தநீருலகிலென்றுஞ்செறிபழிபாவநீங்கிப்
புரைத்தவின்படையாநிற்பர்புகர்தபுமறிவுளாரே. (சக)

செபவிதிப்படலம் முற்றிற்று.
ஆக திருவிருத்தம் - கஅளச.

சமாதிவிதிப்படலம்.

அரியனைமுகுந்தன்வேதனடிமுடிதேடநீண்ட
பெரியனையுலகமுற்றும்பெற்றவள்கழைத்தோடோய்தற்
குரியனைவானோர்யாருமொருங்குகைகுவிக்குங்கண்டக்
கரியனைவெளியமேனிக்கண்ணுதற்பெருமான்றன்னை. (க)

வல்லனையநாதிமுத்தசித்துருவாகிமன்னு
நல்லனையொருமுச்சோவுநசித்திடவளைத்தமேரு
வில்லனையனைத்துங்கூறும்வேதாகமங்களாய
சொல்லனைச்சொல்லிறந்தசுடர்வெளிப்பரப்பானை. (உ)

எண்ணியவெண்ணியாங்கேயன்பருக்கீயவல்ல
புண்ணியமூர்த்தியானைப்புவிமுதன்முப்பத்தாறு
நண்ணியவொண்ணுத்தேவைநாமுமானந்தமூழ்கக்
கண்ணியகருணையானைக்காமனைக்காய்ந்துளானை. (ங)

தாழ்ந்தவர்தம்மையாருந்தாழ்ந்திடநோக்கியன்றே
சூழ்ந்தவல்வினையினோடுதொன்மலமுதலும்போக்கி
வீழ்ந்ததனுண்மைதேற்றிமேவரும்பரமானந்தத்
தாழ்ந்தவராகச்செய்யுமற்புதமூர்த்திதன்னை. (ச)

எழுதருபிராணவாயுவியங்கிருவழியுமாற்றிக்
கொழுவியநடுநாடிக்கட்கூட்டுபுருவநாப்பட்
டொழுசுடர்மூன்றுமொவ்வாச்சுயம்பிரகாசமாக
வழுவறக்கண்டுநிற்றன்மாண்புறுசமாதியாமால். (ரு)

சமாதிவிதிப்படலம் முற்றிற்று.
ஆக திருவிருத்தம் - கஅளகூ.

நைமிசமுனிவர்பூசித்தபடலம்.

இன்னணஞ்சூதமேலோனியம்பியவனைத்துங்கேட்டுத்
துன்னருமகிழ்ச்சிபொங்கிச்சுந்தரமுக்கண்மூர்த்தி
நன்னரொண்பாதங்காண்டற்கேதுநன்றாகத்தேர்ந்தா
முன்னருமிதற்குமேன்மற்றொன்றிலையெனத்துணிந்து. (க)

தொடங்கியமகமுடித்துச்சூதமாதவற்குச்செய்யு
மிடங்கொளுமுபசாரங்களென்பனவனைத்துஞ்செய்து
மடங்கழலனையானோடுமாயூரஞ்சார்ந்துபோற்ற
வுடங்கெழுந்தனரக்கானமொருவினர்நடக்கலுற்றார். (௨)

குன்றமுங்காடுநாடுங்குளிர்கொள்பன்னதியுநீந்தி
நன்றமைசோழநாடுநண்ணினராங்காங்குள்ள
வென்றபஃறலமுநோக்கிமிக்கிறும்பூதுகொண்டு
மன்றநின்றாடுமையர்மாயூரம்புக்காரன்றே. (௩)

கற்பத்துஞ்சிதைதராதகௌரிமாமாயூரத்தின்
பொற்புற்றவெல்லையாம்யோசனையகம்பொலியாநின்ற
சொற்பெற்றதலங்களெல்லாந்துரிசறச்சென்றுசென்றாங்
கற்புற்றகுணத்திற்போற்றியடைந்தனரிடபதீர்த்தம். (௪)

திரையெறியிடபதீர்த்தஞ்சிறந்தநன்னாளினாடிப்
புரைதபுபாவநாசதீர்த்தமும்புக்குமூழ்கி
யுரைசெறிபிரமதீர்த்தமுதலியவுவந்துதோய்ந்து
தரைபுகழ்வெண்ணீறிட்டுக்கண்மணிதயங்கப்பூண்டு. (௫)

தூயவைந்தெழுத்துமெண்ணித்தொழுதகைதலைமேலேற
வாயபொற்கோயில்சூழ்ந்தேயகத்தியவாரணத்தை
மாயவன்முதலோர்தேறாவள்ளலெம்பெருமான்றன்னை
நாயகமேயவஞ்சனாயகியென்னுந்தாயை. (௬)

சாற்றுமற்றுள்ளார்தம்மைத்தனித்தனிக்கண்டுபோற்றி
யூற்றுகண்ணருவிபாயவுரோமங்கள்சிலிர்ப்புமேவ
வீற்றுவீற்றாயபற்பறோத்திரமிகவிளம்பிக்
காற்றுவல்வினையராகிக்களித்திடுவாழ்க்கைபெற்றார். (௭)

பொருவருந்தீர்த்தமாடல்புராணனைச்சேவைசெய்தன்
மருவருந்தலம்வசித்தலிம்மூன்றும்வாய்த்தநீரா
லொருவரும்விருப்பராகியொள்ளியமாயூரத்தே
வெருவருமுனிவர்யாரும்வைகினார்விழைந்துபன்னாள். (௮)

திருந்தவிவ்வண்ணமேயதிருப்பெருமுனிவர்யாருங்
கருந்தடங்கண்ணாளஞ்சனாயகிகணவனாய
மருந்தனிவள்ளற்பெம்மான்வயங்கருள்விடைபெற்றேகி
பொருந்தநைமிசவனத்துப்பொலிவுறப்புக்காரன்றே. (௯)

புக்கவரயல்வனத்துப்புகுபவர்புகச்செலுத்தித்
தக்கநற்சூதற்றாழ்ந்துதவாவவணிருக்கையுய்த்து
மிக்கதமிருக்கைமேவிவிளங்குமாயூரநாதர்
நக்கசெம்பாதப்போதேநயந்துவாழ்ந்திருந்தாரன்றே. (௧௦)

இனிதமையிப்புராணமெழுதுவோரெழுதுவிப்போர்
கனிதரப்படிப்போர்கேட்போர்கற்பவர்க்குதவிசெய்வோர்
பனிமலர்கொண்டுபூசைபண்ணுவோரருத்தந்தேர்வோர்
நனிசெயுமருத்தஞ்சொல்வோர்நாடுமெற்றிவர்களெல்லாம். (௧௧)

இம்மையின்மனைவிமைந்தரிருநிதியாதியோடு
செம்மையிற்பொலிவுவாய்ந்துதேவராய்த்தெய்வநாட்டுக்
கொம்மைவெம்முலையார்போகங்கூட்டுண்டுபின்னரஞ்ச
லம்மையோர்பாகத்தெம்மானருள்கலந்தின்புந்துய்ப்பார். (௧௨)

பொருவருமாயூரேசர்புராணத்தையெழுதிமையிட்
டொருவரும்பாசஞ்சார்த்தியொண்கவளிகைபொதிந்து
மருவரும்பீடமேற்றிவைத்துப்பூசிக்குமில்லத்
திருவருமுணராவள்ளலருளுழியிருக்குமன்றே. (௧௩)

பெருகும்மனையிற்பூதபிரேதபைசாசமாதி
யொருவும்வெங்கொடியநோய்களுண்ணுழைவதனுக்கஞ்சுந்
தருமணிநிதியந்தேனுச்சார்ந்தொருங்கிருந்தாலொத்துப்
பொருவரிதாயவெல்லாச்சம்பத்தும்பொலியுமன்றே. (௧௪)

வேறு.

பார்பூத்தமாயூரநகர்வாழ்கவருள்வள்ளற்பரமன்வாழ்க
வேர்பூத்தகருந்தடங்கணஞ்சநாயகிவாழ்கவிவருக்கென்று
நார்பூத்தமனத்தன்பர்வாழ்கபெருஞ்சைவநெறிநன்குவாழ்க
சீர்பூத்தவம்பலத்துளானந்தநடநவில்குஞ்சிதத்தாள்வாழ்க. (௧௫)

நைமிசமுனிவர்பூசித்தபடலம் முற்றிற்று.

ஆ_திருவிருத்தம். ௧௮௯௪.

மாயூரப்புராணம் முற்றிற்று.



சூசீபத்திரம்.

சூசிபத்திரம்.

பக்கம்.	படலப்பெயர்.	பாடற்றொகை.
கசகூ	சுகந்தவனப்படலம்.	உங
கருக	மாயூரவள்ளல்நாற்றிசைவள்ளலாகியபடலம்.	உசு
கருச	விசுவநாதப்படலம்.	கக
கருரு	அட்டலிங்கப்படலம்.	கக
கருசு	நாதசன்மனனவித்தைமுத்தியடைந்தபடலம்.	ஙரு
கசு0	ஐயாறப்பர்சிறப்புப்படலம்.	கஉ
கசுக	இடபதீர்த்தமகத்துவப்படலம்.	ஙஉ
கசுரு	சவுசவிதிப்படலம்.	உசு
கசுஎ	பற்கொம்புவிதிப்படலம்.	எ
கசுஅ	நானவிதிப்படலம்.	ஙச
கஎஉ	அனுட்டானவிதிப்படலம்.	ச0
கஎசு	சூரியபூசாவிதிப்படலம்.	ககூ
கஎஅ	சிவபூசாவிதிப்படலம்.	அரு
கஅசு	போசனவிதிப்படலம்.	கஅ
கஅஅ	சிவாலயதரிசனவிதிப்படலம்.	கங
கஅகூ	செபவிதிப்படலம்.	சக
ககூச	சமாதிவிதிப்படலம்.	ரு
ஷை	நைமிசமுனிவர்பூசித்தபடலம்.	கரு
		ஆ கஅகூச.

பிழைதிருத்தல்.

பக்கம்.	பாடல்.	பிழை.	திருத்தல்.
கஉ	சுஉ	மன்னர்	மள்ளர்
கச	அ0	பலவகை	பலபகை
ககூ	கூ	புன்னகை	பொன்னகை
உசு	அஉ	சாமிகரம்	சாமீகரம்
ஙங	கூ	அறைந்தாங்	அறிந்தாங்
சஅ	ஙசு	அதையணேநோக்கி	அணேயதைநோக்கி
ருசு	ஙக	தொடங்கன்	தொடங்கென்
சுச	க	வுணையாதியி	வணையாதியி
எங	ச0	மன்றநாப்பண்	மன்றனுப்பண்
எஅ	கரு	சன்மமேசன்மம்	சன்மமெச்சன்மம்
அகூ	சஉ	சுவை	சுடர்
கூஅ	கூ	பரவி	பாவி
ாயச	க0	கலங்காமல்	கலங்கமால்
ாயரு	கசு-வரி	நாற்சீரோரடி	நாற்சீரரடி
ாயஅ	எ	நதந்வமைதன்னு	நந்தவவைதம்மு
ாஙசு	ரு	வறைகளுந்	மறைகளுந்
ாசங	ஙக	வஞ்சனே	வஞ்சலே
ாருச	உச	யாகென்ருன்	யாலென்ருன்
ஷை	உரு	னவற்கருள்	னவாக்கருள்
ாஎக	உசு	பொரு	பொது
ாஎங	கக	தருங்கற்ப	தருமகற்ப
ஷை	கச	டான	டாள
ாஎச	உச	வலக்க	வலக்கை

யாகசங்காரப்படலத்தில் விடுபட்ட - ௰ ஆவது செய்யுள்.

படையொடுபொலியெண்கையும்படுதழலெழுமுக்கண்ணுங்
கடையெழுகதிரும்வட்குங்காந்தியுமுரோமந்தோறு
மிடைதரவுதித்தவெண்ணில்பூதரும்விளங்கச்சீறி
யடையலர்நடுங்கவெங்களாண்டகையெழுந்தானன்றே.

இந்நூலாசிரியரியற்றிய நூற்பெயரட்டவணை.

காழிக்கோவை,
திருவிடைமருதூருலா.
திருவானைக்காவகிலாண்டவம்மைபிள்ளைத்தமிழ்.
திருத்தவத்துறைப் பெருந்தவப்பிராட்டி பிள்ளைத்தமிழ்.
திருவுறந்தைக்காந்திமதியம்மைபிள்ளைத்தமிழ்.
திருப்பெருமணநல்லூர்த் திருநீற்றுமை பிள்ளைத்தமிழ்.
திருக்குடந்தைமங்களாம்பிகைபிள்ளைத் தமிழ்.
கன்னபுரப்பாகம் பிரியாள்பிள்ளைத் தமிழ்.
திருவெண்காட்டுப்பெரியநாயகியம்மை பிள்ளைத்தமிழ்.
திருவிடைக்கழிமுருகர்பிள்ளைத்தமிழ்.
திருவாவடுதுறையம்பலவாணதேசிகர் பிள்ளைத்தமிழ்.
வாட்போக்கிக்கலம்பகம்.
துறைசைக்கலம்பகம்.
திருத்தில்லையமகவந்தாதி.
திருத்துறைசையமகவந்தாதி.
திரிசிராப்பள்ளியமகவந்தாதி.
திருக்குடந்தைத்திரிபந்தாதி.
திருப்பைஞ்ஞீலித்திரிபந்தாதி:
திருவானைக்காத்திரிபந்தாதி.
பட்டீச்சரப்பதிற்றுப்பத்தந்தாதி.
பூவாளூர்ப்பதிற்றுப்பத்தந்தாதி.
பாலைவனப்பதிற்றுப்பத்தந்தாதி.
திருவூறைப்பதிற்றுப்பத்தந்தாதி.
தண்டபாணிபதிற்றுப்பத்தந்தாதி.
திருஞானசம்பந்தர்பதிற்றுப்பத்தந் தாதி.
எறும்பீச்சரம்வெண்பாவந்தாதி.
திருவானைக்காமாலை,
திருக்கலைசைமாலை.
திருவாவடுதுறைச்சுப்பிரமணியதேசிகர் மாலை.
தருமைச்சச்சிதானந்ததேசிகர்மாலை.
திருஞானசம்பந்தரானந்தக்களிப்பு.

சோழநாடு.

திருவுறந்தைப்புராணம்.
திருக்குடந்தைப்புராணம்.
மாயூரப்புராணம்.
திருத்துருத்திப்புராணம்.
திருக்குறுக்கைவீரட்டப்புராணம்.
திருவாளொளிபுற்றூர்ப்புராணம்.
திருநாகைக்காரோணப்புராணம்.
விளத்தொட்டிப்புராணம்.
ஆற்றூர்ப்புராணம்.
திருவாரூர்த்தியாகராசர்லீலை.
தனியூர்ப்புராணம்.
மண்ணிப்படிக்கரைப்புராணம்.

பாண்டிநாடு.

கோயிலூர்ப்புராணம்.
கண்டதேவிப்புராணம்.
சூரைக்குடிப்புராணம்.
வீரைவனப்புராணம்.

தொண்டைநாடு.

திருமயிலைப்புராணம்.

வடநாடு.

காசிரகசியம்.

இவற்றுட்பதிப்பித்தன.

திருவானைக்காவகிலாண்டவம்மை பிள்ளைத்தமிழ்.
திருவுறந்தைப்பிள்ளைத்தமிழ்.
திருக்குடந்தைமங்களாம்பிகைபிள்ளைத் தமிழ்.
திருவாவடுதுறையம்பலவாணதேசிகர் பிள்ளைத்தமிழ்.
துறைசைக்கலம்பகம்.
திருத்தில்லையமகவந்தாதி.
திருத்துறைசையமகவந்தாதி.
திருஞானசம்பந்தர்பதிற்றுப்பத்தந்தாதி
திருஞானசம்பந்தரானந்தக்களிப்பு.
மாயூரப்புராணம்.
தனியூர்ப்புராணம்.

மற்றையவைபதிப்பிக்கப்படுவன.

இவைவேண்டியவர்கள் இந்நூலாசிரியரிடத்தும், இவர்மாணாக்கர்கள் கும்பகோணம் புரோவின்சியில் கல்லீஜ் தமிழ்ப்புலவர் தியாகராசசெட்டியாரிடத்திலும், சென்னைக்கவரன்மெண்டு நார்மல்ஸ்கூல் தமிழ்ப்புலவர் சோடசாவதானம் சுப்பராயசெட்டியாரிடத்திலும் விலைக்குவாங்கிக்கொள்ளலாம்.

சிறப்புப்பாயிரம்.

மாயூரம் நமச்சிவாயம் பிள்ளை குமாரர் முத்துச்சாமி பிள்ளை

இயற்றியது

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

சீரிருக்குமறைமுடியுந்தொடர்வரியமாதேவன்செழும்பூங்கொன்றைத்
தாரிருக்குஞ்சடைவள்ளலருளபையாம்பிகையோடுந்தயங்கிமேவுங்
காரிருக்கும்பொழிற்கவுரிமாயூரமான்மியந்தேன்கசிந்துமல்கு
மேரிருக்குந்தமிழின்மொழிபெயர்த்துப்பன்னயஞ்செறிவித்தியம்பினால். (க)

இலங்குறுமெய்ஞ்ஞானகலைமுதலியபல்கலையுணர்ச்சியேய்ந்துதூய
நலங்குலவுபொறைவாய்மையருளடக்கமுறவாய்ந்துநலத்தினின்றும்
விலங்குறுமென்னையுந்தனதுமெய்யடியார்குழுவினிடைமேவச்சேர்த்தோன்
வலங்குலவுசிரகிரிவாழ்மீனாட்சிசுந்தரநாவலவரோறே. (உ)

திருத்துறைப்பூண்டியிலிருக்கும் முத்தம்மாள்புரச்சத்திரம் கோபாலபிள்ளை

இயற்றியது

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

சீர்பூத்தமயிலாடுதுறைத்தளிமேவருட்பெருமான்சீர்த்தியாய
பேர்பூத்தமான்மியமாம்வடமொழியைத்தென்மொழியாற்பிறங்கச்செய்தான்
பார்பூத்தஞானகலைமுதற்பலவுமுணர்ந்துபுகழ்பரந்துமேய
வார்பூத்தசிரகிரிவாழ்மீனாட்சிசுந்தரநாவலவரோறே. (க)

மாலாதில்லறத்தமர்ந்துதுறவறத்தார்புகழவருண்மாண்புபூண்டு
பாலோடுதேன்கலந்ததெனத்தளிகடொறுஞ்சென்றுபதிகஞ்சொற்ற
வாலாலசுந்தரமேமீனாட்சிசுந்தரப்பேரமையவாய்ந்து
தோலாதமாயூரப்புராணமொழிபெயர்த்தனனேற்சொல்வதென்னே. (உ)